# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2017.11.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# பிணையங்கள் பரிவர்த்தனை

**இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; சந்தை நிறுவனங்களையும், பிணையங்கள் பற்றிய பகிரங்கக் கொடை முனைவுகளையும், சந்தை இடைத்தரகர்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; சந்தை தொடர்பிலான துர்நடத்தையைக் கையாளுவதற்கும்; பிணையங்கள் சந்தைகளினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களைப் பயனுள்ள மற்றும் வினைத்திறனானமுறையில் எதிர்கொள்வதற்கும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டமூலம்.**

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 336.00** **தபாற் செலவு : ரூபா 90.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## பிணையங்கள் பரிவர்த்தனைச் சட்டம்

பிரிவுகளின் அட்டவணை


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் | 1 |
| 2. | சட்டத்தின் ஏற்புடைமை | 2 |
| 3. | பொருள்கோடல் | 2 |

**பாகம் I - ஆணைக்குழுவைத் தாபித்தல்**

| | | |
|---|---|---|
| 4. | இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் | 21 |

அத்தியாயம் 1

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு

| | | |
|---|---|---|
| 5. | இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபித்தல் | 22 |
| 6. | ஆணைக்குழுவின் அமைப்பு | 22 |
| 7. | நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் | 24 |
| 8. | பதவி விலகுதலும், ஆணைக்குழுவின் உறுப்பினராகவிருப்பதற்கான தகைமையீனங்களும், பதவியிலிருந்து அகற்றப்படுதலும் | 24 |
| 9. | உறுப்பினர்களின் ஊதியம் | 26 |
| 10. | ஆணைக்குழுவின் கூட்டங்கள் | 26 |
| 11. | ஆணைக்குழுவின் தவிசாளர் | 27 |
| 12. | உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிவிடுதல் | 27 |
| 13. | ஒரு வெற்றிடம் இருப்பதன் காரணமாக நடவடிக்கைகள், செயல்கள் அல்லது முடிபுகள் செல்லுபடியற்றனவாகாது | 28 |
| 14. | ஆணைக்குழுவின் இலச்சினை | 28 |

பிரிவு பக்கம்

அத்தியாயம் 2

**ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்**

15. ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பிரதான பணிகளும், 28

16. ஆணைக்குழுவின் மேலதிக தத்துவங்கள் 32

17. சட்ட வழக்கு நடவடிக்கைகளில் ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் 34

அத்தியாயம் 3

**ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்**

18. பணிப்பாளர் தலைமையதிபதி 34

19. ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர் 36

20. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை ஆணைக் குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் 38

21. ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவை யாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் 39

22. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஆணைக் குழுவானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் 39

**பாகம் II - சந்தைகளும் சந்தை நிறுவனங்களும்**

23. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் 39

அத்தியாயம் 1

**பரிவர்த்தனைகள்**

24. உரிமமளிக்கப்படாத பரிவர்த்தனை ஒன்றைத் தாபிப்பதற் கெதிரான தடை 40

25. பரிவர்த்தனை ஒன்றை தொழிற்படுத்துவதற்கான விண்ணப்பம் 40

26. பரிவர்த்தனையின் கடமைகள் 44

27. பரிவர்த்தனையின் உரிமத்தை இல்லாதாக்குதல் 46

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 28. | ஒரு பரிவர்த்தனையின் உரிமம் இல்லாதாக்கப்படுகின்றமையின் பயன் | 50 |
| 29. | அவசர நிலைமையில் பரிவர்த்தனையை மூடிவிடுதல் | 51 |
| 30. | உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகள் | 52 |


அத்தியாயம் 2

**தீர்வக இல்லம்**

| | | |
|---|---|---|
| 31. | பொருள்கோடல் | 54 |
| 32. | உரிமமளிக்கப்படாத தீர்வக இல்லம் ஒன்றைத் தாபிப்பதற்கெதிரான தடை | 57 |
| 33. | தீர்வக இல்லம் ஒன்றைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் | 57 |
| 34. | ஒரு தீர்வக இல்லத்தின் கடமைகள் | 60 |
| 35. | தீர்வக இல்லத்தின் உரிமத்தை இல்லாதாக்குதல் | 62 |
| 36. | தீர்வக இல்லத்துக்கான உரிமத்தை இல்லாதாக்குவதன் பயன் | 66 |
| 37. | தவறுகை விதிகள் | 67 |
| 38. | தீர்வக இல்லத்தின் தவறுகை வழக்கு நடவடிக்கைகள் முந்துரிமை பெறுதல் | 67 |
| 39. | தவறுகை வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான துணை ஏற்பாடுகள் | 68 |
| 40. | தவறுகை வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன்மீது அறிக்கையிடுவதற்கான கடமை | 69 |
| 41. | தவறுகை வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன்மீது செலுத்தப்படற்பாலதான தேறிய பணத்தொகை | 70 |
| 42. | குறித்தசில கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற குறித்தசில தொகை களை அறவிடுவதற்கு இயைபான பதவி வகிப்பவருக்குள்ள உரிமை | 71 |
| 43. | தீர்வக உறுப்பினர், முதல்வராகக் குறித்தசில கொடுக்கல் வாங்கல் களுக்கான திறத்தவராகவிருத்தல் | 74 |
| 44. | தீர்வக இல்லமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்ட சந்தை பிணைப்பொருள் | 74 |
| 45. | ஒரு சந்தை விதிப்பனவுக்கு அமைய பிணைப்பொருளை ஏற்புடையதாக்கல் | 74 |
| 46. | தீர்ப்பனவில் பிணையங்களைக் கைமாற்றுதல் | 74 |
| 47. | பிணையங்களைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் | 75 |
| 48. | குற்றவியல் அல்லது குடியியல் பொறுப்பிலான எதிர்வாதங்கள் | 76 |

அத்தியாயம் 3

**மத்திய வைப்பகம்**


| | | |
|---|---|---|
| 49. | உரிமமளிக்கப்படாத மத்திய வைப்பகத்தைத் தொழிற்படுத்துவதற்கெதிரான தடை | 77 |
| 50. | ஒரு மத்திய வைப்பகத்தை தொழிற்படுத்துவதற்கான விண்ணப்பம் | 77 |
| 51. | ஒரு மத்திய வைப்பகத்தின் கடமைகள் | 80 |
| 52. | மத்திய வைப்பகத்தின் உரிமத்தை இல்லாதாக்குதல் | 81 |
| 53. | ஒரு மத்திய வைப்பகத்தின் உரிமம் இல்லாதாக்கப்படுகின்றமையின் பயன் | 85 |
| 54. | பிணையங்கள் கணக்கு | 85 |
| 55. | மத்திய வைப்பகத்திடம் இடப்பட்ட புத்தகப் பதிவுப் பிணையங்கள் | 85 |
| 56. | வைப்பீட்டாளரின் கணக்கிலான பதிவீடு பற்றிய பதிவு | 86 |
| 57. | மத்திய வைப்பகத்தினால் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் பயன் | 86 |
| 58. | செல்லுபடியாக்குதல் | 87 |


அத்தியாயம் 4

**பொது ஏற்பாடுகள்**


| | | |
|---|---|---|
| 59. | ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகள் | 87 |
| 60. | சந்தை நிறுவனங்களின் விதிகள் பின்பற்றப்படுவதனை அல்லது வலுவுறுத்தப்படுவதனைக் கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம் | 89 |
| 61. | ஒரு சந்தை நிறுவனத்தின் கணிசமான அளவினரான பங்குதாரர்களைக் கட்டுப்படுத்துதல் | 89 |
| 62. | தடைவிதிப்பதற்கான முதனிலைக் கட்டளையொன்றை ஆக்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம் | 90 |
| 63. | சந்தை நிறுவனமொன்றுக்குப் பணிப்பாளர்களை நியமித்தல் | 93 |
| 64. | சந்தை நிறுவனமொன்றின் முக்கிய விபரங்களை மாற்றியமைத்தல் | 96 |
| 65. | ஒரு பரிவர்த்தனையின் அல்லது தீர்வக இல்லத்தின் உரிமைகள் | 96 |
| 66. | குற்றவியல் அல்லது குடியியல் பாதுகாப்பு | 97 |

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 67. | ஆணைக்குழுவுக்கு உதவி வழங்குதல் | 98 |
| 68. | வருடாந்த அறிக்கைகள் | 98 |
| 69. | ஒரு சந்தை நிறுவனத்தின் கணக்காய்வாளர் ஒருவரின் கடமைகள் | 99 |
| 70. | காலாகால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடப்பாடு | 102 |
| 71. | வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்துதல் | 102 |
| 72. | காட்டிநிற்பதற்கெதிரான தடை | 102 |
| 73. | ஆணைக்குழு அதன் சொந்த முடிபை மீளாய்வதற்கு அதற்குள்ள தத்துவம் | 103 |


**பாகம் III – பிணையங்களின் வழங்குகை**

| | | |
|---|---|---|
| 74. | இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் | 103 |


அத்தியாயம் 1

**பிணையங்களிலான வியாபாரம்**

| | | |
|---|---|---|
| 75. | பிணையங்களின் கொடைமுனைவு | 104 |
| 76. | பிணையங்களின் வழங்குகைக்கான ஆணைக்குழுவின் அனுமதி | 105 |
| 77. | முன்விவரணம் அல்லது அதையொத்த ஆவணம் | 106 |
| 78. | ஆணைக்குழு நிறுத்தற் கட்டளைகளை வழங்குதல் | 107 |
| 79. | பிணையங்களின் கொள்வனவு, விற்பனை அல்லது கைமாற்றல் | 109 |
| 80. | ஆவணங்களின் காண்பிப்பைத் தேவைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்கள் | 110 |
| 81. | நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிகளுக்கு பணிப்புரைகள் வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம் | 113 |
| 82. | ஆணைக்குழுவுக்கு பொய்யான தகவலைக் கொடுத்துதவாது இருப்பதற்கான கடமை | 114 |
| 83. | சந்தை நிறுவனங்களுக்கு பொய்யான கூற்றுக்களைச் செய்யாதிருப்பதற்கான கடமை | 115 |
| 84. | பணிப்பாளர்களை அல்லது பிரதம நிறைவேற்று அலுவலரை நியமித்தல் | 115 |
| 85. | நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனி ஒன்றின் கணக்காய்வாளர் ஒருவரின் கடமைகள் | 115 |
| 86. | தகாத செல்வாக்குக்கு எதிரான தடை | 118 |

பிரிவு பக்கம்

அத்தியாயம் 2

**சந்தை இடைத்தரகர்கள்**


| | | |
|---|---|---|
| 87. | சந்தை இடைத்தரகராக காட்டி நிற்பதற்கான தடை | 119 |
| 88. | ஆணைக்குழுவினால் உரிமம் அளிக்கப்படுவதற்கான தேவைப்பாடு | 119 |
| 89. | சந்தை இடைத்தரகராக உரிமமொன்றுக்கான விண்ணப்பம் அல்லது உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | 119 |
| 90. | உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தல் | 120 |
| 91. | ஆகக்குறைந்த நிதிசார் தேவைப்பாடு | 124 |
| 92. | ஆணைக்குழுவில் பதிவுசெய்வதற்கான தேவைப்பாடு | 125 |
| 93. | பதிவுசெய்வதற்கான அல்லது பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | 125 |
| 94. | பதிவைப் பதிவுசெய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுப்பதற்கான ஏதுக்கள் | 126 |
| 95. | நிபந்தனைகளை அல்லது மட்டுப்பாடுகளை வேறுபடுத்துவதற்குள்ள தத்துவம் | 129 |
| 96. | உரிமத்தின் அல்லது பதிவின் காலப்பகுதி | 129 |
| 97. | பொய்யானதும் பிழைவழியுய்ப்பதுமான கூற்றுக்களை ஆணைக்குழுவுக்குச் செய்தல் | 130 |
| 98. | ஆணைக்குழுவுக்கு அறிவிக்கும் கடமை | 130 |
| 99. | முகவர் ஒருவராகக் காட்டி நிற்பதற்கான தடை | 131 |
| 100. | உரிமம் அல்லது பதிவை இல்லாதாக்குதல் அல்லது இடைநிறுத்துதல் | 131 |
| 101. | சந்தை இடைத்தரகர்களால் பிணையங்களிலான வியாபாரம் | 133 |
| 102. | வாடிக்கையாளரின் சம்மதமின்றி பிணையங்களை கடன் கொடுத்தலும் கடன் பெறுதலும் | 133 |
| 103. | சந்தை இடைத்தரகர் ஒன்றின் கணக்காய்வாளர் ஒருவரின் கடமை | 134 |

*பிரிவு* *பக்கம்*

*அத்தியாயம் 3*

**வாடிக்கையாளர்களின் சொத்துக்களின் பாதுகாப்பு**

104. பொருள் கோடல் 136

105. வாடிக்கையாளரின் சொத்துக்களின் பாதுகாப்பு 136

106. தொழில்நடத்தை மீதான விதிகள் 138

107. நியாயமற்ற விதப்புரைகளுக்கான பொறுப்பு 138

108. பிணையங்களில் குறித்தசில அக்கறைகளை வெளிப்படுத்தல் 140

109. உள்ளக நடவடிக்கை முறைகளும் செயல்முறைகளும் 142

110. சந்தை இடைத்தரகர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் பற்றிய இடாப்பு 142

**பாகம் IV – நிரற்படுத்தப்படாத பிணையங்களிலான வியாபாரம்**

111. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் 144

*அத்தியாயம் 1*

**ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரொருவரை நிலைநிறுத்தல்**

112. சந்தை தொழிற்படுத்துநர் ஒருவரை நிலைநிறுத்தல் 144

113. சந்தை தொழிற்படுத்துநரை பதிவுசெய்வதற்கான தேவைப்பாடு 144

114. பதிவு செய்வதற்கான விண்ணப்பம் 145

*அத்தியாயம் 2*

**ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரொருவரின் வகிபாகம்**

115. ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரின் பணிகளும் கடமைகளும் 145

116. இயங்குதளம் ஒன்றின் மீது வியாபாரஞ் செய்தல் 146

117. ஆணைக்குழுவால் ஆக்கப்படவுள்ள விதிகள் 146

118. பதிவின் மீளப்பெறுகை 147

119. ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரின் செயல் நிறைவேற்றுகையின் மீளாய்வு 148

120. சந்தை தொழிற்படுத்துநருக்கான விலக்களிப்பு 149

121. சட்டத்தின் ஏற்பாடுகள் நிரற்படுத்தப்படாத பிணையங்களுக்கு ஏற்புடையனவாதல் 149

பிரிவு பக்கம்

**பாகம் V – சந்தை தொடர்பிலான துர்நடத்தை**

122. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் 150

123. இப்பாகத்தின் ஏற்புடைமை 150

அத்தியாயம் 1

**தடைசெய்யப்பட்ட நடத்தை**

124. பொய்யான வியாபாரம் மற்றும் சந்தை மோசடிக் கொடுக்கல் வாங்கல்கள் 151

125. பங்குத்தொகுதிச் சந்தையை சூழ்ச்சித் திறத்துடன் கையாளுதல் 154

126. பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் கூற்றுக்கள் 155

127. பிணையங்களைக் கையாளுவதற்கு மோசடியாக தூண்டப்படுகின்ற ஆட்கள் 155

128. சூழ்ச்சித்தன்மை சார்ந்த மற்றும் வஞ்சகமான உபாயங்களைப் பயன்படுத்தல் 156

129. கொடுக்கல் வாங்கல்களின் குறிப்பிட்ட வகுப்பிற்கு விலக்களித்தல் 157

130. தவறுகளுக்கான தண்டம் 157

அத்தியாயம் 2

**உள்ளுறைபவர் வியாபாரம்**

131. பொருள் கோடல் 157

132. பொதுவாகக் கிடைக்கக்கூடிய தகவல் 158

133. பிணையங்களின் விலை அல்லது பெறுமதி மீதான முக்கியமான விளைவு 159

134. பெறுகை பற்றிய குறிப்பீடு 159

135. உள்ளக தகவலை உடைமையில் கொண்டுள்ள ஆளின் தடைசெய்யப்பட்ட நடத்தை 159

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 136. | கம்பனி ஒன்றின் அலுவலரின் உடைமையில் உள்ள தகவல் | 161 |
| 137. | பங்காண்மையில் பங்காளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவரின் உடைமையில் உள்ள தகவல் | 164 |
| 138. | ஒப்புறுதி மற்றும் உப-ஒப்புறுதி தொடர்பிலான விதிவிலக்குகள் | 167 |
| 139. | ஒழுங்கேற்பாட்டு திட்டம் தொடர்பிலான விதிவிலக்குகள் | 168 |
| 140. | கம்பெனியின் உளக்கருத்தின் அறிவுடனான கம்பெனி ஒன்றிற்கான விதிவிலக்கு | 168 |
| 141. | தனியாள் ஒருவர் தொடர்பிலான விதிவிலக்கு | 169 |
| 142. | சந்தை இடைத்தரகர்களினால் பரிந்து கேட்கப்படாத கொடுக்கல் வாங்கல் | 170 |
| 143. | கூட்டு முதலீட்டுத் திட்டம் தொடர்பிலான விதிவிலக்கு | 171 |
| 144. | தகவலின் சமத்துவம் எதிர்வாதம் ஆதல் | 171 |
| 145. | வழக்குத்தொடுநர் எதிர்வாதத்தை பொய்ப்பிக்க வேண்டிய தேவை இல்லை | 173 |
| 146. | நீதிமன்றங்களின் நியாயாதிக்கம் | 173 |
| 147. | யார் வழக்குத் தொடுக்கலாம் | 173 |
| 148. | குறித்தசில பிரிவுகளின் மீறுகைக்கான குடியியல் பொறுப்பு | 173 |
| 149. | ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் குடியியல் நடவடிக்கை | 174 |


**பாகம் VI – நிதி**


| | | |
|---|---|---|
| 150. | இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் | 178 |


அத்தியாயம் 1

**ஆணைக்குழுவின் நிதியங்கள்**


| | | |
|---|---|---|
| 151. | ஆயவரியொன்றை அறவிடுதல் | 178 |
| 152. | ஆயவரி நிதியம் | 178 |
| 153. | ஆணைக்குழுவின் நிதியம் | 179 |
| 154. | நிதி ஆண்டு | 180 |
| 155. | கணக்குகளை கணக்காய்வு செய்தல் | 180 |

*அத்தியாயம் 2*

**முதலீட்டாளர்களுக்கு நட்டஈடு வழங்கும் நிதியம்**


| | | |
|---|---|---|
| 156. | நட்டஈட்டு நிதியம் | 181 |
| 157. | நட்டஈட்டுக் குழுவை நியமித்தல் | 181 |
| 158. | நட்டஈட்டுக்கான விண்ணப்பம் | 182 |
| 159. | நட்டஈட்டுக் கொடுப்பனவு | 182 |


**பாகம் VII – பொது**


| | | |
|---|---|---|
| 160. | இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் | 183 |


*அத்தியாயம் 1*

**நிறுவனம்சார் கட்டுக்கோப்பு தொடர்பான ஏற்பாடுகள்**


| | | |
|---|---|---|
| 161. | ஆவணங்களைக் காண்பித்தலும் தகவலை வெளியிடுதலும் | 183 |
| 162. | விசாரணைகளும் புலனாய்வுகளும் | 185 |
| 163. | முடக்குதல் கட்டளைகளை வழங்குதல் | 188 |
| 164. | முறைப்பாடுகள் முகாமைக் குழுவினாலான விசாரணை | 189 |
| 165. | துணைச் சேவை வழங்குநர்கள் | 191 |
| 166. | உடன்படிக்கைகள் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அமுல்படுத்தல் | 191 |
| 167. | தகவல் மற்றும் ஒத்துழைப்பைப் பகிர்தல் | 191 |
| 168. | இடித்துரைப்பாளர் பாதுகாப்பு | 194 |
| 169. | அமைச்சருக்கு தகவலை கொடுத்துதவுதல் | 195 |
| 170. | சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு | 195 |

அத்தியாயம் 2

## வலுவுறுத்தல் அமைப்புமுறை தொடர்பான ஏற்பாடுகள்


| | | |
|---|---|---|
| 171. | தவறுகள் | 196 |
| 172. | குற்றவியல் நடைமுறைக்கு ஏற்புடையதாக சட்டங்கள் | 199 |
| 173. | தவறுகளை ஒத்திணக்குதல் | 199 |
| 174. | நிருவாகத் தடைகளை விதிப்பதற்கான ஆணைக்குழுவின் தத்துவம் | 200 |
| 175. | முதலீட்டாளர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான ஆணைக்குழுவின் தத்துவம் | 205 |
| 176. | குறித்தசில கட்டளைகளுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கான ஆணைக்குழுவின் தத்துவம் | 206 |
| 177. | முதலீட்டாளர்கள் சார்பாக சேதவீடுகளை அறவிடுவதற்கான ஆணைக் குழுவின் தத்துவம் | 212 |
| 178. | தகவலை வெளியிடுவதற்கான ஆணைக்குழுவின் தத்துவம் | 213 |
| 179. | அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் | 213 |
| 180. | ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகள் | 215 |
| 181. | பந்தயம் பிடித்தல் அல்லது பணயம் வைத்தல் ஒப்பந்தங்கள் அல்லாத மூலாதாரப் பிணையங்கள் | 218 |
| 182. | நீக்கங்கள், பேணல்கள் மற்றும் நிலைபெயர்கால ஏற்பாடுகள் | 218 |
| 183. | ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் | 223 |

*ச.வ.- ஓ. 8/2017*

***இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; சந்தை நிறுவனங்களையும், பிணையங்கள் பற்றிய பகிரங்கக் கொடைமுனைவுகளையும், சந்தை இடைத்தரகர்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; சந்தை தொடர்பிலான துர்நடத்தையைக் கையாளுவதற்கும்; பிணையங்கள் சந்தைகளினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களைப் பயனுள்ள மற்றும் வினைத்திறனான முறையில் எதிர் கொள்வதற்கும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *(1) இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இப்பிரிவு தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்குவருதல் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் நடைமுறைக்கு வருவதற்காக அமைச்சரினால் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.*

*(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சபாநாயகரின் சான்றுரை எத்தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

2-PL 010435 - 475 (2017/11)

(4) இச்சட்டத்தின் பொருள்கோடலில், ஒவ்வொரு பாகத்தினதும் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களும் நோக்கங்களும் முழுதளாவிய முறையில் கவனத்துக்கெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அப்பாகத்துக்கு மட்டுமே வரையறுக்கப் படுதலுமாகாது.

சட்டத்தின் ஏற்புடைமை.

**2**. இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டமானது, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளுக்கும் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்களுக்கும் ஏற்புடையதாகும்.

பொருள்கோடல்.

3. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"தராதர அங்கீகாரம்பெற்ற முதலீட்டாளர்" என்பது,-

(i) (அ) எந்தத் தனியாளின் தேறிய ஆள்சார் சொத்துக்கள், முதனிலை வதிவிட ஆதனம் புறநீங்கலாக, பெறுமதியில் இருநூறு மில்லியன் ரூபாவை அல்லது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உயர்வான பெறுமதியை விஞ்சுகின்றதோ அந்தத் தனியாளையும்; அல்லது

(ஆ) எந்தத் தனியாளின் சராசரி வருடாந்த வருமானம் முற்போந்த மூன்றாண்டுகளில் முப்பது மில்லியன் ரூபாவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உயர்வான பெறுமதிக்குக் குறைவாக இராதுள்ளதோ அந்தத் தனியாளையும்; அத்துடன்

(இ) முதலீட்டு ஆபத்தை ஏற்பதற்கு எந்தத் தனியாள் அவரது அனுபவம், ஆற்றல் மற்றும் நுட்பங்கள் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்றாரோ அந்தத் தனியாளையும்;

(ii) பின்வருவனவற்றினால் தீர்மானிக்கப்பட்டவாறு பெறுமதியில் ஆயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற தேறிய சொத்துக்களுடனான கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தையும்:-

(அ) உருவகத்தின் மிக்க அண்மைக்காலத்தைய கணக்காய்வுசெய்யப்பட்ட ஐந்தொகை; அல்லது

(ஆ) கணக்காய்வுசெய்யப்பட்ட ஐந்தொகை இல்லாவிடின், ஐந்தொகைத்தேதி முற்போந்த பன்னிரெண்டு மாதங்களினுள்ளானதாக இருக்க வேண்டியஅத்தேதியன்றுள்ளவாறு உருவகத்தின் அலுவல்களினது நிலைமைபற்றி உண்மையானதும் நியாயமானதுமான நோக்கைக் கொடுக்கின்றதாக உருவகத்தினால் சான்றுபடுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தின் மிக்க அண்மைக்காலத்தைய ஐந்தொகை;

(iii) ஒரு நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் என்ற தன்மையில் செயலாற்றும்போது ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறாக அந்நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளரையும்; அல்லது

(iv) விதிகள் என்றவகையாக ஆணைக்குழு குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய வேறு நிறுவனத்தையும், உள்ளடக்கும்;

"மத்திய வைப்பகம்" என்பது, ஒரு பரிவர்த்தனையின் மீதான பிணையங்களின் மத்திய கையாளுகைக்கானவொரு முறைமையைத் தாபித்துத் தொழிற்படுத்துவதற்கெனப் பின்வருமாறுள்ளதும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றையும் உள்ளடக்கும்:-

(அ) அத்தகைய எல்லாப் பிணையங்களும் ஆளினால் அல்லது வைப்பீட்டாளர்களுக்கான

அவரது நியமத்தரினால் வைப்பிலிடப்பட்டு அவரினால் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றன அல்லது அவரது பெயரில் பதிவு செய்யப்படுகின்றன மற்றும் அப்பிணையங்கள் தொடர்பிலான கையாளுகைகள் பங்குச் சான்றிதழ் தொகுதியின் உருப்படியான ஒப்படைப்பின்றிக் கணக்குகளிலான பதிவுகள் மூலம் பயனுறுத்தப்படுகின்றன; அல்லது

(ஆ) பங்குச் சான்றிதழ் தொகுதியின் உருப்படியான ஒப்படைப்பின்றி பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிணையங்களிலான கையாளுகைகள் தீர்த்துவைக்கப்படுதலை அனுமதிக்கின்றன அல்லது வசதிப்படுத்துகின்றன; அத்துடன்

(இ) அதன் இடைநேர்விளைவான ஏனைய வசதிகளையும் சேவைகளையும் வழங்குகின்றன, ஆனால்-

(i) இலங்கை மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்ட மத்திய வைப்பகத்தையும்; அல்லது

(ii) விலக்களிக்கப்பட்ட பிணையங்களுக்கான மத்திய வைப்பகத்தை வழங்குகின்ற அல்லது வழங்குபவராகக் காட்டிநிற்கின்ற எவரேனுமாளையும், உள்ளடக்குதலாகாது;

"தீர்வக வசதி" என்பது, பிணையங்களிலான கொடுக்கல் வாங்கல்களின் தீர்வுக்கான அல்லது தீர்ப்பனவுக்கான ஒரு வசதி என்று பொருளாகும்;

"தீர்வக அல்லது தீர்ப்பனவு" என்பது, ஒரு தீர்வக வசதி தொடர்பாக, கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஆளொருவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாடு, நடைமுறை, அமைப்புமுறை அல்லது சேவையை உள்ளடக்கும்; அதன்மூலம்:-

(அ) கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற நோக்குடன் அக்கொடுக்கல்வாங்கல்களின் நியதிகள் தொடர்பான தகவல்கள் அத்தகைய ஆளினால் சரிபார்க்கப்படுகின்றன;

(ஆ) அக்கொடுக்கல்வாங்கல்களுக்கான திறத்தவர்கள், மாற்றீடுமூலம் அல்லது வேறுவகையாக, அத்தகைய ஆளின் கடனைத் திறத்தவர்களின் கடனுக்காகப் பதிலீடுசெய்கின்றனர்;

(இ) அக்கொடுக்கல்வாங்கல்களின்கீழான திறத்தவர்களின் கடப்பாடுகள், அத்தகைய கணிப்பீடுகள் நிகரவொழுங்கேற்பாடுகளை உள்ளடக்கினாலுஞ் சரி அல்லவாயினுஞ்சரி, கணக்கிடப்படுகின்றன; அல்லது

(ஈ) அக்கொடுக்கல் வாங்கல்களுக்கான திறத்தவர்கள், திறத்தவர்களிடையே நிதிகளைக் கைமாற்றுவதனை அல்லது பிணையங்களுக்கான உரித்தைக் கைமாற்றுவதனை ஒப்படைப்பதற்கான கடப்பாடு உட்பட, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் கீழான தமது கடப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்; ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்காது:-

(i) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான திறத்தவரொருவரின் பின்னலுவலகத் தொழிற்பாடுகள்;

(ii) (இதனகத்துப்பின்னர் "வாடிக்கையாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வேறோர் ஆளுடனான ஒழுங்கேற்பாட்டின்கீழ் வாடிக்கையாளரின் பிணையங்களினது உடைமையை அல்லது கட்டுப்பாட்டைக்

கொண்டுள்ள ஆளொருவரினால் வழங்கப்பட்ட சேவைகள்; அச்சேவைகள் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்துவைத்தலின் இடைநேர் விளைவானவையாக மட்டுமே இருத்தல் வேண்டும்; அல்லது

(iii) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் சேவைகள்;

"தீர்வக இல்லம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட மற்றும் எந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் அல்லது குறிக்கோள்கள் தீர்வக வசதிகளை உள்ளடக்குகின்றனவோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

"தீர்வக உறுப்பினர்" என்பது, ஒரு தீர்வக இல்லத்தின் விதிகளின்கீழ் அவரது சொந்தச்சார்பில் அல்லது வேறாட்களின் சார்பில் தீர்வுக்காகவும் தீர்ப்பனவுக்காகவும் தீர்வக இல்லத்தினால் தீர்வக உறுப்பினராக அனுமதிக்கப்படும் ஆளொருவர் என்று பொருளாகும்;

"கூட்டு முதலீட்டுத் திட்டம்" என்பது, எந்த நிபந்தனைகளின் கீழ் ஒரு திட்டம் அல்லது ஒழுங்கேற்பாடு கம்பெனியொன்றினால் பொதுமக்களுக்குச் செய்யப்படுகின்றதோ அல்லது கொடைமுனையப்படுகின்றதோ அந்த நிபந்தனைகளைத் திருப்திசெய்கின்ற ஏதேனும் திட்டத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டை உள்ளடக்கும்; அதற்காக:-

(அ) எத்தகையதுமான எப்பெயரினாலும் அழைக்கப்படுகின்ற, முதலீட்டாளர்களினால் அளிக்கப்பட்ட பங்களிப்புத்தொகைகள் அல்லது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ஒன்றுதிரட்டப்பட்டு திட்டத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் நோக்கத்துக்காக மட்டும் பயன்படுத்தப்படுகின்றன;

(ஆ) பங்களிப்புத்தொகைகள் அல்லது கொடுப்பனவுகள், அத்தகைய திட்டத்திலிருந்து அல்லது ஒழுங்கேற்பாட்டிலிருந்து இலாபங்களை, வருமானத்தை, உற்பத்திப்பொருளை அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அத்தகைய திட்டத்துக்கு அல்லது ஒழுங்கேற்பாட்டுக்கு முதலீட்டாளர்களினால் அளிக்கப்படுகின்றன அல்லது செய்யப்படுகின்றன;

(இ) ஒரு திட்டத்தின் தேக்கமொன்றில் முதலீட்டாளர்களின் பங்குபற்றுகைசார் அக்கறையின் விகிதாசாரத்தில் அல்லது திறத்தவர்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் அடிப்படையின்மீது முதலீட்டின் ஆபத்தையும் நன்மையையும் அவர்கள் பகிர்கின்றனர்;

(ஈ) அடையாளங்காணத்தக்கதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, திட்டத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் பாகமாகவமைகின்ற ஆதனம், பங்களிப்புத் தொகை அல்லது முதலீடு, முதலீட்டாளர்களின் சார்பில் முகாமை செய்யப்படுகின்றன; அத்துடன்

(உ) திட்டத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் முகாமை மற்றும் தொழிற்பாட்டின்மீது முதலீட்டாளர்கள் நாளாந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதில்லை,

ஆனால் பின்வருவன தொடர்பான நிதிகளின் ஒன்றுதிரட்டுகைகளை உள்ளடக்குதலாகாது:-

(i) தனிப்பட்ட முதலீட்டு முகாமை ஒழுங்கேற்பாடுகள்;

(ii) தொழில்முயற்சி முன்னெடுப்புத் திட்டங்கள்;

(iii) தனியான வைப்பு அடிப்படையிலான திட்டங்கள்;

(iv) தொழில் என்றவகையாகத் தொழிற்படுத்தப்படாத திட்டங்கள்;

(v) கடன்தொகுதிப்பத்திரங்கள், முறிகள் மற்றும் கடன் பங்குத்தொகுதி போன்ற தனிசு வழங்குகைகள்;

(vi) ஊழியர் பங்குத் திட்டங்கள்;

(vii) வர்த்தக குறியீட்டைப் பயன்படுத்துவது தொடர்பான ஒழுங்கேற்பாடுகள்;

(viii) காலப்பங்குத் திட்டங்கள்;

(ix) தீர்வக சேவைகளை வழங்குதல்;

(x) காப்புறுதி ஒப்பந்தங்கள்;

(xi) தனிப்பட்ட ஓய்வூதியக் கணக்குகள்;

(xii) தான்புரிதொழில்சார் மற்றும் ஆள்சார் ஓய்வூதியத் திட்டங்கள்;

(xiii) கட்டிடச் சங்கங்கள், கைத்தொழில் மற்றும் சகாயச் சங்கங்கள் அத்துடன் பதிவுசெய்யப்பட்ட நட்புறவுச் சங்கங்கள் உட்பட, குறித்தசில கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள்; அல்லது

(xiv) மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்கான ஏதேனும் ஒத்த ஒழுங்கேற்பாடு.

"கட்டுப்பாட்டாளர்" என்பது, பின்வரும் ஆள் என்று பொருளாகும்:-

(அ) வைத்திருப்பவரிலான வாக்களிக்கும் பங்குகளுடன் இணைந்துள்ள வாக்குகளின் இருபது சதவீதத்துக்குக் குறையாதவற்றைப் பிரயோகிப்பதற்கு அல்லது அவற்றின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உரித்துடையவர்; அல்லது

*(ஆ) அத்தகைய வைத்திருப்பவரின் பணிப்பாளர்களுள் பெரும்பான்மையோரை நியமிப்பதற்கு அல்லது நியமிக்கச் செய்வதற்குத் தத்துவமுடையவர்; அல்லது*

*(இ) சந்தை நிறுவனத்தினதும் சந்தை இடைத்தரகரினதும் தொழில் அல்லது நிருவாகம் தொடர்பிலான முடிபுகளைச் செய்வதற்கு அல்லது செய்விப்பதற்கு மற்றும் அத்தகைய முடிபுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கப்படுவதனைச் செய்விப்பதற்குத் தத்துவமுடையவர்;*

*"நீதிமன்றம்" என்பது, ஒரு மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டதும், 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம்,ஒரு மேல் நீதிமன்றம் எம்மாகாணத்துக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அம் மாகாணத்தினுள் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டதுமான அத்தகைய மேல்நீதிமன்றம் அல்லது ஏதேனும் மாகாணத்துக்காகக் குடியியல் நியாயாதிக்கம் உரித்தாக்கப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றமெதுவும் தாபிக்கப்படாதவிடத்து, மேல் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்;*

*"நிரலிலிருந்து அகற்றுதல்" என்பது, ஒரு பரிவர்த்தனையின் அலுவலகமுறையான நிரலிலிருந்து நிரற்படுத்தப்பட்ட பிணையங்களை அகற்றுதல் என்று பொருளாகும்;*

*"வைப்பகப் பங்குபற்றுநர்" என்பது, ஒரு மத்திய வைப்பகத்தின் வசதிகளுக்கு அணுக்கத்தைக்கொண்டவரும் ஒரு மத்திய வைப்பகத்தின் விதிகளின்கீழ் வைப்பகப் பங்குபற்றுநராக அனுமதிக்கப்படுகின்றவருமான ஆளொருவர் என்று பொருளாகும்;*

"மூலாதாரப் பிணையங்கள்" என்பது, ஒரு சீர்ப்படுத்தல் உடன்படிக்கை, எதிர்நோக்குகள் விருப்புத்தெரிவுகள் மற்றும் தகவுடைய பரிவர்த்தனை வியாபாரஞ் செய்யப்பட்ட விருப்புத்தெரிவு அல்லது மூலாதாரப் பிணையமொன்றாகவுள்ளதென ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கைகளின் வகுப்பிலான வேறேதேனும் உடன்படிக்கை என்பவற்றைக் கொண்டுள்ள எதிர்நோக்குகள் ஒப்பந்தங்களை உள்ளடக்கும், ஆனால் மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனையொன்றின் எதிர்நோக்குகள் சந்தைமீது வியாபாரஞ்செய்யப்படாத மூலாதாரப் பிணைய உடன் படிக்கையொன்றாகவிருப்பதாகக் குறித்துரைக்கப் படுகின்ற உடன்படிக்கையொன்றை விலக்குதல் வேண்டும்;

"மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை" என்பது, இச்சட்டத்தின்கீழ் மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனையாக உரிமமளிக்கப்பட்ட ஒரு கூட்டி ணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

"இலத்திரனியல் பதிவேடு" என்பது, இலத்திரனியல் வழிவகைகள்மூலம் உருவாக்கப்பட்ட, தேக்கிவைக்கப் பட்ட, தோற்றுவிக்கப்பட்ட, பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட எழுத்திலான ஆவணம் அல்லது வேறு பதிவேடு என்று பொருளாகும்;

"பரிவர்த்தனை" என்பது, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பட்ட ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை என்று பொருளாகும்;

"வழங்குநர்" என்பது, விற்பனைக்கான பகிரங்கக் கொடை முனைவு என்றவகையாகப் பிணையங்களை வழங்கு கின்ற அல்லது வழங்க உத்தேசிக்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

"நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகம்" என்பது, இலங்கையில் கூட்டிணைக்கப்படாததும் இரண்டாம் நிலை நிரற்படுத்தல் என்றவகையாக ஒரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் அலுவலகமுறையான நிரலில் சேர்க்கப்பட்டதுமானவோர் உருவகம் என்று பொருளாகும்;

"நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்பது, எந்தக் கம்பெனி ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது அதன் பிணையங்களை நிரற்படுத்தியுள்ளதோ அந்த ஏதேனும் கம்பெனி என்று பொருளாகும் என்பதுடன், ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது அதன் பிணையங்கள் நிரற்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்கும்;

"நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்" என்பது, ஒரு பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்பட்ட எவையேனும் பிணையங்கள் என்று பொருளாகும்;

"முகாமையாளர்"என்பது, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு தொடர்பாக, அதன் தொழிலின் ஏதேனும் பாகத்தை முகாமைசெய்வதற்குக் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் நியமிக்கப்படுகின்ற ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன், (பிரதான நிறைவேற்று அலுவலர் தவிர்ந்த) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஊழியரொருவரையும் உள்ளடக்கும்; அவர் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவரின் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் நேரடி அதிகாரத்தின்கீழ் முகாமைசார் பணிகளைப் பிரயோகிப்பவராகவுள்ளார் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகளை அல்லது வேறு பதிவேடுகளைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ளார்;

"எல்லைக்கடன் கணக்கு" என்பது, நிரற்படுத்தப்பட்ட பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பொதுவாக பிணையமாக உள்ள நிரற்படுத்தப்பட்ட பிணையங்களை வாங்குவதற்கு அல்லது விற்பனைசெய்வதற்கு முதலீட்டாளரொருவரை அனுமதிக்கின்ற ஒரு கணக்கு என்று பொருளாகும்;

"சந்தை நிறுவனம்" என்பது, இச்சட்டத்தின் பாகம் II இன்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு பரிவர்த்தனை, தீர்வக இல்லம் அல்லது மத்திய வைப்பகம் என்று பொருளாகும்;

"சந்தை இடைத்தரகர்" என்பது, கடன் தரப்படுத்தல் முகவராண்மையாக, மூலாதாரப் பிணையங்களின் தரகராக, நிதிசார் திட்டமிடுநராக, முதலீட்டுப் பகுப்பாய்வாளராக, முதலீட்டு முகாமையாளராக, முகாமைக் கம்பெனியாக, எல்லைக்கடன் அளிப்பவராக, சந்தை ஆக்குநராக, பிணைய இடைத்தரகு முகவராக, பங்குத்தொகுதித் தரகராக அல்லது ஒத்த செயற்பாட்டைப் பொறுப்பேற்கும் வேறெவரேனுமாளாக 89 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்டவரும், ஆணைக்குழுவினால் அத்தகைய உரிமம் வழங்கப்படும் நோக்கத்துக்காக விதிகளினால் விவரிக்கப்பட்டவருமான எவரேனுமாளை உள்ளடக்கும். இவ்வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக-

(அ) "கடன் தரப்படுத்தல் முகவராண்மை" என்பது, எவரேனும் வழங்குநரின் அல்லது பிணையங்களின் குறிப்பிட்ட வழங்குகையின் கடன்தீர் நிலையை மதிப்பீடுசெய்து பெறுமதிமதிக்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ளவொரு கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

(ஆ) "மூலாதாரப் பிணையங்களின் தரகர்" என்பது, ஒரு தரகைப் பெறுவதன் பிரதிபயனாக முதலீட்டாளர்களின் சார்பில் மூலாதாரப் பிணையங்களை வாங்கும் அல்லது விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

(இ) "நிதிசார் திட்டமிடுநர்" என்பது, வேறோராளின் நிதிசார் நிலைமைகளைப் பகுப்பாய்வுசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவரும், ஒரு கட்டணத்

துக்காக அல்லது தரகுக்காகப் பிணையங்களிலான எதேனும் முதலீட்டுத் திட்டமுட்பட அந்த வேறு ஆளின் நிதிசார் தேவைகளையும் குறிக்கோள்களையும் எதிர்கொள்வதற்கான ஒரு திட்டத்தை வழங்குபவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

(ஈ) "முதலீட்டுப் பகுப்பாய்வாளர்" என்பது, பிணையங்கள் சம்பந்தமாக அல்லது தொழிற் பிரச்சினைகளின் பாகமாக மற்றவர்களுக்கு மதியுரையளிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவரும், ஆணைக்குழு விதிகளில் விதித்துரைக்கக்கூடிய செய்தித்தாள்களின் உரிமையாளர்கள் அல்லாதவர்களும், பிணையங்கள் சம்பந்தமாகப் பிரகடனப்படுத்துகின்றவரும், பகுப்பாய்வு செய்கின்றவரும் அல்லது அறிக்கையிடுகின்றவருமான எவரேனுமாளை உள்ளடக்கும்;

(உ) "முதலீட்டு முகாமையாளர்" என்பது, ஒரு கட்டணத்துக்காக அல்லது தரகுக்காக முதலீட்டாளரின் சார்பில் பிணையங்களின் தேக்கமொன்றை முகாமைசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவரை உள்ளடக்கும். ஆனால் ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் முகாமையாளரை உள்ளடக்குதலாகாது;

(ஊ) "முகாமைக் கம்பெனி" என்பது, ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் ஓர் அலகு,-

(i) வழங்கப்படுவதற்கு, அல்லது ஒப்பப்பணத்துக்காக அல்லது கொள்வனவுக்காகக் கொடைமுனையப்படுவதற்கு எந்தக் கம்பெனியினால் முன்மொழியப்பட்டுள்ளதோ; அல்லது

(ii) ஒப்பப்பணஞ்செலுத்துவதற்கான அல்லது கொள்வனவுக்கான கோரிக்கையொன்று அவ்வலகு தொடர்பில் எந்தக் கம்பெனி யினால் செய்யப்பட்டுள்ளதோ,

அந்தக் கம்பெனி என்று பொருளாகும்;

(எ) "எல்லைக்கடன் அளிப்பவர்" என்பது, ஒரு பரிவர்த்தனையின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட பிணையங்களைக் கொள்வனவுசெய்வதற்கு முதலீட்டாளர்களுக்குக் கடன்வழங்கும் தொழிலிலுள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

(ஏ) "சந்தை ஆக்குநர்" என்பது, ஒரு பரிவர்த்தனையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையின்மீது குறித்துரைக்கப்பட்டவொரு பிணையத்துக்காகத் தன்னியக்கப்படுத்தப்பட்ட வியாபார முறைமையில் பேணப்பட்ட கட்டளைப் புத்தகத்தில் விலைகோரல் மற்றும் கொடை முனைவு விலைகளைப் பதிகின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

(ஐ) "பிணைய இடைத்தரகு முகவர்" என்பது, முதனிலைச் சந்தையில் முதலீட்டை வசதிப்படுத்துவதில் ஒரு வழங்குநருக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையே இடைத்தரகராகவுள்ள ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன், குறிப்பாகப் பொதுமக்களுக்கு அத்தகைய பிணையங்களைக் கொடைமுனையும் நோக்குடன் கம்பெனியிடமிருந்து அத்தகைய வழங்குகையைக் கொள்வனவுசெய்கின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

(ஒ) "பங்குத்தொகுதித் தரகர்" என்பது, ஒரு தரகைப் பெறுவதன் பிரதிபயனுக்காக முதலீட்டாளர்களின் சார்பில் மூலாதாரப் பிணையங்கள் தவிர்ந்த பிணையங்களை வாங்கும் அல்லது விற்பனைசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

"சந்தைத் தொழிற்படுத்துநர்" என்பது, பாகம் IV இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நிரற்படுத்தப்படாத பிணையங்களின் வியாபாரம், தீர்வு அல்லது தீர்ப்பனவை வசதிப்படுத்துகின்ற சந்தை உட்கட்டமைப்பைத் தாபிக்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்கல் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"கொடைமுனைவு" அல்லது "கொடைமுனைதல்" என்பது, ஒரு முன்விவரணத்தின்மூலம் அல்லது வேறு வகையாகப் பெறுமதிக்காக எவையேனும் பிணையங்களை அல்லது அத்தகைய பிணையத்திலான அக்கறையை விற்பனைசெய்வதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான ஏதேனும் எத்தனத்தை உள்ளடக்கும், ஆனால் அத்தகைய எவையேனும் பிணையங்கள் தொடர்பில் ஒப்புறுதி உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு எவரேனுமாளுக்கான நல்லெண்ணத்துடனான கோரிக்கையை உள்ளடக்காது;

"தனிப்பட்ட பிணையக்கொள்ளல் கொடைமுனைவு" என்பது, ஏலவேயுள்ள பங்குதாரர்களுக்கான தகவுக்கேற்ப, கொடைமுனையப்பட்ட உரிமைகளின் வழங்குகை அல்லது ஒப்பப்பணத்துக்காகப் பொதுமக்களுக்கான பொதுவான கொடைமுனைவு என்றவகையாக வல்லாது வேறுவகையாக அடையாளங்காணப்பட்ட முதலீட்டாளரொருவருக்கு அல்லது வகுதியினரான முதலீட்டாளர்களுக்குப் பிணையங்களின் வழங்குகை என்று பொருளாகும்;

"ஒருமித்துச் செயலாற்றுகின்ற ஆட்கள்" என்பது, விதிமுறையான அல்லது விதிமுறையானதல்லாத உடன்படிக்கையை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப்

பின்பற்றி, ஒரு கம்பெனியிலுள்ள அல்லது வேறே தேனும் கம்பெனியிலுள்ள பங்குகளிலான எவையேனும் அக்கறைகள் ஆட்களுள் எவரினாலும் கொள்ளப்படுவதனூடாக, அல்லது ஒரு கம்பெனிக்கான கொடை முனைவின் வெற்றிகரமான விளைவை நிலைகுலைப்பதற்கு ஒத்துழைக்கின்ற அந்த ஆட்கள் என்று பொருளாகும். இவ்வரைவிலக்கணத்தின் பொதுவான ஏற்புடைமைக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவின் திருப்திக்கு முரணாக நிலைநாட்டப்பட்டாலொழிய, பின்வரும் ஆட்கள், ஒருவரோடொருவர் ஒருமித்துச் செயலாற்றுகின்ற ஆட்களென ஊகிக்கப்படுவர்:-

(அ) எல்லாம் ஒன்றோடொன்றாக, ஒரு கம்பெனி, அதன் தாய் கம்பெனி, துணைநிலைக் கம்பெனிகளும் கூட்டுத் துணைநிலைக் கம்பெனிகளும், அவற்றின் இணைக் கம்பெனிகளும், அத்தகைய கம்பெனிகள் எந்தக் கம்பெனிகளின் இணைக் கம்பெனிகளாக உள்ளனவோ அந்தக் கம்பெனிகளும் மற்றும் வாக்களிக்கும் உரிமைகளின் கொள்வனவுக்காக மேற்கூறப்பட்ட ஆட்களுள் எவருக்கும் நிதியுதவி வழங்கியுள்ள (தொழிலின் சாதாரண நெறியின்போது வங்கியொன்று தவிர) எவரேனுமாளும்;

(ஆ) அதன் பணிப்பாளர்களுள் எவருடனுமான ஒரு கம்பெனி (அவர்களின் நெருங்கிய உறவினர்களுடனும், தொடர்புபட்ட நம்பிக்கைப்பொறுப்புக்களுடனும் அதன் பணிப்பாளர்களுள் எவரினாலும், அவர்களின் நெருங்கிய உறவினர்களினாலும், தொடர்புபட்ட நம்பிக்கைப் பொறுப்புக்களினாலும் கட்டுப்படுத்தப்பட்ட கம்பெனிகளும்);

(இ) அதன் ஓய்வூதிய நிதியங்களுள் மற்றும் ஊழியர் பங்குத் திட்டங்களுள் எவற்றுடனுமான கம்பெனிகள்;

(ஈ) எந்த முதலீட்டுக் கம்பெனியின், கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வேறு ஆளின் முதலீடுகளை ஒரு நிதிய முகாமையாளர் முகாமைசெய்கின்றாரோ அந்த ஏதேனும் முதலீட்டுக் கம்பெனி, கூறு நம்பிக்கைப்பொறுப்பு அல்லது வேறு ஆளுடனான அத்தகைய நிதிய முகாமையாளர்; அல்லது

(உ) எல்லாம் ஒருவரோடொருவராக, ஆளொருவர், ஆளொருவரின் நெருங்கிய உறவினர்களை மற்றும் அவர்களுள் எவரினதும் தொடர்புபட்ட நம்பிக்கைப்பொறுப்புக்கள்;

"முன்விவரணம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பகிரங்க அறிவித்தல்" என்பது, இச்சட்டத்தின் கீழ் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கருமம்பற்றிய அறிவித்தல் என்று பொருளாகும்; அக்கருமம்பற்றிய அறிவித்தலை வர்த்தமானியில் குறைந்தபட்சம் ஒரு பிரசுரத்திலேனும் மற்றும் இலங்கையினுள் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாளாந்தச் செய்தித் தாளொன்றில் குறைந்தபட்சம் ஒரு பிரசுரத்திலேனும் வெளியிடுவதன் மூலம் இது கொடுக்கப்படுதல் வேண்டும்;

"பதிவுசெய்யப்பட்ட ஆள்" என்பது, ஒரு சந்தை இடைத் தரகருக்காகவும் அவர் சார்பிலும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்கின்றவரும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப்படுகின்றவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

"தொடர்புபட்ட கம்பெனி" என்பது, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் துணைநிலைக்கம்பெனி, இணைக் கம்பெனி அல்லது கொளிக்கம்பெனி அல்லது கொளிக் கம்பெனியின் துணைநிலைக்கம்பெனி என்று பொருளாகும்;

"உரிமைகளின் வழங்குகை" என்பது, நிரற்படுத்தப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பெனியின் ஏலவேயுள்ள பங்குதாரர்களுக்கு அத்தகைய கம்பெனியின் எவையேனும் பங்குகளின் வழங்குகை அல்லது எதிர்காலத்தில் வழங்கப்படவேண்டிய பங்குகள் என்று பொருளாகும்; எவ்வாறாயினும், அத்தகைய வழங்குகை, அத்தகைய கொடைமுனைவுத் தேதியன்று அத்தகைய கம்பெனியில் அவர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் வகுப்புக்கான விகிதாசாரத்தில் விவரிக்கப்படுகின்றது அல்லது கவனத்துட்கொள்ளப்படுவதற்காக ஆற்றுப் படுத்தப்படுகின்றது;

"பிணையங்கள்" என்பது, ஏதேனும் அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் நம்பப்படும் அடிப்படைச் சொத்தின் அல்லது வழங்கப் பட்ட அல்லது வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பத்திரங்களின் தன்மை எவ்வாறிருப்பினும், (கூறுகளாக அல்லது வேறுவகையாக விவரிக்கப்படினுஞ்சரி) அதன்கண்ணுள்ள அல்லது அது தொடர்பிலான எவையேனும் உரிமைகள், விருப்புத்தெரிவுகள் அல்லது அக்கறைகள் உட்பட, கடன்தொகுதிப்பத்திரங்கள், பங்குத்தொகுதிகள், பங்குகள், நிதிகள், முறிகள்,ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்திலான கூறுகள், எதிர் நோக்குகளும் விருப்புத்தெரிவுகளும் உட்பட மூலாதாரப் பிணையங்கள் அல்லது ஆணைக்குழு விதித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய வேறு கருவிஅல்லது வகுப்பினவான கருவிகள் என்பவற்றை உள்ளடக்கும், ஆனால் பிணையங்களாக இராதவையென ஆணைக் குழு விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு பெருக்குத்தொகைகளை அல்லது வகுப்பினவான பெருக்குத்தொகைகளை உள்ளடக்காது;

"*பிணையங்கள் சந்தை*" என்பது,-

(அ) பிணையங்களை விற்பனைசெய்வதற்கான, கொள்வனவுசெய்வதற்கான அல்லது கொடுத்து மாற்றுவதற்கான கொடைமுனைவுகள் கிரமமான முறையில் செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுக்கொள் ளப்படுகின்ற;

(ஆ) பிணையங்களை விற்பனைசெய்வதற்கான, கொள்வனவுசெய்வதற்கான அல்லது கொடுத்து மாற்றுவதற்கான கொடைமுனைவுகள் செய்யப்படு வதனை அல்லது ஏற்றுக்கொள்ளப்படுவதனை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் விளை விப்பதற்கு உட்கருதப்படுகின்ற அல்லது விளை விப்பதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப் படக்கூடிய கொடைமுனைவுகள் அல்லது கோரிக்கைகள் கிரமமான முறையில் செய்யப் படுகின்ற; அல்லது

(இ) எந்த விலைகளில் அல்லது எந்தப் பிரதிபயனுக் காகக் குறிப்பிட்ட ஆட்கள் அல்லது குறிப்பிட்ட வகுப்பினரான ஆட்கள் பிணையங்களை விற்பனை செய்வதற்கு, கொள்வனவுசெய்வதற்கு அல்லது கொடுத்து மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றனரோ அல்லது நியாயமானமுறையில் அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்க்கப்படக்கூடுமோ அந்த விலைகள் அல்லது பிரதிபயன் சம்பந்தமான தகவல் கிரமமான முறையில் வழங்கப்படுகின்ற,

ஒரு சந்தை அல்லது வேறு இடம் அல்லது செயலிடம் என்று பொருளாகும்;

"*பங்கு*" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் கொடுக்கப்படுகின்றவாறான அல்லது வேறொரு நியாயாதிக்கத்தின் சட்டங்களின் கீழான பங்காக அதில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற வாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பங்குத்தொகுதிக் கடன்பெறுநர்" என்பது, பிணையங்களைக் கடனாகப் பெறும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

"பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை" என்பது, இச்சட்டத்தின்கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக உரிமமளிக்கப் பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

"துணைச் சேவை வழங்குநர்" என்பது, ஒரு சந்தை நிறுவனத் துக்கு, சந்தை இடைத்தரகருக்கு அல்லது நிரற்படுத்தப் பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு உயர்தொழிற்சார் சேவைகளை வழங்குகின்ற காப்பீட்டு மதிப்பாளர், கணக்காய்வாளர், கூட்டிணைக்கப்பட்ட நிதிசார் மதியுரைநர், கட்டுக்காப்பாளர், நம்பிக்கைப்பொறுப் பாளர், ஒப்புறுதியாளர், பெறுமதி மதிப்பீட்டாளர் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆள் என்போரை உள்ளடக் கும். இவ்வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக-

(அ) "கூட்டிணைக்கப்பட்ட நிதிசார் மதியுரைநர்" என்பது, ஒரு கட்டணத்துக்காக அல்லது தரகுக் காக, மற்றவற்றுக்கிடையில், பின்வருவனமீது மதியுரை வழங்கும் தொழிலில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும்:-

(i) இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட வாறு நிதித் திரட்டுதல் தேவைப்பாடுகளுக்கு அல்லது அவை தொடர்பில் இணங்கி யொழுகுதல்;

(ii) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்;

(iii) நிதிசார் கருவிகளைக் கட்டமைத்தல்; அல்லது

(iv) ஒரு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி யின் ஒழுங்கேற்பாட்டுத் திட்டங்கள், மீள்கட்ட மைப்புத் திட்டங்கள் அல்லது கையேற்பு;

(ஆ) "ஒப்புறுதியாளர்" என்பது, ஒரு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது ஒரு நிரற்படுத்துகைக்காக விண்ணப்பித்துள்ளவொரு கம்பெனியின் பிணையங்களினது பகிரங்க வழங்குகை சம்பந்தமாக, ஒரு கட்டணத்துக்காக அல்லது தரகுக்காக அத்தகைய கம்பெனியின் ஒப்பப்பணஞ் செலுத்தப்படாத பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு உத்தரவாதமளிக்கின்ற அல்லது கொடைமுனைவுக்கு முழுமையாக ஒப்பப்பணஞ்செலுத்தப்படாத பட்சத்தில் அத்தகைய பிணையங்களைக் கொள்வனவுசெய்வதற்கு அத்தகைய கம்பெனியுடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும்;

"வியாபாரப் பங்குபற்றுநர்" என்பது, ஒரு பரிவர்த்தனையின் வசதிகளுக்கு அணுக்கத்தையுடையவரும் ஒரு பரிவர்த்தனையின் விதிகளின்கீழ் ஒரு வியாபாரப் பங்குபற்றுநராக அனுமதிக்கப்படுகின்றவருமான ஆளொருவர் என்று பொருளாகும்.

## பாகம் I

## ஆணைக்குழுவைத் தாபித்தல்

**4**. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:- இப்பாகத்தின் குறிக்கோளும், நோக்கமும்.

(அ) நியாயமான, வினைத்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையை உருவாக்குவதற்காகவும் பேணுவதற்காகவும் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபித்தல்;

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அக்கறைகளைப் பாதுகாத்தல்;

(இ) இச்சட்டத்தின்கீழான சேவைகளை வழங்குவதில் உயர்வான உயர்தொழிற்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(ஈ) நிதிசார்முறைமையில் முறைமைசார் ஆபத்துக்களைத் தணித்தல்.

## அத்தியாயம் I

### இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு

இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக் குழுவைத் தாபித்தல்.

**5**. (1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு எனவழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரின்மூலம் கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவும் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத்தொடுக்கலாம் மற்றும் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

ஆணைக் குழுவின் அமைப்பு.

**6**. (1) ஆணைக்குழுவானது-

(அ) ஆணைக்குழுவின் பல்தொழிற்சார் தன்மையைப் பிரதிபலிப்பதற்கென, பிணையங்கள் சந்தை தொடர்பான கருமங்கள் தொடர்பில் உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் நற்கணிப்பையும், சட்டம், நிதி, கணக்கியல், பொருளியல், வங்கித்தொழில் அல்லது தொழில் என்ற துறைகளில் விசேட அறிவு அல்லது பரந்த அனுபவம் மற்றும் எண்பிக்கப்பட்ட தகுதி என்பவற்றைக் கொண்டுள்ளவர்களும் தனியார் துறையிலிருந்தானவர்களும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களும், உறுப்பினர்களாக அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவர்களுமான ஆறு ஆட்கள்;

(ஆ) மூன்று பெயர்நியமன உறுப்பினர்கள்-

(i) திறைசேரிச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட திறைசேரிப் பிரதிச்செயலாளர் ஒருவர்;

(ii) இலங்கைப் பணச்சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவர்; அத்துடன்

(iii) இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவாறு கணக்காய்வுசெய்வதில் ஈடுபட்டிராதவரான இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் கூட்டுறுப்பினர் ஒருவர்;

(இ) பதவிவழி உறுப்பினரொருவராக, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி,

என்போரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் தவிசாளராகவிருப் பதற்கான ஓர் உறுப்பினரை ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுளிருந்து பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆட்களை நியமிப்பதில் அமைச்சர் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அந்த ஆளின் நேர்மையும் நற்கணிப்பும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவின் அக்கறைகளுக்கும், அவ்வாள் எந்த அக்கறையைக் கொண்டுள்ளாரோ அல்லது பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அந்த ஏதேனும் அக்கறைக்கும் இடையேயான ஏதேனும் முரண்பாடு எழக்கூடிய சாத்தியம்.

*நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்.*

**7.** ஆணைக்குழுவின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் இறப்பின் மூலம், சட்டநடைமுறையின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுகாலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், இரண்டு அடுத்துறும் பதவிக்காலங்களைக் கொண்ட அதிகபட்சக் காலப்பகுதிக்கமைய மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

*பதவி விலகுதலும், ஆணைக் குழுவின் உறுப்பினராக விருப்பதற்கான தகைமை யீனங்களும், பதவியிலிருந்து அகற்றப்படு தலும்.*

**8.** (1) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகுகை எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக விருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட உருவகமொன்றின் பணிப்பாளர், பங்காளர் அல்லது ஊழியரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(இ) அவர் சித்தசுவாதீனமற்றவராகவிருந்தால் அல்லது வந்தால் அல்லது அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஈ) அவர் பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராக விருந்தால் அல்லது வந்திருந்தால்;

(உ) அவர் தமது கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்தால்;

(ஊ) அவர் ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக் குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்;

(எ) அவர் பதவியில் தொடர்ந்திருத்தல் ஆணைக்குழுவின் அக்கறைக்குத் தீங்குவிளைவிப்பதாகவிருக்கும் வகையில் தமது பதவியைத் துர்ப்பிரயோகஞ்செய்தால்;

(ஏ) தவிசாளரின் விடயத்தில், அவர் அமைச்சரினால் வழங்கப்பட்ட அனுமதியின்மீது தவிர, தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருந்தால்;

(ஐ) அவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தமது கடப் பாடுகளுக்கு இணங்கியொழுகத்தவறினால்; அல்லது

(ஒ) அவர் இப்பிரிவின்கீழ் பதவியிலிருந்து முன்னர் அகற்றப்பட்டிருந்தால்.

(3) இறப்பு, பதவிவிலகுகை, பதவியிலிருந்து அகற்றப்படுகை அல்லது இதன் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நடைமுறை என்பன காரணமாகப் பதவிவழி உறுப்பினர் ஒருவரல்லாத எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும்பட்சத்தில், அமைச்சர், 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின் றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சி யுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

(4) தவிசாளர் தவிர்ந்த ஆணைக்குழுவின் எவரேனும் உறுப் பினர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை

விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக விருப்பின், அமைச்சர், 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியின் போது அவரினிடத்தில் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(5) ஆணைக்குழுவிடமிருந்து முதலில் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், பதவிவழி உறுப்பினர் தவிர்ந்த எவரேனும் உறுப்பினரை, (2) ஆம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ளவாறான தகைமையீனங்களுள் எவற்றுக்கும் அவர் அமைந்தவராக வந்தால், பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

*உறுப்பினர்களின் ஊதியம்.*

**9**. நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப் படுகின்றதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன், ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

*ஆணைக் குழுவின் கூட்டங்கள்.*

**10**. (1) ஆணைக்குழுவின் தவிசாளர், சமுகமாயிருப்பின், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய எவையேனும் கூட்டங்களுக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கென உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஆணைக்குழுவானது ஒழுங்குபடுத்தலாம்.

(4) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தலைமை தாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஆணைக் குழுவின் தவிசாளர்.**

**11.** (1) ஆணைக்குழுவின் தவிசாளர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அமைச்சர், அவரினிடத்தில் செயலாற்றுவதற்கென ஆணைக்குழுவின் வேறோர் உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அவர் ஆணைக்குழுவின் உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

**உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிவிடுதல்.**

**12.** ஆணைக்குழுவினால் ஏதேனும் கருமத்தின்மீது எடுக்கப்படவுள்ள ஏதேனும் முடிபில் நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் அக்கறை கொண்டுள்ள உறுப்பினரொருவர் அத்தகைய முடிபு எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஆணைக்குழுவின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும். அத்தகைய வெளிவிடுகையானது ஆணைக்குழுவின் கூட்டங்களினது நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அக்கருமம் தொடர்பாக ஆணைக்குழுவின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது; அத்துடன் அத்தகைய கலந்தாராய்வு நடந்துகொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்பட்டுக்கொண்டிருக்கையில் அத்தகைய கூட்டத்திலிருந்து வெளிச்செல்லுதலும் வேண்டும்.

**ஒரு வெற்றிடம் இருப்பதன் காரணமாக நடவடிக்கைகள், செயல்கள் அல்லது முடிபுகள் செல்லுபடியற்றனவாகாது.**

**13.** ஆணைக்குழுவின் நடவடிக்கை,செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

**ஆணைக்குழுவின் இலச்சினை.**

**14.** (1) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரினதும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் சமுகத்திலன்றி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி வருகைதராதிருப்பின் ஆணைக்குழுவின் எவரேனும் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றி ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக்கையொப்பமிடுதல் வேண்டும்.

## அத்தியாயம் 2

### ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**ஆணைக் குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பிரதான பணிகளும்.**

**15.** ஆணைக்குழுவானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம் மற்றும் நிறைவேற்றலாம்:-

(அ) பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தி பற்றி அரசாங்கத்துக்கு மதியுரையளித்தலும் பிணையங்கள் சந்தை தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் பயனுற அமுலாக்குவதில் உதவுதலும்;

(ஆ) இலங்கையிலுள்ள பிணையங்கள் சந்தைகளின் அபிவிருத்தியை, அதுசம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி உட்பட, ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும்;

(இ) சந்தை நிறுவனங்கள், சந்தை இடைத்தரகர்கள், பதிவுசெய்யப்பட்ட ஆட்கள், தீர்வக உறுப்பினர்கள், வியாபாரப் பங்குபற்றுநர்கள், வைப்பகப் பங்குபற்றுநர்கள், வழங்குநர்கள், முதலீட்டாளர்கள் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநர்கள் என்போருட்பட, எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை விடுத்தல்;

(ஈ) சந்தை நிறுவனங்களின், சந்தை இடைத்தரகர்களின் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளின் துணைச்சேவை வழங்குநர்களுக்குக் காலத்துக்குக் காலம் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை விடுத்தல்;

(உ) ஒரு சந்தை நிறுவனமாகத் தொழிற்படுவதற்குக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு உரிமமளித்தலும் அது முறையாக நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதலும்;

(ஊ) ஒரு சந்தை இடைத்தரகராகத் தொழிற்படுவதற்கு எவரேனுமாளுக்கு உரிமமளித்தலும் அது முறையாக நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதலும்;

(எ) பதிவுசெய்யப்பட்ட ஆளொவருவராகச் சந்தை இடைத்தரகர் ஒருவருக்காகவும் அவர் சார்பிலும் பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு பற்றி வாடிக்கையாளர்களுக்கு மதியுரையளிக்கும் ஆளொருவரைப் பதிவுசெய்தலும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துதலும்;

(ஏ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளுக்கு அல்லது நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்களுக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை வழங்குதலும்;

(ஐ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியைக் கையேற்றல் அல்லது ஒன்றிணைத்தல் தொடர்பாகக் கொள்ளுபவர், கொடைமுனைபவர் அல்லது ஒரு கொடைமுனைபவர் அல்லது கொடைமுனைவு பெறுபவர் அல்லது இலக்குக் கம்பெனியுடன் ஒருமித்துச் செயலாற்றுகின்ற ஆட்களுக்குப் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை வழங்குதல்;

(ஒ) இச்சட்டத்தின், ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் உடனடியாக நிகழவுள்ள மீறுகைகளைத் தடுப்பதற்கும் மீறுகையைத் தடைசெய்வதற்கும் எவரேனுமாளுக்குக் குறிப்பான பணிப்புரைகளை வழங்குதல்;

(ஓ) ஒரு பரிவர்த்தனையில் பிணையங்களின் நிரற்படுத்துகையையும் வியாபாரத்தையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஔ) பிணையங்களின் வழங்குகையை ஒழுங்குபடுத்துதல்;

(க) எவையேனும் பிணையங்களின் நிரற்படுத்துகையைத் தடைசெய்தல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது நிரற்படுத்தப்பட்ட பிணையங்களை நிரலிலிருந்து அகற்றுதல் அல்லது எவையேனும் பிணையங்களின் வியாபாரத்தைத் தடைசெய்தல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது நியாயமான, ஒழுங்கான பிணையங்கள் சந்தையை உறுதிப்படுத்துவதற்காக அல்லது பிணையங்கள் சந்தையின் நேர்மையை உறுதிப்படுத்துவதற்காக ஆணைக்குழு அவசியமென அல்லது உசிதமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல்;

(ங) ஆணைக்குழுவின் குறிக்கோள்களையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அவசியமானவர்களென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களை தொழிலுக்கமர்த்துதலும் அத்தகைய அலுவலர்களின் சம்பளங்களையும் வேதனங்களையும் அல்லது வேறு ஊதியத்தையும் நன்மைகளையும் நிர்ணயித்தலும்;

(ச) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலேனும் கொள்ளுதலும் வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும், விற்பனை செய்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்;

(ஞ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் கையேற்பை அல்லது ஒன்றிணைவை அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான ஏதேனும் கருமத்தை ஒழுங்குபடுத்துதல்;

(ட) ஒரு சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், பதிவு செய்யப்பட்ட ஆள், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகம் என்பவற்றின் ஏதேனும் செயற்பாடு பற்றி விசாரணை செய்தலும் நுண்ணாய்வுகளை நடாத்துதலும்;

(ண) எவரேனுமாளினால் புரியப்பட்ட இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி அல்லது பணிப்புரையின் சார்த்தப்பட்ட ஏதேனும் முரண்பாடு அல்லது மீறுகைபற்றிப் புலனாய்வுகளை நடாத்துதலும் ஆணைக்குழுவினால் அவசியமெனக் கருதப்பட்ட வழிமுறைகளை வலுவுறுத்துதலும்;

(த) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற ஏதேனும் கருமம் தொடர்பாக ஏதேனும் ஒழுங்கமைப்பொன்றுடன் அல்லது வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையுடன் உடன்படிக்கைகளை அல்லது புரிந் துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதல்;

(ந) ஏதேனும் சந்தை நிறுவனத்தினால்,சந்தை இடைத் தரகரினால் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளினால், துணைச் சேவை வழங்குநரால், ஏதேனும் நிரற்படுத் தப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகத்தினால் புரியப்பட்ட தவறான செயல் பற்றிய கண்டுபிடிப்பு களை வெளியிடுதல்;

(ப) பிணையங்கள் பற்றிய கொடுக்கல்வாங்கல்களின் கண் காணிப்பை நிறைவேற்றுதல்;

(ம) ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கட்டணங்களை அல்லது விதிப் பனவுகளை அறவிடுதல்; அத்துடன்

(ய) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான, அவற்றின் இடைநேர்விளைவான மற்றும் அவற்றுக்குத் துணைநிலையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

ஆணைக் குழுவின் மேலதிகத் தத்துவங்கள்.

**16.** ஆணைக்குழுவானது 15 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுடன்சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றுக் கான தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சந்தை நிறுவனங்கள் அல்லது சந்தை இடைத்தரகர் கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் அல்லது கூட்டுமுதலீட்டுத் திட்டங்களின் நம்பிக்கைப்பொறுப் பாளர்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு, விதிகளுக்கு அல்லது பணிப்புரைகளுக்கு இசைந்தொழுகத் தொழிற்படுகின் றனவாவென்பதைத் தீர்மானிப்பதற்கென அவற்றின்

செயற்பாடுகள் பற்றிய சோதனைகளை நிறைவேற்று வதற்கும் அத்தகைய சோதனைகளை நிறைவேற்று வதில் உறப்பட்ட ஆகுசெலவுகளை, விடயத்துக்கேற்ப, சந்தை நிறுவனத்திடமிருந்து அல்லது சந்தை இடைத் தரகரிடமிருந்து அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளிட மிருந்து அல்லது ஒரு கூட்டு முதலீட்டுத்திட்டத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளரிடமிருந்து விதிப்பனவு செய்வதற்கும்;

(ஆ) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட படிவத் திலும் முறையிலும் தகைமைபெற்ற கணக்காய்வாள ரொருவரினால் சான்றுபடுத்தப்பட்ட, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் இடைக்கால நிதிக்கூற்றுக்களையும் ஆணைக்குழுவிடம் கோப்பிடும் படி சந்தை நிறுவனங்களை அல்லது சந்தை இடைத் தரகர்களைத் தேவைப்படுத்துவதற்கும்;

(இ) ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலுமான அறிக்கை களையும் அவ்வாண்டுக்கான ஒரு கூட்டுமுதலீட்டுத் திட்டத்தின் செயற்பாடுகள்பற்றிக் குறைந்தபட்சம் இரண்டு அறிக்கைகளையேனும் ஆணைக்குழுவிடம் கோப்பிடும்படி அந்தக் கூட்டு முதலீட்டுத்திட்டத்தின் உரிமமளிக்கப்பட்ட முகாமைக் கம்பெனியைத் தேவைப்படுத்துகின்றது. அத்தகைய ஒவ்வோர் அறிக்கையும் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். முதலாவது அறிக்கை அவ்வாண்டின் செத்தெம்பர் மாதத்தின் முப்பதாம் தேதிக்குப் பிந்தாமல் கோப் பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இரண்டாவது அறிக்கை அடுத்துவரும் ஆண்டின் மாச்சு மாதம் முப்பத்தோராம் தேதிக்குப் பிந்தாமல் கோப்பிடப் படுதலும் வேண்டும்;

(ஈ) ஆணைக்குழு உசிதமானவர்களெனக் கருதக்கூடிய வாறான நிபுணர்களை நியமிப்பதற்கும்; அத்துடன்

(உ) ஒரு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியைக் கையேற்றலும் ஒன்றிணைத்தலும் தொடர்பான ஏதேனும் கருமம் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கும் மீளாய்வதற்கும் ஆலோசனைக் குழாமொன்றை அமைப்பதற்கும்;

*சட்ட வழக்கு நடவடிக்கைகளில் ஆணைக் குழுவைப் பிரதிநிதித்துவப் படுத்துதல்.*

**17**. ஆணைக்குழுவின் தவிசாளர், சட்டத்தரணி ஒருவராக வுள்ள ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு அல்லது வேறெவரேனும் சட்டத்தரணிக்கு, ஆணைக்குழுவினாலான அல்லது அதற்கெதிரான எவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கைகளில் அல்லது ஆணைக்குழுவானது எந்த வழக்கு நடவடிக்கைகளில் கணிசமானளவு அக்கறையைக் கொண்டுள் ளதோ அந்த எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் ஆணைக் குழுவின் சார்பில் தோன்றுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

## அத்தியாயம் 3

## ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்

*பணிப்பாளர் தலைமையதிபதி.*

**18**. (1) ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை ஆணைக்குழுவானது நியமித்தல் வேண்டும்; அவரே அதன் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தல் வேண்டும். பணிப் பாளர் தலைமையதிபதியின் ஊதியம் உட்பட அவரின் தொழில் நிபந்தனைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, பின்வரும் சந்தர்ப்பங்களில் எவரேனு மாளை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தலாகாது; அத்தகைய ஆள்–

(அ) பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) முறைகேடான துர்ச்செயலுக்காகப் பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையொன்றைப் புரிந்துள்ள விடத்து.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, ஆணைக்குழுவின் அலுவல்களையும் கொடுக்கல்வாங்கல்களையும் பணிப்பதற்கும், அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் மற்றும் புரிவதற்கும் அத்துடன் ஆணைக்குழுவின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிருவகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பானவராதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை எவரேனும் அலுவலருக்கு மற்றும் சேவையாளருக்குக் கையளித்தல் அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம், அவ்வாறு செய்யலாமென்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியை, பின்வரும் காரணங்களுள் ஏதேனுமொன்றைக் கருத்திற்கொண்டு மூன்றிலிரண்டு பங்கினரின் பெரும்பான்மைமூலம் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அந்த ஆளின் நேர்மை அல்லது நற்கணிப்பு;

(ஆ) ஆணைக்குழுவுக்கும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குமிடையேயான அலுவல்களில் ஏதேனும் நிதிசார் அல்லது வேறேதேனும் அக்கறை முரண்பாடு ஏற்படும் சாத்தியம்;

(இ) அவ்வாள் சித்தசுவாதீனமற்றவராக அல்லது தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக வந்தால்;

(ஈ) அவ்வாள் அவரது கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்தால்; அல்லது

(உ) அவ்வாள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் அவரது சுதந்திரத்துடன் தலையிடக்கூடிய ஏதேனும் செயற்பாட்டில் சம்பந்தப்பட்டிருந்தால்:

ஆயின், ஆணைக்குழுவானது, அத்தகைய பதவி அகற்றுகைக்கு முன்னர் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர்.*

**19.** (1) ஆணைக்குழுவானது, அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, பின்வரும் சந்தர்ப்பங்களில் எவரேனுமாளை ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமித்தலாகாது; அத்தகைய ஆள்-

(அ) பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) முறைகேடான செயலுக்காகப் பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையொன்றைப் புரிந்துள்ளவிடத்து.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அல்லது சேவையாளர்களுக்கு, வேறேதேனும் சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை ஆணைக்குழு தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் ஆணைக்குழுவுக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) ஏனைய அரச நிறுவனங்களுக்கு அல்லது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு அத்தகைய நிறுவனத்திற்கு அல்லது அதிகாரசபைக்கு மற்றும் ஆணைக்குழுவுக்குமிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு தொழிலுக்கமர்த்துகையின் மீது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதிக்கு அதன் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் மாற்றுச்சேவைக்கு விடுவிக்கப்படுவதனை ஆணைக்குழுவானது முன்மொழியலாம்.

பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை ஆணைக் குழுவின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.

**20.** (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் மற்றும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையின் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன், ஓய்வூதிய அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்டவையும் ஆணைக்குழுவினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறானவையுமான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, ஆணைக்குழுவின் வேறெவரேனும் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் எந்த ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராகவுள்ளனரோ அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவை யாளர்களும் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல்.

**21.** ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையினதும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் கருத்துக்குட்படவும் அவற்றின் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல் லைக்குட்பட ஆணைக் குழுவானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

**22.** இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஆணைக்குழுவானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்

பாகம் II

## சந்தைகளும் சந்தை நிறுவனங்களும்

இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும்.

**23.** இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சந்தை நிறுவனங்களைத் தாபிப்பதன் ஊடாக இலங்கையில் நியாயமான, ஒழுங்கான, வெளிப்படையான மற்றும் வினைத்திறனான பிணையங்கள் சந்தையை ஊக்குவித்தல்;

(ஆ) ஒரு பிணையங்கள் சந்தையின் பயனுள்ள மற்றும் வினைத்திறனான பணியாற்றுகையை அதிகரித்தல்; அத்துடன்

(இ) பிணையங்கள் சந்தையுடன் இணைந்துள்ள முறைமை சார் ஆபத்தைக் குறைத்தல்.

## அத்தியாயம் I

### பரிவர்த்தனைகள்

*உரிமமளிக்கப்படாத பரிவர்த்தனை ஒன்றைத் தாபிப்பதற்கெதிரான தடை.*

**24.** (1) ஆளொருவர், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரிமத்துடனன்றி, பரிவர்த்தனை ஒன்றைத் தாபித்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத் துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*பரிவர்த்தனை ஒன்றைத் தொழிற்படுத்துவதற்கான விண்ணப்பம்.*

**25.** (1) பரிவர்த்தனை ஒன்றாகத் தொழிற்படுவதற்கான உரிமத்துக்கான விண்ணப்பமொன்று ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களுடனும் அத்தகைய கட்டணங்களுடனும் சேர்த்து அத்தகைய முறையிலும் படிவத்திலும் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, விண்ணப்பமொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது பின்வருவனபற்றித் திருப்திப்படுமிடத்து, தகுதியானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, பரிவர்த்தனையொன்றாகத் தொழிற்படுவதற்கு விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்கலாம்:-

(அ) விண்ணப்பகாரர் அதன் செயலிடங்களினூடாக வியாபாரஞ்செய்யப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாக ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையைத் தொழிற்படுத்துவதற்கு ஆற்றலுடையவராகவிருக்கின்றார்;

(ஆ) விண்ணப்பகாரர் அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமானமுறையில் முகாமை செய்வதற்கு அவசியமான உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளார்;

(இ) விண்ணப்பகாரர் (அ) என்னும் பந்தியின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில், பரிவர்த்தனையானது, பொதுமக்களின் அக்கறைக்கு முரணாகச் செயலாற்றாதிருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆளுகைக் கட்டமைப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) விண்ணப்பகாரரினால் ஆக்கப்பட்ட விதிகள் பின்வருவனவற்றுக்காக ஏற்பாடு செய்துள்ளன:-

(i) அதன் செயலிடங்களின் ஊடாக வியாபாரஞ் செய்யப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாக ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தைக்காகவும்;

(ii) வியாபாரப் பங்குபற்றுநர்களை அனுமதிப்பதற்காகவும்;

(iii) அதன் வியாபாரப் பங்குபற்றுநர்களின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காகவும் மேற்பார்வைக்காகவும்;

(iv) நன்னடத்தையையும் உயர்வானதொழில் நேர்மையையும் கொண்டிராத ஆட்களை வியாபாரப் பங்குபற்றுநர்களாக ஏற்றங்கீகரிக்கப்படுவதிலிருந்து தவிர்ப்பதற்காகவும்;

(v) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நீதியானவையும் ஒப்புரவானவையுமான நெறிகளுடன் ஒத்திராத நடத்தைக்காக அல்லது பரிவர்த்தனையின் விதிகளின் அல்லது இச்சட்டத்தின்

எவையேனும் ஏற்பாடுகளின், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகைக்காக அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்காக வியாபாரப் பங்குபற்றுநரொருவரின் மீதும் அத்தகைய வியாபாரப் பங்குபற்றுநரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளின் மீதும் குற்றப்பணங்களை விதித்தலுட்பட அவர்களை விலக்குவதற்காகவும் இடைநிறுத்துவதற்காகவும் அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுப்பதற்காகவும்;

(vi) எந்த நிபந்தனைகளின் கீழ் பிணையங்கள் நிரற்படுத்தப்படலாமோ அல்லது நிரலிலிருந்து அகற்றப்படலாமோ அந்த நிபந்தனைகள் தொடர்பிலும்;

(vii) வியாபாரப் பங்குபற்றுநர்களினால் பிணையங்களிலான வியாபாரஞ் செய்யப்படுவதனை ஆளுகின்ற நிபந்தனைகள் தொடர்பிலும்;

(viii) அதன் செயலிடங்களின் மீது கையாளப்படக் கூடிய அல்லது வியாபாரஞ்செய்யப்படக்கூடிய பிணையங்களின் வகுப்பு அல்லது வகுப்புக்கள் தொடர்பிலும்;

(ix) சந்தைத் துர்நடத்தையைத் தடைசெய்தல் தொடர்பிலும் மற்றும் புலனாய்வுகள் நடாத்தப்படும் முறை தொடர்பிலும்;

(x) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது ஒழுங்கான மற்றும் நியாயமான வியாபாரத்தை நடாத்துவதற்காக, கொடுக்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின் வியாபாரத்தை இடைநிறுத்துவதற்காகவும்;

(xi) அதன் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோர் வியாபாரப் பங்குபற்றுநர்களாகவிராதவிடத்து, ஒழுக்காற்றுக் குழுவொன்றை நியமிப்பதற்காகவும்; அத்துடன்

(xii) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கான தேவைக்கு உரிய கவனஞ்செலுத்தி, பரிவர்த்தனையின் தொழிலைப் பொதுவாகக் கொண்டு நடாத்துவதற்காகவும்;

(உ) விண்ணப்பகாரர், பின்வருவனவற்றை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதிய நிதிசார், மனித மற்றும் வேறு வளங்களைக் கொண்டுள்ளார்:-

(i) அதன் செயலிடங்களினூடாக வியாபாரஞ் செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையொன்று;

(ii) அதன் தொழிலை நடாத்துவதற்காகப் போதிய மற்றும் தகுந்தமுறையில் சாதனமிடப்பட்ட வளவுகள்;

(iii) அதன் தொழிலை நடாத்துவதற்கான தகுதி வாய்ந்த ஆளணியினர்; அத்துடன்

(iv) அவசரகால நிலைமைகளை எதிர்கொள்வதற்குப் போதிய ஆற்றல், பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் மற்றும் வசதிகள் என்பவற்றுடன் தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமைகள்; அத்துடன்

(ஊ) உரிமத்தை வழங்குவதன்மூலம் பொதுமக்களின் அக்கறை அல்லது சந்தையின் முறையான ஒழுங்குபடுத்துகை பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பகாரர் ஒருவர், விண்ணப்பம் தொடர்பாக அவசியமென ஆணைக்குழு கருதுகின்றவாறாக அத்தகைய மேலதிகத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளின் பொதுமையை வரையறுக்காமல், ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது பிணையங்கள் சந்தையின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக நியதிநிபந்தனைகளைத் திருத்துதல், இல்லாதொழித்தல் அல்லது விதித்தல் தோதானதாகவுள்ளதென ஆணைக்குழு திருப்திப்படின், அவ்வாறு செய்யலாம்.

பரிவர்த்தனையின் கடமைகள்.

**26.** (1) பரிவர்த்தனையொன்றின் செயலிடங்களின் ஊடாக வியாபாரஞ் செய்யப்படுகின்ற பிணையங்களில் ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையை உறுதிப்படுத்துதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(2) பரிவர்த்தனையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் கடமையைப் புரிவதில் பின்வருமாறு செய்தல் வேண்டும்:-

(அ) முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு பொதுமக்களின் அக்கறை கருதிச் செயலாற்றுதல் வேண்டும்;

(ஆ) கம்பெனிகள் தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் அது பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் அக்கறை (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அக்கறையுடன் முரண்படுமிடத்து, மேலோங்கி நிற்றல் வேண்டுமென உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமான முறையில் முகாமைசெய்தல் வேண்டும்.

(3) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பரிவர்த்தனையொன்றின் பணிப்பாளர், முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, பொதுமக்களின் அக்கறைகருதி எல்லா நேரங்களிலும் செயலாற்றுவதற்கான கடமையைக் கொண்டுள்ளாரென்பதுடன், இச்சட்டத்தின்கீழான கடமைக்கும் வேறேதேனும் சட்டத்தின்கீழ் பணிப்பாளரின் கடமைக்கும் இடையே ஒரு முரண்பாடு இருக்குமிடத்து, இச்சட்டத்தின்கீழான கடமை மேலோங்கிநிற்றல் வேண்டும்.

(4) பரிவர்த்தனையானது, அதன் விதிகளுடன் இணங்கியொழுகுவதனைக் கண்காணிக்கும் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அதன் விதிகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான தோதான நடவடிக்கையெடுப்பது அதன் கடமையாதல் வேண்டும்.

(5) பரிவர்த்தனையொன்று பின்வருவனபற்றி அறியவந்தால் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ், ஒழுங்குவிதிகளின்கீழ், விதிகளின் கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் குறித்துரைக்கப் படக்கூடியவாறாகக் குறைந்தபட்ச நிதிசார் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநருக்குள்ள ஆற்றல் உட்பட, ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநர் அதன் உரிமமளிக்கப்பட்ட தொழில் தொடர்பில் அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதனைப் பங்கமான முறையில் பாதிக்கின்ற, அல்லது பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட ஏதேனும் கருமம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஒழுங்கீனம், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின், ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகை அல்லது பரிவர்த்தனை

யின் அபிப்பிராயத்தில், ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநரின் அல்லது அவ்வியாபாரப் பங்குபற்றுநரின் பிரதான நிறைவேற்றலுவலரின் அல்லது பணிப்பாளர்களின் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நிதிசார் நற்கணிப்பு அல்லது நிதிசார் நேர்மை, கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது அல்லது நியாயமானமுறையில் பாதிக்கப்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற அல்லது சுட்டிக் காட்டக்கூடிய வேறேதேனும் கருமம்.

(6) பரிவர்த்தனையொன்று, (5) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் இடம்பெறுவதன்மேல், அதன் ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநர்களுக்கு எச்சரிக்கையொன்றை வழங்குமிடத்து, ஒரு குற்றப்பணத்தை விதிக்குமிடத்து, அதனை இடைநிறுத்துமிடத்து அல்லது விலக்குமிடத்து அல்லது அதற்கெதிராக வேறேதேனும் ஒழுக்காற்று வழிமுறையை விதிக்குமிடத்து, அது, ஏழு நாட்களினுள் பின்வரும் விபரங்களை ஆணைக் குழுவுக்கு எழுத்தில் கொடுத்தல் வேண்டும்:-

(அ) வியாபாரப் பங்குபற்றுநரின் தொழிலினது பெயரும் முகவரியும்;

(ஆ) எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான காரணமும் அதன் தன்மையும்;

(இ) இடைநிறுத்தற் காலப்பகுதியும் குற்றப்பணம் ஏதேனுமிருப்பின் அதன் தொகையும்; அத்துடன்

(ஈ) எடுக்கப்பட்ட வேறேதேனும் ஒழுக்காற்று வழிமுறை.

**27.** (1) ஆணைக்குழுவானது, எழுத்திலான அறிவித்தல் மூலம்- *பரிவர்த்தனையின் உரிமத்தை இல்லாதாக்குதல்.*

(அ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம்; அல்லது

(ஆ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, பயனுறும்வகையில் அத்தகைய வசதிகளை வழங்கா தொழியும்படி அல்லது தொழிற்படுத்தாதொழியும் படி அல்லது அத்தகைய சேவைகளை வழங்கா தொழியும்படி பரிவர்த்தனையைப் பணிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களைப் பாதுகாப் பதற்காக அல்லது பொதுமக்கள் அக்கறைகருதி அல்லது பிணை யங்கள் சந்தையை முறையாக ஒழுங்குபடுத்துவதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது பணிப் புரை வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்பட்டா லொழிய, பின்வரும் சூழ்நிலைகளுள் ஏதேனுமொன்று ஏற்படு மிடத்து, அவ்வாறு செய்தலாகாது:-

(அ) பரிவர்த்தனையானது அதன் பிணையங்கள் சந்தை யைத் தொழிற்படுத்தாதொழிகின்றமை;

(ஆ) பரிவர்த்தனையானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றமை அல்லது வேறுவகையாகக் கலைக்கப்படுகின்றமை;

(இ) பரிவர்த்தனையானது, அதன் உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளமை அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றமை;

(ஈ) பரிவர்த்தனையானது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படு கின்ற ஒரு நிபந்தனைக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளமை;

(உ) இருபத்தைந்தாம் பிரிவின் நோக்கங்களுக்காக வழங் கப்பட்ட ஏதேனும் தகவல் முக்கியமானவொரு விபரத் தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இருந்தமை அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டு விடுகையொன்று இருக்கின்றமை;

(ஊ) பரிவர்த்தனைக்கெதிரான தீர்ப்புத் தனிசொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்படாதுள்ளமை;

(எ) பரிவர்த்தனையின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அது தொடர்பில் இலங்கையினுள்ளாயினுஞ் சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பெறுநரொருவர், பெறுநரொருவரும் முகாமையாள ரும், ஒழிப்போன் அல்லது அவர்களுக்குச் சமமான ஆள் நியமிக்கப்பட்டுள்ளமை;

(ஏ) பரிவர்த்தனையானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அதன் கடன்கொடுத்தோருடன் இணக்கப்பாட்டை அல்லது ஒழுங்கேற்பாட்டுத்திட்டத்தைச் செய்துகொண்டுள் ளமை; அல்லது

(ஐ) பரிவர்த்தனையானது, அதன் சொந்த விருப்பத்தின் பேரில் பரிவர்த்தனையொன்றாக அதன் உரிமத்தை இல்லாதாக்கும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப் பித்து, ஆணைக்குழுவானது அவ்வாறு செய்வது தகுதியானதெனக் கருதுகின்றமை.

(3) இரண்டாம் உட்பிரிவின் பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக, பரிவர்த்தனையொன்று இருவாரங்களை விஞ்சுகின்ற காலப் பகுதிக்கு அதன் பிணையங்கள் சந்தையைத் தொழிற்படுத்தா தொழிந்துள்ளவிடத்து, அது, ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப்பெற்றுக்கொள்ளாமல் அதன் பிணையங் கள் சந்தையைத் தொழிற்படுத்தாதொழிந்துள்ளதெனக் கருதப் படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்படு தல்அல்லது பணிப்புரையொன்று வழங்கப்படுதல் எவ்வாறிருப் பினும், ஆணைக்குழுவானது, பின்வரும் நோக்கங்களுக்காக,

ஆணைக்குழு அறிவித்தலில் குறித்துரைக்கக்கூடியவாறு இல்லா தாக்குகையினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கு, இல்லா தாக்குகை அல்லது பணிப்புரை பயனுடையதாக வரவேண்டிய தேதியன்று அல்லது அதற்குப்பின்னர்தொடர்ந்திருப்பதற்குப் பரிவர்த்தனையை அனுமதிக்கலாம்:-

(அ) பரிவர்த்தனையின் தொழிற்பாடுகளை மூடிவிடும் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட சேவை களை வழங்காதொழியும் நோக்கத்துக்காக;

(ஆ) முதலீட்டாளர்களின் அக்கறையைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக; அல்லது

(இ) பொதுமக்களின் அக்கறைகருதி.

(5) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்று கின்றவிடத்து, ஆணைக்குழு அவசியமெனக் கருதுமிடத்து, புதிய பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படும்வரை பரிவர்த் தனையின் அலுவல்களை முகாமை செய்வதற்கு ஆறுமாத காலப்பகுதிக்கானதும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு நீடிக்கப்படக் கூடியதுமான இடைக்காலப் பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கலாம்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் தொடர்ந்திருப்பதற்குப் பரிவர்த் தனையொன்றுக்கு ஆணைக்குழுவானது அனுமதி வழங்கியுள்ள விடத்து, அப்பரிவர்த்தனையானது, அத்தகைய அனுமதிக்கிணங் கச் செயற்பாடுகளை அது கொண்டுநடாத்துவதன் காரணமாக (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ளதாகக் கருதப்படுதலாகாது.

(7) ஆணைக்குழுவானது, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்ப மொன்றைப் பரிவர்த்தனைக்கு அளிக்காமல், (1) ஆம் உட்பிரி வின்கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(8) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்ற பரிவர்த்தனையொன்று, அம்முடிபுபற்றிப் பரிவர்த்தனைக்கு அறிவிக்கப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்று செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, அமைச்சரின் முடிபு பெறப்படும்வரை பயனுடையதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(10) அமைச்சர், (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது-

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தின் அல்லது பணிப்புரையின் இல்லாதாக்குகையை இல்லாதொழிக்கும்படி ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(11) ஆணைக்குழுவானது, அமைச்சரின் பணிப்புரைக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(12) பதினோராம் உட்பிரிவுக்கமைய, இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் அல்லது ஏதேனும் பணிப்புரையின் ஏதேனும் இல்லாதாக்குகைபற்றி ஆணைக்குழுவானது பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

*ஒரு பரிவர்த்தனையின் உரிமம் இல்லாதாக்கப் படுகின்றமையின் பயன்.*

**28**. இருபத்தேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் அல்லது பணிப்புரையின் ஏதேனும் இல்லாதாக்குகை-

(அ) பரிவர்த்தனையினால் தொழிற்படுத்தப்பட்ட பிணையங்கள் சந்தையின்மீது செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது

ஒழுங்கேற்பாடு, 27 ஆம் பிரிவின்கீழ்உரிமம் இல்லாதாக்கப்பட்டதற்குமுன்னர் அல்லது பணிப்புரை வழங்கப்பட்டதற்குமுன்னர் அல்லது 27 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து அதற்குப் பின்னர் செய்துகொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அவ்வுடன்படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை வறிதாக்கும் அல்லது பாதிக்கும் வகையில் தொழிற்படுதலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது.

*அவசர நிலைமையில் பரிவர்த்தனையை மூடிவிடுதல்.*

**29.** (1) ஆணைக்குழுவானது பரிவர்த்தனையுடனான கலந்தாலோசனையின்பின்னர், பின்வரும் காரணங்களுக்காக, பிணையங்கள் சந்தையின்மீது பிணையங்களில் வியாபாரஞ் செய்வதற்காக ஒழுங்கானமற்றும் நியாயமான சந்தை தடுக்கப்படுகின்றது அல்லது தடுக்கப்படக்கூடிய சாத்தியமுள்ளதென ஆணைக்குழு அபிப்பிராயப்படின், ஐந்து தொழில்நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அதன் பிணையங்கள் சந்தையை மூடிவிடும்படி பரிவர்த்தனையைப் பணிக்கலாம்:-

(அ) இலங்கையினுள் அவசரநிலைமை அல்லது இயற்கைப் பேரழிவு இடம்பெற்றுள்ளமை; அல்லது

(ஆ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே பொருளாதார அல்லது நிதிசார் இக்கட்டானநிலை அல்லது வேறெவையேனும் சூழ்நிலைகள் உள்ளமை.

(2) ஆணைக்குழுவானது, ஒவ்வொன்றும் ஐந்து தொழில் நாட்களை விஞ்சாத எவையேனும் மேலதிகக் காலப்பகுதிகளுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிணையங்கள் சந்தையின் மூடுகையை நீடிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரையில் முடிவிடுகைக்கான ஏதுக்களையும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் முடிவிடுகையின் ஏதேனும் நீடிப்புக்கான ஏதுக்களையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, செயல்முறைக்குகந்தவரை விரைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்புரையின் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான நீடிப்பின் பிரதியொன்றைப் பரிவர்த்தனைக்குக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அப்பணிப்புரை அல்லது நீடிப்பு வலுவிலிருக்கையில் (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்புரைக்கு அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான நீடிப்புக்குப் பயன்கொடுப்பதற்கு, நியாயமானமுறையில் அது செய்வதற்கு இயன்றதாகவுள்ள எல்லாவற்றையும் செய்யும்படி பரிவர்த்தனையைப் பணித்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, இப்பிரிவின்கீழ் அதன் தத்துவத்தைப் பிரயோகிக்குமிடத்து, இப்பிரிவின்கீழான தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கான காரணங்களை எடுத்துக்கூறி அமைச்சருக்கு அறிக்கையொன்றை அது உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவில்-

"தொழில் நாள்" என்பது, முடிவிடுகையில்லாவிடின், எந்த நாளன்று பரிவர்த்தனையின்மீது அலுவலகமுறையான வியாபாரம் நடைபெறுகின்றதோ அந்த ஏதேனும் நாள் என்று பொருளாகும்;

"நியாயமான சந்தை" என்பது, நிரம்பல் மற்றும் கேள்வி நிர்ப்பந்தங்களைப் பிரதிபலிக்கின்ற ஒரு சந்தையை உள்ளடக்கும்.

**30.** (1) பரிவர்த்தனையொன்று நிரற்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய பரிவர்த்தனையின்மீது அதன் பிணையங்களை நிரற்படுத்துவதற்கு அனுமதிவழங்குதல் வேண்டும். அத்தகைய

உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகள்.

அனுமதி வழங்கப்படுவதன்மேல் அத்தகைய பரிவர்த்தனை யானது ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறாகப் பின்வருவனவற்றுக்கான அத்தகைய ஒழுங்கேற்பாட்டைச் செய்து கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்துவதிலிருந்து எழக்கூடிய நிகழ்தகு அக்கறை முரண்பாடுகளைக் கையாளுவதற்காகவும்;

(ஆ) அத்தகைய பரிவர்த்தனையின் பிணையங்களில் வியாபாரஞ்செய்தலின் நேர்மையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும்; அத்துடன்

(இ) அத்தகைய பரிவர்த்தனையானது நிரற்படுத்தப்பட்ட கம்பெனியாக வரவிருந்ததாயின், நிரற்படுத்தப்பட்ட கம்பெனியாகக் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காகவும்;

அத்துடன் அத்தகைய பரிவர்த்தனை அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) அத்தகைய பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகள், அத்தகைய பரிவர்த்தனைக்குப் பதிலாகப் பின்வருவன தொடர்பாக முடிபுகளைச் செய்வதற்கும் நடவடிக்கையெடுப்பதற்கும் ஆணைக்குழுவை அனுமதிப்பதாகக்கருதப்படுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய பரிவர்த்தனையின் அலுவலகமுறையான நிரலுக்குப் பரிவர்த்தனையைச் சேர்த்தல் அல்லது அதிலிருந்து அகற்றுதல்;

(ஆ) பரிவர்த்தனையின் பிணையங்கள் அத்தகைய பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படுவதனை அல்லது வியாபாரஞ்செய்யப்படுவதனை நிறுத்துதல் அல்லது இடைநிறுத்துதல்; அல்லது

(இ) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஆணைக்குழு தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான ஒழுங்கேற்பாடொன்று, அவ்வொழுங்கேற்பாட்டின்கீழ் அல்லது வேறுவகையாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறாக அத்தகைய கட்டணங்களைப் பரிவர்த்தனையானது ஆணைக்குழுவுக்குச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(4) பரிவர்த்தனையொன்றின் விதிகளை அங்கீகரிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்களுக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவானது, எழுத்திலான அறிவித்தல்மூலம்-

(அ) அத்தகைய பரிவர்த்தனையின் பிணையங்களின் நிரற்படுத்தலுக்காக அல்லது வியாபாரஞ்செய்தலுக்காக விண்ணப்பிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகளைத் திரிபுபடுத்தலாம்; அல்லது

(ஆ) ஏதேனும் நிரற்படுத்தல் தேவைப்பாட்டிலிருந்து அத்தகைய பரிவர்த்தனைக்கு விலக்களிக்கலாம்.

## அத்தியாயம் 2

### தீர்வக இல்லம்

**31.** இவ்வத்தியாயத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய- பொருள்கோடல்.

"மத்திய மறுதிறத்தவர்" என்பது, ஒவ்வொரு வியாபாரத்துக்கும் உத்தரவாதமளித்து ஒவ்வொரு விற்பனையாளருக்கும் வாங்குநராகவும், ஒவ்வொரு வாங்குநருக்கும் விற்பனையாளராகவும் வருவதன்மூலம் பிணையங்கள் சந்தையின் மீதான வியாபாரங்களது தீர்விலும் தீர்ப்பனவிலும் ஈடுபடுகின்றவொரு சட்ட ஆள் என்று பொருளாகும்;

"*தவறுகை வழக்கு நடவடிக்கைகள்*" என்பது, தீர்வக இல்லமொன்றினால் அதன் தவறுகை விதிகளின்கீழ் எடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் அல்லது வேறு நடவடிக்கை என்று பொருளாகும்;

"*தவறுகை விதிகள்*" என்பது, ஒரு தீர்வக இல்லம் தொடர்பாக, ஒரு தீர்வக உறுப்பினர் எந்தத் தீர்த்துவைக்கப்படாத சந்தை ஒப்பந்தங்களுக்குத் திறத்தவரொருவராக உள்ளாரோ அந்தத் தீர்த்துவைக்கப்படாத சந்தை ஒப்பந்தங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவையேனும் தொடர்பிலுமான அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு அத்தீர்வக உறுப்பினர் தவறியிருப்பின், தவறுகை வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக ஏற்பாடுசெய்கின்ற தீர்வக இல்லத்தின் அத்தகைய விதிகள் என்று பொருளாகும்;

"*தவறுகையாளர்*" என்பது, எவையேனும் தவறுகை வழக்கு நடவடிக்கைகளின் விடயமாகவுள்ளவொரு தீர்வக உறுப்பினர் என்று பொருளாகும்;

"*சந்தை விதிப்பனவு*" என்பது,-

(அ) தீர்வக இல்லத்தினால் வைத்திருக்கப்படுகின்றதும் அல்லது அதனிடம் வைப்பிலிடப்படுகின்றதும் தீர்வக இல்லமொன்றின் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறானதுமான ஏதேனும் ஆதனத்தின்மீது; அத்துடன்

(ஆ) ஒரு சந்தை ஒப்பந்தத்தைத் தீர்ப்பனவு செய்தலை உறுதிப்படுத்தி, தீர்வக இல்லம் சம்பந்தமாக நேரடியாக எழுகின்ற பொறுப்புக்களுக்குப் பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக,

தீர்வக இல்லமொன்றின் சார்பில் வழங்கப்பட்ட, நிலையான தாயினுஞ்சரி அல்லது மிதப்பதாயினுஞ்சரி, ஒரு விதிப்பனவு என்று பொருளாகும்;

"சந்தை பிணைப்பொருள்" என்பது, தீர்வக இல்லமொன்றினால் சந்தை ஒப்பந்தங்களின் செயல்நிறைவேற்றுகையை உறுதிப்படுத்தி, தீர்வக இல்லம் சம்பந்தமாக நேரடியாக எழுகின்ற பொறுப்புக்களுக்குப் பிணைப் பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காகக் தீர்வக இல்லத்தினால் வைத்திருக்கப்பட்ட அல்லது அதனிடம் வைப்பிலிடப்பட்ட அத்தீர்வக இல்லத்தின் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு வேறேதேனும் வடிவத்திலான பிணைப்பொருளில் கொடுக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது எவையேனும் உத்தரவாதங்கள் என்று பொருளாகும்;

"சந்தை ஒப்பந்தம்" என்பது,-

(அ) ஒரு தீர்வக இல்லத்தின் தீர்வக வசதியைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களின் தீர்வு மற்றும் தீர்ப்பனவு நோக்கத்துக்காக ஒரு மாற்றீட்டைப் பின்பற்றி ஒரு தீர்வக உறுப்பினருடன் தீர்வக இல்லத்தினால் செய்துகொள்ளப்பட்டதும் தீர்வக இல்லத்தின் விதிகளுக்கு அமைந்ததுமானவோர் ஒப்பந்தம்; அல்லது

(ஆ) தீர்வக இல்லமொன்றின் தீர்வு வசதியைப் பயன்படுத்தியும் தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்கவும், பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு மாற்றீடு இடம்பெறவுள்ளதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, தீர்வு காணப்படுகின்றதும் அல்லது தீர்வு காணப்படவுள்ளதும் அல்லது தீர்ப்பனவு செய்யப்படுகின்றதும் அல்லது தீர்ப்பனவு செய்யப்படவுள்ளதுமான ஒரு கொடுக்கல்வாங்கல்,

என்று பொருளாகும்;

"இயைபான பதவிவகிப்பவர்" என்பது,-

(அ) ஒரு கம்பெனியின் ஒழிப்போனாக, இடையேற்பாட்டு ஒழிப்போனாக, பெறுநராக அல்லது முகாமையாளராக அல்லது அவர்களுக்குச் சமமான ஆளொருவராக அக்கம்பெனி தொடர்பாகச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள்; அல்லது

(ஆ) இறந்துள்ள ஆளின் கடனிறுக்கவகையற்ற மரணச் சொத்தின் வங்கி முறிவில் நிருவாகத்துக்கான கட்டளையொன்றைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள்,

என்று பொருளாகும்.

உரிமமளிக்கப்படாத தீர்வக இல்லம் ஒன்றைத் தாபிப்பதற்கெதிரான தடை.

**32.** (1) ஆளொருவர், இப்பிரிவின்கீழ் தீர்வக இல்லம் ஒன்றைத் தாபிப்பதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கு அவ்வாளுக்கு உரிமமளிக்கப்பட்டிருந்தாலொழிய, தீர்வு அல்லது தீர்ப்பனவு நோக்கங்களுக்காகக் தீர்வக வசதியொன்றைத் தாபித்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத் துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட பிணையங்களுக்கான தீர்வக வசதிகளை வழங்குகின்ற எவரேனுமாளுக்கு (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாதலாகாது.

தீர்வக இல்லம் ஒன்றைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம்.

**33.** (1) தீர்வுக்கும் மற்றும் தீர்ப்பனவுக்கும் உத்தரவாதமளிப்பதற்கு அல்லது வேறுவகையாக மத்திய மறுதிறத்தவராகச் செயலாற்றுகின்ற தீர்வக இல்லமொன்றைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்று, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் படிவத்திலும் ஆணைக் குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) தீர்வக இல்லமொன்றைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் மட்டுமே செய்யப்படலாம்.

(3) விண்ணப்பகாரர், அதிகாரவளிப்பு செய்யப்பட்ட நேரத்தில், இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகுவதற்கு அவசியமான எல்லா ஒழுங்கேற்பாடுகளையும் விண்ணப்பகாரர் நிலைநாட்டியுள்ளாரென ஆணைக்குழுவைத் திருப்திப்படுத்துவதற்கு அவசியமான எல்லாத் தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

(4) உத்தேசிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகள், ஆணைக்குழுவின் திருப்திக்கமைய, பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும்:-

(அ) அதன் தீர்வக வசதிகளின் ஊடாகக் கணக்குத் தீர்வு காணப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாக வினைத்திறனான மற்றும் பயனுள்ள தீர்வக வசதிகள்;

(ஆ) அதன் தீர்வக வசதிகளைப் பயன்படுத்துகின்ற அதன் தீர்வக உறுப்பினர்களை ஒழுங்குபடுத்துதலும் மேற்பார்வை செய்தலும்;

(இ) அத்தகைய தீர்வக உறுப்பினர்களை தீர்வக இல்லத்துக்கு அனுமதிப்பதற்கான வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற கட்டளைக்கற்கள் உட்பட அனுமதிக்கத்தக்க தீர்வக உறுப்பினர்களின் வகுதிகள்;

(ஈ) (i) தீர்வக இல்லத்துக்கும் அதன் தீர்வக உறுப்பினர்களுக்குமிடையே; அத்துடன்

(ii) தீர்வக உறுப்பினர்களிடையே,பிணக்குகளை விரைவாகவும் நியாயமாகவும் தீர்த்துவைத்தல்;

(உ) தீர்வக இல்லத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்காக தீர்வக உறுப்பினர்களை விலக்குதல், இடைநிறுத்துதல், அவர்களின்மீது குற்றப்பணங்களை விதித்தல் அல்லது அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுத்தல்;

(ஊ) அதன் வசதிகளின் மீது தீர்வு காணப்படக்கூடிய பிணையங்களின் வகுப்பினது அல்லது வகுப்புக்களினது அளவுக்குறிப்பீடு;

(எ) தீர்ப்பனவு உத்தரவாதநிதியமொன்றைத் தாபித்தலும் நிருவகித்தலும்;

(ஏ) தீர்வக உறுப்பினரொருவர் அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குத் தவறியிருப்பின், தவறுகை வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குதலும் தீர்வக உறுப்பினரொருவர் அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு இயலாதவராகத் தோன்றுகின்ற அல்லது இயலாதவராக வரக்கூடிய சாத்தியமுள்ள ஒரு விடயத்தில் ஏற்புடையற்பாலனவான ஆபத்து முகாமை நடவடிக்கைமுறைகளும்;

(ஐ) தீர்ப்பனவு முறைமையினுள் தீர்ப்பனவுக் கட்டளைகளைப் பதிவதற்கான நேரமும் அத்தகைய கட்டளைகள் இறுதியானவையாகவும் இல்லாதொழிக்கப்படற்பாலவையற்றனவாகவும் வருகின்ற நேரமும்;

(ஒ) தீர்வக இல்லம் ஒரு மத்திய மறுதிறத்தவராகச் செயலாற்றுமிடத்து, நிகரவொழுங்கேற்பாடுகளில் மறுதிறத்தவர் பதிலீட்டுக்கான நேரம், தீர்ப்பனவின் இறுதியாந்தன்மை மற்றும் ஒரு மத்திய மறுதிறத்தவருக்கு இயைபான வேறெவையேனும் கடமைகளும் பணிகளும்;

(ஓ) தீர்வக உறுப்பினரின் தவறுகையினால் அல்லது ஒரு தீர்வக இல்லத்தின் கடனிறுதகுதன்மைக்கு அச்சுறுத்தலாகவுள்ள வேறெவையேனும் சூழ்நிலைகளினால் விளைவிக்கப்பட்ட இழப்புக்களைத் தீர்வக இல்லம் உறுமிடத்து தீர்வக இல்லத்தின் இடையீடில்லாத சேவைகளை வசதிப்படுத்துவதற்குத் தவறுகை விதிகளை உள்ளடக்குதல்; அத்துடன்

(ஔ) ஒரு தீர்வக உறுப்பினருக்குத் தவறுகை அல்லது வங்கிமுறிவு ஏற்படும் பட்சத்தில் பிணைப்பொருளை வைப்பிலிடுதலும் மற்றும் வினைத்திறனாக உருவாக்குதலும் தேறிப்பெறுதலும் உட்பட, பிணைப் பொருளை ஆளுதல்.

(5) பொதுமக்கள் அக்கறை கருதி அல்லது ஒரு தீர்வக இல்லத்தின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக ஒரு தீர்வக இல்லத்தைத் தாபித்துத் தொழிற்படுத்துவதற்கு விண்ணப்ப காரருக்கு உரிமமொன்றை வழங்குவது தோதானதென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு, தகுதியானவை யெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனை களுக்கமைய அவ்வாறு செய்யலாம்.

(6) முதலீட்டாளரின் அக்கறைகருதி அல்லது ஒரு தீர்வக இல்லத்தின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக நியதிநிபந்தனை களைத் திருத்துதல், இல்லாதொழித்தல் அல்லது நியதி நிபந்தனைகளை விதித்தல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்படின், ஆணைக்குழு அவ்வாறு செய்யலாம்.

**34.** (1) தீர்வக இல்லமொன்று- ஒரு தீர்வக இல்லத்தின் கடமைகள்.

(அ) கொடுக்கல்வாங்கல்களின் தீர்வு அல்லது தீர்ப் பனவு நோக்கங்களுக்காக காப்பான, வினைத் திறனான மற்றும் பயனுள்ள தீர்வக வசதிகளைத் தொழிற்படுத்துதல் வேண்டும்;

(ஆ) அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமானமுறையில் முகாமைசெய்தல் வேண்டும்; அத்துடன்

(இ) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கான தேவை யைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் அக்கறைகருதிச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒரு தீர்வக இல்லத்தின் பணிப்பாளர், முறைமைசார் ஆபத்தைத் தணிப்பதனைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் அக்கறைகருதி எல்லா நேரங்களிலும் செயலாற்றுவதற்கான கடமையைக் கொண்டுள்ளாரென்பதுடன், இச்சட்டத்தின்கீழான கடமைக்கும் வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஒரு பணிப்பாளரின் கடமைக்கும் இடையே முரண்பாடு இருக்குமிடத்து, இச்சட்டத்தின்கீழான கடமையே மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

(3) தீர்வக இல்லமொன்று எல்லா நேரங்களிலும்–

(அ) திறன்மிகு ஆளுகை ஒழுங்கேற்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவை, திடமான நிருவாக மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைமுறைகளுட்பட, நன்கு வரையறுக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் பொறுப்பின் ஒத்திசைவான வழியுடனான தெளிவான ஒழுங்கமைப்பான கட்டமைப்பொன்றையும், அது எந்த ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கவேண்டியதாகவுள்ளதோ அல்லது முகங்கொடுக்கவேண்டியதாக இருக்கக்கூடுமோ அந்த ஆபத்துக்களை அடையாளங்காண்பதற்கும், முகாமைசெய்வதற்கும், கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்குமான பயனுள்ள நடைமுறைகளையும், போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்திற்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் விதிகளுக்கும் அல்லது பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும்வகையில் போதியமுறையில் பயனுள்ளனவான கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் கடைப்பிடித்தல் வேண்டும்;

(இ) அதன் சேவைகளையும் செயற்பாடுகளையும் புரிவதில் தொடர்ச்சியையும் ஒழுங்கான பணியாற்றுகையையும் உறுதிப்படுத்துகின்ற ஒழுங்கமைப்புச்சார் கட்டமைப்

பைப் பேணுதலும் தொழிற்படுத்துதலும் வேண்டுமென்பதுடன், தோதான மற்றும் விகிதாசாரப்படியான முறைமைகளையும், வளங்களையும், நடவடிக்கைமுறைகளையும் பயன்படுத்துதலும் வேண்டும்;

(ஈ) தீர்வக இல்லத்தின் ஆபத்து முகாமைக்கான அறிக்கையிடும் வழிகளுக்கும் அதன் ஏனைய தொழிற்பாடுகளுக்கான அறிக்கையிடும் வழிகளுக்கும் இடையே தெளிவான தனிவேறாக்கத்தைப் பேணுதல் வேண்டும்;

(உ) பேணப்பட்ட தகவல்களின் உயர்தரப் பாதுகாப்பையும் மற்றும் நேர்மையையும் அந்தரங்கத்தன்மையையும் உறுதிப்படுத்தும்வகையில், புரியப்பட்ட சேவைகளினதும் செயற்பாடுகளினதும் சிக்கலான தன்மை, வேறுபாடு மற்றும் வகையைக் கையாள்வதற்குப் போதிய தகவல் தொழினுட்பவியல் முறைமைகளைப் பேணுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) அதன் ஆளுகை ஒழுங்கேற்பாடுகளையும், தீர்வக இல்லத்தை ஆளுகின்ற விதிகளையும், தீர்வக இல்ல உறுப்பாண்மைக்கான அதன் அனுமதிப்புக் கட்டளைக்கற்களையும் ஆக்குதலும், அத்தகவல்களைக் கட்டணமின்றிப் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதலும் வேண்டும்.

**35.** (1) ஆணைக்குழு, எழுத்திலான அறிவித்தல்மூலம்,- தீர்வக இல்லத்தின் உரிமத்தை இல்லாதாக்குதல்.

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து தீர்வக இல்லத்துக்கு 33 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம்; அல்லது

(ஆ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அத்தகைய வசதிகளை வழங்காதொழியும்படி அல்லது தொழிற்படுத்தாதொழியும்படி அல்லது அத்தகைய சேவைகளை வழங்காதொழியும்படி தீர்வக இல்லத்தைப் பணிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, பின்வரும் சூழ்நிலைகளுள் எவையும் இடம்பெறுமிடத்து, முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது பொதுமக்கள் அக்கறைகருதி அல்லது பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களின் தீர்வையும் மற்றும் தீர்ப்பனவையும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது ஒரு பணிப்புரையை வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்பட்டாலொழிய, அவ்வாறு செய்தலாகாது:-

(அ) தீர்வக இல்லம் தீர்வக வசதிகளை வழங்காதொழிகின்றவிடத்து;

(ஆ) தீர்வக இல்லம், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றவிடத்து அல்லது வேறுவகையாகக் கலைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றவிடத்து;

(இ) தீர்வக இல்லம் அதன் உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளவிடத்து அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றவிடத்து;

(ஈ) தீர்வக இல்லமானது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றவொரு நிபந்தனை, தேவைப்பாடு அல்லது பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து;

(உ) முப்பத்திமூன்றாம் பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், முக்கியமானவொரு விபரத்தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாகவிருந்து அல்லது அதிலிருந்து முக்கியமானவொரு விட்டுவிடுகை உள்ளதாகவிருக்குமிடத்து;

(ஊ) தீர்வக இல்லத்துக்கெதிரான தீர்ப்புத் தனிசொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்பட்டிராதவிடத்து;

(எ) தீர்வக இல்லத்தின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அது தொடர்பில், இலங்கையினுள்ளா யினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ் சரி, பெறுநரொருவர், பெறுநரும் முகாமையாளரும், ஒழிப்போன் அல்லது அவர்களுக்குச் சமமான ஆள் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து;

(ஏ) தீர்வக இல்லமானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அதன் கடன்கொடுத்தோருடனான இணக்கப்பாட்டை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டத்தைச் செய்து கொண்டுள்ளவிடத்து; அல்லது

(ஐ) தீர்வக இல்லமானது, அதன் சொந்த விருப்பத்தின் பேரில், அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லா தாக்கும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ள விடத்து.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, தீர்வக இல்லமானது, இரண்டு வாரங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குக் தீர்வக வசதிகளை வழங்கா தொழிவதற்கு ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத் தைப்பெற்றுக்கொள்ளாமல் அத்தகைய வசதிகளை அது வழங்கா தொழிந்திருப்பின், தீர்வகவசதிகளை வழங்காதொழிந்துள்ள தெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப் பட்டமை அல்லது பணிப்பொன்று வழங்கப்பட்டமை எவ்வாறிருப் பினும், ஆணைக்குழுவானது, பின்வரும் நோக்கத்துக்காக, அறிவித்தலில் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறாக,

இல்லாதாக்குகையினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளை இல்லாதாக்குகை அல்லது பணிப்புரை பயனுள்ளதாக வரவேண்டிய தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடர்ந்து கொண்டுநடாத்துவதற்குத்தீர்வக இல்லத்துக்கு அனுமதியளிக்கலாம்:-

(அ) தீர்வக இல்லத்தின் தொழிற்பாடுகளை மூடிவிடுதல் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்காதொழிதல்; அல்லது

(ஆ) முதலீட்டாளர்களை அல்லது பொதுமக்களின் அக்கறையைப் பாதுகாத்தல்.

(5) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றுமிடத்து, ஆணைக்குழு, அவசியமானதென அது கருதுமிடத்து, புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்படும்வரை தீர்வக இல்லத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கு ஆறுமாதகாலப்பகுதிக்கானதும் ஓராண்டுகாலப்பகுதிக்கு நீடிக்கப்படக்கூடியதுமான இடைக்காலப் பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கலாம்.

(6) ஆணைக்குழுவானது (4) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்வக இல்லத்துக்கு அனுமதி வழங்கியுள்ளவிடத்து, தீர்வக இல்லமானது, அத்தகைய அனுமதிக்கிணங்கச் செயற்பாடுகளை அது கொண்டுநடாத்துகின்றமை காரணமாக, (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ளதாகக் கொள்ளப்படுதலாகாது.

(7) ஆணைக்குழுவானது, தீர்வக இல்லத்துக்குக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளிக்காமல் (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(8) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்ற தீர்வக இல்லமொன்று, முடிபு பற்றி தீர்வக இல்லத்துக்கு அறிவிக்கப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடுசெய்யலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடு செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, அமைச்சரின் முடிபு பெறப்படும்வரை தொடர்ந்து பயனுள்ளதாகவிருத்தல் வேண்டும்.

(10) அமைச்சர், (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது–

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தின் அல்லது பணிப்புரையின் இல்லாதாக்குகையை இல்லாதொழிக்கும்படி ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(11) ஆணைக்குழுவானது, அமைச்சரின் பணிப்புரைக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(12) பதினோராம் உட்பிரிவுக்கமைய, இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் அல்லது ஏதேனும் பணிப்புரையின் ஏதேனும் இல்லாதாக்குகைபற்றிய பகிரங்க அறிவித்தலை ஆணைக்குழு கொடுத்தல் வேண்டும்.

தீர்வக இல்லத்துக்கான உரிமத்தை இல்லாதாக்குவதன் பயன்.

**36.** முப்பத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தின் ஏதேனும் இல்லாதாக்குகை அல்லது பணிப்புரையின் வழங்குகையானது–

(அ) தீர்வக இல்லத்தினூடாகச் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு, 35 ஆம் பிரிவின்கீழ் உரிமம் இல்லாதாக்கப்பட்டதற்கு அல்லது பணிப்புரை வழங்கப்பட்டதற்கு முன்னர் அல்லது 35 ஆம் பிரிவு ஏற்புடையதாகுமிடத்து அதற்குப்பின்னர் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அவ்வுடன்படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை வறிதானதாக்கும் அல்லது பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின், கொடுக்கல்வாங்கலின் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது.

*தவறுகை விதிகள்.*

**37**. தீர்வக இல்லமொன்று, ஆபத்து முகாமை நோக்கத்துக்காக, தீர்வக உறுப்பினர் ஒருவர் தீர்ப்பனவு செய்யப்படாத எந்தச் சந்தை ஒப்பந்தங்களுக்குத் திறத்தவராகவுள்ளாரோ தீர்த்துவைக்கப்படாத அந்தச் சந்தை ஒப்பந்தங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலும் தீர்வக உறுப்பினர் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு இயலாதவராகவிருப்பின் அல்லது இயலாதவராக வரக்கூடிய சாத்தியமிருப்பின், தவறுகை விதி களின்கீழ் தவறுகை வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குதல் வேண்டும்.

*தீர்வக இல்லத்தின் தவறுகை வழக்கு நடவடிக்கைகள் முந்துரிமை பெறுதல்.*

**38.** (1) கடனிறுக்கவகையறவு, வங்கிமுறிவு அல்லது ஒடுக்குதல் மீது ஆளொருவரின் சொத்துக்களைப் பகிர்தல் அல்லது ஆளொருவரின் சொத்துக்களுள் எவற்றின்மீதும் ஒரு பெறுநரை, ஒரு பெறுநரையும் முகாமையாளரையும் அல்லது அவர்களையொத்த பதவியிலுள்ள ஆளொருவரை நியமித்தல் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு ஒவ்வாததாகவிருப்பதன் காரணமாக மட்டும், பின்வருவன ஏதேனும் அளவுக்குச் சட்டத்தில் செல்லுபடியற்றனவாகவிருத்தலாகாது:-

(அ) ஒரு சந்தை ஒப்பந்தம்;

(ஆ) ஒரு சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவு தொடர்பாக ஒரு தீர்வக இல்லத்தின் விதிகள்;

(இ) ஒரு சந்தை ஒப்பந்தத்தைத் தீர்த்துவைத்தல் தொடர்பாகத் தீர்வக இல்லத்தின் விதிகளின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகள் அல்லது எடுக்கப்பட்ட வேறு நடவடிக்கை;

(ஈ) ஒரு சந்தை விதிப்பனவு;

(உ) சந்தை பிணைப்பொருள்; அல்லது

(ஊ) ஒரு தீர்வக இல்லத்தின் தவறுகை விதிகள்.

(2) ஓராம் உட்பிரிவுக்கமைய, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இயைபான பதவிவகிப்ப வரின் தத்துவங்கள், பின்வருவனவற்றைத் தடுக்கும் அல்லது அவற்றுடன் தலையிடும் அத்தகையவொரு வழியில் பிர யோகிக்கப்படுதலாகாது:-

(அ) ஒரு தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்கச் சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவு; அல்லது

(ஆ) எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகள்.

*தவறுகை வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான துணை ஏற்பாடுகள்.*

**39.** (1) நீதிமன்றமொன்று, இயைபான பதவிவகிப்பவரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது, தவறுகை வழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதுள்ளன அல்லது எடுக்கப்படலாம் அல்லது எடுக்கப்பட்டுள்ளன அல்லது எடுக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற நிகழ்வினால் பாதிக்கப்படுகின்றவாறான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழான அவரது பதவிக்குரிய பணிகளுள் அத்தகையவற்றை மாற்றுகின்றதும் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதனைத் தேவைப் படுத்தாதுவிடுகின்றதும் தகுதியானதென அது கருதுகின்ற வாறானதுமான அத்தகைய கட்டளையை ஆக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க, இயைபான பதவிவகிப்பவரின் அத்தகைய பணிகள் அத்தகைய கட்டளைக்கமைய பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) தீர்வக இல்லத்தினால் ஏதேனும் பிணைப்பொருள் தேறிப் பெறப்படுவதிலும் கையுதிர்க்கப்படுவதிலும் தீர்வக இல்ல மொன்றினால் தொடுக்கப்பட்ட தவறுகை வழக்குநடவடிக் கைகளை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளதெதுவும் தடுத்தலோ அல்லது அவற்றுடன் தலை யிடுதலோ ஆகாது.

*தவறுகை வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன்மீது அறிக்கை யிடுவதற்கான கடமை.*

**40.** (1) எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன்மேல், தீர்வக இல்லம், பின்வருவன தொடர்பில் (2) ஆம் உட்பிரிவில் எடுத்துக்கூறப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு தவறுகையாளர் தொடர்பிலுமான அறிக்கையை வழங்குதல் வேண்டும்:-

(அ) தவறுகையாளரினால் அல்லது அவருக்குச் செலுத்தப் படற்பாலதாகவுள்ளதென தீர்வக இல்லத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட தேறிய பணத்தொகை ஏதேனு மிருப்பின் அது;

(ஆ) பணத்தொகை எதுவும் அவ்வாறு செலுத்தப்படற் பாலதல்ல என்ற நிகழ்வு; அத்துடன்

(இ) தகுதியானவையென அது கருதுகின்றவாறாக அத்த கைய தவறுகை வழக்குநடவடிக்கைகள் தொடர் பிலான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கை-

(அ) ஆணைக்குழுவுக்கு;

(ஆ) அறிக்கையானது எத்தவறுகையாளர் அல்லது அத் தவறுகையாளரின் மரணச்சொத்துத் தொடர் பானதோ அத்தவறுகையாளருக்காக அல்லது அத் தவறுகையாளரின் மரணச்சொத்துக்காகச் செய லாற்றுகின்ற இயைபான பதவிவகிப்பவருக்கு; அல்லது

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட இயைபான பதவிவகிப்பவர் எவரும் இராதபோது, அறிக்கை யானது எத்தவறுகையாளர் தொடர்பானதோ அத்தவறுகையாளருக்கு,

உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவைப் பின்பற்றி ஆணைக்குழு அறிக்கை யொன்றைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அறிக்கையானது எத் தவறுகையாளர் தொடர்பானதோ அத்தவறுகையாளரின் கடன் கொடுத்தோரினது கவனத்துக்கு அதனைக் கொண்டுவருவதற்கு அது அறிவித்தலொன்றை வெளியிடலாம்.

(4) இயைபான பதவிவகிப்பவர் அல்லது தவறுகையாளர் (1) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளுமிடத்து, அவர், அவரது கடன்கொடுத்தோருள் எவரி னதும் கோரிக்கையின் பேரில்-

(அ) அத்தகைய கோரிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதி லிருந்து இரண்டு நாட்களினுள் அவ்வறிக்கையைக் கடன்கொடுத்தவரின் பார்வைக்குக் கிடைக்கக்கூடிய தாக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) இயைபான பதவிவகிப்பவரினால் அல்லது தவறு கையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இயை பான கட்டணக் கொடுப்பனவின்மீது, கோரப்பட்ட வாறு அவ்வறிக்கை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கடன்கொடுத்தவருக்கு வழங்கு தல் வேண்டும்.

(5) இரண்டாம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில், அறிக்கையொன்றானது அறிக்கையொன்றின் பிரதியையும் உள்ளடக்கும்.

தவறுகை வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட தன் மீது செலுத்தப்படற் பாலதான தேறிய பணத்தொகை.

**41.** (1) தவறுகை வழக்குநடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட தன்மேல், தீர்வக இல்லமொன்றினால் 40 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சான்றுபடுத்தப்பட்ட தேறிய பணத்தொகை, தவறுகையாளரினால் அல்லது அவருக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒரு பெறுநருக்கான அல்லது ஒடுக்கப்படுவதற்கான கட்டளை

ஆக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது தன்னிச்சையான ஒடுக்கு தலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து, தவறுகை யாளருக்குச் சேர்மதியாகவிருப்பின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தேறிய பணத்தொகை, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழான ஒடுக்குதல் வழக்குநடவடிக்கைகள் தொடர்பாகக் கவனத்துட்கெடுக்கப்படுதல் வேண்டும்.

*குறித்தசில கொடுக்கல் வாங்கல் களிலிருந்து எழுகின்ற குறித்தசில தொகைகளை அறவிடுவதற்கு இயைபான பதவி வகிப்பவருக்குள்ள உரிமை.*

**42.** (1) தீர்வக உறுப்பினரொருவர் ("முதலாவது தீர்வக உறுப்பினர்"), (3) ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்டவாறான சூழ்நிலைகளில் வேறொரு தீர்வக உறுப்பினருக்கு ("இரண்டாவது தீர்வக உறுப்பினர்") பிணையங்களை மிகைப்பெறுமதியில் விற்பனைசெய்தால் அல்லது அவரிடமிருந்து குறைப் பெறுமதி யில் பிணையங்களைக் கொள்வனவு செய்தால் மற்றும் அதன் பின்னர் இயைபான பதவிவகிப்பவர் ஒருவர்-

(அ) இரண்டாவது தீர்வக உறுப்பினருக்காக;

(ஆ) விற்பனையில் அல்லது கொள்வனவில் இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வருக்காக; அல்லது

(இ) இரண்டாவது தீர்வகஉறுப்பினரின் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளின் மரணச்சொத்துக்காக,

செயலாற்றினால் நீதிமன்றமொன்று வேறுவகையாகக் கட்டளை யிட்டாலொழிய, இயைபான பதவிவகிப்பவர், முதலாவது தீர்வக உறுப்பினரிடமிருந்து அல்லது முதலாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரிடமிருந்து முதலாவது தீர்வக உறுப்பினரினால், அல்லது முதலாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரினால் செய்யப்பட்ட விற்பனையின்கீழ் அல்லது கொள்வனவின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அடையாளங் காணப்பட்ட ஈட்டுகைக்குச் சமமான தொகையொன்றை அறவிடலாம்.

(2) அடையாளங் காணப்பட்ட ஈட்டுகைக்குச் சமமான தொகை, விற்பனையானது அல்லது கொள்வனவானது தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்டு ஒரு சந்தை ஒப்பந்தத்தினால் மாற்றீடு செய்யப்பட்டிருப்பினுங்கூட அறவிடப்படற்பாலதாகும்.

(3) ஒரு விற்பனைக்காக அல்லது கொள்வனவுக்காக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகள் பின்வருமிடத்தாதல் வேண்டும்:-

(அ) இரண்டாவது தீர்வகஉறுப்பினர் தொடர்பாக அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் தொடர்பாக அடையாளங் காணப்பட்ட நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) ஒன்றில்-

(i) இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் தொடர்பாக அடையாளங் காணப்பட்ட நிகழ்வொன்று இடம்பெறுவதற்கான சாத்தியம் இருந்ததென முதலாவது தீர்வக உறுப்பினர் அறிந்திருந்தவிடத்து அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்கக்கூடியவிடத்து; அல்லது

(ii) இரண்டாவது தீர்வக உறுப்பினருக்கு அல்லது இரண்டாவது தீர்வகஉறுப்பினரின் முதல்வருக்கு அடையாளங்காணப்பட்ட நிகழ்வொன்று இடம்பெறுவதற்கான சாத்தியம் இருந்ததென முதலாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் அறிந்திருந்தவிடத்து அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்கக்கூடியவிடத்து

மற்றும் அந்த அடையாளங்காணப்பட்ட நிகழ்வு, விற்பனை அல்லது கொள்வனவு எத்தேதியன்று செய்துகொள்ளப்பட்டதோ அத்தேதியை உடனடுத்துப் பின்வரும் ஆறுமாத காலப்பகுதியினுள் இடம்பெறுமிடத்து.

(4) இப்பிரிவில்-

(அ) "அடையாளங்காணப்பட்ட நிகழ்வு" என்பது, இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது ஒரு விற்பனை அல்லது கொள்வனவு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவராகவுள்ள அல்லது ஆளொருவராகவிருந்த ஆளொருவர் தொடர்பாகப் பின்வருவன என்று பொருளாகும்:-

(i) விடயத்துக்கேற்ப, இரண்டாவது தீர்வக உறுப்பினரினால் அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரினால் புரியப்பட்ட வங்கிமுறிவுச் செயல்;

(ii) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைப் பின்பற்றி, விடயத்துக்கேற்ப, இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் தொடர்பாக அழைக்கப்பட்ட கடன் கொடுத்தோரின் கூட்டம்; அல்லது

(iii) விடயத்துக்கேற்ப, இரண்டாவது தீர்வக உறுப்பினர் அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுவதற்கான மனுவொன்று முன்வைக்கப்படுதல்;

(ஆ) "அடையாளங்காணப்பட்ட ஈட்டுகை" என்பது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு விற்பனை அல்லது கொள்வனவு தொடர்பாக, பின்வருவனவற்றுக்கிடையேயான வித்தியாசம் என்று பொருளாகும்:-

(i) விற்பனையின் அல்லது கொள்வனவின் விடயமாகவுள்ள பிணையங்களின் சந்தைப்பெறுமதி; அத்துடன்

(ii) விற்பனை அல்லது கொள்வனவு செய்துகொள்ளப்பட்ட நேரத்தில், விற்பனைக்கான அல்லது கொள்வனவுக்கான பிரதிபயனின் பெறுமதி.

**43.** வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப் பினும், தீர்வக இல்லமொன்றுடனான சந்தை ஒப்பந்தமுட்பட ஏதேனும் கொடுக்கல்வாங்கலைச் செய்துகொள்கின்ற தீர்வக உறுப்பின ரொருவர், முகவராக அக்கொடுக்கல்வாங்கலுக்கான திறத்தவராக வுள்ளாரென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், ஒரு தீர்வக இல்லத்தினால் அல்லது அதற்கெதிரான ஏதேனும் குடியியல் வழக்கு, உரிமைக்கோரிக்கை அல்லது கோரிக்கை உட்பட எல்லா நோக்கங்களுக்காகவும், முகவராகவல்லாது முதல்வராக அக் கொடுக்கல்வாங்கலுக்கான திறத்தவரொருவராகவுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

*தீர்வக உறுப்பினர், முதல்வராகக் குறித்தசில கொடுக்கல் வாங்கல் களுக்கான திறத்தவராக விருத்தல்.*

**44.** வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்க ஒரு சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவில் அல்லது ஒரு சந்தை விதிப்பனவின்கீழ் ஒரு தீர்வக இல்லத்துக்குக் தீர்வக உறுப்பினரொருவரினால் சந்தை பிணைப் பொருள் ஒப்படைக்கப்படுமிடத்து, ஒரு தீர்வக இல்லத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சந்தை பிணைப்பொருளிலான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறை தொடர்பில் குடியியல் வழக்கு, உரிமைக் கோரிக்கை அல்லது கோரிக்கை எதுவும், தீர்வக இல்லத்துக்கெதிராக அனுமதிக்கப்படுதலாகாது.

*தீர்வக இல்ல மொன்றுக்கு ஒப்படைக்கப் பட்ட சந்தை பிணைப் பொருள்.*

**45.** தீர்வக இல்லம், ஒரு சந்தை ஒப்பந்தத்துக்கு அல்லது சந்தை விதிப்பனவுக்கு அமைய, பிணைப்பொருளை ஒரு தீர்வக இல்லத் தின் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க நிறைவேற்ற உரித்துடையதாதல் வேண்டும்.

*ஒரு சந்தை விதிப்பனவுக்கு அமைய பிணைப் பொருளை ஏற்புடைத்தாக் கல்.*

**46.** (1) மத்திய வைப்பகமொன்று, ஒரு கணக்குவைத்திருப் பவரின் பிணையங்கள் கணக்கினுள் அல்லது அதிலிருந்து பிணை யங்களின் கைமாற்றத்தைச் செய்வதற்கு ஒரு தீர்வக இல்லத் திடமிருந்தான அறிவுறுத்தலைப் பயனுறுத்துதல் வேண்டும்; ஆயின், அத்தகைய அறிவுறுத்துதல், ஒரு சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவு அல்லது தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்க ஒரு சந்தை ஒப்பந்தத்தை வேறுவகையாகக் கையாளும் நோக்கங் களுக்காகவிருத்தல் வேண்டும்.

*தீர்ப்பனவில் பிணை யங்களைக் கைமாற்றுதல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவுறுத்துதலொன்று, சந்தை ஒப்பந்தமொன்றுக்கான திறத்தவராகவுள்ள கணக்கு வைத்திருப்பவருடன் தொடர்புபட்ட அல்லது தீர்வக உறுப்பின ரொருவர் எந்தச் சந்தை ஒப்பந்தத்துக்கான திறத்தவராக வந்துள்ளாரோ அந்தச் சந்தை ஒப்பந்தத்தை விளைவிக்கின்ற ஒரு வியாபாரத்தைச் செய்வதற்கு தீர்வக உறுப்பினரொருவரை அறிவுறுத்தியிருந்த கணக்கு வைத்திருப்பவருடன் தொடர்புபட்ட பிணையங்கள் கணக்குத் தொடர்பாக மட்டுமே ஒரு தீர்வக இல்லத்தினால் விடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றிக் கணக்குவைத்திருப்ப வரொருவரின் பிணையங்கள் கணக்குக்கு அல்லது அதிலிருந்து மத்திய வைப்பகத்தினால் ஒரு சந்தை ஒப்பந்தத்தைப் பின்பற்றிப் பிணையங்களின் ஏதேனும் கைமாற்றம் செய்யப்படுமிடத்து, அத்தகைய பிணையங்களிலான உரித்தெதுவும், விதிகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர கணக்குவைத்திருப்பவரொரு வரைச் சென்றடைதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றிக் கணக்குவைத்திருப்பவ ரொருவரின் பிணையங்கள் கணக்கினுள் அல்லது அதிலிருந்து பிணையங்களின் கைமாற்றம் செய்யப்பட்டுள்ளவிடத்து, மத்திய வைப்பகம், அந்தக் கணக்குவைத்திருப்பவரினாலான ஏதேனும் வழக்குக்கு அல்லது உரிமைக்கோரிக்கைக்கு அமைந்ததாத லாகாது அல்லது அந்தக் கணக்குவைத்திருப்பவருக்கான எவை யேனும் சேதவீடுகளுக்கு உட்பட்டதாதலாகாது.

**47.** (1) தீர்வக இல்லமொன்று, அத்தீர்வக இல்லத்தின் சார்பில் பிணையங்களின் ஒரு விற்பனையை அல்லது கொள்வனவைச் செய்யும்படி, விடயத்துக்கேற்ப, அத்தகைய விற்பனை அல்லது கொள்வனவு ஏதேனும் சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவு அல்லது தவறுகை வழக்கு நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் அல்லது ஏதேனும் சந்தை விதிப்பனவில் அடங்கியுள்ள அல்லது சந்தை பிணைப்பொருளாக வழங்கப்பட்ட ஏதேனும் சொத்தைக் தீர்வக இல்லம் தேறிப்பெறுவதனை இயலச்செய்யும் நோக்கங்களுக் காகச் செய்யப்படின், பரிவர்த்தனையொன்றைத் தேவைப் படுத்தலாமென்பதுடன், அப்பரிவர்த்தனை அத்தகைய ஏதேனும் அறிவுறுத்தலுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

*பிணையங்களைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.*

(2) பரிவர்த்தனையொன்றினால் (1) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி தீர்வக இல்லத்தின் சார்பில் பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு செய்யப்பட்டுள்ளவிடத்து, அப் பரிவர்த்தனையானது, எவரேனுமாளினாலான ஏதேனும் வழக்குக்கு அல்லது உரிமைக்கோரிக்கைக்கு அமைந்ததாத லாகாது அல்லது எவரேனும் ஆளுக்கான எவையேனும் சேதவீடுகளுக்கு உட்பட்டதாதலாகாது.

குற்றவியல் அல்லது குடியியல் பொறுப்பிலான எதிர்வாதங்கள்.

**48.** (1) ஏதேனும் கடப்பாட்டின் நிறைவேற்றுகையின்போது அல்லது அதன் கொள்ளப்பட்ட நிறைவேற்றுகையின்போது, அல்லது அது சம்பந்தமாக, நியாயமான கவனத்துடனும் நல் லெண்ணத்துடனும் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதுவும் எவையேனும் குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் பின்வருவோருக்கு எதிர்வாதமொன்றாதல் வேண்டும்:-

(அ) எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகள் சம்பந்தமாக ஒரு தீர்வக இல்லத்தின் தவறுகை விதிகளின்கீழான தத்துவக் கையளிப்பின் பயனைக் கொண்டு அக்கடப்பாட்டை நிறைவேற்றுகின்ற ஆளொருவர்; அல்லது

(ஆ) பின்வருவோருட்பட, பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் சார்பில் செயலாற்று கின்ற எவரேனுமாள்:-

(i) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளினது பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர்; அத்துடன்

(ii) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் எவரேனும் உறுப்பினர்.

(2) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் தவறுகை விதிகளுக்கிணங்கக் கையாளப்படுவதற்கு உட்பட்டதாகவுள்ள எவரேனும் தவறுகையாளரின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக இயைபான பதவிவகிப்பவர் நடவடிக்கை எடுக்குமிடத்தும்,

இயைபான பதவிவகிப்பவர், அந்நடவடிக்கையை எடுப்பதற்குத் தாம் உரித்துடையவராக உள்ளாரென நியாயமானமுறையில் நம்புகின்றவிடத்தும் அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்தும்,அந்த இயைபான பதவிவகிப்பவரின் ஏதேனும் நடவடிக்கையிலிருந்து விளைகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில், அந்த இழப்பு அல்லது சேதம் இயைபான பதவிவகிப்பவரின் அசட்டையினால் விளைந்த அளவுவரை தவிர, இயைபான பதவிவகிப்பவர் எவரேனுமாளுக்குப் பொறுப்பாதல் ஆகாது.

## அத்தியாயம் 3

### மத்திய வைப்பகம்

*உரிமமளிக்கப்படாத மத்திய வைப்பகத்தைத் தொழிற்படுவதற்கெதிரான தடை.*

**49.** (1) ஆளொருவர், பிணையங்களானவை ஆணைக்குழுவிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் ஏதேனும் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, அத்தகைய பிணையங்களைக் கையாள்வதற்கான மத்திய வைப்பகத்தைத் தாபித்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*ஒரு மத்திய வைப்பகத்தைத் தொழிற்படுத்துவதற்கான விண்ணப்பம்.*

**50.** (1) ஒரு மத்திய வைப்பகத்தைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் படிவத்திலும் ஆணைக்குழுவுக்குச்

செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) ஒரு மத்திய வைப்பகத்தைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமத்துக்கான விண்ணப்பம் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் மட்டுமே செய்யப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மத்திய வைப்பகம், பின்வருவனதொடர்பில் திருப்திகரமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) எந்த நிபந்தனைகளின்கீழ் பிணையங்களானவை பிணையங்கள் பற்றிய இடாப்பில் வைப்பிலிடப்படலாமோ, வைத்திருக்கப்படலாமோ, அதிலிருந்து மீளப்பெறப்படலாமோ அல்லது அதற்குக் கைமாற்றப்படலாமோ மற்றும் அதில் பதியப்படலாமோ அந்த நிபந்தனைகள்;

(ஆ) வைப்பிலிடப்பட்ட பிணையங்களிலான கையாளுகைகளைச் செய்முறைப்படுத்துதல்;

(இ) வைப்பிலிடப்பட்ட பிணையங்களின் தீர்ப்பனவை வசதிப்படுத்துதல்;

(ஈ) கணக்குவைத்திருப்போரின் அக்கறைகளைப் பாதுகாத்தலும் வைப்பிலிடப்பட்ட பிணையங்கள் மற்றும் அவற்றிலான கையாளுகைகள்பற்றிய தகவல்களைப் பாதுகாத்தலும் கட்டுப்படுத்துதலும்;

(உ) வைப்பகப் பங்குபற்றுநர்களை அனுமதிப்பதற்கான வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற கட்டளைக்கற்களும் வைப்பகப் பங்குபற்றுநர்களின் அனுமதிக்கத்தக்க வகுதிகளும்;

(ஊ) விண்ணப்பகாரக் கம்பெனியுடனான நிபந்தனைகளைக் கண்காணித்தலும் அதன் விதிகளை வலுவுறுத்துதலும்;

(எ) மத்திய வைப்பகத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்காக வைப்பகப் பங்குபற்றுநர்களை விலக்குதலும், இடைநிறுத்துதலும், அவர்களின்மீது குற்றப்பணங்களை விதித்தலும் அல்லது அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தலும்;

(ஏ) மத்திய வைப்பகத்துக்கும் வைப்பகப் பங்குபற்றுநர்களுக்கும் இடையேயும், வைப்பகப் பங்குபற்றுநர்களுக்கு இடையேயும், பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்; அத்துடன்

(ஐ) முதலீட்டாளர்களுக்குச் சொந்தமான பிணையங்கள், வைப்பகப் பங்குபற்றுநர்களின் பிணையங்களிலிருந்து தனிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பகாரர், விண்ணப்பம் தொடர்பாக ஆணைக்குழு அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய தகவலை வழங்குதல் வேண்டும்.

(5) உத்தேசிக்கப்பட்ட மத்திய வைப்பகம், எல்லா நேரங்களிலும், பின்வருவனவற்றை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதிய நிதிசார், மனித மற்றும் வேறு வளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அதன் தொழிலை நடாத்துவதற்காகப் போதியதான முறையிலும் முறையாகவும் சாதனமிடப்பட்ட வளவுகள்;

(ஆ) அதன் தொழிலை நடாத்துவதற்காகத் தகுதிவாய்ந்த ஆளணியினர்; அத்துடன்

(இ) அவசரநிலைமைகளை எதிர்கொள்வதற்குப் போதிய ஆற்றல், பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் மற்றும் வசதிகளுடனான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமைகள்.

(6) பொதுமக்களின் அக்கறைகருதி அல்லது பிணையங்கள் சந்தையின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக ஒரு மத்திய வைப்பகத்தைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றை விண்ணப்பகாரருக்கு ஆணைக்குழு தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளுக்கு அல்லது நியதிநிபந்தனைகளுக்கு அமைய வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, அது அவ்வாறு செய்யலாம்.

(7) ஆறாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நியதி நிபந்தனைகளின் பொதுமையை வரையறுக்காமல், ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களின் அக்கறைகருதி அல்லது ஒரு மத்திய வைப்பகத்தின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக நியதி நிபந்தனைகளைத் திருத்துதல், இல்லாதொழித்தல் அல்லது நியதிநிபந்தனைகளை விதித்தல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்படின் அவ்வாறு செய்யலாம்.

ஒரு மத்திய வைப்பகத்தின் கடமைகள்.

**51.** (1) மத்திய வைப்பகமானது -

(அ) பிணையங்களைக் கையாளுவதற்கான காப்பான, பயனுள்ள மற்றும் வினைத்திறனான முறைமையைத் தொழிற்படுத்துதல் வேண்டும்;

(ஆ) அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமான முறையில் முகாமைசெய்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கணக்கு வைத்திருப்போரின் பாதுகாப்புக்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு பொதுமக்களின் அக்கறை கருதிச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) ஒரு மத்திய வைப்பகத்தின் பணிப்பாளர், கணக்கு வைத்திருப்போரின் பாதுகாப்புக்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, பொதுமக்களின் அக்கறைகருதி எல்லா நேரங்களிலும் செயலாற்றுவதற்கான கடமையைக் கொண் டிருத்தல் வேண்டும் என்பதுடன், இக்கடமைக்கும் வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளரொருவரின் கடமைக்கும் இடையே முரண்பாடு இருக்குமிடத்து, இச்சட்டத் தின்கீழான கடமையே மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

*மத்திய வைப்பகத்தின் உரிமத்தை இல்லாதாக்குதல்.*

**52.** (1) ஆணைக்குழுவானது, எழுத்திலான அறிவித்தல் மூலம்,-

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து 50 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லா தாக்கலாம்; அல்லது

(ஆ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அறிவித்தலிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வசதிகளை வழங்காதொழியும்படி அல்லது தொழிற்படுத்தாதொழியும்படி அல்லது அத்தகைய சேவைகளை வழங்காதொழியும்படி மத்திய வைப்பகத்தைப் பணிக்கலாம்.

(2) பின்வரும் சூழ்நிலைகளுள் ஏதேனுமொன்று ஏற்படு மிடத்து,ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களைப் பாதுகாப் பதற்காக அல்லது பொதுமக்களின் அக்கறைகருதி அல்லது பிணையங்கள் சந்தையை முறையாக ஒழுங்குபடுத்துவதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது பணிப்புரையை வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்பட்டாலொழிய, அவ்வாறு செய்தலாகாது:-

(அ) மத்திய வைப்பகமானது பிணையங்களின் மத்திய கையாளுகைக்கான முறைமையொன்றைத் தொழிற் படுத்தாதொழிகின்றமை;

(ஆ) மத்திய வைப்பகமானது, இலங்கையினுள்ளாயினுஞ் சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒடுக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றமை அல்லது வேறுவகை யாகக் கலைக்கப்படுகின்றமை;

(இ) மத்திய வைப்பகமானது அதன் உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளமை அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றமை;

(ஈ) மத்திய வைப்பகமானது இச்சட்டத்தின்கீழ் வழங்கப் படுகின்ற ஒரு நிபந்தனையுடன், தேவைப்பாட்டுடன் அல்லது பணிப்புரையுடன் இணங்கியொழுவதற்குத் தவறியுள்ளமை;

(உ) 50 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் முக்கியமான ஒரு விபரத்தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இருந்தமை அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டுவிடுகையொன்று இருக்கின்றமை;

(ஊ) மத்திய வைப்பகத்துக்கெதிரான தீர்ப்புத் தனிசொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்படாதுள்ளமை;

(எ) மத்திய வைப்பகத்தின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அது தொடர்பில், இலங்கையினுள்ளா யினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ் சரி, ஒரு பெறுநர், ஒரு பெறுநரும் முகாமையாளரும், ஒழிப்போன் அல்லது அவர்களுக்குச் சமமான ஆள் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை;

(ஏ) மத்திய வைப்பகமானது, இலங்கையினுள்ளாயினுஞ் சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அதன் கடன்கொடுத்தோருடன் இணக்கப்பா டொன்றை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டமொன் றைச் செய்துகொண்டுள்ளமை; அல்லது

(ஐ) மத்திய வைப்பகமானது அதன் சொந்த விருப்பத்தின்பேரில் அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்திருந்து அவ்வாறு செய்வது தகுதியானதென ஆணைக்குழு கருதுகின்றமை.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, மத்திய வைப்பகமானது, ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இரண்டுவாரங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குப் பிணையங்களின் மத்திய கையாளுகைக்கான முறைமையொன்றைஅது தொழிற்படுத்தாதொழிந்திருப்பின், அத்தகைய முறைமையைத் தொழிற்படுத்தாதொழிந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்பட்டமை அல்லது பணிப்புரையொன்று வழங்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பின்வரும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது அறிவித்தலிற் குறித்துரைக்கக்கூடியவாறாக இல்லாதாக்குகையினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளை இல்லாதாக்குகை அல்லது பணிப்புரை பயனுக்கு வரவேண்டிய தேதியன்று அல்லது அத்தேதிக்குப்பின்னர் தொடர்ந்து கொண்டுநடாத்துவதற்கு ஆணைக்குழுமத்திய வைப்பகத்தை அனுமதிக்கலாம்:-

(அ) மத்திய வைப்பகத்தின் தொழிற்பாடுகளை மூடிவிடும் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்காதொழியும் நோக்கத்துக்காக;

(ஆ) வைப்பீட்டாளர்களைப்பாதுகாக்கும் நோக்கத்துக்காக; அல்லது

(இ) பொதுமக்களின் அக்கறைக்காக.

(5) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது, அவசியமென அது கருதுமிடத்து, புதிய பணிப்பாளர் சபையொன்று நியமிக் கப்படும்வரை மத்திய வைப்பகத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கு ஆறுமாத காலப்பகுதிக்கானதும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு நீடிக்கப்படக்கூடியதுமான இடைக்காலப் பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கலாம்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் மத்திய வைப்பகத்துக்கு ஆணைக் குழுவானது அனுமதி வழங்கியுள்ளவிடத்து, மத்திய வைப்பக மானது, அத்தகைய அனுமதிக்கிணங்கச் செயற்பாடுகளை அது கொண்டுநடாத்துவதன் காரணமாக (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ளதாகக் கருதப்படுதலாகாது.

(7) ஆணைக்குழுவானது, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்ப மொன்றை மத்திய வைப்பகத்துக்கு அளிக்காமல், (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(8) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்ற மத்திய வைப்பகமொன்று, அம்முடிபு பற்றி மத்திய வைப்பகத்துக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்று செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஆணைக் குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, அமைச்சரின் முடிபு பெறப்படும்வரை பயனுடையதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(10) அமைச்சர், (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது–

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தின் அல்லது பணிப்புரையின் இல்லாதாக்குகையை இல்லா தொழிக்கும்படி ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

(11) ஆணைக்குழுவானது, அமைச்சரின் பணிப்புரைக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(12) பதினோராம் உட்பிரிவுக்கமைய,இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் ஏதேனும் இல்லாதாக்குகைபற்றி அல்லது ஏதேனும் வழங்கப்பட்ட பணிப்புரைபற்றி ஆணைக்குழுவானது பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

*ஒரு மத்திய வைப்பகத்தின் உரிமம் இல்லாதாக்கப்படுகின்றமையின் பயன்.*

**53**. ஐம்பத்திரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் உரிமத்தின் இல்லாதாக்குகை அல்லது பணிப்புரையொன்றின் வழங்குகை-

(அ) மத்திய வைப்பகத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கணனி முறைமையின்மீது செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு, 52 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான உரிமம்இல்லாதாக்கப்பட்டதற்கு முன்னர் அல்லது பணிப்புரை வழங்கப்பட்டதற்கு முன்னர் அல்லது 52 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து, அதற்குப்பின்னர் செய்து கொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அவ்வுடன்படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை வறிதானதாக்கும் அல்லது பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது.

*பிணையங்கள் கணக்கு.*

**54**. மத்திய வைப்பகமொன்று வெவ்வேறு வகையினவான பிணையங்கள் கணக்குகளைத் தாபிக்கலாமெனப்பதுடன், மத்திய வைப்பகத்திடம் திறக்கப்பட்ட அத்தகைய பிணையங்கள் கணக்கு ஒவ்வொன்றும், வைப்பிலிடப்பட்ட பிணையங்களின் பயனுகர் சொந்தக்காரரின் பெயரில் அல்லது நியமத்தரின் பெயரில் இருத்தலும் வேண்டும்.

*மத்திய வைப்பகத்திடம் இடப்பட்ட புத்தகப் பதிவுப் பிணையங்கள்.*

**55**. மத்திய வைப்பகத்தில் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் எல்லாக் கையாளுகைகளும், பங்குச் சான்றிதழ் தொகுதிகளின் உருப்படியான ஒப்படைப்பில்லாமல் மத்திய வைப்பகத்தின் கணக்குகளிலான புத்தகப் பதிவுகளின்மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

*வைப்பீட்டாளரின் கணக்கிலான பதிவீடு பற்றிய பதிவு.*

**56**. மத்திய வைப்பகத்தினால் பேணப்பட்ட கணக்கொன்றி லான பதிவீடு பற்றிய பதிவொன்று அத்தகைய கருமத்தின் மெய்யான தன்மைபற்றி முதற்றோற்றவளவிலான சான்றாதல் வேண்டும்.

*மத்திய வைப்பகத் தினால் நம்பிக்கைப் பொறுப்பில் வைத் திருக்கப்பட்ட பிணையங்களின் பயன்.*

**57**. (1) மத்திய வைப்பகமானது அதன் பிணையங்களை வைத்திருப்போருக்காக நம்பிக்கைப்பொறுப்பில் பிணையங்களை வைத்திருக்குமிடத்து, அப்பிணையங்களானவை எந்த ஆளின் நன்மைக்காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுகின் றனவோ அந்த ஆள்-

(அ) அத்தகைய பிணையங்களை வைத்திருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அப்பிணையங்கள் தொடர்பில், அவர் அத்தகைய பிணையங்களை வைத்திருப்பவர் என்றாற்போன்று, விடயத்துக்கேற்ப, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அத்தகைய பிணையங்கள் தொடர்பில் அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற அத்தகைய எல்லா உரிமைகளையும் சிறப்புரிமை களையும் துய்த்தலும் அத்தகைய எல்லாக் கடமை களுக்கும் கடப்பாடுகளுக்கும் அமைந்தவராக விருத்தலும் வேண்டும்.

(2) நியமத்தர் ஒருவரினால் வைத்திருக்கப்பட்ட மத்திய வைப்பகத்தின் கணக்குகளில் பேணப்பட்ட பிணையங்களுடன் இணைந்துள்ள உரிமைகளும் கடமைகளும், மத்திய வைப்பகத் தில் வைத்திருக்கப்பட்ட முறையான கணக்கில் அடையாளங் காணப்பட்ட பயனுகர் சொந்தக்காரரினால், அவர் அப் பிணையங்களை வைத்திருப்பவர் என்றாற்போன்று, பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு வைப்பகப் பங்குபற்றுநரின் ஏதேனும் கடனிறுக்க வகையறவு அல்லது வங்கிமுறிவு வழக்குநடவடிக்கைகள் தொடர் பில் ஒரு பெறுநரை, ஒரு பெறுநரை அல்லது முகாமையாளரை, ஒழிப்போனை அல்லது அவர்களுக்குச் சமமான ஆளை நியமித்தலானது, அந்த வைப்பகப் பங்குபற்றுநரினதாக மத்திய வைப்பகத்தினால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்பட்ட பிணையங்களை வைத்திருப்பவர்களின் உரிமைகளைப் பாதித்தலாகாது.

செல்லுபடியாக்குதல்.

**58.** இச்சட்டம் இயற்றப்படுமுன்னர் வைப்பகத்தினால் செய்யப்பட்ட பிணையங்களின் ஏதேனும் பதிவானது, அத்தகைய பதிவு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு, விதிகளுக்கு அல்லது பணிப்புரைகளுக்கு இணங்கவன்றி வேறுவகையாகச் செய்யப்பட்டுள்ளதென்ற காரணத்துக்காக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

## அத்தியாயம் 4

### பொது ஏற்பாடுகள்

ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகள்.

**59.** (1) ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விதிகள்-

(அ) சந்தை நிறுவனத்துக்கும் பிணையங்களின் ஒவ்வொரு வழங்குநருக்குமிடையேயும்;

(ஆ) சந்தை நிறுவனத்துக்கும், விடயத்துக்கேற்ப, ஒவ்வொரு வியாபாரப் பங்குபற்றுநருக்கும் தீர்வக உறுப்பினருக்கும் அல்லது வைப்பகப் பங்குபற்றுநருக்குமிடையேயும்;

(இ) பிணையங்களின் ஒவ்வொரு வழங்குநருக்கும் ஒவ்வொரு வியாபாரப் பங்குபற்றுநருக்குமிடையேயும்; அத்துடன்

(ஈ) வியாபாரப் பங்குபற்றுநர்கள், தீர்வக உறுப்பினர்கள் அல்லது வைப்பகப் பங்குபற்றுநர்கள் என்போருக்கிடையேயும்,

பிணிக்கின்ற ஒப்பந்தமாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(2) முறையே, சந்தை நிறுவனமும், பிணையங்களின் ஒவ்வொரு வழங்குநரும், ஒவ்வொரு வியாபாரப் பங்குபற்றுநரும், தீர்வக உறுப்பினரும், வைப்பகப் பங்குபற்றுநரும், விதிகளின் ஏற்பாடுகளின்கீழான கடப்பாடுகளை, அவ்வேற்பாடுகள், விடயத்துக்கேற்ப, சந்தை நிறுவனத்துக்கு, வழங்குநருக்கு, வியாபாரப் பங்குபற்றுநருக்கு, தீர்வக உறுப்பினருக்கு அல்லது வைப்பகப் பங்குபற்றுநருக்கு ஏற்புடையற்பாலனவான அளவுவரை, பின்பற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அளவு வரை சந்தை நிறுவனத்தின் விதிகள், ஆணைக்குழுவின் முன்னங் கீகாரமின்றித் திருத்தப்படுதலாகாது, வேறுபடுத்தப்படுதலாகாது அல்லது ஒழிக்கப்படுதலாகாது.

(4) சந்தை நிறுவனமொன்று அதன் விதிகளைத் திருத்துவதற்கு உத்தேசிக்குமிடத்து, அச்சந்தை நிறுவனம் உத்தேசத் திருத்தத்தை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, உத்தேசத் திருத்தம் பெற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் அச்சந்தை நிறுவனத்தைக் கேட்டபின்னர் பின்வருவனபற்றிச் சந்தை நிறுவனத்துக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்:-

(அ) விதிகளுக்கான அத்தகைய திருத்தங்கள் அனுமதிக் கப்படுகின்றனவா; அல்லது

(ஆ) விதிகளுக்கான அத்தகைய திருத்தங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றதா.

(6) உத்தேசத் திருத்தத்துக்கு அனுமதிமறுக்கப்படுமிடத்து, ஆணைக்குழு அத்தகைய அங்கீகார மறுப்புக்கான காரணங் களைக் கொடுத்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது தொண்ணூறு நாட்களினுள் சந்தை நிறுவனத்துக்குப் பதிலளிக்கத் தவறுமிடத்து, (4) ஆம் உட்பிரி வின்கீழ் அத்தகைய விதிகளுக்கான உத்தேசத் திருத்தங்கள் தொண்ணூறு நாட்கள் முடிவுற்றதன் மீது உடனடியாகப் பயனுறுதல் வேண்டும்.

(8) ஐந்தாம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தன்மேல் சந்தை நிறுவனம் அத்தகைய விதிக்கு உடனடியாகப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(9) ஐந்தாம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, ஏதேனும் சந்தை நிறுவனத்தின் விதிகளை எந்நேரத்திலும் திருத்தலாம் என்பதுடன், அத்தகைய விதிகள் உடனடியாகப் பயனுறுதலும் வேண்டும் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படு கின்றவாறான அத்தகைய தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

*சந்தை நிறுவனங்களின் விதிகள் பின்பற்றப் படுவதனை அல்லது வலுவுறுத்தப் படுவதனைக் கட்டளை யிடுவதற்கு நீதிமன்றத் துக்குள்ள தத்துவம்.*

**60.** (1) ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான, அவற்றைப் பின்பற்றுவதற்கான, வலுவுறுத்துவதற்கான அல்லது அவற்றுக்குப் பயன்கொடுப்பதற்கான கடமையொன்றின்கீழுள்ள எவரேனுமாள் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய தவறுதலுக்கான காரணங்களைக் கொடுக்கும்படி அத்தகைய ஆளைத் தேவைப் படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆளினாற் கொடுக்கப்பட்ட காரணங்களுடன் ஆணைக்குழு திருப்திப்படாதவிடத்து, ஆணைக்குழுவானது, (3) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) சந்தை நிறுவனத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகும்படி, அவற்றைப் பின்பற்றும்படி, வலுவுறுத்தும்படி அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும்படி முதற்குறிப்பிடப்பட்ட ஆளைப் பணிக்கின்ற கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்கலாம்.

*ஒரு சந்தை நிறுவனத்தின் கணிசமான அளவினரான பங்குதாரர்களைக் கட்டுப் படுத்துதல்.*

**61.** (1) அரசாங்கத்தின் பிரதிநிதியொருவர் தவிர்ந்த வேறு ஆளொருவர், ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப்பெற்றுக்கொள்ளாமல், ஒரு சந்தை நிறுவனத்திலான வாக்களிக்கும் பங்குகள் எல்லாவற்றினதும் கூட்டுமொத்தத்தின் ஐந்து சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை விஞ்சுகின்ற சந்தை நிறுவனத்தின் எவையேனும் வாக்களிக்கும் பங்குகளை ஒன்றில் தனிப்பட்ட முறையில் அல்லது அவருடன் ஒருமித்துச் செயலாற்றுகின்ற வேறெவரேனுமாளுடன் சேர்ந்துகொள்ளுதல் செய்வதற்கு ஏதேனும் உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்து கொள்ளுதலாகாது.

(2) ஆணைக்குழுவானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்று என்றவகையாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான குறிப்பிட்டவோர் அக்கறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு தொகுதியினரான ஆட்களினால் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருக்கப்படக் கூடிய வாக்களிக்கும் பங்குகளின் அதிகபட்ச விகிதாசாரத்தின்மீது மட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது எந்நேரத்திலேனும் வர்த்தமானியில் அறிவிப்பொன்றை வெளியிடுவதன்மூலம் பிணையங்கள் சந்தை அபிவிருத்தியின் கட்டத்தை அல்லது பொதுமக்களின் அக்கறையைக் கவனத்திற்கொண்டபின்னர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தடைமட்டத்தை வேறுபடுத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்கான விண்ணப்பம், அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட வாக்களிக்கும் பங்குகளைக் கொள்ளுதல் செய்வதற்கு உட்கருதுகின்ற ஆளினால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலும் முறையிலும் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஆட்கள்மூலமும், விண்ணப்பகாரரைப் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தலாம்:-

(அ) விண்ணப்பமொன்று சம்பந்தமாக மேலதிகத் தகவலைக் கொடுக்கும்படியும்; அத்துடன்

(ஆ) ஒரு விண்ணப்பத்தை ஆதரித்துச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலை விண்ணப்பகாரரின் ஆகுசெலவில் சரிபார்க்கும்படியும்.

(6) ஆணைக்குழுவானது, விதிப்பதற்கு அது தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, அதன் அங்கீகாரத்தை வழங்கலாம்.

*தடை விதிப்பதற்கான முதனிலைக் கட்டளையொன்றை ஆக்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்.*

**62.** (1) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆனால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எவரேனுமாள் 61 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, எவையேனும் பங்குகள் தொடர்பிலான மீறுகையின் சூழ்நிலைகளில் ஏற்புடையற்பாலவாறாக அல்லது தோதானவாறாக இருக்கக்கூடிய பின்வரும் ஒன்று

அல்லது அதற்கு மேற்பட்ட தடைகளை விதிக்கின்ற எழுத்திலான முதனிலைக் கட்டளையொன்றை அது ஆக்கலாம்:-

(அ) அத்தகைய வாக்களிக்கும் பங்குகளை வாங்குவதனை அல்லது அத்தகைய வாக்களிக்கும் பங்குகளை வாங்குவதற்கான உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை நிறைவேற்றுவதனை அல்லது வழங்கப்படாத பங்குகளின் விடயத்தில், வழங்கப்படாத பங்குகளை வாங்குவதற்கான உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை நிறைவேற்றுவதனை அல்லது வழங்கப்படாத பங்குகளுடன் வழங்கப்படவுள்ள உரிமையை வாங்குவதனைத் தடைசெய்தும்;

(ஆ) அத்தகைய பங்குகள் தொடர்பிலான எவையேனும் வாக்களிக்கும் உரிமைகளின் பிரயோகத்தைத் தடைசெய்தும்;

(இ) அத்தகைய பங்குகளின் உரிமையில் அல்லது அத்தகைய பங்குகளை வைத்திருப்பவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் கொடை முனைவைப் பின்பற்றி எவையேனும் மேலதிகப் பங்குகளின் வழங்குகையைத்தடைசெய்தும்; அல்லது

(ஈ) ஒழித்துக்கட்டுதலில் தவிர, மூலதனம், பங்கிலாபங்கள் என்பன தொடர்பிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, அத்தகைய பங்குகளின் மீது சந்தை நிறுவனத்திடமிருந்து வருமதியான எவையேனும் பணத் தொகைகளின் கொடுப்பனவைத் தடைசெய்தும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட முதனிலைக் கட்டளையொன்று, செயல்முறைக்குகந்தவரை விரைவாக (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ள ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது பிரசித்தப்படுத்தப்படுவது தேவையாகவுள்ளதென ஆணைக்குழு அபிப்பிராயப்படின், ஆணைக்குழு தகுதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பிரசித்தப்படுத்தவும்படலாம்.

(3) முதனிலைக் கட்டளையொன்று, (1) ஆம் உட்பிரிவை மீறிய ஆளை அல்லது அத்தகைய கட்டளை எந்த வாக்களிக்கும் பங்குகளுக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த வாக்களிக்கும் பங்குகளை அப்போதைக்கு வைத்திருக்கின்ற எவரேனுமாளை மற்றும் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட அல்லது கட்டளை எவ்வாளுக்கு நெறிப்படுத்தப்படுகின்றதோ அந்த வேறெவரேனு மாளைப் பிணிப்பதாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கெதிராக முதனிலைக் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாள் அல்லது அத்தகைய கட்டளையினால் பங்கமானமுறையில் பாதிக்கப்பட்ட வேறெவரேனுமாள், (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ள ஆளுக்கு அக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள், அக்கட்டளை எந்த ஏற்பாடுகள் தொடர்பாக ஆக்கப்பட்டதோ அந்த ஏற்பாடுகளைத் தாம் மீறியிருக்கவில்லை என்ற ஏதுவின்மீது அக்கட்டளையைத் தள்ளிவைப்பதற்காக அல்லது முறையீடுகளில் குறித்துரைக்கப்படவுள்ள காரணங்களுக்காக அதனை வேறுபடுத்துவது நீதியானதாகவும் முறையானதாகவும் இருக்குமென்ற ஏதுவின்மீது அக்கட்டளையை வேறுபடுத்துவதற்காக விண்ணப்பித்து ஆணைக்குழுவுக்கு எழுத்திலான முறையீடுகளைச் செய்யலாம்.

(5) ஆணைக்குழுவானது (4) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட முறையீடுகளைக் கவனத்திற்கொண்டபின்னர், முதனிலைக் கட்டளையை ஒன்றில் உறுதிப்படுத்தலாம், தள்ளிவைக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(6) ஆணைக்குழுவானது முதனிலைக்கட்டளையொன்றை உறுதிப்படுத்துமிடத்து, அது, முதனிலைக் கட்டளை எந்தப் பங்குகளை வைத்திருப்பவருக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தப் பங்குகளை வைத்திருப்பவருக்கு, அப்பங்குகளைக் கையுதிர்க்கும்படி அத்தகைய வைத்திருப்பவரைப் பணித்து கட்டளையொன்றை ஆக்கலாம்.

(7) ஆணைக்குழுவானது, இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் ஏதேனும் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடிய வாறாக அல்லது தேவைப்படக்கூடியவாறாக அல்லது அத்தகைய கட்டளைக்கு இடைநேர்விளைவானதாக, துணைநிலையானதாக அல்லது அதன் விளைவாந்தன்மையினதாக இருக்கக்கூடியவாறாக, சந்தை நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்கு அல்லது அலுவலர்களுக்கு ஏதேனும் அறிவுறுத்தலை விடுக்கலாம் அல்லது பணிப்புரையை வழங்கலாம்.

(8) ஏதேனும் முதனிலைக் கட்டளைக்கு அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ் உறுதிப்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்துதலுக்கு அல்லது வழங்கப்பட்ட பணிப்புரைக்கு முரணாகவுள்ள எவையேனும் பங்குகள் தொடர்பான ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒழுங்கேற்பாடு உட்பட ஏதேனும் கொடுக்கல்வாங்கல், சட்டத்தில் எப்பயனையும் கொண்டிருப்பதில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(9) ஏதேனும் முதனிலைக் கட்டளையை, (5) ஆம் உட்பிரிவின்கீழ் உறுதிப்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்துதலை அல்லது வழங்கப்பட்ட பணிப்புரையை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*சந்தை நிறுவனமொன்றுக்குப் பணிப்பாளர்களை நியமித்தல்.*

**63.** (1) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளொருவர், ஆணைக்குழுவின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டாலொழிய, ஒரு சந்தை நிறுவனத்தின் பணிப்பாளராக அல்லது பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலராக நியமனத்தை, மீள்நியமனத்தை, தேர்தலை அல்லது மீள்தேர்தலை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் அங்கீகாரம் தேவைப்படுமிடத்து, ஆணைக்குழுவானது, பின்வருமாறிருப்பின், விடயத்துக்கேற்ப, அங்கீகரித்தல் ஆகாது:-

(அ) முன்மொழியப்பட்ட எவரேனும் பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்கு படுத்தும் அலுவலர் இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராகவிருப்பின்;

(ஆ) முன்மொழியப்பட்ட பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்றுநர் அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலர் என்பவருக்கெதிரான தீர்ப்புத் தனிசு, முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்பட்டிராதிருப்பின்;

(இ) முன்மொழியப்பட்ட பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்கு படுத்தும் அலுவலராக-

(i) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவராகவிருப்பின் அல்லது அதற்கான குற்றத் தீர்ப்பு, அவர் மோசடியான முறையில் அல்லது நேர்மையீனமானமுறையில் செயலாற்றியுள்ளாரென்ற முடிவெடுப்பை உட்படுத்தியிருப்பின்;

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(iii) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நிருவாக நடவடிக்கைக்கு அமைந்தவராகவிருந்திருப்பின்;

(iv) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(v) அக்கறை முரண்பாட்டைக் கொண்டிருக்கக் கூடிய சாத்தியம் கொண்டவராகவிருப்பின்;

(ஈ) முன்மொழியப்பட்ட பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்கு படுத்தும் அலுவலர் நேர்மையை அல்லது நற்கணிப்பைக் கொண்ட ஆளொருவராகவும் ஒரு சந்தை நிறுவனத்தின் பணிப்பாளராக அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலராக விருப்பதற்கு (3) ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவராகவுமுள்ளாரென ஆணைக்குழு திருப்திப் படாவிடின்.

(3) ஆணைக்குழுவானது, சந்தை நிறுவனத்தின் முன்மொழியப் பட்ட பணிப்பாளரின் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலரின் நியமனத்தை அங்கீகரித்தலைக் கவனத்திற்கொள்வதில் மற்றவற்றுக்கிடையில் பின்வரும் கட்டளைக்கற்களைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(i) நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தன்மையினதான தொழிலில் அவ்வாள் திருப்திகரமான கடந்தகாலச் செயல்நிறைவேற்றுகையை அல்லது நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கின்றமை;

(ii) ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுக ளைப் புரிந்துகொள்வதற்கும் தொழிற்படுத்துவதற்கும் முகாமைசெய்வதற்கும் அவ்வாள் தோதான பரந்தளவின வான தேர்ச்சிகளையும் அனுபவத்தையும் கொண்டிருக் கின்றமை; அத்துடன்

(iii) ஏற்றங்கீகரிக்கப்பட்ட உயர்தொழிற்சார் தகைமை மற்றும் இயைபான உயர்தொழிற்சார் நிறுவனங்களின் உறுப்பாண்மை என்பனவுட்பட, அவ்வாள் எந்தக் குறித் துரைக்கப்பட்ட கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள் ளாரோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட கடமைகளைப் புரிவதற்கான தொழினுட்ப அறிவையும் ஆற்றலையும் கொண்டிருக்கின்றமை.

(4) ஆளொருவர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை, அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை, விதிகளை அல்லது பணிப்புரை களை மீறியுள்ளவிடத்து, அத்தகைய ஆள், பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்கு படுத்தும் அலுவலர் என்ற பதவியை வகித்தலாகாது.

(5) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் பணிப்பாளர்களின் நியமனம் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்கள், ஏற்றமாற்றங்களுடன், ஆணைக்குழுவினால் ஒரு சந்தை நிறுவனத் தின் முகாமையாளரினது நியமனத்துக்கு அல்லது கட்டுப்பாட்டாளர் அங்கீகரிக்கப்படுவதில்ஏற்புடையனவாதல் வேண்டும்.

*சந்தை நிறுவன மொன்றின் முக்கிய விபரங்களை மாற்றிய மைத்தல்.*

**64.** சந்தை நிறுவனமொன்று அதன் அமைப்பக விதிகளை அல்லது ஏலவே கொடுத்துதவப்பட்ட வேறெவையேனும் முக்கிய விபரங்களை மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்குமிடத்து அல்லது உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் குறித் துரைக்கப்பட்ட நிலையிலிருந்தான மாற்றமொன்றுக்கு உட்படு மிடத்து அல்லது உட்படுவதற்கு உட்கருதுமிடத்து, அச்சந்தை நிறுவனமானது அத்தகையமாற்றியமைத்தல் அல்லது மாற்றம் செய்யப்படுமுன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

*ஒரு பரிவர்த்தனை யின் அல்லது தீர்வக இல்லத்தின் உரிமைகள்.*

**65.** ஒப்பந்தங்கள் தொடர்பான ஏதேனும் சட்டத்தில் உள்ள தெதுவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப் பட்ட எவையேனும் விதிகளுக்கு அல்லது ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின், மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை யின் அல்லது தீர்வக இல்லத்தின் விதிகளுக்கு ஒவ்வாததாக விருக்கும் அளவுக்கு, பின்வருவனவற்றை வலுவுறுத்தத்தக்க தல்லதாக்குதல் ஆகாது:-

(அ) இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி களின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ், விடயத்துக்கேற்ப, பிணையங்கள் தொடர்பாக ஒரு பரிவர்த் தனைக்கு அல்லது தீர்வக இல்லத்துக்கு அளிக்கப்பட வேண்டிய எவையேனும் உரிமைகள்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ்,அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, ஒரு பரிவர்த்தனையின் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளின்கீழ் பரிவர்த்தனையொன்றினால் செய்து கொள்ளப்பட்ட பிணையங்களின் கொடுக்கல்வாங்கலுக்கானவொரு திறத்தவருக்கு அளிக்கப்படவேண்டிய எவையேனும் உரிமைகள்; அல்லது

(இ) விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ்,விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் பரிவர்த்தனையொன்றினால்செய்துகொள்ளப்பட்ட பிணையங்களினது கொடுக்கல்வாங்கலின்கீழ் அல்லது அது தொடர்பாகச்செய்யப்பட்ட எதுவும் அல்லது செய்யாதுவிடப்பட்ட எதுவும்.

**66.** (அ) ஒரு பரிவர்த்தனையினால்; அல்லது

குற்றவியல் அல்லது குடியியல் பாதுகாப்பு.

(ஆ) பின்வருவோருட்பட ஒரு பரிவர்த்தனையின் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனுமாளினால்–

(i) பரிவர்த்தனையின் எவரேனும் பணிப்பாளரினால்; அல்லது

(ii) பரிவர்த்தனையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் எவரேனும் உறுப்பினரினால்,

செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதற்காகவும் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பரிவர்த்தனை அல்லது அந்த ஆள், இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் அல்லது அத்தகைய பரிவர்த்தனையின் விதிகளின்கீழ் அதன் கடப்பாடுகளின் நிறைவேற்றுகையின்போது அல்லது கொள்ளப்பட்ட நிறைவேற்று

கையின்போது அல்லது அது சம்பந்தமாக நியாயமான எல்லாக் கவனத்தையும் எடுத்தாரென்பதுடன் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரெனவும்எண்பிப்பது,ஏதேனும்குற்றவியல் அல்லது குடியியல் வழக்குநடவடிக்கையில் எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

**ஆணைக் குழுவுக்கு உதவி வழங்குதல்.**

**67.** (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவின் சார்பில் அல்லது அதன் அதிகாரத்துடன் செயலாற்றுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் முறையான நிருவாகத்துக்காகத் தேவைப்படுத்தப் படக்கூடியவாறாகச் சந்தை நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான அத்தகைய விபரத்திரட்டுகளைக் கொடுத்துதவுதலும் அத்தகைய தகவலை வழங்குதலுமுட்பட, ஆணைக்குழு அல்லது அத்தகைய ஆள் நியாயமானமுறையில் தேவைப்படுத்துகின்ற வாறான அத்தகைய உதவியைச் சந்தை நிறுவனமொன்று ஆணைக் குழுவுக்கு அல்லது அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் சார்பில் செயலாற்றுகின்ற அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் பரிவர்த்தனையொன்றின் வியாபாரச் செயலிடத்துக்கான முழுமையானதும் சுதந்திரமான துமான அணுக்கத்துக்கு நியாயமான எல்லா நேரங்களிலும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பரிவர்த்தனையொன்றின் வியாபாரச் செயலிடத்துக்கு (2) ஆம் உட்பிரிவிற்கிணங்கவுள்ள அணுக்கத்தை ஆணைக்குழுவின் சார்பில் செயலாற்றுகின்ற அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குச் சட்டமுறையான சாக்கின்றி அனுமதிப்பதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

**வருடாந்த அறிக்கைகள்.**

**68.** (1) சந்தை நிறுவனமொன்று அதன் ஐந்தொகைத் தேதியிலிருந்து ஐந்து மாதங்களினுள், பின்வருவனவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கையொன்றை ஆணைக்குழுவிடம் கோப்பிடுதல் வேண்டும்:-

(அ) சந்தை நிறுவனத்தின் கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக் கொள்கையின்மீதான அறிக்கையொன்றும் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் தகவலும்;

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களும் விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகளும்; அத்துடன்

(இ) தோதானவிடத்து சந்தை நிறுவனமானது கொளிக் கம்பெனியொன்றாக அல்லது துணைநிலைக் கம்பெனியொன்றாக இருக்குமிடத்து ஒன்றுதிரட்டப்பட்ட நிதிசார் கூற்றுக்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வருடாந்த அறிக்கையொன்றில் உள்ளடக்கப்படவேண்டிய நிதிசார் கூற்றுகள், இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்கக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) தீர்வக இல்லத்தினதும் மத்திய வைப்பகத்தினதும் வருடாந்த அறிக்கை, ஆபத்து முகாமை நடவடிக்கைமுறைகளும் அவற்றின் ஏற்புடைமையும் பற்றிய கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையொன்றையும் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் தகவலையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(4) வருடாந்த அறிக்கையானது, இப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவலுக்கு மேலதிகமாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவலையும் உள்ளடக்குதல் வேண்டும்.

*ஒரு சந்தை நிறுவனத்தின் கணக்காய்வாளர் ஒருவரின் கடமைகள்.*

**69.** (1) சந்தை நிறுவனமொன்றின் கணக்காய்வாளர் ஒருவர், தமது கடமைகளைச் சாதாரணநெறியில் புரிகையில் –

(அ) அவரது அபிப்பிராயத்தில் சந்தை நிறுவனத்தின் நிதி நிலைமையை முக்கியமான அளவுக்குப் பங்கமான

முறையில் பாதிக்கின்ற அல்லது பங்கமானமுறையில் பாதிக்கக் கூடிய ஏதேனும் கருமம்பற்றி அறியவந்தால்;

(ஆ) அவரது அபிப்பிராயத்தில் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் மீறுகையாக அமைகின்ற அல்லது அமையக்கூடிய ஏதேனும் கருமம்பற்றி அல்லது சந்தை நிறுவனத்தின் நிதிசார் நிலையுறுதியை முக்கியமான அளவுக்குப் பாதிக்கின்ற மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற ஒரு தவறு பற்றி அறியவந்தால்; அல்லது

(இ) பிணையங்களிலான முதலீட்டாளர்களின் நிதிகளை அல்லது ஆதனத்தைப் பங்கமான முறையில் பாதிக்கின்ற அல்லது பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் ஒழுங்கீனம் உட்பட, சந்தை நிறுவனத்தின் கணக்கு களின்மீது முக்கியமான விளைவைக் கொண்டுள்ள அல்லது கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் ஒழுங்கீனம் பற்றி அறியவந்தால்,

கணக்காய்வாளர், ஆணைக்குழுவுக்கான பிரதியொன்றுடன் அக்கருமம் அல்லது ஒழுங்கீனம் பற்றிய எழுத்திலான அறிக்கை யொன்றைப் பணிப்பாளர் சபைக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(2) சந்தை நிறுவனமொன்றின் கணக்காய்வாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது அறிக்கையில் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றுத் தொடர்பில் எவரேனுமாளினாலான ஏதேனும் துடர்ச்சிக்கு ஆளாதலாகாது; ஆயின், கணக்காய்வாளர் நல்லெண்ணத்துடன் செயலாற்றியிருத்தல் வேண்டும்.

(3) அவதூறு வழக்கிலான எதிராளியாக, இப்பிரிவு புறநீங்கலாக, சந்தை நிறுவனத்தின் கணக்காய்வாளர் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் உரிமையை, சிறப்புரிமையை அல்லது பாதிப்பின்மையை (2) ஆம் உட்பிரிவு மட்டுப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

(4) ஆணைக்குழுவானது, சந்தை நிறுவனம் ஒன்றின் கணக்காய்வாளரின்மீது பின்வரும் கடமைகளுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் விதிக்கலாம்:-

(அ) ஆணைக்குழு அவசியமானவையெனக் கருதக்கூடிய வாறு அவரது கணக்காய்வு தொடர்பான அத்தகைய மேலதிகத் தகவல்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிப்ப தற்கான கடமை;

(ஆ) சந்தை நிறுவனத்தின் தொழிலும் அலுவல்களும் பற்றிய அவரது கணக்காய்வின் நோக்கெல்லையை விசாலிப்ப தற்கான, நீடிப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான கடமை;

(இ) குறிப்பிட்ட ஏதேனும் விடயத்தில் வேறேதேனும் பரிசோத னையை நிறைவேற்றுவதற்கான அல்லது ஏதேனும் நடவடிக்கைமுறையைத் தாபிப்பதற்கான கடமை; அல் லது

(ஈ) பந்தி (ஆ) அல்லது (இ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட அவரது கணக்காய்வு, பரிசோதனை அல்லது நடவடிக்கை முறையைத் தாபித்தல் என்பவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமத்தின் மீது அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான கடமை; அத்துடன் கணக்காய்வாளர், நிதிசார் கூற்றுக்களின் மீது அவரது சுயாதீனமான அபிப்பிராயத்தை வழங்குவதற்காக அவரது சாதாரணக் கணக்காய்வு நோக்கெல்லைக்கான நீடிப்பொன்றாக அத்தகைய கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(5) சந்தை நிறுவனமானது, (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கடமைகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுகின்றமை தொடர்பில் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட கட்டணங்கள் பற்றிய அட்டவணையின் நியதிகளின்படி அவருக்கு ஊதியமளித்தல் வேண்டுமென்பதுடன், மேலதிகப் புலனாய்வு தேவைப்படும் சூழ்நிலைகளில் கணக்காய்வாளர்களுக்கான ஊதியம் ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

காலாகால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடப்பாடு.

**70.** சந்தை நிறுவனமொன்று, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அடிக்கடியாகவும், ஆபத்து முகாமைக் கணக்காய்வொன்றுட்பட, அத்தகைய அறிக்கைகளை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்துதல்.

**71.** சந்தை நிறுவனமொன்று, ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வருடாந்தக் கட்டணமொன்றை ஆணைக் குழுவுக்குச் செலுத்துதல் வேண்டும்.

காட்டி நிற்பதற்கெதிரான தடை.

**72.** (1) ஆளொருவர் ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக, மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனையாக, தீர்வக இல்லமாக அல்லது மத்திய வைப்பகமாகக் காட்டிநிற்றலாகாது என்பதுடன், “பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை”, “மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை”, “எதிர்நோக்குகள் பரிவர்த்தனை”, “பங்குத் தொகுதிச் சந்தை", “மூலாதாரப் பிணையங்களின் சந்தை”, “எதிர் நோக்குகள் சந்தை”, “தீர்வக இல்லம்”, “தீர்வக வசதிகள்”, “மத்திய வைப்பகம்”, “பிணையங்களின் வியாபாரச் சந்தை”, "மூலாதாரப் பிணையங்களின் வியாபாரச் சந்தை” அல்லது “எதிர்நோக்குகள் வியாபாரச் சந்தை” என்ற பெயரை, தலையங்கத்தை அல்லது விவரணத்தை எடுத்தலாகாது அல்லது பயன்படுத்துதலாகாது அல்லது ஊகத்தின்மூலம் கடைப்பிடித்தலாகாது அல்லது அத்தகைய ஆள் ஒரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை, மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை, தீர்வக இல்லம் அல்லது மத்திய வைப்பகமாகவுள்ளார் என்ற உட்கிடையாகக் கூறுகின்ற அல்லது என்ற நம்பிக்கையை உருவாக்கும் சாத்தியத்தைக் கொண்டுள்ள ஏதேனும் பெயரை, தலையங்கத்தை அல்லது விவரணத்தை எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது ஏதேனுமிடத்தில் இணைத்து வைத்தலோ அல்லது வெளிக்காட்டிவைத்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும்.

ஆணைக்குழு அதன் சொந்த முடிபை மீளாய்வதற்கு அதற்குள்ள தத்துவம்.

**73.** (1) ஆணைக்குழுவின் முடிபொன்றினால் இன்னலுறுகின்றவரான ஆளொருவர், அத்தகைய முடிபு அந்த இன்னலுற்ற ஆளுக்கு அறிவிக்கப்பட்டபின்னர் முப்பது நாட்களினுள் அதன் முடிபை மீளாய்வுசெய்யும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குப் பிந்தாமல் அதன் முடிபை விண்ணப்பகாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

## பாகம் III

### பிணையங்களின் வழங்குகை

இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும்.

**74.** இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருவனவாதல் வேண்டும்-

(அ) பிணையங்களின் வழங்குகையை ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளினால் நிதிசார் தகவல்களின் வெளிப்படுத்துகையை உறுதிப்படுத்தல்;

(இ) நிதிசார் ஒழுங்கீனங்களை வெளிப்படுத்துவதற்கு கணக்காய்வாளர்களைத் தேவைப்படுத்தல்;

(ஈ) சந்தை இடைத்தரகர்களுக்கு உரிமமளித்தலும் அவர்களின் பிரதிநிதிகளைப் பதிவுசெய்தலும்; அத்துடன்

(உ) வாடிக்கையாளர்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

## அத்தியாயம் 1

### பிணையங்களிலான வியாபாரம்

பிணையங்களின் கொடைமுனைவு.

**75.** (1) நிரற்படுத்தப்பட்ட அல்லது நிரற்படுத்தப்படாத கூட்டிணைக்கப்பட்ட உருவகமொன்று, ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, பொதுமக்களிடமிருந்து நிதிகளைப் பரிந்துகேட்கும் நோக்கங்களுக்காக, ஒன்றில் நேரடியாகவோ அல்லது முன்விபரணமொன்று அல்லது அதனையொத்த ஆவணமொன்று என்ற வகையில் அல்லது வேறுவகையில் மூன்றாம் திறத்தவரொருவர் மூலமாக பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்றைச் செய்தலாகாது.

(2) ஒரு பகிரங்கக் கொடைமுனைவு என்பது, தராதர அங்கீகாரம்பெற்ற முதலீட்டாளரொருவருக்குச் செய்யப்பட்ட கொடைமுனைவொன்று தவிர, (3) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள கட்டளைக்கல்லின் நியதிகளின்படி பொதுமக்களுக்குச் செய்யப்பட்ட கொடைமுனைவொன்றாகும் எனப்பொருள்படும். அத்தகைய தராதர அங்கீகாரம்பெற்ற முதலீட்டாளர் பொது மக்களுக்கு அத்தகைய பிணையங்களின் அடுத்துறும் விற்பனையொன்றை செய்வதிலிருந்து தடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிடப்படும் விதிகள் என்ற வகையில் பிணையங்களின் தொகை, பிணையங்களின் வகுப்பினம், முதலீட்டாளர்களின் எண்ணிக்கையும் வகையும், வழங்குநர்களின் வகையும் தன்மையும், பிணையங்கள் சந்தையின் வகை என்பன தொடர்பில் அல்லது அத்தகைய பகிரங்க கொடைமுனைவு ஒப்பீட்டு ஒழுங்குபடுத்துநரொருவரால் ஒழுங்குபடுத்தப்படுகின்றதா இல்லையா என்பது தொடர்பில், (1) ஆம் உட்பிரிவின் கீழ் பகிரங்கக் கொடைமுனைவுகளின் வகையை குறித்துரைத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழு, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளினதும் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்களினதும் பிணையங்கள் தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து வகை,

தொகை, பெறுமானம், வரையறுக்கப்பட்ட பண்பு அல்லது தன்மை தொடர்பில் விதிகள் என்ற வகையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமமைய எவையேனும் பிணையங்கள் அல்லது பிணையங்களின் ஏதேனும் வகுப்பினத்தை விலக்களிக்கலாம்.

*பிணையங்களின் வழங்குகைக் கான ஆணைக் குழுவின் அனுமதி.*

**76**. (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று தவிர்ந்த எவரேனுமாள், பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனை வொன்றைச் செய்வதற்கு முன்னர், ஆணைக்குழுவின் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று பின்வருவன தொடர்பில் ஆணைக்குழுவின் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் -

(அ) பொதுமக்களுக்கு பிணையங்களின் ஏதேனும் புதிய வழங்குகை அல்லது விற்பனைக்கான கொடைமுனைவு; அத்தகைய வழங்குகைகள் அல்லது விற்பனைக்கான கொடைமுனைவுகள் பகிரங்கக் கொடைமுனைவொன் றென்ற வகையிலானதாக இருப்பினுஞ்சரி அல்லது வேறுவகையிலானதாக இருப்பினுஞ்சரி;

(ஆ) பிணையங்களின் தனிப்பட்ட இடுகை;

(இ) பிணையங்களின் உரிமைகள் வழங்குகைகள்;

(ஈ) பிணையங்களின் உபகார வழங்குகைகள்; அல்லது

(உ) பிணையங்களின் வழங்குகைகள் என்ற வகையான ஒழுங்கேற்பாடுகள் பற்றிய திட்டங்கள், மீளமைப்புப் பற்றிய திட்டங்கள், கையேற்புத் திட்டங்கள், பங்குவிருப்புத் திட்டங்கள் மற்றும் சொத்துக்களைக் கொள்ளுதல்.

(3) அத்தகைய பிணையங்களின் கொடைமுனைவு பற்றிய ஏதேனும் அனுமதி, வேறுவகையில் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, இருபது பஞ்சாங்க நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றினுள் எழுத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகமொன்று, பரிவர்த்தனையொன்றின் மீதான நிரற்படுத்தலின் போது பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்றுக்காக, ஆணைக்குழுவின் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(5) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி, உருவகம் மற்றும் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகம் ஒவ்வொன்றினதும் பணிப்பாளர்கள் சபை, எந்தப்பரிவர்த்தனையில் அது நிரற்படுத்தப்படுகின்றதோ அந்தப் பரிவர்த்தனையின் விதிகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும், கம்பெனி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டிருக்கும் வரையிலான எல்லா நேரங்களிலும் அக்கம்பெனி அல்லது உருவகம் இணங்கியொழுகுதல் வேண்டும் என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

முன்விபரணம் அல்லது அதையொத்த ஆவணம்.

**77.** (1) பொதுமக்களுக்குக் கொடைமுனைவொன்றைச் செய்கின்ற ஆளொருவரால் தயாரிக்கப்பட்ட முன்விபரணம் அல்லது அதையொத்த ஆவணம், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் மற்றும் ஆணைக்குழுவினாலும் அத்துடன் பரிவர்த்தனையொன்றின் விதிகளிலும் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) பொதுமக்களுக்கு பிணையங்களின் வழங்குகையொன்றைச் செய்கின்ற ஆளொருவர், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக முன்விபரணத்தைப் பதிவுசெய்வதற்கு முன்னதாக, அந்நோக்கத்துக்கென, முன்விபரணத்தின் அல்லது அதையொத்த ஆவணத்தின் பிரதியொன்றை ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு முன்வைத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, ஆளொருவர் பொதுமக்களிடமிருந்து நிதிகளைப் பரிந்துகேட்கும் நோக்கத்துக்கென பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்றைச் செய்கின்றபோது, ஏதேனும் முன் விபரணத்தை அல்லது அதையொத்த ஆவணத்தைப் பரீட்சிப்ப தற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஆணைக்குழு நிறுத்தற் கட்டளைகளை வழங்குதல்.*

**78.** (1) ஆணைக்குழு பின்வரும் அபிப்பிராயத்தைக் கொண்டி ருப்பின், அது பகிரங்கக் கொடைமுனைவுகள் தொடர்பில் மேலதிக பிணையங்களைப் பிரித்தொதுக்க, வழங்க, கொடை முனைவு செய்ய அல்லது ஒப்பமளிப்பதற்கான அழைப் பொன்றைச் செய்ய அல்லது கொள்வனவுசெய்ய அல்லது விற்பனைசெய்ய வேண்டாமென வழங்குநருக்கு கட்டளையொன்றை வழங்கலாம் –

(அ) முன்விவரணமொன்று அல்லது அதையொத்த ஆவண மொன்று இச்சட்டத்தின் 77 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு இணங்கியொழுகவில்லை அல்லது அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு தயாரிக்கப்பட வில்லை;

(ஆ) முன்விவரணமொன்று அல்லது அதையொத்த ஆவண மொன்று, பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் அல்லது முக்கியமான விட்டுவிடுகையொன்றை அமைத் துருவாக்கும்கூற்றொன்றை அல்லது தகவலை உள்ளடக்கி யிருத்தல்; அல்லது

(இ) வழங்குநரொருவர் இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின் கீழ் அல்லது பரிவர்த்தனை யொன்றின் விதிகளின் கீழ் அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாதிருத்தல்.

(2) ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய கட்டளை யொன்றை ஆக்குவதில் ஏற்படும் ஏதேனும் தாமதம், முதலீட்டாளர் களின் அக்கறையைப் பாதிப்பதாக இருக்கக்கூடுமென கருதினால், அது இடைகாலக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) உட்பிரிவுகள் (2) மற்றும் (4) இற்கமைய, ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின் கீழான அத்தகைய கட்டளையொன்று ஆக்கப்படுதல் வேண்டுமா என்பது பற்றி கேட்கப்படுவதற்கான நியாயமான சந்தர்ப்பமொன்றை பாதிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு வழங்கியிருந்தாலொழிய, அவ்வாணைக்குழு அத்தகைய கட்டளையொன்றை ஆக்குதலாகாது.

(4) உட்பிரிவு (2) இன் கீழான இடைக்காலக் கட்டளையொன்று முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, எத்தேதியில் அது ஆக்கப்படுகின்றதோ அத்தேதியின் பின்னரான இருபத்தொரு நாட்கள் முடியும்வரை, அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழான கேட்பு முடிவடையும் வரை, இவற்றுள் எத்தேதி பிந்தியதோ அத்தேதி வரை, பயனில் இருத்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (2) இன் கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையொன்று, அக்கட்டளையை ஆக்குவதை விளைவித்த சூழ்நிலைகள் தொடந்தும் இல்லாதிருக்கின்றதென ஆணைக்குழு திருப்தியுற்றால், பணிப்புரையொன்றென்ற வகையில் அவ்வாணைக்குழுவினால் இல்லாதொழிக்கப்படலாம்.

(6) எந்தப் பிணையங்கள் முன்விபரணம் அல்லது அதையொத்த ஆவணம் தொடர்பானதோ, அந்தப் பிணையங்களை ஒப்பமளிப்பதற்காக அல்லது கொள்வனவு செய்வதற்காக, (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நிறுத்தற் கட்டளைக்கு முன்னர், விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளவிடத்து -

(அ) பிணையங்கள் விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப்பட்டிராதவிடத்து, விண்ணப்பங்கள் மீளப்பெறப்பட்டுள்ளதாகவும் இல்லாதாக்கப்பட்டுள்ளதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், பணங்களைப் பெற்றுக் கொள்ளும் வழங்குநர் அல்லது அத்தகைய வேறு ஆள் விண்ணப்பகாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட எல்லாப் பணங்களையும் உடனடியாக வட்டியின்றி மீளச்செலுத்துதல் வேண்டும்; அத்துடன் பணமானது நிறுத்தற் கட்டளையிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மீளச்செலுத்தப் படாவிடின், அக்காலப்பகுதி முடிவடைந்ததிலிருந்து,

வழங்குநர், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான வட்டியுடன் சேர்த்து பணங்களை மீளச் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்; அல்லது

(ஆ) பிணையங்கள் விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளவிடத்து, பிணையங்களின் வழங்குகை வெறிதானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், வழங்குநர் அல்லது வேறு எவரேனுமாள் விண்ணப்பகாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட எல்லாப் பணங்களையும் உடனடியாக வட்டியின்றி மீளச்செலுத்துதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பணமானது நிறுத்தற் கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மீளச்செலுத்தப்படாவிடின், அந்தக் காலப்பகுதி முடிவடைந்ததிலிருந்து, வழங்குநர், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான விகிதத்தில் வட்டியுடன் சேர்த்து அத்தகைய பணங்களை மீளச்செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகள், எந்த எவையேனும் பிணையங்கள் முன்விவரணம் அல்லது அதையொத்த ஆவணம் தொடர்பானதோ, அந்த எவையேனும் பிணையங்கள் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்டும் அவற்றிலான வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டும் இருந்தால், எவரேனும் வழங்குநர் தொடர்பில் ஏற்புடையதாகாது.

பிணையங்களின் கொள்வனவு, விற்பனை அல்லது கைமாற்றல்.

**79.** (1) பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்டுள்ள கம்பெனியொன்றில் பிணையங்களை வைத்திருக்கும் ஆளொருவர், அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையால் ஏற்கப்பட்ட வியாபார நடவடிக்கைக்கு இணங்கியொழுகினால் தவிர, ஆணைக்குழுவின் முன்னங்கீகாரமின்றி வியாபாரத் தளத்திற்குப் புறம்பாக அத்தகைய பிணையங்களை வாங்குதல், விற்றல், கொடையளித்தல் அல்லது வேறுவகையில் கையாளுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஆளொருவர், முன்மொழியப்பட்ட கொடை தொடர்பிலான விபரங்களை

ஆணைக்குழுவுக்கும் பரிவர்த்தனைக்கும் முன்னறிவித்தல் கொடுத்திருந்தால், அவர் அத்தகைய வியாபார நடவடிக்கைக்கு இணங்கியொழுகுவதைவிட வேறுவகையில், அத்தகைய எவையேனும் பிணையங்களை உறவினரொருவருக்குக் கொடையளிக்கலாம்.

*(3)* இப்பிரிவில் 'உறவினர்' என்பது, அவ்வாளின் பெற்றோரொருவர், வாழ்க்கைத்துணை, (மாற்றாள் பிள்ளைகள் உட்பட) பிள்ளை அல்லது (ஒன்றுவிட்ட சகோதரன் அல்லது ஒன்றுவிட்ட சகோதரி உட்பட) உடன்பிறப்பு அல்லது அவ்வாளின் பிள்ளையொன்றின் வாழ்க்கைத்துணை எனப்பொருள்படும்.

*ஆவணங்களின் காண்பிப்பைத் தேவைப் படுத்துவதற்கு ஆணைக் குழுவுக்குள்ள தத்துவங்கள்.*

**80.** *(1)* *(அ)* பொதுமக்களுக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளிலிருந்து நிரப்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் தொழில்,

(i) மோசடியான அல்லது சட்டமுரணான நோக்கமொன்றுக்காக;

(ii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை, விதிகளை அல்லது பணிப்புரைகளை அல்லது சந்தை நிறுவனமொன்றின் விதிகளை மீறுகின்ற முறையில்; அல்லது

(iii) முதலீட்டாளர்களின் அக்கறைக்கு பாதிப்பேற்படுத்தும் முறையில்,

நடாத்தப்பட்டு வருகின்றதெனக் கருதச்செய்கின்றதான சூழ்நிலைகள் உள்ளதாக;

(ஆ) கம்பெனியொன்று மோசடியான அல்லது சட்டமுரணான நோக்கமொன்றுக்காக நிரப்படுத்தப்பட்டிருக்கின்றதெனக் கருதச்செய்கின்றதான சூழ்நிலைகள் உள்ளதாக;

(இ) கம்பெனியொன்றை நிரற்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட அல்லது நிரற்படுத்தல் தொடர்பிலான அதன் அலுவல்களை முகாமை செய்கின்ற அல்லது அதன் அலுவல்களை முகாமை செய்கின்ற ஆட்கள், மோசடி, தவறான செயல் அல்லது வேறு பிறழ்நடத்தைக்கு குற்றவாளியாகவிருக்கின்றனரெனக் கருதச் செய்கின்றதான சூழ்நிலைகள் உள்ளதாக; அல்லது

(ஈ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது முகாமைத்துவம், இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது வெளியிடப்பட வேண்டுமென நியாயமானளவுக்கு எதிர்பார்க்கப்படுகின்றவாறான, கம்பெனியின் அலுவல்கள் தொடர்பிலான தகவலை கருத்துடன் ஒடுக்கியிருக்கின்றாரெனக் கருதச் செய்கின்றதான சூழ்நிலைகள் உள்ளதாக,

ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்றவிடத்து, ஆணைக்குழு பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது வேறு தகவலை குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் காண்பிப்பதற்கு அத்தகைய கம்பெனியைத் தேவைப்படுத்தி நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனிக்கு பணிப்புரைகளை வழங்கலாம்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆவணங்களின், இலத்திரனியல் பதிவேடுகளின் அல்லது ஏதேனும் வேறு தகவலின் சமர்ப்பிப்பைத் தேவைப்படுவதற்கென எவரேனும் ஆளொருவருக்கு அதிகாரமளிப்பதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதன் அதிகாரத்தைக் கையளிக்கலாம்.

(3) ஆணைக்குழு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், இப்பிரிவின் கீழ், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றிடமிருந்து ஆவணங்களினதும் இலத்திரனியல் பதிவேடுகளினதும் காண்பிப்பைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஆவணங்களினதும் இலத்திரனியல் பதிவேடுகளினதும் உடைமையை வைத்திருப்பதாக ஆணைக்குழுவுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குத் தோன்றுகின்ற ஆளொருவரிடமிருந்து அவ்வாணைக்குழு அல்லது அவ்வதிகாரமளிக்கப்பட்ட ஆள் அத்தகைய ஆவணங்களின் காண்பிப்பைத் தேவைப் படுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஆவணங்களும் பதிவேடுகளும் ஆளொருவரின் உடைமையிலுள்ளதாக ஆணைக்குழு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவ்வாணைக்குழு அல்லது அவ்வதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய ஆவணங்களையும் இலத்திரனியல் பதிவேடுகளையும் காண்பிக்குமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(5) உட்பிரிவுகள் (1), (2) மற்றும் (3) ஆகியவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும் காண்பிக்கப்படுமிடத்து, ஆணைக்குழு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியை பின்வருவனவற்றுக்குத் தேவைப்படுத்துதல் வேண்டும் -

(அ) அவற்றின் பிரதிகளை அல்லது அவற்றிலிருந்தான பிரித்தெடுப்புக்களை எடுத்தல்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் பதிவேடுகள் பற்றிய விளக்கமொன்றை வழங்குமாறு நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனியின் தற்போதைய அல்லது கடந்தகால அலுவலரொருவராகவுள்ள அல்லது நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனியினால் ஏதேனும் நேரத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த ஆளொருவரை அல்லது எவரேனும் வேறு ஆளை தேவைப்படுத்துதல்;

(இ) பதிவேடுகளும் ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும் காண்பிக்கப்பட்டிராதவிடத்து, காண்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆள் அத்தகைய ஆவணங்களையும் பதிவேடுகளையும் காண்பிக்கத் தவறியமைக்கான காரணங்களை வழங்குதல்; அல்லது

(ஈ) ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும் காண்பிக்கப்பட்டிராதவிடத்து, அவற்றைக் காண்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆள், அவருடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை அதன் இருப்பிடத்தை வெளிப்படுத்துல் வேண்டும்.

(6) ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணைக்குழு இச்சட்டத்தின் 81 ஆம் பிரிவின் கீழ் நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனிக்கு பணிப்புரையொன்றை வழங்குதல் வேண்டும்.

*நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிகளுக்கு பணிப்புரைகள் வழங்குவதற்கு ஆணைக் குழுவுக்குள்ள தத்துவம்.*

**81.** நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று, இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன், ஒழுங்குவிதிகளுடன், விதிகளுடன் அல்லது பணிப்புரைகளுடன் கொள்ளப்பட்ட இணங்கியொழுகையின் போது, இச்சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகளை, ஒழுங்குவிதிகளை அல்லது பணிப்புரைகளை மீறியுள்ளதாக அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளதாக அல்லது பொய்யான செம்மையற்ற அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை ஆணைக்குழுவுக்கு கொடுத்துதவியுள்ளதாக ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது பின்வருவனவற்றுக்கான பணிப்புரையொன்றை அந்நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு வழங்கலாம் -

(அ) இச்சட்டத்தை, அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை, விதிகளை அல்லது பணிப்புரைகளை மீறாதொழியும் படியும் மீறாதிருக்கும்படியும்;

(ஆ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் கீழ் குறித்

துரைக்கப்பட்டவாறான ஏதேனும் விடயத்தை செய்யும்படி அல்லது செய்வதிலிருந்து தவிர்ந்திருக்கும்படி; அல்லது

(இ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் கீழ், அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் ஆணைக்குழு அவசியமெனக் கருதுகின்ற வேறு ஏதேனும் விடயத்தைக் கொண்டுநடாத்தும்படி.

ஆணைக் குழுவுக்கு பொய்யான தகவலைக் கொடுத்து தவாது இருப்பதற்கான கடமை.

**82.** (1) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் கீழ் ஆணைக்குழுவுக்கு தகவலை கொடுத்துதவுகின்ற அல்லது தகவலை கொடுத்துதவச் செய்விக்கின்ற ஆளொருவர், முக்கியமான ஏதேனும் விபரத்தில் அத்தகவல் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் ஆவணமொன்றில் கையொப்பமிடுகின்ற; அல்லது

(ஆ) ஏதேனும் அடையாளத்தை அல்லது மெய்யென்று உறுதிப்படுத்தும் வேறு முறைமையை அல்லது ஆணைக்குழுவினால் அவருக்கு குறித்தளிக்கப்பட்ட நடைமுறையைப் பயன்படுத்தி இலத்திரனியல் முறைகள் மூலம் ஆவணமொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கின்ற

ஆளொருவர், முக்கியமானதொரு விபரத்தில் அவ்வாவணம் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) ஒராம் அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

*சந்தை நிறுவனங்களுக்கு பொய்யான கூற்றுக்களைச் செய்யாதிருப்பதற்கான கடமை.*

**83.** இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் கீழ், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று கொடுத்துதவவேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பில், இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை நிறுவனமொன்றுக்கு ஏமாற்றும் உட்கருத்துடன் ஏதேனும் பிறழ்வழியுய்க்கும் கூற்றைச் செய்கின்ற அல்லது கொடுத்துதவுகின்ற அல்லது அறிந்துகொண்டும் வேண்டுமென்றும் அதற்கு அதிகாரமளிக்கின்ற அல்லது கொடுத்துதவுவதை அனுமதிக்கின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

*பணிப்பாளர்களை அல்லது பிரதம நிறைவேற்று அலுவலரை நியமித்தல்.*

**84.** (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று, பரிவர்த்தனையொன்றின் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக, பரிவர்த்தனை மீது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் நற்கணிப்பைப் பேணிவருதல் வேண்டும்.

(2) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் பணிப்பாளர்கள் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர், ஆணைக்குழுவினால், அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு பணிப்பாளர்களை அல்லது பிரதம நிறைவேற்று அலுவலரை நியமித்தல் அல்லது பேணிவருதல் பற்றிய பரிவர்த்தனையொன்றின் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட தகுதியானதும் தகுந்ததுமான கட்டளைக் கல்லுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

*நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனி ஒன்றின் கணக்காய்வாளர் ஒருவரின் கடமைகள்.*

**85.** (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவர், அவரது கடமைகளின் செயல்நிறைவேற்றுகையின் சாதாரண நெறியின்போது, இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் மீதான மீறுகையொன்று அல்லது இணங்கியொழுகாமையொன்று அல்லது பரிவர்த்தனையொன்றின் எவையேனும் விதிகளின் மீறலொன்று அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் நிதி நிலைமையை முக்கியமானதோர் அளவுக்கு பாதகமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் விடயம் இருந்து வருவதாக உயர்தொழில்சார் அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பின்,

அக்கணக்காய்வாளர் அத்தகைய விடயத்தை அல்லது இணங்கி யொழுகாமையை சீராக்குவதற்கென கணக்காய்வுக் குழுவுக்கு எழுத்துமூலம் உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும் என்பது டன், அதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பரிகரிப்பு வழிமுறைகள் எடுக்கப்படாவிடின், மீறலை சீராக்குவதற்கென விடயத்தை பணிப்பாளர் சபைக்கு எழுத்துமூலம் ஆற்றுப்படுத்தல் வேண்டும் அல்லது அது இன்னும் நடைபெற்றிராதவிடத்து, மீறலொன்று இடம் பெறுவதைத் தடுத்தல் வேண்டும்.

(2) இரண்டு வாரங்களினுள், மீறல் அல்லது இணங்கியொழு காமையைச் சீராக்குவதற்கு பணிப்பாளர்கள் சபையினால் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பின், கணக்காய்வாளர், அதன் மீது உடனடியாக அக்கருமம் பற்றிய எழுத்திலான அறிக்கையொன்றை –

(அ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் மீதான மீற லொன்றின் அல்லது இணங்கியொழுகாமையொன்றின் விடயத்தில், ஆணைக்குழுவுக்கும்;

(ஆ) பரிவர்த்தனையொன்றின் விதிகளின் மீதான மீறலொன் றின் அல்லது விதிகளுடன் இணங்கியொழுகாமை யொன்றின் விடயத்தில், இயைபான பரிவர்த்தனைக்கும் ஆணைக்குழுவுக்கும்; அல்லது

(இ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் நிதி நிலைமைக்கு கணிசமானளவுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடிய, உடனடியாக நிகழவுள்ள சட்டத்தின் அல்லது ஒழுங்குவிதியின் மீறுகையொன்றை அல்லது மோசடி யான செயலொன்றின் புரிகையை அமைக்கக்கூடுமென கணக்காய்வாளர் நம்புவதற்குக் காரணமாகவுள்ள, கம்பெனியின் உண்மையான அல்லது உட்கருதிய நடத்தை பற்றி அக்கணக்காய்வாளருக்குத் தெரியவருமிடத்து, இயைபான பரிவர்த்தனைக்கும் ஆணைக்குழுவுக்கும்,

சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) கணக்காய்வாளரெவரும், அவரால் நல்லெண்ணத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கைக்காகவும், அத்துடன் இப்பிரிவின் கீழ் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையின் உட்கருதிய செயலாற்றுகை மீதும், ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ஆளாதலாகாது.

(4) ஆணைக்குழு, கணக்காய்வொன்றின் போது அல்லது அதன் பின்னர் எந்த நேரத்திலும், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவரை —

(அ) அவரது கணக்காய்வு தொடர்பில் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு;

(ஆ) ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்கு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் தொழில் மற்றும் அலுவல்கள் பற்றிய அவரது கணக்காய்வின் நோக்கெல்லையை விசாலிக்குமாறு அல்லது நீடிக்குமாறு;

(இ) ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில், ஏதேனும் குறிப்பான விசாரணையைக் கொண்டு நடாத்துமாறு அல்லது ஏதேனும் நடவடிக்கை முறையைத் தாபிக்குமாறு; அல்லது

(ஈ) பந்திகள் (அ) முதல் (இ) வரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கருமம் பற்றி, இடைக்கால அறிக்கையொன்று உள்ளடங்கலாக, அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு,

தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய தேவைப்பாடுகள் எக்காலப் பகுதியினுள் கணக்காய்வாளரினால் இணங்கியொழுகப் படவேண்டுமோ அக்காலப்பகுதியை ஆணைக்குழு குறித்துரைக்கலாம்.

(5) கணக்காய்வாளர், (4) ஆம் உட்பிரிவின் கீழான, ஆணைக் குழுவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக வேண்டும் என்பதுடன், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியானது இப்பிரி வின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் ஆணைக்குழுவினால் குறித்து ரைக்கப்பட்ட வீதங்களில் அவருக்கு ஊதியமளித்தல் வேண்டும்.

(6) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி, இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறை வேற்றப்படுதல் தொடர்பில் அவர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய தகவல்களையும் அத்தகைய தகல்களுக்கான அணுக் கத்தையும் வழங்குதல் வேண்டும்.

தகாத செல்வாக்குக்கு எதிரான தடை.

**86.** (1) ஆளொருவர் -

(அ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது அதனோடு தொடர்புபட்ட கம்பெனிகளின் நிதிக்கூற்றுக் களைத் தயாரிப்பதில் ஈடுபடும்; அல்லது

(ஆ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது அதனோடு தொடர்புபட்ட கம்பெனிகளின் நிதிக்கூற்றுக் களின் கணக்காய்வு பற்றிய செயலாற்றுகையில் ஈடுபடும்,

எவரேனுமாளை, நிதிக்கூற்றுக்கள் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முக்கியமானதொரு விபரத்தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இருப்பதை விளைவிக்கக்கூடியதென அவர் அறிந்திருக்கின்ற அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்கின்ற அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்கக்கூடிய எவற்றையேனும் செய்வதற்கு செல்வாக்குச் செலுத்துதலோ, வலுக்கட்டாயப்படுத்தலோ, பிழைவழியுய்க்கச் செய்தலோ அல்லது அதிகாரமளித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

## அத்தியாயம் 2

### சந்தை இடைத்தரகர்கள்

*சந்தை இடைத்தரகராக காட்டி நிற்பதற்கான தடை.*

**87.** (1) ஆளொருவர், ஆணைக்குழுவிடமிருந்து உரிமமொன்றைப் பெறாமல் சந்தை இடைத்தரகரொருவராகக் காட்டிநிற்றலாகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதி யொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

*ஆணைக் குழுவினால் உரிமம் அளிக்கப்படு வதற்கான தேவைப்பாடு.*

**88.** (1) சந்தை இடைத்தரகரொருவராக தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்துவதற்குக் கருதுகின்ற எவரேனும் ஆள், அந்நோக்கத்துக்காக ஆணைக் குழுவினால் வழங் கப்படும் உரிமமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன் றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

*சந்தை இடைத்தரகராக உரிம மொன்றுக்கான விண்ணப்பம் அல்லது உரிமத்தைப் புதுப்பிப்பதற் கான விண்ணப்பம்*

**89.** (1) இப்பிரிவின் கீழான உரிமமொன்றின் நோக்கத்துக்கான, அல்லது இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்த கைய ஆவணங்களுடனும் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்து ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, பின்வருவனவற்றைச் செய்யுமாறு விண்ணப் பகாரரொருவரைத் தேவைப்படுத்தலாம் -

(அ) விண்ணப்பமொன்றுடன் சம்பந்தப்பட்ட மேலதிக தகவல்களை, அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் கொடுத்துதவுதல்; அத்துடன்

(ஆ) அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையி லும் அத்தகைய ஆட்களினாலும் விண்ணப்பமொன்றை ஆதரித்து சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலை விண் ணப்பகாரரின் ஆகுசெலவை சரிபார்த்தல்.

(3) இப்பிரிவின்கீழ் உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து, உரிமத்தின் காலாவதித் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் செய்யப் படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பகாரரொருவர், உரிமம் காலாவதியானதன் பின்னர் உரிமமொன்றைப் புதிப்பிப்பதற்காக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கின்றவிடத்து, ஆணைக்குழுவானது, புதுப்பித்தற் கட்டணத்துக்கு மேலதிகமாக, புதுப்பித்தல் செய்யப்படும் வரை தாமதமாகும் ஒவ்வொருநாளுக்குமென விதுத்துரைக்கப்படக்கூடிய வாறாக, உரிமமளித்தற் கட்டணத்தின் ஐந்து சத வீதத்தை விஞ்சாத தாமதக் கட்டணமொன்றை விதிக்கலாம்.

(5) ஆணைக்குழு, தகுதியானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக உரிமமொன்றை வழங்க லாம் அல்லது புதுப்பிக்கலாம்.

உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தல்.

**90.** (1) சந்தை இடைத்தரகரொருவராகத் தொழிற்படுவதற்கு உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, ஆணைக்குழு பின்வரும் ஏதுக்களில் ஏதேனுமொன்றின் மீது அவ்விண்ணப் பத்தை மறுக்கலாம்:-

(அ) விண்ணப்பம் இவ்வத்தியாயத்திற்கிணங்கச் செய்யப் பட்டிராதிருத்தல்;

(ஆ) விண்ணப்பகாரர் இச்சட்டத்தினதும் அதன்கீழ் செய்யப் பட்ட ஒழுங்குவிதிகளினதும்,விதிகளினதும் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியிருத்தல்;

(இ) ஆணைக்குழுவுக்கு விண்ணப்பகாரரினால் கொடுத்து தவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் பொய் யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டுவிடுகையொன்று உள்ள தாக இருத்தல்;

(ஈ) விண்ணப்பகாரர் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருத்தல் அல்லது வேறுவகையாகக் கலைக்கப்பட்டுக் கொண்டி ருத்தல் அல்லது பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராக இருத்தல்;

(உ) தீர்ப்புக்கடனொன்று தொடர்பில் விண்ணப்பகாரருக் கெதிராகத் தீர்ப்பு நிறைவேற்றுகை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்தப்படாது திருப்பியனுப் பப்பட்டிருத்தல்;

(ஊ) பெறுநரொருவர், பெறுநரொருவரும் முகாமையாளரும் அல்லது அதற்குச் சமமான ஆளொருவர் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியில் அல்லது விண்ணப்ப காரரின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் நியமிக்கப்பட்டி ருத்தல்;

(எ) விண்ணப்பகாரர், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியாயினுஞ்சரி, தொடர்ந்தும் தொழிற் பாட்டிலுள்ள இணக்கப்பாடொன்றாக அல்லது ஒழுங் கேற்பாட்டுத்திட்டமொன்றாக இருக்கின்றதான இணக் கப்பாடொன்றை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்ட மொன்றை அதன் கடன்கொடுத்தோருடன் செய்திருத்தல்;

(ஏ) விண்ணப்பகாரர் அல்லது எவரேனும் அதன் பணிப் பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர், முகாமையாளர் கள் அல்லது கட்டுப்பாட்டாளர்–

(i) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியாயினுஞ்சரி, மோசடியில் அல்லது நேர்மையீனத்தில் ஈடுபடுகின்ற தவ றொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல்லது எந்தத் தவறின் மீதான குற்றத்தீர்ப்பு அவர் மோசடியாக அல்லது நேர்மையீனமாகத் தொழிற்பட்டுள்ளாரென்னும் முடிவொன்றை வெளிப்படுத்தியதோ அந்தத்தவறின் மீதான குற்றத்தீர்ப்பு;

(ii) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் எடுக்கப் பட்ட ஏதேனும் நிருவாக நடவடிக்கைக்கு உட் பட்டிருத்தல்;

(iii) இச்சட்டத்தின்கீழ் அல்லது பிணையங்களை ஆளுகின்ற சட்டங்களின் கீழ் இலங்கைக்கு வெளியே அவர் எத்தவறொன்றுக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றாரோ அத்தவறொன் றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல் லது ஒத்திணங்கியிருத்தல்;

(iv) நிதிசார் சேவைகளை அல்லது கம்பெனிகளின் முகாமையை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட ஆட்களால் நேர்மையீனம், தகுதியின்மை அல்லது முறைகேடான செயல் காரணமாக ஏற்படும் நிதிசார் இழப்புக்கு எதிராகப் பொது மக்களின் உறுப்பினர்களைப் பாதுகாப்ப தற்காக, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, இயற்றப் பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத் தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீறியிருத்தல்;

(v) தொழிலை நடாத்திச்செல்லும் அதன் முறைமை மீது வஞ்சகமாக அல்லது அடக்கியொடுக்கு வதாக அல்லது வேறுவகை முறைகேடாக அல்லது நம்பிக்கையீனத்தைப் பிரதிபலிப்ப தாக இருக்கின்றவாறான எவையேனும் செயல் முறைகளில் ஈடுபட்டிருத்தல்;

(vi) வேறு எவையேனும் தொழில் செயல்முறைக ளில் ஈடுபட்டிருத்தல் அல்லது அவற்றுடன் இணைந்திருத்தல் அல்லது, அது அல்லது அவர் அதன் அல்லது அவரின் தகுதி மற்றும் நேர்மை பற்றி ஐயம் ஏற்படுத்தத்தக்கவாறான அத்தகையதொரு வழியில் நடந்திருத்தல்; அல்லது

(vii) இலங்கையினுள்ளாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியாயினுஞ்சரி, பொறுப்பு விடுவிக்கப் படாத வங்கி முறிந்தவரொருவராக இருத்தல்;

(ஐ) ஆணைக்குழு, விண்ணப்பகாரர் அல்லது எவரேனும் அதன் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது கட்டுப்பாட்டாளர்,அவர்களது மதிப்பு, குண வியல்பு, நிதிசார் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு அவ்வாடிக்கையாளர் களின் மிகச்சிறந்த அக்கறைபற்றி தொழிற்படுவதற்கு இயலாதவராகவிருக்கலாம் என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருத்தல்.

(ஒ) ஆணைக்குழு, விண்ணப்பகாரரின் நிதிநிலமை பற்றி அல்லது விண்ணப்பகாரரின் தொழில் எந்த வழிமுறை யில் நடாத்தப்படுகின்றதோ அந்த வழிமுறை பற்றி திருப்தியடையாதிருத்தல்;

(ஓ) ஆணைக்குழு, விண்ணப்பகாரர் உரிமத்தை வைத்திருத் தல் சம்பந்தமாக எந்தத் தொழிலைக் கொண்டுநடாத்து கின்றாரோ அந்தத் தொழிலின் தன்மையைக் கருத்திற்

கொண்டு, அவரின் கடந்தகால செயல்நிறைவேற்று கையின் பதிவேடுகள் அல்லது நிபுணத்துவம் பற்றி திருப்தியடையாதிருத்தலும் அத்துடன்-

(i) விண்ணப்பகாரரால் அல்லது அதன் எவரேனும் பணிப்பாளர்களால், பிரதம நிறைவேற்று அலுவலரால் அல்லது கட்டுப்பாட்டாளரால் முறையீனமான தொழில் நடாத்துகைக்கு இட்டுச்செல்லும்; அல்லது

(ii) விண்ணப்பகாரரின் தொழில் நடாத்திச் செல்லப்படுகின்ற வழிமுறை மீது நம்பிக்கையீனத்தைப் பிரதிபலிக்கும்

சாத்தியமுள்ள சூழ்நிலைகள் காணப்படுதலும்.

(ஔ) ஆணைக்குழுவானது, விண்ணப்பகாரர் அல்லது அதன் பணிப்பாளர்களுள் எவரேனுமொருவர், பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது கட்டுப்பாட்டாளர் தொழிலை வினைத்திறனாக, நேர்மையாக அல்லது நியாயமாக கொண்டுநடாத்தமாட்டாரென நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருத்தல்; அல்லது

(க) ஆணைக்குழு, உரிமத்தை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் முதலீட்டாளர்களின் அக்கறைகளுக்கு முரணாக இருக்கக்கூடும் என அபிப்பிராயப்படுதல்.

(2) ஆணைக்குழு, விண்ணப்பகாரருக்கு கேட்புக்கான சந்தர்ப்பமொன்றை வழங்காது உரிமமொன்றைப் வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தலாகாது.

*ஆகக்குறைந்த நிதிசார் தேவைப்பாடு.*

**91.** சந்தை இடைத்தரகரொருவர், இவ்வத்தியாயத்தின் கீழ் எத்தொழிலுக்காக உரிமமளிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது பரிவர்த்தனையொன்றின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான ஆகக்குறைந்த நிதிசார் தேவைப்பாடுகளைக் கொண்டிராதிருப்பின், ஆணைக்குழுவின் எழுத்திலான சம்மதமில்லாது அத்தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.

ஆணைக் குழுவில் பதிவு செய்வதற்கான தேவைப் பாடுகள்.

**92**. (1) சந்தை இடைத்தரகரொருவருக்காகவும் அவர் சார்பிலும் வாடிக்கையாளர்களைக் கையாளுகின்ற ஆளொருவர், ஆணைக் குழுவில் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அந்நோக்கத்திற்காக பதிவுசெய்யப்பட்ட ஆள் என்றவாறாக அறியப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான பதிவுசெய்தலை நாடும் நோக்கங்களுக்காக, சந்தை இடைத்தரகரொருவர் அவ்வாள் சார்பில் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

பதிவு செய்வதற்கான அல்லது பதிவைப் புதுப் பிப்பதற்கான விண்ணப்பம்.

**93**. (1) பதிவுசெய்யும் அல்லது பதிவைப் புதுப்பிக்கும் நோக்கத் திற்கான ஆளொருவரின் விண்ணப்பமொன்று, ஆணைக்குழு வினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங் களுடனும் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்து, அத்தகைய படிவத்தில் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, விண்ணப்பகாரரொருவரைப் பின் வருவனவற்றுக்குத் தேவைப்படுத்தலாம் -

(அ) விண்ணப்பமொன்றுடன் தொடர்புடைய மேலதிகத் தகவல்களை அது குறித்துரைக்கின்றவாறான அத்தகைய படிவத்திலும் வழிமுறையிலும் கொடுத்துதவுதல்; அத்து டன்

(ஆ) அது குறித்துரைக்கின்றவாறாக அத்தகைய முறையிலும் அத்தகைய ஆட்களாலும் விண்ணப்பமொன்றுக்கு ஆதரவாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலை விண்ணப்பகாரரின் செலவில் சரிபார்க்கின்றமை.

(3) இப்பிரிவின்கீழான பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப் பமொன்று, அப்பதிவு காலாவதியாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பகாரரொருவர், பதிவைப் புதிப்பிப்பதற்கான விண்ணப்பமொன்றை அப்பதிவு காலாவதியானதன் பின்னர் சமர்ப்பிக்கின்றவிடத்து, ஆணைக்குழு, புதுப்பித்தல் கட்டணத்துக்கு

மேலதிகமாக புதுப்பித்தல் செய்யப்படும்வரை தாமதமாகின்ற ஒவ்வொரு நாளுக்குமென விதித்துரைக்கப்படக்கூடியவாறான பதிவுக் கட்டணத்தின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத தாமதக் கட்டணமொன்றை விதிக்கலாம்.

(5) ஆணைக்குழு, தகுதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லுது மட்டுப்பாடுகளுக்கமைய இவ்வத்தியாயங்களின் நோக்கங்களுக்காக பதிவொன்றை வழங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

*பதிவைப் பதிவு செய்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுப்பதற்கான ஏதுக்கள்.*

**94.** (1) இப்பாகத்தின் கீழ் பதிவுபெற்ற ஆளொருவராக பதிவை வழங்குவதற்கென அல்லது புதுப்பிப்பதற்கென விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, ஆணைக்குழு பின்வரும் ஏதுக்களில் ஏதேனுமொன்றின் மீது அவ்விண்ணப்பத்தை மறுக்கலாம்:-

(அ) விண்ணப்பம் 93 ஆம் பிரிவுக்கிணங்கச் செய்யப்பட்டிராதிருத்தல்;

(ஆ) விண்ணப்பகாரர் 93 ஆம் பிரிவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியிருத்தல்;

(இ) ஆணைக்குழுவுக்கு விண்ணப்பகாரரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டுவிடுகையொன்று உள்ளதாக இருத்தல்;

(ஈ) விண்ணப்பகாரர் இலங்கைக்குள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியாயினுஞ்சரி பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவரொருவராக இருத்தல்;

(உ) தீர்ப்புக்கடனொன்று தொடர்பில் விண்ணப்பகாரருக்கெதிராகத் தீர்ப்பு நிறைவேற்றுகை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்தப்படாது திருப்பியனுப்பப் பட்டிருத்தல்;

(ஊ) விண்ணப்பகாரர்:-

(i) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியாயினுஞ்சரி, மோசடியில் அல்லது வேறு நேர்மையீனத்தில் ஈடுபடுகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல்லது எந்தத் தவறின் மீதான குற்றத்தீர்ப்பு அவர் மோசடியாக அல்லது நேர்மையீனமாகத் தொழிற்பட்டுள்ளாரென்னும் முடிவொன்றை வெளிப்படுத்தியதோ அந்தத் தவறின் மீதான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல்;

(ii) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட ஏதேனும் நிருவாக நடவடிக்கைக்கு உட்பட்டிருத்தல்;

(iii) இச்சட்டத்தின்கீழ் அல்லது இலங்கைக்கு வெளியே பிணையங்களை ஆளுகின்ற சட்டங்களின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல்லது ஒத்திணங்கியிருத்தல்;

(iv) நிதிசார் சேவைகளை அல்லது கம்பெனிகளின் முகாமையை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட ஆட்களால் நேர்மையீனம், தகுதியின்மை அல்லது முறைகேடான செயல் காரணமாக ஏற்படும் நிதிசார் இழப்புக்கு எதிராக அல்லது பொறுப்பு விடுவிக்கப்பட்ட அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவர்களின் நடத்தை காரணமாக நிதிசார் இழப்புக்கெதிராக பொது

மக்களைப் பாதுகாப்பதற்காக, சட்டமாக்கப் படவேண்டுமென ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்ற இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியேயான ஏதேனும் எழுத்தினாலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீறியிருத்தல்;

(v) தொழிலை நடாத்திச்செல்லும் முறைமை மீது சட்டமுரணாகவோ அல்லது அவ்வாறின்றியோ அல்லது வேறுவகையிலோ நம்பிக்கையீனத்தைப் பிரதிபலிக்கும், வஞ்சகமாக அல்லது வேறுவகை முறைகேடாக இருக்குமென ஆணைக்குழுவுக்குத் தோன்றும் எவையேனும் தொழில் செயல் முறைகளில் ஈடுபட்டிருத்தல்; அல்லது

(vi) வேறு எவையேனும் தொழில் செயல்முறைகளில் ஈடுபட்டிருத்தல் அல்லது அவற்றுடன் இணைந் திருத்தல் அல்லது, அவரின் தகுதி மற்றும் தீர்மானத்தின் ஸ்திரத்தன்மை பற்றி ஐயம் ஏற்படுத்தத்தக்கவாறான அத்தகையதொரு வழியில் வேறுவகையில் அவரை நடாத்தி யிருத்தல்;

(எ) ஆணைக்குழு, சந்தை இடைத்தரகர் சார்பில் மற்றும் அவருக்காக செயல்நிறைவேற்றப்படவுள்ள கடமைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, விண்ணப்பகாரரின் கல்விசார் தகைமை அல்லது வேறு தகைமை அல்லது அனுபவம் பற்றி திருப்தியடையாதிருத்தல்;

(ஏ) விண்ணப்பகாரர், சந்தை இடைத்தரகரின் மதிப்பு, குணவியல்பு, நிதிசார் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத் தன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு, அவரது வாடிக்கையாளர்களின் மிகச்சிறந்த அக்கறை பற்றி செயற்படுவதற்கு இயலாதவராகவிருக்கலாமென ஆணைக்குழு நம்புவதற்கான காரணத்தைக் கொண்டி ருத்தல்;

(ஐ) ஆணைக்குழு, சந்தை இடைத்தரகர் சார்பில் மற்றும் அவருக்காக செயல்நிறைவேற்றப்படவுள்ள கடமைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு,விண்ணப்பகாரரின் கடந்தகால செயல்நிறைவேற்றுகையின் பதிவேடுகள் அல்லது நிபுணத்துவம் பற்றி திருப்தியடையாதிருத்தல்;

(ஒ) ஆணைக்குழு, விண்ணப்பகாரர் நேர்மையாக அல்லது நியாயமாக செயற்பட்டிருக்கமாட்டார் என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருத்தல்; அல்லது

(ஓ) ஆணைக்குழு, பதிவை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் முதலீட்டாளர்களின் அக்கறைகளுக்கு முரணாக இருக்கக் கூடும் என அபிப்பிராயப்படுதல்.

(2) ஆணைக்குழு, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்காமல் பதிவொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தலாகாது.

*நிபந்தனைகளை அல்லது மட்டுப்பாடுகளை வேறுபடுத்து வதற்குள்ள தத்துவம்.*

**95**. ஆணைக்குழு, எந்நேரத்திலும், சந்தை இடைத்தரகரொருவருக்கு அல்லது பதிவுபெற்ற ஆளொருவருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் ஏதேனும் நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை வேறுபடுத்தலாம் அல்லது முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்கு அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய மேலதிக நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை விதிக்கலாம்.

*உரிமத்தின் அல்லது பதிவின் காலப்பகுதி.*

**96**. (1) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்ட உரிமமொன்று, பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட மேலுமொரு காலப்பகுதியொன்றுக்கு அல்லது அது புதுப்பிக்கப்பட்டிராதிருப்பின் அது எத்தேதியன்று காலாவதியாகக்கூடுமோ அத்தேதி தொடங்கியதிலிருந்து ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதிக்கு தொடர்ந்தும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(3) உரிமமொன்று பன்னிரெண்டு மாதங்களைவிடக் கூடுதலானவொரு காலப்பகுதிக்கு புதுப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, (2) ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கமைய, சந்தை இடைத்தரகர், ஆணைக் குழுவினால் குறித்துரைக்கப்பட்ட உரிமக் கட்டணத்தை அது குறித்துரைத்த முறையில் செலுத்துதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) முதல் (3) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பாகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பதிவுக் காலப்பகுதி தொடர்பில், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையதாதல் வேண்டும்.

*பொய்யானதும் பிழை வழியுய்ப்பதுமான கூற்றுக்களை ஆணைக் குழுவுக்குச் செய்தல்.*

**97.** (1) சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றுடன் சம்பந்தப்பட்ட ஆளொருவர் பின்வருபவற்றை இப்பாகத்தின்கீழ் செய்தலாகாது —

(அ) பொய்யானது அல்லது பிழைவழியுய்ப்பதென அவர் அறிந்துள்ள அல்லது அறிந்திருக்கக்கூடுமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற கூற்றொன்றை ஆணைக்குழுவுக்குச் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஆட்கூட்டிவிடுதல்; அல்லது

(ஆ) விட்டுவிடுகையின் காரணமாக கூற்றொன்று முக்கியமான விபரத்தில் பிழைவழியுய்க்கும் கூற்று என அவர் அறிந்துள்ளவிடத்து அல்லது அறிந்திருக்கக்கூடுமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படுகின்றவிடத்து, ஆணைக்குழுவுக்கு ஏதேனும் கருமத்தைக் கூறாது விட்டுவிடுதல்.

(2) ஒராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார்.

*ஆணைக் குழுவுக்கு அறிவிக்கும் கடமை.*

**98.** (1) சந்தை இடைத்தரகரொருவர் உரிமமொன்றுக்கான அல்லது உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் ஏலவே கொடுத்துதவப்பட்ட முக்கியமான விபரங்களைத் திருத்த உத்தேசிக்குமிடத்து அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட விபரங்களிலிருந்தான மாற்றமொன்றுக்கு உட்பட்டவராகுமிடத்து

அல்லது உட்பட்டவராகவிருப்பதற்குக் கருதுகின்றவிடத்து, அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பயனுறுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்தலும் அத்துடன் அதன் முன்னரான சம்மதத்தைப் பெறுதலும் அத்தகைய சந்தை இடைத் தரகரின் கடமையாதல் வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான அல்லது பதிவைப் புதிப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் ஏலவே கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரங்களைத் திருத்த உத்தேசிக்குமிடத்து அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட நிலையிலிருந்தான மாற்றமொன்றுக்கு உட்பட்டவராகுமிடத்து அல்லது உட்பட்டவராகவிருப்பதற்கு கருதுகின்றவிடத்து, அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பற்றி ஆணைக் குழுவுக்கு உடனடியாகத் தெரிவித்தல் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளினதும், எந்த சந்தை இடைத்தரகருக்காக பதிவுசெய்யப்பட்ட ஆள் தொழிற்படுத்துகின்றாரோ அல்லது வேலைக்கமர்த்தப்பட்டுள்ளரோ அந்த சந்தை இடைத்தரகரினதும் கடமையாதல் வேண்டும்.

*முகவர் ஒருவராகக் காட்டி நிற்பதற்கான தடை.*

**99**. ஆளொருவர், உரிமமளிக்கப்பட்ட சந்தை இடைத்தரகரொருவரின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக அல்லது அவ்வாறு செய்வதாக அவ்வாளே காட்டிநிற்பதற்காக, சந்தை இடைத்தரகரொருவரின் முகவரொருவராகத் தொழிற்படுவதற்கு ஆணைக் குழுவினால் அல்லது ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் அவருக்கு முறையான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தலொழிய, அவ்வாள் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில் முகவரொருவராகத் தொழிற்படுத்தலாகாது.

*உரிமம் அல்லது பதிவை இல்லாதாக்குதல் அல்லது இடை நிறுத்துதல்.*

**100**. (1) ஆணைக்குழு பின்வருவனதொடர்பில் திருப்திப்படுமிடத்து, இப்பாகத்தின் கீழ் சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கிய உரிமமொன்றை அது இல்லாதாக்குதல் அல்லது இடை நிறுத்துதல் வேண்டும்.

(அ) உரிமத்துக்கான விண்ணப்பமொன்றை ஆணைக்குழு எந்த ஏதுவின் மீது மறுக்கலாமோ, அந்த ஏதுவொன்று நிலவுதல்;

(ஆ) சந்தை இடைத்தரகர், இச்சட்டத்தின் கீழ் ஆணைக் குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட அதன் உரிமம் தொடர்பிலான ஏதேனும் நிபந்தனை அல்லது மட்டுப் பாட்டை அல்லது ஏதேனும் பணிப்புரையை மீறியிருத்தல்; அல்லது

(இ) சந்தை இடைத்தரகர், விடயத்துக்கேற்றவாறு, அவரைப் பணிக்கின்ற எவையேனும் விதிகளை மீறியிருத்தல்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கிணங்க சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குவதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு முன்னர், சந்தை இடைத்தரகருக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, ஆணைக்குழுவுக்கு அதன் உரிமத்தை உடனடியாக ஒப்படைத்தல் அச்சந்தை இடைத்தரகரின் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம்உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் உரிமமொன்று இல்லாதாக்கப்படுதலானது நிறுவனத்தை அல்லது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய சந்தை இடைத்தரகருக்கு எதிரான ஏதேனும் வழக்குநடவடிக்கை பேணப்படுவதை பாதித்தலோ அல்லது பங்கத்திற்குட்படுத்தலோ ஆகாது.

(5) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட விதிகளுக்கிணங்க இப்பாகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கிய பதிவை, அது இடைநிறுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் (1) முதல் (4) வரையான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பதிவொன்றின், விடயத்துக்கேற்ப, ஏதேனும் இடைநிறுத்துதலுக்கு அல்லது இல்லாதாக்குதலுக்கு அல்லது அதுதொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சந்தை இடைத் தரகர்களால் பிணையங்களிலான வியாபாரம்.

**101.** சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் பின்வருவனவற்றைச் செய்தலாகாது –

(அ) ஆணைக்குழுவின் முன்னங்கீகாரமின்றி, அவர் எந்தப் பரிவர்த்தனையின் வியாபாரப் பங்குபற்றுனராக உள்ளாரோ அந்தப் பரிவர்த்தனைக்கு வெளியே பிணையங்களிலான வியாபாரத்தை அல்லது வேறுவகையான கையாள்தலைச் செய்தல்;

(ஆ) ஆணைக்குழுவின் அத்தகைய விதிகளை அல்லது சந்தை நிறுவனமொன்றின் விதிகளைமீறி பிணையங்களிலான வியாபாரத்தைச் செய்தல்;

(இ) எந்த சந்தை நிறுவனத்தில் அவர் வியாபாரப் பங்குபற்றுனராகவுள்ளாரோ அந்த சந்தை நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணாக முறையொன்றில் எல்லைக்கடன் கணக்கொன்றில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலைப் பயனுறுத்தல்; அல்லது

(ஈ) எவையேனும் பிணையங்களின் கொள்வனவை அல்லது விற்பனையைத் தூண்டுவதற்காக அல்லது தூண்ட எத்தனிப்பதற்காக ஏதேனும் சூழ்ச்சித்திறன் சார்ந்த வஞ்சகமான அல்லது வேறு மோசடியான உபாயத்தின் அல்லது தந்திரத்தின் வழியாக ஏதேனும் கொடுக்கல் வாங்கலைப் பயனுறுத்துதல்.

வாடிக்கை யாளரின் சம்மதமின்றி பிணையங்களை கடன் கொடுத்தலும் கடன் பெறுதலும்.

**102.** சந்தை இடைத்தரகரொருவர், எவரேனும் வாடிக்கையாளரின் கணக்குக்கென கொண்டுசெல்லப்படுகின்ற எவையேனும் பிணையங்களை, அவ்வாடிக்கையாளரின் எழுத்திலான சம்மதமின்றி, கடன்கொடுத்தலோ அல்லது கடன்கொடுத்தலுக்கு ஒழுங்கேற்பாடு செய்தலோ அல்லது பிணைப்பொருளாக எவரேனும் வாடிக்கையாளரின் கணக்குக்கென கொண்டுசெல்லப்படுகின்ற பிணையங்களைப் பயன்படுத்தி, அவ்வாடிக்கையாளரின் எழுத்திலான சம்மதமின்றி, கடன்பெறுதலோ அல்லது கடன்பெறுவதற்கு ஒழுங்கேற்பாடு செய்தலோ ஆகாது.

சந்தை இடைத்தரகர் ஒன்றின் கணக்காய்வாளர் ஒருவரின் கடமை.

**103.** (1) சந்தை இடைத்தரகரொன்றின் கணக்காய்வாளரொருவர், ஒரு கணக்காய்வாளர் என்றவாறான அவரது கடமைகளின் சாதாரண செயல்நிறைவேற்றுகையின்போது, இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் மீறலொன்று அல்லது இணங்கியொழுகாமையொன்று அல்லது சந்தைநிறுவனமொன்றின் எவையேனும் விதிகளின் மீறலொன்று அல்லது சந்தை இடைத்தரகரின் நிதி நிலைமையை முக்கியமானதோர் அளவுக்கு பாதகமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் கருமம் இருந்துவருவதாக உயர்தொழில்சார் அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பின், அக்கணக்காய்வாளர் அக்கருமத்தைப் பற்றி எழுத்திலான அறிக்கையொன்றை பணிப்பாளர் சபைக்கும் அவ்வறிக்கையின் பிரதியொன்றை –

(அ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் மீதான மீறலொன்றின் அல்லது இணங்கியொழுகாமையொன்றின் விடயத்தில், ஆணைக்குழுவுக்கும்;

(ஆ) சந்தை நிறுவனமொன்றின் எவையேனும் விதிகளின் மீதான மீறலொன்றின் அல்லது இணங்கியொழுகாமையொன்றின் விடயத்தில், இயைபான சந்தை நிறுவனத்திற்கும் ஆணைக்குழுவுக்கும்; அல்லது

(இ) சந்தை இடைத்தரகரின் நிதி நிலைமையை முக்கியமானதோர் அளவுக்கு பாதகமான முறையில் பாதிக்கின்றதான வேறு ஏதேனும் விடயத்தில், இயைபான சந்தை நிறுவனத்திற்கும் ஆணைக்குழுவுக்கும்,

சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளரெவரும், அவரால் நல்லெண்ணத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கைக்காகவும், அத்துடன் இப்பிரிவின் கீழ் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையின் உட்கருதிய செயலாற்றுகை மீதும், ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்கப்படுவதற்கு ஆளாதலாகாது.

(3) ஆணைக்குழு, கணக்காய்வொன்றின் போது அல்லது அதன் பின்னர் எந்த நேரத்திலும் சந்தை இடைத்தரகரொருவரின் கணக் காய்வாளரொருவரை –

(அ) அவரது கணக்காய்வு தொடர்பில் ஆணைக்குழு குறித் துரைக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக தகவல் களைச் சமர்ப்பிக்குமாறு;

(ஆ) ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்கு சந்தை இடைத்தரகரின் தொழில் மற்றும் அலுவல்கள் பற்றிய அவரது கணக்காய்வின் நோக்கெல்லையை விசாலிக்கு மாறு அல்லது நீடிக்குமாறு;

(இ) ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில், ஏதேனும் குறிப்பான விசாரணையைக் கொண்டுநடாத்துமாறு அல்லது ஏதேனும் நடவடிக்கைமுறையைத் தாபிக்குமாறு; அல்லது

(ஈ) பந்திகள் (அ) முதல் (இ) வரையில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள ஏதேனும் கருமம் பற்றி, விடயத்துக்கேற்றவாறு, அறிக்கையொன்றை அல்லது இடைக்கால அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு,

தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய தேவைப்பாடுகள் எக்காலப் பகுதியினுள் கணக்காய்வாளரினால் இணங்கியொழுகப் படவேண்டுமோ அக்காலப்பகுதியை ஆணைக்குழு குறித்துரைக்க லாம்.

(4) கணக்காய்வாளர், (3) ஆம் உட்பிரிவின் கீழான, ஆணைக்குழு வின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக வேண்டும் என்பதுடன், சந்தை இடைத்தரகர் இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அவருக்கு ஊதியமளித்தல் வேண்டும்.

(5) சந்தை இடைத்தரகர், இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் அக்கணக்காய்வாளர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய தகவல்களையும் அத்தகைய தகவல்களுக்கான அணுக்கத்தையும் வழங்குதல் வேண்டும்.

## அத்தியாயம் 3

### வாடிக்கையாளரின் சொத்துக்களின் பாதுகாப்பு

பொருள் கோடல்.

**104.** சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக;

சந்தை இடைத்தரகரொருவருடன் தொடர்புடைய 'வாடிக்கையாளர்' என்பது, எவ்வாள் சார்பாக சந்தை இடைத்தரகர் வியாபாரம் செய்கிறாரோ அல்லது பிணையங்களைக் கையாள்வதில் எவ்வாளிடமிருந்து சந்தை இடைத்தரகர் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்கின்றாரோ, அவ்வாளொருவர் எனப் பொருள்படும்.

வாடிக்கையாளரின் சொத்துக்களின் பாதுகாப்பு.

**105.** (1) சந்தை இடைத்தரகரொருவர், வாடிக்கையாளரொருவரிடமிருந்து அல்லது வாடிக்கையாளரொருவரின் பேரில் பணத்தை அல்லது வேறு சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுமளவுக்கு—

(அ) பணத்தை அல்லது வேறு சொத்துக்களை அவர் பெறுகின்றபோது அல்லது அதற்கு முன்னர் வாடிக்கையாளரால் உடன்பட்டுக்கொண்டவாறான அத்தகைய நோக்கங்களுக்கென பணம் அல்லது வேறு சொத்துக்கள் முழுமையாக பிரயோகிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையின் மீது அவ்வாறு செய்தல் வேண்டும்;

(ஆ) வாடிக்கையாளரொருவரின் பேரில் பெற்றுக்கொண்ட பணத்தையும் வேறு சொத்துக்களையும் அத்தகைய வாடிக்கையாளரின் நன்மைக்காக நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்;

(இ) அதன் சொந்த நிதிகளுடன் வாடிக்கையாளரின் பெயரில் பெறப்பட்ட பணத்தை ஒன்றுதிரட்டுதலாகாது, அல்லது அத்தகைய பணத்தை எல்லைக்கடனாக அல்லது உத்தரவாதமாக அவரது எழுத்திலான சம்மதமின்றி

வாடிக்கையாளர் தவிர்ந்த எவரேனுமாளின் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு அல்லது கடனை நீடிப்பதற்கு அல்லது அதற்காக பயன்படுத்து தலாகாது;

(ஈ) வாடிக்கையாளரின் பணம் அல்லது வேறு சொத்துக்கள் தொடர்பில் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் விதிகளுக்கிணங்க, வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்குமென தனிவேறான பதிவேட்டுப் புத்தகமொன்றை பதிதலும் பேணுதலும்.

(2) ஆணைக்குழு, சந்தை இடைத்தரகரொருவரால் பணம் அல்லது வேறு சொத்துக்கள் கையாளப்படுதல் உட்பட, (1) ஆம் உட்பிரிவிலுள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(3) இப்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, சந்தை இடைத்தரகருடன் வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது வாடிக்கையாளர்களின் பெயர்களில் பெறப்பட்ட அல்லது வைப்புச் செய்யப்பட்ட எல்லாப் பணங்களும் வேறு சொத்துக்களும் –

(அ) சந்தை இடைத்தரகரின் கடன்களின் கொடுப்பனவுக்கென கிடைக்கக்கூடியதாதலாகாது; அத்துடன்

(ஆ) அச்சந்தை இடைத்தரகரின் ஏதேனும் பொறுப்புத் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் கீழான அல்லது செயன்முறையொன்றின் கீழான நிறை வேற்றுகையில் செலுத்தப்படுவதற்கு அல்லது எடுக்கப் படுவதற்குப் பொறுப்பாதலாகாது.

(4) உட்பிரிவு (1), உட்பிரிவு (3) அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற எவரேனும் சந்தை இடைத்தரகர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தொழில் நடத்தை மீதான விதிகள்.

**106.** (1) ஆணைக்குழு,வாடிக்கையாளர் பாதுகாப்பு அக்கறைக் காகவும் மற்றும் சந்தை இடைத்தரகரொருவரின் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆளொருவரின் உயர்தொழில் தராதரங்களை மேம் படுத்தும் நோக்கத்துக்காகவும், ஆணைக்குழு அவசியமெனக் கருது கின்றவாறாக சந்தை இடைத்தரகரொருவரின் அல்லது பதிவுபெற்ற ஆளொருவரின் தொழில் நடத்தையை ஒழுங்குபடுத்துகின்ற விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளை மீறுகின்ற எவரேனுமாள், தவறொன்றைப் புரிகின்றார்.

நியாயமற்ற விதப்புரை களுக்கான பொறுப்பு.

**107.** (1) சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுபெற்ற ஆளொருவர், ஆளொருவருக்கு விதப்புரையை ஆக்குவதற்கான நியாயமான அடிப்படையொன்றையும், பிணையங்களின் பெறுமதி தளம்பலடையலாம் என்ற எச்சரிக்கையையும் கொண்டிரா திருப்பின், அச்சந்தை இடைத்தரகர் அல்லது அப்பதிவுபெற்ற ஆள், விதப்புரையின் மீது நம்பியிருப்பதற்கு நியாயமானளவுக்கு எதிர்பார்க்கப்படக்கூடியவாறான தராதர அங்கீகாரம் பெற்ற முதலீட்டாளரொருவரைத் தவிர, ஆளொருவருக்கு எவையேனும் பிணையங்கள் தொடர்பில் விதப்புரையொன்றை ஆக்குதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சந்தை இடைத்தரக ரொருவர் அல்லது பதிவுபெற்ற ஆளொருவர், பின்வரும் சந்தர்ப்பங் களினாலொழிய, ஆளொருவருக்கு விதப்புரையொன்றை ஆக்குவ தற்கான நியாயமான அடிப்படையொன்றைக் கொண்டிருக்க மாட்டார்-

(அ) அவர், விதப்புரை தோதானதென நிச்சயித்துக் கொள்ளும் நோக்கங்களுக்காக, ஆளொருவரின் முதலீட்டுக் குறிக் கோள்கள், நிதி நிலைமை மற்றும் குறிப்பான தேவைகள் என்பன பற்றி அவரால் வைத்திருக்கப்படும் தகவல்கள் செம்மையானதாகவும் பூரணமானதாகவும் இருத்தல்; அத்துடன்

(ஆ) அவர் விதப்புரையின் விடயப்பொருள் மீது உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்திருத்தல்எல்லாச் சூழ்நிலை

களிலும் நியாயமாக இருக்கின்றபடியினால்,அத்துடன் அதற்கிணங்க விதப்புரைகளைச் செய்திருத்தலும்.

(3) சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுபெற்ற ஆளொருவர் ஓராம் உட்பிரிவை மீறுகின்றவிடத்து, அச்சந்தை இடைத்தரகர் அல்லது அப்பதிவுபெற்ற ஆள் பின்வரும் சந்தர்ப் பங்களில் ஆளொருவருக்கு ஏதேனும் நேரடியான நட்டம் அல்லது சேதத்துக்கு நட்டஈடு அளிப்பதற்குப் பொறுப்பாவார் -

(அ) விதப்புரையின் மீது நம்பப்படும் ஆள், குறிப்பிட்டவொரு செயலைச் செய்கின்றவிடத்து அல்லது குறிப்பிட்டவொரு செயலைச் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்கின்றவிடத்து;

(ஆ) விதப்புரையுடனும் வேறு எல்லா இயைபான சூழ்நிலைக ளுடனும் தொடர்புடைய, விதப்புரையின்மீது நம்பப்படும் அச்செயலைச் செய்வதற்கு அல்லது செய்வதிலிருந்து தவிர்ப்பதற்கு அவ்வாளுக்கு நியாயமாகவுள்ளவிடத்து; அத்துடன்

(இ) அவ்வாள், அவருக்குக் கிடைக்கக்கூடியதான வேறு ஏதேனும் நிவாரணத்துக்குப் பங்கமில்லாது, விடயத்துக் கேற்ப, அச்செயலைச் செய்வதன் அல்லது அதனைச் செய்யாது தவிர்ந்திருப்பதன் விளைவொன்றாக ஏற்படும் நட்டத்தினால் அல்லது சேதத்தினால் உறப்படுகின்ற விடத்து.

(4) ஆணைக்குழுவினால், குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் கீழ், அது இப்பிரிவின் ஏற்புடைமை யிலிருந்து எவரேனும் சந்தை இடைத்தரகரை அல்லது சந்தை இடைத்தரகர்கள் வகுப்பொன்றை விலக்களிப்புச் செய்யலாம்.

(5) சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் சந்தை இடைத்தரகரால் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளினால் செய்யப்பட்ட விதப்புரை யைப் புறக்கணித்து, அவ்வாள் அச்சூழ்நிலைகளில் அச்செயலை

செய்திருக்கக்கூடுமென அல்லது செய்யாதுவிட்டிருக்கக்கூடுமென எண்பித்தால், *(3)* ஆம் உட்பிரிவின்கீழ் பொறுப்புடையவராதலாகாது.

*(6)* ஓராம் உட்பிரிவின் மீறுகையொன்றின் விடயத்தில், சந்தை இடைத்தரகர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள் விதப்புரையைச் செய்யும்போது வாடிக்கையாளரின் முதலீட்டுக் குறிக்கோள்கள், நிதிநிலைமை மற்றும் குறிப்பிட்ட தேவைகள் பற்றி அவர் கொண்டிருந்த தகவலைக் கருத்திற்கொண்டு, விதப்புரை எல்லாச் சூழ்நிலைகளிலும் தோதானதாக இருந்ததென எண்பிக்கப்பட்டிருப்பின், அச்சந்தை இடைத்தரகர் அல்லது அப்பதிவுசெய்யப்பட்ட ஆள் பொறுப்புடையவராதலாகாது.

*பிணையங்களில் குறித்தசில அக்கறைகளை வெளிப் படுத்தல்.*

**108.** *(1)* சந்தை இடைத்தரகரொருவர் எவையேனும் பிணையங்கள் தொடர்பில் எந்த சுற்றறிக்கையொன்றை அல்லது அதையொத்த வேறு எழுத்திலான தொடர்பாடலொன்றை விதப்புரை செய்கின்றாரோ அந்த சுற்றறிக்கையை அல்லது அதையொத்த வேறு எழுத்திலான தொடர்பாடலை அவர் அனுப்புகின்றவிடத்து, அச்சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடல் எத்தேதியன்று அனுப்பப்பட்டதோ அத்தேதியில் அவர் அல்லது அவருடன் இணைந்துள்ள அல்லது சம்பந்தப்பட்டுள்ள ஆளொருவர், பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலிலுள்ள ஏதேனும் அக்கறையின் தன்மை பற்றிய சுருக்கமான கூற்றொன்றை சுற்றறிக்கையில் அல்லது வேறு தொடர்பாடலில் உள்ளடக்குதல் வேண்டும்.

*(2)* சந்தை இடைத்தரகரொருவர் *(1)* ஆம் உட்பிரிவை மீறுகின்றவிடத்து, *(1)* ஆம் உட்பிரிவின் மீறுகையொன்று தொடர்பிலான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடல் அனுப்பப்பட்ட நேரத்தில் பின்வருவன பற்றி அவர் அறிந்திருக்கவில்லை அல்லது அறிந்திருக்கவேண்டுமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட முடியவில்லையென எண்பிப்பது அச்சந்தை இடைத்தரகருக்கான எதிர்வாதமொன்றாதல் வேண்டும் -

(அ) அவர் பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் அக்கறையொன்றைக் கொண்டிருந்தார்; அல்லது

(ஆ) விடயத்துக்கேற்றவாறு, அவருடன் இணைந்துள்ள அல்லது சம்பந்தப்பட்டுள்ள ஆள் பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் அக்கறையொன்றைக் கொண்டிருந்தார்.

(3) உட்பிரிவின் (1) மற்றும் (2) இன் நோக்கங்களுக்காக —

(அ) எவையேனும் பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் ஆளொருவரின் அக்கறையொன்று, பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலின் மேல் அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற, அவ்வாளுக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் திரளும் அல்லது திரளுவதற்குச் சாத்தியமிருக்கும் ஏதேனும் நிதிசார் நன்மை அல்லது அனுகூலத்தை உள்ளடக்குகின்றது.

(ஆ) பந்தி (அ) இன் பொதுமையை வரையறுக்காமல், எவையேனும் பிணையங்கள் தொடர்பில் ஒப்புறுதி உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஆளொருவர், பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) ஓராம் உட்பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி எவ்வாறிருப்பினும், சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடலை அனுப்புவது தொடர்பில், ஆளொருவரும் வேறோராளும் கூட்டாகச் செயலாற்றினாலொழிய அல்லது அவர்களுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட ஒழுங்கேற்பாடு ஒன்றின் கீழ் அல்லது அதற்கிணங்க வேறுவகையில் செயலாற்றினாலொழிய, அவ்வாள், அவ்வேறோராளுடன் சம்பந்தப்பட்டவராக அல்லது இணைந்தவராக இல்லை.

(4) சந்தை இடைத்தரகரொருவர், (1) ஆம் உட்பிரிவு எந்த சுற்றறிக்கைக்கு அல்லது வேறு தொடர்பாடலுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த சுற்றறிக்கையை அல்லது வேறு தொடர்பாடலை ஆளொருவருக்கு அனுப்பும்போது, சுற்றறிக்கையின் அல்லது வேறு தொடர்பாடலின் பிரதியொன்றை அவர் ஆறு ஆண்டுகளுக்குப் பேணிக்காத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவருக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடலொன்று, சந்தை இடைத்தரகரின் அலுவலரொருவரால் கையொப்பமிட்டிருப்பின், சந்தை இடைத்தரகரால் அனுப்பப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

*உள்ளக நடவடிக்கை முறைகளும் செயல் முறைகளும்.*

**109**. சந்தை இடைத்தரகரொருவர், சந்தை இடைத்தரகரை அதன் தொழிலின் ஆபத்தைக் கண்காணிப்பதற்கு இயலச்செய்யக்கூடிய சட்டம், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகள் என்பவற்றுடனான இணங்கியொழுகுதலைக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக, எழுத்து மூலமான நியாயமான நடவடிக்கை முறைகளையும் செயல்முறைகளையும் தாபித்தலும் பேணிவருதலும் வேண்டும் என்பதுடன், அவை, சந்தை இடைத்தரகர் அவரது தொழிலுக்கேற்படும் ஆபத்தைக் கண்காணிப்பதற்கு அவரை இயலச்செய்யும்.

*சந்தை இடைத்தரகர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆட்கள் பற்றிய இடாப்பு.*

**110**. (1) ஆணைக்குழு, அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் சந்தை இடைத்தரகர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், அவ் இடாப்பு ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் பொதுமக்கள் பார்வைக்கென கிடைக்கச் செய்யப்படுதலும் வேண்டும்.

(2) இடாப்பானது இலத்திரனியல் படிவத்தில் இருத்தல் வேண்டு மென்பதுடன் எல்லாநேரங்களிலும் ஆணைக்குழு அதனை நாளது வரைப்படுத்தல் வேண்டும்.

(3) சந்தை இடைத்தரகர்கள் மற்றும்பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கான இடாப்பு பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) சந்தை இடைத்தரகர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளின் பெயர்;

(ஆ) சந்தை இடைத்தரகர் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆளின் தொழில் முகவரி;

(இ) சந்தை இடைத்தரகர் வைத்திருக்கும் உரிமத்தின் வகை அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள் வைத்திருக்கும் பதிவின் வகை;

(ஈ) சந்தை இடைத்தரகருக்கு உரிமம் வழங்கப்பட்ட தேதி அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கு பதிவு வழங்கப்பட்ட தேதி;

(உ) சந்தை இடைத்தரகருக்காக செயற்படும் அல்லது அவர்களால் வேலைக்கமர்த்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள்; அத்துடன்

(ஊ) ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்ற வேறு ஏதேனும் கருமம்.

(4) இச்சட்டத்தின்கீழ் சந்தை இடைத்தரகரினால் வைத்திருக்கப் படும் உரிமம் இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படு மிடத்து அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் பதிவு இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து ஆணைக்குழு, சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப் பட்ட ஆளொருவர் தொடர்பில் அவசியமான திருத்தங்களை இடாப் பில் செய்யலாம்.

## பாகம் IV

### நிரற்படுத்தப்படாத பிணையங்களிலான வியாபாரம்

**111.** பின்வருவன, இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமுமாக இருத்தல் வேண்டும் - இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும்.

(அ) இலங்கையிலுள்ள நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனை மற்றும் கொள்வனவுக்கென, ஏற்றங்கீகரிக்கப் பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவர் மூலம் வெளிப்படையானதொரு வழிமுறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இயங்குதள மொன்றை வழங்குதல்; அத்துடன்

(ஆ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவர் மூலம் வெளிப்படையானதொரு வழிமுறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிரற்படுத் தப்படாத பிணையங்களுடன் தொடர்புடைய தகவல்களின் வெளிப்படுத்துகையை இலகுபடுத்துதல்.

### அத்தியாயம் 1

### ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவரை நிலைநிறுத்தல்

**112.** ஆளொருவர், ஆணைக்குழுவில் பதிவுசெய்து கொண்டா லொழிய அல்லது பதிவிலிருந்து விலக்களிக்கப்பட்டாலொழிய, அவ்வாள் இப்பாகத்தின் கீழ் சந்தைத் தொழிற்படுத்துநரொரு வராகத் தொழிற்படுத்தலாகாது. சந்தைத் தொழிற் படுத்துநர். ஒருவரை நிலைநிறுத்தல்.

**113.** (1) நூற்றிப் பன்னிரெண்டாம் பிரிவின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு, ஆளொருவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அது அவசியமெனக் கருதுகின்றவாறான எவையேனும் நியதி களுக்கும் நிபந்தனைகளுக்கமைய, அவ்வாளை ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவராகப் பதிவுசெய்யலாம். சந்தைத் தொழிற் படுத்துநரை பதிவு செய்வதற்கான தேவைப்பாடு.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் நியதிகளையும் நிபந்தனைகளையும் காலத்துக்காலம் வேறுபடுத்தலாம், திருத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

**114.** (1) ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரொருவராக பதிவுசெய்துகொள்வதற்கான விண்ணப்பமொன்று, ஆணைக்குழு குறித்துரைக்கின்றவாறான அத்தகைய ஆவணங்களையும் தகவல்களையும் சேர்த்தும் அத்தகைய வழிமுறையிலும் அனுப்பப்படுதல் வேண்டும். *பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.*

(2) இப்பிரிவின் கீழ் அத்தகைய ஆளினால் அனுப்பப்பட்ட பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று, அத்தகைய ஆள் இயங்குதளமொன்றின் மீது நிறைவேற்றப்படும் வியாபாரங்களில் அனுபவத்தைக் கொண்டுள்ளாரென ஆணைக்குழுவின் திருப்திக்கு சான்றளிக்கும் ஆவணங்களை வழங்குதல் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்தின் கீழ் அத்தகைய ஆளினால் அனுப்பப்பட்ட பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று, இயங்குதளமொன்றின் மீது நிறைவேற்றப்படும் வியாபாரங்களின் தீர்வுக்கும் தீர்ப்பனவிற்குமாக அத்தகைய இயங்குதளத்தினால் செய்யப்பட்ட ஒழுங்குகள் குறித்து ஆணைக்குழுவின் திருப்திக்கு சான்றளிக்கும் ஆவணங்களை வழங்குதல் வேண்டும்.

## அத்தியாயம் 2

## ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவரின் வகிபாகம்

**115.** பின்வருவன, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநர் ஒருவரின் பணிகளும் கடமைகளுமாக இருத்தல் வேண்டும் – *ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரின் பணிகளும் கடமைகளும்.*

(அ) இலங்கையில் நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனைக்கும் கொள்வனவுக்குமான இயங்குதளமொன்றை வழங்குதல்;

(ஆ) இலங்கையில் நிரற்படுத்தப்படாத பிணையங்களுடன் தொடர்புடைய தகவல்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதிசார் சமூகத்திற்கு வழங்குதல்;

(இ) அதன் வியாபார உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான நியமங்களுக்கான கட்டளைக்கல்லை வழங்குதல்;

(ஈ) பொதுவான தன்மையினதாகவிருப்பினுஞ்சரி அல்லது குறிப்பான தன்மையினதானதாகவிருப்பினுஞ்சரி, ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகுதல்; அத்துடன்

(உ) ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழு சார்பில் அல்லது அதன் அதிகாரத்துடன் செயற்படுகின்ற ஆளொருவருக்கு, அவ்வாணைக்குழு அல்லது அத்தகைய ஆள் நியாயமானளவுக்குத் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய உதவியை வழங்குதல்.

இயங்குதளம் ஒன்றின் மீது வியாபாரஞ் செய்தல்.

**116.** இயங்குதளமொன்றின்மீது பிணையங்களை வாங்கும் மற்றும் விற்கும் ஆளெவரும் இயங்குதளத்தினால் சேர்த்துக்கொள்ளப்பட்ட வியாபார உறுப்பினர்கள் மூலம் அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஆணைக் குழுவால் ஆக்கப்பட வுள்ள விதிகள்.

**117.** ஆணைக்குழு, பின்வரும் விதிகளை ஆக்கலாம் -

(அ) இயங்குதளமொன்றில் வியாபாரம் செய்யப்படமுடியுமான, நிரற்படுத்தப்படாத பிணையங்களின் வகையைத் தீர்மானித்தல்;

(ஆ) இயங்குதளமொன்றுக்கு வியாபாரங்களைச் அறிக்கையிட முடியுமான வழங்குநர்களின் வகையைத் தீர்மானித்தல்;

(இ) இயங்குதளமொன்றில் வியாபாரம் செய்யக்கூடிய முதலீட்டாளர்களின் வகையைத் தீர்மானித்தல்;

(ஈ) இயங்குதளத்தில் வியாபாரம் செய்யக்கூடிய வியாபார உறுப்பினர்களின் வகையைத் தீர்மானித்தல்;

(உ) இயங்குதளம் மீது வியாபார உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல்;

(ஊ) இயங்குதளத்தினால் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் வெளிப்படுத்தல்களின் மட்டத்தைத் தீர்மானித்தல்; அத்துடன்

(எ) நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவில் தொழில் நடத்தையின் நியமத்தைத் தீர்மானித்தல்.

பதிவின் மீளப்பெறுகை.

**118.** (1) உட்பிரிவு (3) இற்கமைய, ஆணைக்குழு முதலீட்டாளர்களின் அக்கறைக்கென அல்லது ஒழுங்குமுறையானதும் நியாயமானதுமான சந்தையைப் பேணுவதற்கென அவ்வாறு செய்வது தோதானதெனத் திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றிலிருந்து பயனுக்குவரும்வகையில் எழுத்திலான அறிவித்தல் மூலம் பதிவை மீளப்பெறலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய அறிவித்தல் பதிவினை மீளப்பெறுதலுக்கான ஏதுக்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழான மீளப்பெறுகை எது எவ்வாறிருப்பினும், மீளப்பெறுகை எத்தேதியன்று பயனுக்குவருகின்றதோ அத்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், பின்வரும் நோக்கங்களுக்காக அறிவித்தலில் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடிய வாறாக மீளப்பெறுகையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளை நடாத்திச்செல்வதைத் தொடர்வதற்கு ஆணைக்குழு ஆளொருவருக்கு அனுமதியளிக்கலாம் –

(அ) எவ்வங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநருடன் மீளப்பெறுகை தொடர்புறுகிறதோ அவ்வங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரின் தொழிற்பாடுகளை முடிவிடுதல்; அல்லது

(ஆ) முதலீட்டாளர்களின் அக்கறையைப் பாதுகாத்தல்.

(4) ஆணைக்குழு (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவருக்கு அனுமதி வழங்கியுள்ளவிடத்து, அத்தகைய ஆள் அனுமதிக்கிணங்க செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதன் காரணமாக, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுவதாகக் கருதப்படுதலாகாது.

(5) ஆணைக்குழுவானது, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநருக்குக் கொடுத்தாலேயொழிய, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநர் தொடர்பில் உட்பிரிவு (1) இன் கீழான அதன் தத்துவத்தை அவ்வாணைக்குழு பிரயோகித்தலாகாது.

(6) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட பதிவின் ஏதேனும் மீளப்பெறுகை–

(அ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையை கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை, அவ்வுடன்படிக்கை, கொடுக்கல் வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு ஓராம் உட்பிரிவின் கீழான பதிவின் மீளப்பெறுகைக்கு முன்னராகச் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது அதற்குப் பின்னராக செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அதனைத் தவிர்க்கின்ற அல்லது பாதிக்கின்ற; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின், கொடுக்கல்வாங்கலின் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கின்ற, வகையில்

தொழிற்படுதலாகாது.

ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரின் செயல்நிறைவேற்றுகையின் மீளாய்வு.

**119.** (1) ஆணைக்குழு, இப்பாகத்தின்கீழான ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவரின் செயல்நிறைவேற்றுகையை காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யலாம்.

(2) ஆணைக்குழு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரின் நிலையை மீளாய்வு செய்வதில் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளலாம்:-

(அ) இயங்குதளமொன்றில் உள்ளார்ந்ததாகவுள்ள முறைமைப்படுத்தப்பட்ட ஆபத்து;

(ஆ) பொதுமக்கள் அக்கறை;

(இ) இயங்குதளத்தின் அளவும் கட்டமைப்பும்.

(ஈ) இயங்குதளத்தின் மீது வியாபாரஞ்செய்யப்பட்ட நிரற்படுத்தப்படாத பிணையங்களின் வகுப்பு; அத்துடன்

(உ) இயங்குதளத்தைப் பயன்படுத்தும் முதலீட்டாளர்களினதும் பங்குபற்றுனர்களினதும் தன்மை.

(3) ஆணைக்குழு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநருக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்காது (1) ஆம் உட்பிரிவின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது.

*சந்தை தொழிற்படுத்துநருக்கான விலக்களிப்பு.*

**120.** ஆணைக்குழு, 117 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கல்லைக் கருத்திற்கொண்டு, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமமைய, 114 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்வதிலிருந்து சந்தைத் தொழிற்படுத்துனரொருவரை விலக்களிக்கலாம்.

*சட்டத்தின் ஏற்பாடுகள் நிரற்படுத்தப்படாத பிணையங்களுக்கு ஏற்புடையனவாதல்.*

**121.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 75 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கல்லைக் கருத்திற்கொண்டு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தை தொழிற்படுத்துநரொருவரால் இயங்குதளம் ஒன்றின் மீது நிலைநாட்டப்பட்ட நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனை, கொள்வனவு மற்றும் கைமாற்றுதல் என்பவற்றுக்கும் அத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளின் மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, 75 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட பிணையங்களுக்கும் ஏற்புடையனவாதலாகாது.

(2) இப்பாகத்தின் கீழ், ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட இவ்வியாபார இயங்குதளத்திற்கு ஏற்புடையனவாகக்கூடிய நிரற்படுத்தப்படாத பிணையங்கள் தொடர்பிலான விதிகள், நிரற் படுத்தப்படாத பிணையங்கள் தொடர்பான வேறு எவையேனும் விதிகளைவிட மேலோங்குதல் வேண்டும்.

## பாகம் V

### சந்தை தொடர்பிலான துர்நடத்தை

இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும்.

**122.** இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருவனவாக விருத்தல் வேண்டும் -

(அ) நியாயமான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தை ஒன்றை தாபிக்கின்ற நோக்குடன் பொய்யான வியாபாரம், சந்தை மோசடி மற்றும் சந்தையை சூழ்ச்சித் திறத்துடன் கையாளுகை என்பவற்றை தடுத்தல்; அத்துடன்

(ஆ) நியாயமான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையை தாபிக்கின்ற நோக்குடன் உள்ளுறைபவர் வியாபாரத்தை தடுத்தல்.

இப்பாகத்தின் ஏற்புடைமை.

**123.** இப்பாகமானது பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்-

(அ) பிணையங்கள் தொடர்பில் -

(i) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே அமைக்கப்படுகின்ற அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிரற்படுத்தப் படுகின்ற ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட உருவகத் தின் பிணயங்கள் தொடர்பில் இலங்கையினுள் நிகழ்கின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்; அத்துடன்

(ii) இலங்கையினுள் அமைக்கப்படுகின்ற அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தின் பிணையங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே நிகழ்கின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்;

(ஆ) மூலாதாரப் பிணையங்கள் தொடர்பில் –

(i) இலங்கையினுள் வியாபாரம் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே வியாபாரம் செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி மூலாதாரப் பிணையங்கள் தொடர்பில் இலங்கையினுள் நிகழ்கின்ற செயல்கள்; அத்துடன்

(ii) இலங்கையினுள் வியாபாரஞ் செய்யப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே நிகழ்கின்ற செயல்கள்.

## அத்தியாயம் 1

### தடை செய்யப்பட்ட நடத்தை

பொய்யான வியாபாரம் மற்றும் சந்தை மோசடிக் கொடுக்கல் வாங்கல்கள்.

**124.** (1) நூற்றியிருபத்தொன்பதாம் பிரிவிற்கு அமைய, ஆளொருவர் இலங்கையினுள்ளான பரிவர்த்தனை மீது பிணயங்களிலான முனைப்பான வியாபாரத்தின் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றம் ஒன்றை அல்லது அத்தகைய எவையேனும் பிணையங்களுக்கான சந்தை அல்லது விலை தொடர்பில் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றம் ஒன்றை உருவாக்குவதற்கு உட்கருதப்படுகின்றதான எதனையும் உருவாக்குதலோ அல்லது உருவாக்கச் செய்வித்தலோ அல்லது செய்வித்தலோ ஆகாது.

(2) ஆளொருவர், எவையேனும் பிணையங்களின் பயனுகர் சொத்தாண்மையிலான மாற்றம் ஒன்றிற்கு உட்படுத்தாததான ஏதேனும் பிணையத்தின் ஏதேனும் கொள்வனவு அல்லது

விற்பனை மூலம் அல்லது ஏதேனும் பொய்யான கொடுக்கல் வாங்கல் அல்லது உபாயம் மூலம் எவையேனும் பிணையங்களின் சந்தை விலையில் ஏற்றத்தாழ்வுகளை பேணுதலோ, உயர்த்துதலோ, குறைத்தலோ அல்லது விளைவித்தலோ ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப்பங்கமின்றி -

(அ) பிணையங்களின் பயனுகர் சொத்தாண்மையில் ஏதேனும் மாற்றத்திற்கு உட்படுத்தாததான கொடுக்கல் வாங்கலாக வுள்ள எவையேனும் பிணையங்களின் விற்பனையின் அல்லது கொள்வனவின் ஏதேனும் கொடுக்கல் வாங்கலை ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லா மலோ செய்கின்ற, பங்குபற்றுகின்ற, அக்கறை கொண்டுள்ள அல்லது நிறைவேற்றுகின்ற ஆளொருவர்; அல்லது

(ஆ) ஆளொருவர் கணிசமானளவு முதலாவது குறிப்பிடப்பட்ட விலைபோன்ற அதே விலையில் பிணையங்களின் அதே எண்ணிக்கையை அல்லது கணிசமானளவு அதே எண்ணிக்கையை கொள்வனவு செய்வதற்கான கொடைமுனைவு ஒன்றை செய்துள்ளவிடத்து அல்லது செய்வித்துள்ளவிடத்து அல்லது அவருடன் இணைந்த ஆளொருவர் செய்துள்ளார் அல்லது செய்வித்துள்ளார் என அறிந்துள்ளவிடத்து, குறித்துரைக்கப்பட்ட விலை ஒன்றில் அத்தகைய எண்ணிக்கையிலான பிணையங் களை வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கொடைமுனைவு ஒன்றை செய்துள்ள அல்லது செய் வித்துள்ள ஆளொருவர்,

பங்குத்தொகுதிச் சந்தை ஒன்று மீதான பிணையங்களின் முனைப்பான வியாபாரத்தை பொய்யான அல்லது பிழைவழி யுய்க்கும் தோற்றத்தை உருவாக்கி இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக-

(அ) பரிவர்த்தனை ஒன்றில் முனைப்பான வியாபாரத்தினை பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றத்தை உருவாக்கும் நோக்கமானது, எந்த நோக்கத்திற்காக அவர் அச்செயலை செய்துள்ளாரோ அந்த நோக்கத்தை உட்படுத்தி இருக்கவில்லை அல்லது உட்படுத்தவில்லை எனவும்; அத்துடன்

(ஆ) பரிவர்த்தனை ஒன்றில் முனைப்பான வியாபாரத்தின் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றமொன்றை அவர் உருவாக்கி இருந்தாலுஞ்சரி அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி, அவர் அசாக்கிரதையாக செயலாற்றவில்லை என,

தாபிப்பதற்கு ஆளொருவருக்கு இது ஒரு எதிர்வாதமாகும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் அல்லது அத்தகைய ஆளுடன் இணைந்துள்ள ஆளொருவர் கொள்வனவுக்கு முன்னர் அல்லது விற்பனைக்கு முன்னர் பிணையங்களில் அக்கறை கொண்டு இருந்துள்ளார் எனின், அத்துடன் கொள்வனவின் பின்னர் அல்லது விற்பனையின் பின்னர் பிணையங்களில் அக்கறையைத் தொடர்ந்து கொண்டுள்ளார் எனின் பயனுகர் சொத்தாண்மையில் பிணையங்களின் கொள்வனவு அல்லது விற்பனை மாற்றம் ஒன்றிற்கு உட்படாது.

(6) பிணையங்களின் பயனுகர் சொத்தாண்மையில் மாற்றம் ஒன்றை உட்படுத்தாத அப்பிணையங்களின் கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பாக (2) ஆம் உட்பிரிவின் மீறுகையை கையாள்வதில், எந்த நோக்கத்துக்காக அல்லது நோக்கங்களுக்காக அவர் கொள்வனவு செய்த பிணையங்களை அல்லது விற்பனை செய்த பிணையங்களை, பிணையங்களுக்கான சந்தை அல்லது பிணையங்களின் விலை தொடர்பாக பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் தோற்றத்தை உருவாக்கும் நோக்கத்தை உள்ளடக்கி இருக்கவில்லையோ அல்லது உள்ளடக்காதோ, அந்த நோக்கம் அல்லது நோக்கங்களை ஆளொருவர் நிலைநாட்டியிருப்பின், இது ஓர் எதிர்வாதமாகும்.

(7) பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு பற்றிய கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கு (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலான குறிப்பீடு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது –

(அ) பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவிற்கான கொடைமுனை ஒன்றை ஆக்குதல்; அத்துடன்

(ஆ) வெளிப்படையாக அல்லது உட்கிடையாக பிணையங்களை விற்பனை செய்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கான கொடைமுனைவிற்கு ஆளொருவரை கோருகின்றதான கோரிக்கை ஒன்றை ஆக்குதல்.

பங்குத் தொகுதிச் சந்தையை சூழ்ச்சித் திறத்துடன் கையாளுதல்.

**125.** (1) நூற்றியிருபத்தியொன்பதாம் பிரிவிற்கு அமைய, ஆளொருவர் பின்வருவனவற்றிற்கு செயற்கையான முறையில் பயன்கொடுக்கும் அல்லது பயன்கொடுப்பது போன்றதாகவுள்ளதான கொடுக்கல்வாங்கலாகவுள்ள கம்பனி ஒன்றின் பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களின் எவையேனும் எண்ணிக்கையை ஒன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிறைவேற்றுதலாகாது அல்லது நிறைவேற்றுதலுக்கு உட்படுதலாகாதென்பதுடன் கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பனியின் பிணையங்களைக் கொள்ளுவதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு அத்தகைய ஆள் உந்தப்பட்டாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரிவேறு ஆட்களை உந்தும்நோக்கத்திற்காக இலங்கையிலுள்ள அக்கம்பனியின் பிணையங்களின் விலை அல்லது தொகையை –

(அ) உயர்த்துதல்

(ஆ) குறைத்தல்; அல்லது

(இ) நிர்ணயித்தல், நிறுவுதல், பராமரித்தல் அல்லது நிலைப்படுத்தல்.

(2) கம்பனி ஒன்றின் பிணையங்கள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்கு இப்பிரிவிலுள்ள குறிப்பீடு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது –

(அ) கம்பனியின் அத்தகைய பிணையங்களை விற்பனை செய்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு கொடை முனை ஒன்றை ஆக்குதல்; அத்துடன்

(ஆ) வெளிப்படையாக அல்லது உட்கிடையாக கம்பனி ஒன்றின் அத்தகைய பிணையங்களை விற்பனை செய்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கான கொடைமுனைவிற்கு ஆளொருவரை கோருகின்றதான கோரிக்கை ஒன்றை ஆக்குதல்.

பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் கூற்றுக்கள்.

**126.** ஆளொருவர், முக்கியமான விபரமொன்றில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக உள்ளதும் -

(அ) அவர் அக்கூற்று அல்லது தகவலின் செம்மையை சரிபார்ப்பதற்கு நியாயமான முறையில் கவனம் எடுக்காவிடின்; அல்லது

(ஆ) அவர், கூற்று அல்லது தகவல் ஆனது முக்கியமான விபரம் ஒன்றில் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கின்றதென அறிந்திருப்பின் அல்லது அறிந்திருப்பதாக நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டிருப்பின்;

பிணையங்களின் சந்தைவிலையை அல்லது தொகையை உயர்த்துகின்ற, குறைக்கின்ற, பேணுகின்ற அல்லது நிலைப்படுத்துகின்றதை பயன்கொடுக்கும் சாத்தியமாகவுள்ளதுமான கூற்றை ஆக்குதலும் அல்லது தகவலைப் பரப்புதலும் ஆகாது.

பிணையங்களைக் கையாளுவதற்கு மோசடியாக தூண்டப்படுகின்ற ஆட்கள்.

**127.** (1) ஆளொருவர் பிணையங்களிலான வியாபாரத்திற்கு வேறொரு ஆளை பின்வரும் காரணங்கள் மூலம் தூண்டுதலோ அல்லது தூண்டுவதற்கு முயற்சித்தலோ ஆகாது -

(அ) ஏதேனும் கூற்றை ஆக்குவதன் மூலமோ அல்லது வெளியிடுவதன் மூலமோ அல்லது அவர் பிழைவழியுய்க்கும், பொய்யான அல்லது வஞ்சகமாக உள்ளதென அறிகின்றதான ஏதேனும் எதிர்வுகூறலை ஆக்குவதன் மூலம்;

(ஆ) ஏதேனும் முக்கிய நிகழ்வுகளை நேர்மையற்ற முறையில் ஒளிப்பதன் மூலம்;

(இ) பிழைவழியுய்க்கும், பொய்யான அல்லது வஞ்சகமான தாகவுள்ள ஏதேனும் கூற்றை அல்லது எதிர்வுகூறலை நேர்மையற்ற முறையில் அல்லது வேறுவகையில் அசட்டையாக ஆக்குவதன் மூலம் அல்லது வெளியிடுவ தன் மூலம்; அல்லது

(ஈ) அவர் முக்கியமான விபரமொன்றில் பொய்யாக அல்லது பிழைவழியுய்க்கக்கூடியதாக இருக்கக்கூடுமென அறிகின்றதான ஏதேனும் இயந்திரவியல்கள், இலத்திரனியல்கள் அல்லது வேறு உபாயம், தகவல் என்பவற்றினை பதிவுசெய்வதன்மூலம் அல்லது களஞ்சியப்படுத்துவதன் மூலம் அல்லது வேறுவழிமூலம்.

(2) ஒராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, ஒராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் தகவலானது பதிவுசெய்யப்பட்டிருந்தபோது அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தபோது அத்தகவலானது எவரேனும் ஆளிற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கக் கூடுமென நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் எதனையும் அத்தகைய ஆள் வைத்திருக்க வில்லை என நிறுவியிருப்பின், இது ஒரு எதிர்வாதம் ஆதல் வேண்டும்.

*சூழ்ச்சித் தன்மை சார்ந்த மற்றும் வஞ்சகமான உபாயங்களைப் பயன்படுத்தல்.*

**128**. ஆளொருவர் எவையேனும் பிணையங்களின் ஒப்படைப்பணம், கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ –

(அ) ஏதேனும் உபாயத்தை, திட்டத்தை அல்லது மோசடிக் கான யுக்தியை பயன்படுத்தலாகாது.

(ஆ) எவரேனும் ஆள்மீது மோசடி ஒன்றாக அல்லது ஏமாற்றுவது போன்று தொழிற்படுகின்ற அல்லது தொழிற்படக்கூடியதான ஏதேனும் செயலில், செயன் முறையில் அல்லது தொழில் நெறியில் ஈடுபடல் ஆகாது; அல்லது

(இ) முக்கியமான நிகழ்வொன்று பற்றிய ஏதேனும் பொய்யான கூற்றை ஆக்குதலோ அல்லது கூற்றுக்களை ஆக்குவதற்காக அவசியமான முக்கிய நிகழ்வு ஒன்றை குறிப்பிடாது விடுதலோ ஆகாது.

*கொடுக்கல் வாங்கல்களின் குறிப்பிட்ட வகுப்பிற்கு விலக்களித்தல்.*

**129.** எந்தப் பிணையங்கள் தொடர்பாக பிரிவு 124 அல்லது பிரிவு 125 ஏற்புடையதாகாதோ அந்தப் பிணையங்கள் தொடர்பாக ஆட்களின் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு, வகுதி அல்லது விபரணம் என்பவற்றிற்கு விலக்களிப்பதற்கு அல்லது கொடுக்கல்வாங்கலின் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு, வகுதி அல்லது விபரணம் என்பவற்றிற்கு விலக்களிப்பதற்கு விதிகளை ஆக்கலாம்.

*தவறுகளுக்கான தண்டம்.*

**130.** பிரிவுகள் 124, 125, 126, 127 அல்லது 128 இனை மீறுகின்ற ஆள் ஒருவர், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பத்து மில்லியன் ரூபாவிற்கு குறையாத குற்றபணமொன்றிற்கு அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலத்திற்கான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## அத்தியாயம் 2

### உள்ளுறைபவர் வியாபாரம்

*பொருள் கோடல்.*

**131.** இவ்வத்தியாயத்தில் "தகவல்" என்பது பின்வருவன வற்றை உள்ளடக்குகின்றது.

(அ) பொதுமக்களிற்கு அறிந்திருக்கப்படுவதனை உறுதிப் படுத்துவதற்கு போதுமானதற்றதான திட்டவட்டமாகவுள்ள நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பனிகள் தொடர்பான ஊகித்தல் கருமங்கள் மற்றும் வேறு கருமங்கள்;

(ஆ) ஆளொருவரின் உட்கருத்துக்கள் அல்லது அவர் கொண்டிருக்கும் சாத்தியமான உட்கருத்துக்கள் தொடர்பான கருமங்கள்;

(இ) பின்வருவன தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் அல்லது பிரேரணைகள் தொடர்பான கருமங்கள் -

(i) வர்த்தக கையாளுகைகள்; அல்லது

(ii) பிணையங்களிலான கையாளுகைகள்;

(ஈ) கம்பனி ஒன்றின் நிதிசார் செயல் நிறைவேற்றம் தொடர்பான தகவல்,

(உ) ஆளொருவர் பிணையங்கள் தொடர்பில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு உத்தேசிக்கின்றார் அல்லது முன்னரே செய்துள்ளார் என்பது பற்றியும் அல்லது அத்தகைய பிணையங்கள் தொடர்பாக கூற்றினை தயாரித்துள்ளார் அல்லது கூற்றொன்றை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளார் என்பன பற்றிய தகவல்; அத்துடன்

(ஊ) எதிர்காலம் தொடர்பான கருமங்கள்.

*பொதுவாகக் கிடைக்கக்கூடிய தகவல்.*

**132.** (1) இவ் அத்தியாயத்தில், எந்த வகையான பிணையங்களின் விலை அல்லது பெறுமதி தகவல் மூலம் பாதிக்கப்படக்கூடுமோ அந்த வகையான பிணையங்களில் முதலீடு செய்கின்ற நியாயமான ஆட்களின் கவனத்திற்கு அத்தகைய தகவலானது கொண்டு வரக்கூடிய அல்லது கொண்டு வருவதற்கு சாத்தியம் கொண்டிருக்கக்கூடிய முறை ஒன்றில் அறியப்பட்டிருப்பின் அத்துடன் அத்தகைய எவரேனும் ஆளினால் அத்தகைய தகவல் தன்மயமாக்கப்பட்டிருப்பதாக அத்தகைய தகவலை பரப்புவதில் நியாயமான காலப் பகுதி கடந்திருப்பின் தகவலானது பொதுவாக கிடைக்கக்கூடியதாகும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் ஆனது அத்தகைய தகவலிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட அனுமானங்கள் அல்லது முடிவுகள் கொண்டதான தகவலை உள்ளடக்குகின்றது.

*பிணையங்களின் விலை அல்லது பெறுமதி மீதான முக்கியமான விளைவு.*

**133.** இவ்வத்தியாயத்தில், பிணையங்களின் விலை அல்லது பெறுமதி மீது முக்கியமாக விளைவைக் கொண்டிருக்கும் அல்லது கொண்டிருக்கும் சாத்தியமுடையதாகவிருக்கும் பொதுவாக கிடைக்கக்கூடியதாக வருவதன்மேலான தகவலானது அத்தகைய பிணையங்களை கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் அத்தகைய பிணையங்களை கொள்ளுவதற்கோ அல்லது கையுதிர்ப்பதற்கோ அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதற்கோ அல்லது விட்டுவிடுவதற்கோ முடிபுசெய்வதில் பிணையங்களில் முதலீடு செய்கின்ற நியாயமான ஆட்கள் பொதுவாக கிடைக்கக்கூடியதான செல்வாக்கை செலுத்துவதன்மேல் அல்லது செலுத்தக்கூடிய சாத்தியமுடையதாக இருக்கும் அத்தகைய தகவலைக் குறிப்பிடுகின்றது.

*பெறுகை பற்றிய குறிப்பீடு.*

**134.** நூற்றி முப்பத்தைந்தாம் பிரிவின் நோக்கங்களுக்காக, முதலாவது பெயரிடப்பட்ட ஆள் அத்தகைய வேறு ஆளினால் சொல்லப்பட்ட செயல் அல்லது செய்யாமையை தூண்டியிருப்பின், ஊக்கிவித்திருப்பின் அல்லது வழிநடத்தியிருப்பின், ஆளொருவர் வேறொரு ஆளினால் செயல் அல்லது செய்யாமை பெற்றுக் கொடுப்பதற்காக கருதப்படுகின்றார்.

*உள்ளக தகவலை உடைமையில் கொண்டுள்ள ஆளின் தடை செய்யப்பட்ட நடத்தை.*

**135.** (1) ஆளொருவர் -

(அ) பொதுவாகக் கிடைக்க முடியாததான தகவலைக் கொண்டிருப்பின் அத்துடன் அது பொதுவாக கிடைக்கக் கூடியதாக இருந்திருப்பின், பிணையங்களின் விலை அல்லது பெறுமதி மீது முக்கியமான விளைவை அது கொண்டிருப்பதாக நியாயமான ஆளொருவர் எதிர்பார்த்திருப்பின்; அத்துடன்

(ஆ) தகவலானது பொதுவாகக் கிடைக்கக் கூடியதாக இருக்கவில்லை என அறிந்திருப்பின் அல்லது அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதாக இருப்பின்,

அத்தகைய ஆள் முறையான கம்பனி ஒன்றுடன் தொடர்புபட்டிருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி “உள்ளுறைபவர்” ஆகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவிலான தகவல் எந்தப் பிணையங்கள் தொடர்பில் தொடர்புறுகின்றதோ அந்தப் பிணையங்கள் தொடர்பில் முதல்வராகவோ அல்லது முகவராகவோ உள்ளுறைபவர் ஒருவர்-

(அ) அத்தகைய பிணையங்களை கொள்ளுதலோ அல்லது கையுதிர்த்தலோ அல்லது கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுதலோ; அல்லது

(ஆ) அத்தகைய பிணையங்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பெற்றுக்கொடுத்தலோ, கொள்ளுதலோ அல்லது கையுதிர்த்தலோ அல்லது அத்தகைய பிணையங்களை கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுதலோ

ஆகாது.

(3) எந்தப் பிணையங்களிற்கு (1) ஆம் உட்பிரிவிலான தகவல் தொடர்புபடுகின்றதோ அந்தப் பிணையங்களிலான வியாபாரம் பரிவர்த்தனையின் பிணையங்கள் சந்தை ஒன்றின் மீது அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து, உள்ளுறைபவர் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவலை அறிவித்தல் ஆகாது அல்லது வேறு ஆள் பின்வருமாறு இருக்கக்கூடியதான அல்லது இருக்கக்கூடிய சாத்தியமுடையது என அவ்உள்ளுறைபவர் அறிந்திருப்பின் அல்லது அறிவது நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதாக இருப்பின், அத்தகைய தகவல் வேறொரு ஆளுக்கு அறிவிக்கப்படச் செய்வித்தல் வேண்டும்-

(அ) ஓராம் உட்பிரிவிலான தகவல் எந்தப் பிணையங்கள் தொடர்பானதோ அந்த எவையேனும் பிணையங்களை கொள்ளுதல், கையுதிர்த்தல் அல்லது கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் உடன்படிக்கையை செய்து கொள்ளுதல்; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவிலான தகவல் எந்தப் பிணையங்கள் தொடர்பானதோ அந்த எவையேனும் பிணையங்களை கொள்ளுதல், கையுதிர்த்தல் அல்லது கொள்ளும் அல்லது

கையுதிர்க்கும் நோக்குடன் உடன்படிக்கையை செய்து கொள்ளுதலுக்கென மூன்றாம் திறத்தவர் ஒருவரைப் பெற்றுக் கொள்ளுதல்.

(4) இரண்டாம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன் மேல் பத்து மில்லியன் ரூபாவிற்கு குறையாத குற்றப்பணத்திற்கும் அல்லது பத்து வருடங்களை விஞ்சாத காலப் பகுதி ஒன்றுக்கு இரு வகையிலொருவகையான மறியற்றண்டனை அல்லது அத்தகைய மறியற்றண்டணை அல்லது குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) ஆணைக்குழு பிணையங்கள் தொடர்பாக இப்பிரிவு ஏற்புடைய தாகாதென, ஆட்களின் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு வகுதி அல்லது விபரணம் தொடர்பில் அல்லது எந்தக் கொடுக்கல்வாங்கல்களின் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு வகுதி அல்லது விபரணம் தொடர்பில் விதிகளை ஆக்கலாமோ அந்த ஆட்களின் குறிப்பிட்ட வகுப்பு, வகுதி அல்லது விபரணம் தொடர்பில் அல்லது அந்த கொடுக்கல்வாங்க லின் வகுப்பு வகுதி அல்லது விபரணம் தொடர்பில் விதிகளை ஆக்க லாம்.

*கம்பனி ஒன்றின் அலுவலரின் உடைமையில் உள்ள தகவல்.*

**136.** (1) இவ் அத்தியாயத்தில் கம்பெனியொன்று -

(அ) கம்பனியின் அலுவலரொருவர் -

(i) உடைமையில் கொண்டிருப்பதும் மற்றும் அக்கம்பனியின் அலுவலரொருவராக தனது கடமையை புரிகையில் தனது உடைமையில் வந்துள்ளதுமான ஏதேனும் தகவலை; அல்லது

(ii) அறிகின்ற அல்லது அவர் கம்பனியின் அலுவல ராக இருப்பதன் காரணத்தால் அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதுமான ஏதேனும் தகவலை;

(ஆ) (i) அவ்வலுவலர் தகவலின் உடைமையை கொண்டிருப்பதன் காரணத்தினால் உள்ளுறைபவர் ஒருவராக இருக்குமிடத்து;

(ii) எந்தப் பிணையங்கள் தொடர்பில் அலுவலர் ஒருவர் உள்ளுறைபவர் ஒருவராக இருக்கின்றாரோ அப்பிணையங்களை கொள்ளுதலில் அல்லது கையுதிர்த்தலில் அல்லது அத்தகைய பிணையங்களை கொள்ளுதலுக்கு அல்லது கையுதிர்த்தலுக்கு உடன்படிக்கை ஒன்றைச் செய்வதில் அல்லது அத்தகைய பிணையங்களின் கொள்ளுதலுக்கு அல்லது கையுதிர்த்தலுக்கு வேறு ஒரு ஆளைப் பயன்படுத்துவதில் அல்லது அவ்வாறு செய்வதற்கு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுதல் அல்லது 135 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் சூழ்நிலைகளில் அத்தகவலை தெரிவிப்பதில் முதலாவது குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியின் முடிபு, கொடுக்கல்வாங்கலில் அல்லது உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்றவிடத்து;

(iii) தகவலானது அவ்வாறு தெரிவிக்கப்பட்டது உண்மையானதாக இருக்கவில்லை என எண்பிக்கப்பட்டாலொழிய, அத்தகையவாறாக தனது தகைமையில் செயலாற்றுகின்ற முதலாவது குறிப்பிடப்பட்ட கம்பெனியின் வேறொரு அலுவலருக்கு தகவலை அவ்வலுவலர் தெரிவிப்பார் என எதிர்பார்ப்பதற்கு அது நியாயமாக உள்ளவிடத்து,

கம்பெனியின் அலுவலர் உடைமை கொண்டிருக்கின்றதும் முதலாவதாக குறிப்பிடப்பட்ட கம்பெனியில் தொடர்புபட்ட கம்பெனி ஒன்றின் அலுவலர் ஒருவராக தமது கடமைகளை புரிகையில் தனது உடைமையில் வந்ததுமான,

ஏதேனும் தகவலை உடைமை கொண்டிருப்பதாக கருதப்படுகிறது.

(2) இப்பிரிவில் “தகவல்” என்பது கம்பெனியொன்று உடைமை கொண்டிருப்பதாக கருதப்படுகின்ற தகவலை குறிப்பீடு செய்கின்றது என்பதுடன் “உள்ளுறைபவர்” என்பது அத்தகைய தகவலில் உடைமையைக் கொண்டிருக்கின்ற ஆள்ஒருவர் எனப் பொருள் கொள்ளுதலும் வேண்டும்.

(3) (அ) கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையை செய்துகொள்ளுவதற்கான முடிபு தகவலை உடைமையில் கொண்டிருக்கின்ற கம்பெனியின் அலுவலர் ஒருவர் தவிர்ந்த வேறு ஆள் ஒருவரினால் அல்லது ஆட்களினால் கம்பெனி சார்பில் எடுக்கப் பட்டிருப்பின்;

(ஆ) (i) தகவலானது கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையை செய்து கொள்வதற்கு அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கான முடிபில் சம்பந்தப்பட்ட அல்லது அதனை செய்துகொண்ட ஆளொருவரின் அல்லது ஆட்களில் ஒருவருக்கு தெரிவிக்கப்படவில்லை என;

(ii) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கை செய்துகொள்வதற்கு அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கான முடிபு தொடர்பிலான மதியுரை எதுவும் தகவலை உடைமையில் கொண்டிருக்கின்ற ஆளினால் அவ்வாளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என; அல்லது

(iii) தகவலின் உடைமையைக் கொண்டிருக்கின்ற ஆள் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன் படிக்கையை செய்துகொள்வதற்கு அல்லது சம்பந்தப்படுவதற்கான முடிபில் சம்பந்தப்பட்டி ருக்கமாட்டார் என

உறுதிப்படுத்துவதற்கு நியாயமாக எதிர்பார்க்கப்பட்ட முடிந்ததான அந்நேர ஒழுங்கேற்பாடுகளில் கம்பெனியானது தொழிற்பாட்டில் இருந்ததென, அத்துடன்

(இ) தகவலானது தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை, அத்தகைய மதியுரை எதுவும் வழங்கப்படவில்லை அத்துடன் தகவலை உடைமையில் கொண்டிருக்கின்ற ஆள் கொடுக்கல் வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கு முடிபில் சம்பந்தப்படாதிருந்திருப்பின்,

கம்பெனி ஒன்று கம்பெனியின் உடைமையில் கொண்டுள்ள தகவலின் காரணமாக மட்டும் ஏதேனும் நேரத்தில் கொடுக்கல் வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை மீறாது.

பங்காண்மையில் பங்காளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவரின் உடைமையில் உள்ள தகவல்.

**137.** (1) இவ்வத்தியாயத்தில், பங்காண்மையின் பங்காளர் ஒருவர்–

(அ) பங்காளர் ஒருவர் தகவலை உடைமையில் கொண்டிருப்பின் அத்துடன் அது பங்காண்மையின் பங்காளர் ஒருவராக அவரது தன்மையில் வேறொரு பங்காளரின் உடைமையினுள் வந்திருப்பின்.

(ஆ) பங்காண்மையின் ஊழியர் ஒருவர் அத்தகைய தகவலை உடைமையில் கொண்டிருப்பின் அத்துடன் அது அவரது கடமையைப் புரிகையில் ஊழியரது உடைமையினுள் வந்திருப்பின்; அல்லது

(இ) பங்காண்மை ஒன்றின் பங்காளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் வேறொரு பங்காளர் அல்லது ஊழியருக்காக ஏதேனும் கருமம் அல்லது காரியத்தை அறிந்திருப்பின் அல்லது அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதாகவிருப்பின், பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும் அக்கருமத்தை அல்லது காரியத்தை அறிந்துள்ளார் என அல்லது அறிவதற்கு

நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக்கூடியதாக இருக்கும் என முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய அது ஊகிக்கப்படாவிடின்

ஏதேனும் தகவலை உடைமையில் கொண்டிருப்பதாக கருதப்படுகின்றது.

(2) பங்காண்மைகளில் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரை ஆனால் எல்லாப் பங்காளர்களும் அல்ல அல்லது பங்காண்மையின் ஊழியர் அல்லது ஊழியர்கள் அந்நேரத்தில் உண்மையான தகவலை உடைமையில் கொண்டிருந்தார் என்ற காரணத்தினால் மட்டும் ஏதேனும் நேரத்தில் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை பின்வருமாறு இருப்பின் பங்காண்மை ஒன்றின் பங்காளர் ஒருவர் மீறவில்லை-

(அ) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான முடிபு பின்வரும் ஆட்களில் எவரேனும் ஒருவரினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரினால் பங்காண்மை சார்பில் எடுக்கப்பட்டிருப்பின்:-

(i) பங்காண்மையின் வேறொரு பங்காளர் அல்லது ஊழியர் ஒருவர் தகவலை உடைமையில் கொண்டிருந்த காரணத்துக்காக மட்டும் வெறுமனே அத்தகவலை உடைமையில் கொண்டிருப்பதாக கருதப்படும் பங்காளர் ஒருவர்; அல்லது

(ii) தகவலை உடைமையில் கொண்டிராத பங்காண்மையின் ஊழியர் ஒருவர்;

(ஆ) (i) சம்பந்தப்பட்ட கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்து கொள்வது தொடர்பிலான முடிபுடன் சம்பந்தப்பட்டிருந்த அல்லது முடிபை மேற்கொண்டிருந்த பங்காளர் ஒருவருக்கு அல்லது ஊழியர் ஒருவருக்கு

அல்லது பங்காளர்களில் அல்லது ஊழியர்களில் ஒருவருக்கு தகவலானது தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை எனவும்;

(ii) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான முடிபு தொடர்பில் மதியுரை எதுவும் தகவலை உடைமையில் கொண்டுள்ள பங்காளர் ஒருவரினால் அல்லது ஊழியர் ஒருவரினால் அப்பங்காளருக்கு அல்லது ஊழியருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும்; அல்லது

(iii) தகவலை உடைமையில் கொண்டிருந்த பங்காளர் அல்லது ஊழியர் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு அல்லது அவற்றில் சம்மந்தப்படுவதற்கான முடிபில் சம்பந்தப்படாதிருப்பார் எனவும்,

உறுதிப்படுத்துவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதான அந்நேர உடன்படிக்கையில் பங்காண்மை தொழிற்பாட்டில் இருந்ததென; அத்துடன்

(இ) தகவலானது தெரிவிக்கப்படவில்லை, மதியுரை எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் தகவலை உடைமையில் கொண்டிருந்த பங்காளர் அல்லது ஊழியர் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கு ஆன முடிபில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை.

(3) பங்காளர், பங்காண்மையின் வேறொரு பங்காளரின் அல்லது ஊழியரின் உடைமையில் கொண்டிருக்கின்றதான தகவலை கொண்டிருப்பதாக கருதப்படுகின்ற காரணத்தினால் மட்டும் அப்பங்காண்மையின் சார்பில் தவிர வேறு வகையில் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலை அல்லது

உடன்படிக்கையை செய்துகொள்வதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை பங்காண்மை ஒன்றின் பங்காளர் ஒருவர் மீறுவதாயில்லை.

(4) இப்பிரிவில் தகவல் என்பது பங்காண்மையொன்று உடைமையில் கொண்டிருப்பதாக கருதப்படுகின்றதான தகவலையும் அத்துடன் அத்தகவலை உடைமையில் கொண்டிருந்த பங்காண்மையின் பங்காளர் அல்லது ஊழியர் ஒருவர் உள்ளுறைபவர் ஒருவராக இருக்கின்றார் என்ற தகவலையும் குறிப்பிடுகின்றது.

*ஒப்புறுதி மற்றும் உப - ஒப்புறுதி தொடர்பிலான விதிவிலக்குகள்.*

**138.** (1) நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது-

(அ) ஒப்புறுதி உடன்படிக்கை அல்லது உப-ஒப்புறுதி உடன்படிக்கையின்கீழ் உடன்படிக்கையை செய்து கொள்ளுவது; அல்லது

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையில் அவ்வாறு செய்வதற்கான கடப்பாட்டின்கீழ் பிணையங்களைக் கொள்ளுதல்,

தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

(2) நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவானது –

(அ) அத்தகைய பிணையங்கள் தொடர்பில் ஒப்புறுதி உடன்படிக்கை அல்லது உப-ஒப்புறுதி உடன்படிக்கையின்கீழ் உடன்படிக்கையை செய்துகொள்ளும் ஆள்; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையில் அவ்வாறு செய்வதற்கான கடப்பாட்டின் கீழ் அத்தகைய பிணையங்களைக் கொள்ளுவதற்கான ஆள்,

பெறுகை நோக்கத்திற்காக தனியாக ஆளொருவருக்கு பிணையங்கள் தொடர்பில் தகவலை தெரிவிப்பது தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

ஒழுங்கேற்பாட்டு திட்டம் தொடர்பிலான விதிவிலக்குகள்.

**139.** (1) நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவானது, ஒழுங்கேற்புத் திட்டங்கள், புனர்நிருமாணம் மற்றும் கம்பனிகளைப் கையேற்றல் தொடர்பான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்றதான பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தல் அல்லது தகவல் தெரிவிப்பு என்பவற்றிற்கு ஏற்புடைய தாதல் ஆகாது.

(2) நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது, பிணையங்களைக் கொள்ளுதல் அல்லது கையுதிர்த்தல் ஆனது தீர்வக இல்லம் ஒன்றின் விதிகளுக்கு இணங்க செய்யப்படுகின்ற விடத்து, சந்தை ஒப்பந்தம் ஒன்றைத் தீாக்கும் நோக்கத்திற்காக அல்லது சந்தை ஒப்பந்தம் ஒன்றை தீர்ப்பது தொடர்பாக எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் அல்லது வேறு வழக்கு தொடர்பில் பிணையங்களைக் கொள்ளுதல் செய்கின்ற அல்லது கையுதிர்க்கின்ற தீர்வக இல்லத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது தீர்வக இல்லம் ஒன்றிலிருந்தான அறிவுறுத்தலின் மீது பரிவர்த்தனையானது செயலாற்றுகின்றவிடத்து பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு தொடர்பில் அப்பரிவர்த்தனைக்கு ஏற்புடையதாதலாகாது.

கம்பெனியின் உளக்கருத்தின் அறிவுடனான கம்பெனி ஒன்றிற்கான விதிவிலக்கு.

**140.** (1) கம்பெனி அத்தகைய பிணையங்கள் தொடர்பில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளை செய்துகொள்வதற்கு முன்மொழிவு செய்கின்றதென அல்லது முன்னதாக செய்துள்ளது என அக்கம்பெனி அறிந்துள்ளது என்ற காரணத்தினால் மட்டும் கம்பெனியின் பிணையங்கள் தவிர்ந்த பிணையங்கள் தொடர்பில் கொடுக்கல் வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதாயில்லை.

(2) மூன்றாம் உட்பிரிவிற்கு அமைய, கம்பெனியொன்று, அத்தகைய பிணையங்கள் தொடர்பில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு முன்மொழிவு செய்கின்றதான அல்லது

முன்னதாக செய்துகொண்டுள்ளது என அக்கம்பெனியின் அலுவலர் அறிந்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும் அக்கம்பெனியின் பிணையங்கள் தவிர்ந்த வேறு பிணையங்கள் தொடர்பில் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்ளுவதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதாயில்லை.

(3) இரண்டாம் உட்பிரிவானது, கம்பெனியின் அலுவலர் தமது கடமைகளை புரிகையில் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் பற்றி அறிய வந்திருந்தாலொழிய ஏற்புடையதாதல் ஆகாது.

(4) ஐந்தாம் உட்பிரிவிற்கு அமைய ஆளொருவர், அத்தகைய பிணையங்கள் தொடர்பில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்குப் முன்மொழிவு செய்கின்றார் என அல்லது முன்னரே செய்துள்ளார் என அவ்வாள் அறிந்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும் அக்கம்பெனியின் அப்பிணையங்கள் தவிர்ந்த வேறு பிணையங்கள் தொடர்பில் கம்பெனி ஒன்றின் சார்பில் கொடுக்கல் வாங்கல் ஒன்றை அல்லது உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதாயில்லை.

(5) நான்காம் உட்பிரிவானது முதலாவது குறிப்பிடப்பட்ட கம்பெனியின் அலுவலராக தமது கடமையைப் புரிகையில் அல்லது முதலாவது குறிப்பிடப்பட்ட கம்பெனியில் முகவர் ஒருவராக செயலாற்றுகையில் அவ்வாள் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் பற்றி அறிய வந்திருந்தாலொழிய ஏற்புடையதாதல் ஆகாது.

*தனியாள் ஒருவர் தொடர்பிலான விதிவிலக்கு.*

**141.** தனியாள் ஒருவர் பிணையங்கள் தொடர்பாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளை தாம் செய்துகொள்ளுவதற்கு உத்தேசிக்கின்றார் அல்லது முன்னரே செய்துள்ளார் என தாம் அறிந்துகொள்வதன் காரணமாக மட்டுமே அப்பிணையங்கள் தொடர்பாக கொடுக்கல் வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதன் மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதாயில்லை.

சந்தை இடைத்தரகர்களினால் பரிந்து கேட்கப்படாத கொடுக்கல் வாங்கல்.

**142.** (1) முதலீட்டாளர்கள் அல்லது அதனது பிரதிநிதி சார்பில் பிணையங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற சந்தை இடைத் தரகர் ஒருவர்–

(அ) கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையானது வேறொரு ஆளினால் குறித்த அறிவுறுத்தல் ஒன்றின் கீழ் செய்யப்பட்டிருப்பின் அத்துடன் பிணையங்களை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்தும் சந்தை இடைத்தரகர் ஒருவரினால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரினால் பரிந்து கேட்கப் படவில்லையாயின்;

(ஆ) பிணையங்களை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற சந்தை இடைத்தரகர் அல்லது அவரது பிரதிநிதி அக்கொடுக்கல் வாங்கல் அல்லது உடன்படிக்கை தொடர்பில் வேறு ஆளிற்கு ஏதேனும் மதியுரையை வழங்காதிருந்துள்ளார் எனின் அல்லது கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான வேறு ஆளினுடைய அறிவுறுத்தல்களை பெறுவதற்கு வேறுவகையில் விருப்பமில்லாதிருந்துள்ளார் எனின்; அத்துடன்

(இ) வேறு ஆள் பிணையங்களை வாங்குகின்ற அல்லது விற்பனை செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்தும் சந்தை இடைத்தரகருடன் அல்லது அவரது பிரதி நிதியுடன் இணைந்திருக்கவில்லையாயின்;

பரிவர்த்தனையின் பிணையங்கள் சந்தைமீது கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையை செய்துகொண்டுள்ள வேறு ஆளுக்கு முகவராக கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையை செய்து கொள்வதன்மூலம் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறவில்லை.

(2) இப்பிரிவிலுள்ளது எதுவும், முதல்வர் என்ற அவரது தகைமையில் பிணையங்களை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தொழில் தொடர்பில் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு தொடர்பாக சந்தை இடைத்தரகரின் பொறுப்பைப் பாதித்தலாகாது.

கூட்டு முதலீட்டுத் திட்டம் தொடர்பிலான விதிவிலக்கு.

**143.** நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது எந்தக் கூட்டு முதலீட்டுத் திட்டத்திற்கு கூட்டு முதலீட்டு திட்ட கூறுகள் தொடர்புறுகின்றதோ அந்தக் கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் எவையேனும் பொறுப்புக்களைக் கழித்தும் அத்துடன் கூட்டு முதலீட்டுத் திட்ட கூறுகளை கொள்வனவு செய்வதற்கான ஏதேனும் நியாயமான விதிப்பனவையும் கழித்து சொத்தின் ஆகக்குறைந்த பெறுமதியை குறிப்பீடு செய்வதன் மூலம் நியாயமான முறையில் செயல்முறைக்குகந்ததாகும் வரை கணிப்பிடப்படவேண்டிய நம்பிக்கைப் பொறுப்புறுதியினால் தேவைப்படுத்துகின்றதான விலை ஒன்றில் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் உள்ளடக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்படுவதாகக் கருதப்பட்ட கட்டுறுதியினைத் திரும்ப வாங்குவதற்கு இணங்க, கூட்டு முதலீட்டு திட்டம் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்புறுதி ஒன்றின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரினாலான மீட்பு தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

தகவலின் சமத்துவம் எதிர்வாதம் ஆதல்.

**144.** (1) ஆளொருவர் -

(அ) கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கைக்கான வேறுதிறத்தவர் அறிந்திருப்பின் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது உடன்படிக்கையை செய்து கொள்வதற்கு முன்னர் அத்தகவலை நியாயமான முறையில் அறிந்திருக்கக்கூடியதாக இருப்பின்; அத்துடன்

(ஆ) அவ் ஆள் -

(i) தகவலானது பொதுவாக கிடைக்கக்கூடியதாக வரும் போது அதை வைத்திருக்கக்கூடிய சாத்தியமுள்ளதென்ற பயன்காரணமாக தனக்காக அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக விடயத்திற்கேற்ப, பிணையங்களின் விலையில் அல்லது பெறுமதியில் தேறிப்பெறப்படாத ஈட்டுகையை அல்லது தேறிப்பெறப்படாத நட்டத் தவிர்ப்பு உட்பட அவர் ஏதேனும் ஈட்டுகையை பெறவில்லை என அல்லது ஏதேனும் நட்டத்தை தவிர்க்கவில்லை என; அத்துடன்

(ii) பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தல் நோக்கமானது தகவலானது பொதுவாக கிடைக்கக்கூடியதாக வரும்போது, அதை வைத்திருக்கக்கூடிய சாத்தியமுள்ளதென்ற பயன்காரணமாக தனக்காக அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக விடயத்திற்கு ஏற்றவாறு ஈட்டுகையை உறுதிப்படுத்தும் அல்லது நட்டத்தை தவிர்க்கும் ஏதேனும் நோக்கத்தை உள்ளடக்கவில்லை என,

அத்தகைய நியதிகள் மீதும் அத்தகைய சூழ்நிலைகளிலும் அத்தகைய பிணையங்களை ஆள் கொள்ளுகின்றார் அல்லது கையுதிர்க்கின்றாரெனில்,

135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறவில்லை.

(2) நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் மீறுகை ஒன்று ஆளொருவர் வேறொரு ஆளுக்கு தகவலை தெரிவித்தவிடத்து அல்லது தகவலை தெரிவிக்கப்படச் செய்துள்ளவிடத்து —

(அ) அத்தகவல் 132 ஆம் பிரிவின் பயனாக அது பொதுவாகக் கிடைக்கச் செய்வதற்கு சாத்தியமான முறை ஒன்றில் அறியச் செய்யப்படுகின்ற அதன்விளைவாக மட்டும் தகவலை அவ்வாறு தெரிவிக்கின்ற ஆளின் உடைமைக்கு வந்திருப்பின்; அல்லது

(ஆ) தகவல் அறிவிக்கப்படமுன்னர் அத்தகவலை ஏனைய திறத்தவர், அறிந்திருப்பின் அல்லது அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதாக விருப்பின்.

அது எதிர்வாதம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

*வழக்குத் தொடுநர் எதிர்வாதத்தை பொய்ப்பிக்க வேண்டிய தேவை இல்லை.*

**145.** நூற்றிமுப்பத்தைந்தாம் பிரிவின் கீழான தவறொன்றுக் காக எவரேனும் ஆளுக்கு எதிராக ஆணைக்குழுவினால் செய்யப்படும் குற்றவழக்கொன்றில் அல்லது குடியியல் வலுவுறுத்து கையில் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் இருந்திருப்பின் 136 ஆம், 137 ஆம், 138 ஆம், 139 ஆம், 140 ஆம், 141 ஆம், 142 ஆம், 143 ஆம் மற்றும் 144 ஆம் பிரிவுகளின் பயனைக் கொண்டு அல்லது 135 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளின் பயனைக்கொண்டும் 135 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளை மீறுகை ஒன்றை அமைப்பதிலிருந்து செயலாற்று வதை தடைசெய்வதாக இருக்கும் அந்நிகழ்வு அல்லது சூழ்நிலையில் இல்லாமையை எண்பிப்பதற்கு குற்றவழக்கு தொடுநருக்கு அல்லது ஆணைக்குழுவிற்கு அவசியமாக இருக்காது.

*நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்.*

**146.** ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தியெட்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப் பினும், இப்பாகத்தின்கீழ் புரியப்பட்ட தவறு ஒவ்வொன்றும் இலங்கையின் ஏதேனும் நீதி வலயத்திலுள்ள அமருகின்ற மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன் இப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்ந்தபட்ச தண்டத்தை விதிப்பதற்கான நியாயாதிக்கத்தை கொண்டிருத்தலும் வேண்டும்.

*யார் வழக்குத் தொடுக்கலாம்.*

**147.** இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறு ஒன்று தொடர்பி லான குற்றவழக்கு ஒவ்வொன்றும் சட்டத்துறைத் தலைமைய திபதியினால் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் எழுத்தில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரினால் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

*குறித்தசில பிரிவுகளின் மீறுகைக்கான குடியியல் பொறுப்பு.*

**148.** (1) நூற்றி இருபத்துநான்காம், 125 ஆம், 126 ஆம், 127 ஆம், 128 ஆம் அல்லது 135 ஆம் பிரிவுகளை மீறியுள்ள வேறுஒரு ஆளின் நடத்தை காரணமாக அல்லது நடத்தை மீதான நம்பிக்கை காரணமாக நட்டம் அல்லது சேதத்தை உறுகின்ற ஆளொருவர், அவ்வேறொருஆள் மீறுகை தொடர்பில் தவறொன்றுக்கு குற்றஞ்சார்த்தப்பட்டாலுஞ்சரி அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி அல்லது மீறுகை ஒன்று குற்றவழக்கொன்றில் எண்பிக்கப்பட்டி ருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி அவ்வேறு ஆளுக்கு எதிராக குடியியல்வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதன் மூலம் நட்டத்தொகையை அல்லது சேதத்தொகையை அறவிடலாம்.

(2) இப்பிரிவானது மீறுகையாக அமைகின்ற நடத்தை தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழான ஏதேனும் பொறுப்பை பாதித்தலாகாது.

ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் குடியியல் நடவடிக்கை.

**149.** (1) எவரேனும் ஆள் 124 ஆம், 125 ஆம், 126 ஆம், 127 ஆம், மற்றும் 128 ஆம் பிரிவுகளை மீறியுள்ளார் என ஆணைக்குழுவிற்கு தோன்றுகின்றவிடத்து, ஆணைக்குழு பின்வருவனவற்றுக்கான பொதுமக்கள் அக்கறையில் அது அவசியமானதென கருதுகின்ற விடத்து மீறுகை தொடர்பில் குடியியல் தண்டம் ஒன்றிற்கான கட்டளை ஒன்றை நாடுவதற்கு அவ்வாளுக்கு எதிராக நீதிமன்றத்தில் குடியியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடரலாம்-

(அ) அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட நிகர பணவகையான ஈட்டுகைத்தொகை அல்லது தவிர்க்கப்படும் நட்டத்தொகை என்பவற்றில் மொத்தம் மும்மடங்கு முழுத்தொகையை விஞ்சாதிருக்கவேண்டிய தொகை ஒன்றை அறவிடுதல்; அல்லது

(ஆ) நீதிமன்றமானது மீறுகையின் கடுமையான தன்மை அல்லது பாரதூரமான தன்மை தொடர்பாக தோதானதெனக் கருதுகின்றவாறு பத்து மில்லியன் ரூபாவிற்கு குறையாததும் நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான தொகை ஒன்றில்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான வழக்கொன்றில் ஆணைக் குழுவினால் அறவிடப்படும் தொகையானது -

(அ) மீறுகை தொடர்பில் புலனாய்வு மற்றும் வழக்கு நடவடிக்கை பற்றிய எல்லா ஆகுசெலவுக்குமாக ஆணைக்குழுவின் மீளளிப்புக்கு ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மீறுகையின் பெறுபேறு ஒன்றாக நட்டத்தை அல்லது சேதத்தை உற்றிருந்த ஆட்களுக்கு நட்டஈடு அளிப்பதற்கு ஏற்புடையதாக்கப்படல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது விடயத்துக்கேற்றவாறு ஒவ்வொரு ஆளுக்குமான ஏதேனும் இயல்திறப் பகிர்வுத்தொகை காரணமாக அல்லது எந்த ஆட்களுக்கு நட்டஈடளித்தல் தோதானதாக இருக்கின்றதோ அந்த ஆட்களை நிச்சயித்தலில் அல்லது அறிவிப்பதிலான சிரமம் காரணமாக (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கு நட்டஈடு அளித்தல் செயல்முறைக்கு உகந்ததாக இருக்காது என்று கருதினால் ஆணைக்குழுவானது (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களிற்கு பகிர்ந்தளிக்காது விடுவதாக தீர்மானிக்கலாம் என்பதுடன் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு அத்தகைய தொகையை வரவுவைக்கலாம்.

(4) ஆணைக்குழுவானது,உள்ளூறைபவர் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறி பிணையங்களை கொள்ளுதல் செய்திருப்பின் அல்லது கொள்ளுதற்கு இணங்கியிருப்பின் அல்லது அத்தகைய பிணையங்களைக் கொள்ளுவதற்கு அல்லது கொள்ளுவதற்கு இணங்குவதற்கு வேறொரு ஆளை பயன்படுத்திருப் பின் அல்லது அத்தகைய உள்ளூறைபவர் 135 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவலை அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை மீறி வேறொரு ஆளுக்கு தெரிவித்திருப்பின் அத்துடன் அத்தகைய பிணையங்கள்,பரிவர்த்தனைமீது வியாபாரம் செய்யப்படுவதற்கு அனுமதித்திருப்பின் பின்வருவன தொடர்பான மீறுகை தொடர்பில் குடியியல் தண்டம் ஒன்றிற்கான கட்டளையை நாடுவதற்கு அவ்வுள்ளூறைபவருக்கு எதிராக பின்வரும் வழக்குகள் அனைத்தையும் அல்லது எவற்றையும் பொதுமக்கள் அக்கறைகருதி எடுக்கலாம்.

(அ) பிணையங்கள் ஆனவை உள்ளூறைபவரினால் அல்லது வேறு ஆளினால் கொள்ளப்பட்டிருந்த அல்லது கொள்ளப்படுவதாக உடன்பட்டுக்கொண்டிருந்த விலைக்கும், அத்துடன் தகவலானது பொதுவாக கிடைக்கக்கூடியதாக இருந்திருப்பின் விடயத்திற் கேற்றவாறு கொள்ளும் அல்லது உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நேரத்தில் கொள்ளப்பட்டிருக்கும் விலைக்கும் இடையிலான வேறுபாடாகவிருக்கும்

தொகையினது மூன்று மடங்குக்கு சமமானதொகை ஒன்றாக அறவிடுதல்; அல்லது

(ஆ) நீதிமன்றமானது மீறுகையின் கடுமையான தன்மை தொடர்பாக தோதானதெனக் கருதுகின்றவாறு நூறுமில்லியன் ரூபா தொகையிலும் அதற்கு மேற்படாததும்.

(5) ஆணைக்குழுவானது,உள்ளுறைபவர் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறி பிணையங்களை கையுதிர்த்திருப்பின் அல்லது கையுதிர்ப்பதற்கு இணங்கியிருப்பின் அல்லது அத்தகைய பிணையங்களை கையுதிர்ப்பதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு இணங்குவதற்கு வேறொரு ஆளைப் பயன்படுத்தியிருப்பின் அல்லது அத்தகைய உள்ளுறைபவர் 135 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவலை அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினைமீறி வேறொரு ஆளுக்கு தெரிவித்திருப்பின் அத்துடன் அத்தகைய பிணையங்கள், பரிவர்த்தனைமீது வியாபாரம் செய்யப்படுவதற்கு அனுமதித்திருப்பின் பின்வருவன தொடர்பான மீறுகை தொடர்பில் குடியியல் தண்டம் ஒன்றிற்கான கட்டளையை நாடுவதற்கு அவ்வுள்ளுறைபவருக்கு எதிராக பின்வரும் வழக்குகள் அனைத்தையும் அல்லது எவற்றையும் பொதுமக்கள் அக்கறை கருதி எடுக்கலாம்.

(அ) பிணையங்கள் ஆனவை உள்ளுறைபவரினால் அல்லது வேறு ஆளினால் கையுதிர்க்கப்பட்டிருந்த அல்லது கையுதிர்க்கப்படுவதற்கு உடன்பட்டுக்கொண்டிருந்த விலைக்கும், அத்துடன் தகவலானது பொதுவாக கிடைக்கக்கூடியதாக இருந்திருப்பின் விடயத்துக்கேற்றவாறு கையுதிர்க்கும் அல்லது உடன்படிக்கை செய்துகொள்ளும் நேரத்தில் கையுதிர்க்கப்பட்டிருக்கும் விலைக்கும் இடையிலான வேறுபாடாகவிருக்கும் தொகைளினது மூன்றுமடங்கிற்கு சமமான தொகை ஒன்றாக அறவிடுதல்; அல்லது

(ஆ) நீதிமன்றமானது மீறுகையின் கடுமையான தன்மை தொடர்பாக தோதானதெனக் கருதுகின்றவாறு நூறு மில்லியன் ரூபாவிலும் அதற்கு மேற்படாத தொகையிலும்.

(6) (அ) இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறியமைக்காக இப்பிரிவின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட அடிப்படைமீது தவறொவ்வொன்றும் கணிக்கப்பட்டு செய்யப்பட்ட பண ஈட்டுகையின் அல்லது தவிர்க்கப்பட்ட நட்டத்தின் முழுமொத்தத் தொகையின் மூன்று மடங்கினை விஞ்சாத தொகையை செலுத்துவதற்கான பொறுப்பு ஒப்புக்கொள்ளுதலின் அடிப்படை மீது எவரேனும் ஆளுடன் ஒப்பந்தமொன்றைச் செய்வதிலிருந்து ஆணைக்குழுவை தடுப்பதற்கு இப்பிரிவிலுள்ள எதுவும்பொருள்அமைத்துக்கொள்ளப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) திறத்தவர்கள் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்கு தவறியிருப்பின் அல்லது உடன் படிக்கையின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்று வதற்கு தவறியிருப்பின் மேலே பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு ஒப்புக் கொள்ளுதலானது ஆணைக்குழுவினால் சட்ட நீதிமன்றம் ஒன்றில் தொடரப்பட்ட அடுத்துப் பின்னரான வழக்கு நடவடிக்கை ஒன்றில் ஒப்புக் கொள்ளப்படுதலாகாது.

(7) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகள் இப்பிரிவின் (4) ஆம் (5) ஆம் மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின்கீழ் ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட பணத்தொகை தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் அளிக்கப்படுகின்றதான வழக்கிற்கான ஏதேனும் உரிமை இச்சட்டத்தின் வேறு ஏதேனும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட நட்டம் அல்லது சேதம் உற்றிருந்த ஆளொருவர்மீது அளிக்கப்படுகின்றதான வழக்குக்காக உரிமையை பாதித்தலாகாது.

## பாகம் VI

### நிதி

**150.** இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் பின்வருவன வாதல் வேண்டும் – இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம்.

(அ) ஆணைக்குழுவின் முறையான பணியாற்றுகைக்காக பல்வேறு நிதியங்களைத் தாபித்தல்; அத்துடன்

(ஆ) வேறு பரிகாரம் இல்லாத முதலீட்டாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட நட்டஈட்டை வழங்குவதற்கு நிதியமொன்றைத் தாபித்தல்.

### அத்தியாயம் 1

### ஆணைக்குழுவின் நிதியங்கள்

**151.** (1) பரிவர்த்தனை ஒன்றில் மீது பதியப்பட்ட அல்லது கொள்வனவாளரினாலும் விற்பனையாளரினாலும் அதன் விதிகளின் கீழ் அதற்கு அறிவிக்கப்பட்ட பிணையங்களின் ஒவ்வொரு கொள்வனவு மற்றும் விற்பனை பற்றி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் என்ற வகையாக அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஆயவரி ஒன்று விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். வெவ்வேறு வகுப்பினவான பிணையங்கள் தொடர்பில் வெவ்வேறு வீதங்கள் விதித்துரைக்கப்படலாம். ஆயவரியொன்றை அறவிடுதல்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஆயவரி, வேறேதேனும் சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட வேறேதேனும் வரிக்கு அல்லது ஆயவரிக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்.

**152.** (1) ஆயவரி நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; 151 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஆயவரியின் வரும்படிகள் அதற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். ஆயவரி நிதியம்.

(2) பின்வரும் நோக்கங்களுக்காக, ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் ஆயவரி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல்;

(ஆ) இப்பாகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நிதியம் அல்லது ஆணைக்குழுவின் நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்களை அதிகரித்தல்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

(3) ஆயவரி நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணம், அந்நிதியத்தை பேணிக்காக்கும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

**153.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆணைக் குழுவின் நிதியம்.

(2) நிதியத்துக்கு பின்வருபவை செலுத்தப்படுதல் வேண்டும்–

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காக, பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எல்லாச் சோதனைகளையும் நிறைவேற்றுவதில் உறப்பட்ட செலவுகளாக விதிக்கப்படக்கூடியவாறான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைள்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(ஈ) இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ எத்தகையதுமான ஏதேனும்மூலத்திலிருந்து நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் வகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்; அத்துடன்

(உ) ஆயவரி நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(3) ஆணைக்குழு, அதனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதனால் முதலீடு செய்யப்படலாம்.

**154.** ஆணைக்குழுவின் நிதியாண்டு, ஒவ்வொரு ஆண்டினதும் சனவரி மாதம் முதலாம் நாள் அன்று தொடங்கும் பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியாதல் வேண்டும். நிதியாண்டு.

**155.** (1) ஆணைக்குழு, அதனது வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகள் புத்தகங்களை வைத்திருப்பதற்குச் செய்வித்தல் வேண்டும். கணக்குகளை கணக்காய்வு செய்தல்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

## அத்தியாயம் 2

## முதலீட்டாளர்களுக்கு நட்டஈடு வழங்கும் நிதியம்

நட்டஈட்டு நிதியம்.

**156.** *(1)* எவரேனும் முதலீட்டாளருக்கு வேறு பரிகாரம் இல்லாவிடின், சந்தை இடைத்தரகரொருவரின் ஏதேனும் மோசடியான அல்லது அசட்டையான செயலின் விளைவாக பணவகையான இழப்பை உறுகின்ற அம்முதலீட்டாளருக்கு வரையறுக்கப்பட்ட நட்டஈட்டை வழங்கும் நோக்கத்துக்காக நட்டஈட்டு நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* நட்டஈட்டு நிதியம் பின்வருனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியத்துக்கு வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைள்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு ஆயவரி நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்.

*(3)* நட்டஈட்டு நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

நட்டஈட்டுக் குழுவை நியமித்தல்.

**157.** *(1)* ஆணைக்குழு, அதன் உறுப்பினர்களினுள் இருந்து மூன்று உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்; அவர்கள் ஆணைக்குழுவின் (இதனகத்துப் பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நட்டஈட்டுக் குழுவில் உள்ளடங்கியிருத்தல் வேண் டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட குழு, 158 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் நட்டஈட்டை மதிப்பீடு செய்வதற்கும் அளிப்பதற்கும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் மதிப்பீடு அல்லது அளிப்பின் மீதான அத்தகைய குழுவின் முடிபு, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும்.

நட்ட ஈட்டுக்கான விண்ணப்பம்.

**158.** (1) எவரேனும் இடைத்தரகர் அவரது ஒப்பந்தம்சார் கடப்பாடுகளை எவரேனும் முதலீட்டாளரை நோக்கி எதிர்கொள்வதற்கு இயலாதவராகக் காணப்படுவதன் விளைவாக பண வகையான இழப்பை உற்றிருக்கும் அத்தகைய முதலீட்டாளர், நட்டஈட்டு நிதியத்திலிருந்து நட்டஈடு கோரி குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) குழு, விண்ணப்பதாரரொருவரது நட்டஈட்டு உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாக ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு சான்றைக் காண்பிப்பதற்கு காலத்துக்குக் காலம் அவரைத் தேவைப்படுத்தலாம். விண்ணப்பதாரர் அத்தகைய கோரிக்கைக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, குழு அவரது உரிமைக் கோரிக்கையை அனுமதிக்க மறுக்கலாம்.

(3) குழு, விண்ணப்பதாரரின் உரிமைக் கோரிக்கை பற்றிய விசாரணையொன்றை நடாத்துவதற்கு அவசியம் என எந்நேரத்திலும் கருதினால், அது அவ்வாறு செய்யலாம் என்பதுடன் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்றும் அத்தகைய காலத்திலும் இடத்திலும் சமுகமளிப்பதற்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் அறிவித்தலில் தரப்பட்ட தேதியன்று அத்தகைய விசாரணைக்குத் தோன்றுவதற்கு தவறுகின்றவிடத்து, குழு அவரது உரிமைக் கோரிக்கையை அனுமதிக்க மறுக்கலாம்.

நட்டஈட்டுக் கொடுப்பனவு.

**159.** (1) குழு, விண்ணப்பதாரர் ஒருவரால் உரிமைக் கோரிக்கையின் ஆதரவாகக் காண்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வேறு சான்றினைப் பரிசோதித்த பின்னர் அல்லது விசாரணை ஒன்று நடாத்தப்பட்டதான ஏதேனும் விடயத்தில், அத்தகைய விசாரணையின் முடிவின் மீது நட்டஈட்டுக்கான அத்தகைய உரிமைக் கோரிக்கையை அனுமதிக்கலாம் அல்லது அனுமதி மறுக்கலாம்.

(2) குழு ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அனுமதிக்கின்றவிடத்து, செலுத்தப்படற்பாலதான வரையறுக்கப்பட்ட நட்டஈட்டு மதிப்பீடொன்றை அது செய்தல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பில் அளிப்பொன்றைச் செய்தலும் வேண்டும் அத்தகைய அளிப்பு பற்றிய அறிவித்தல் விண்ணப்பதாரருக்கு எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

### பொது

இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம்.

**160.** இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) ஆவணங்களைக் காண்பித்தல், தகவலை வெளிவிடுதல், முறைப்பாடுகள் முகாமைக் குழுவொன்றைத் தாபித்தல், விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளை நடாத்துதல், தகவலைப் பகிர்தல், இடித்துரைப்பாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் முதலீட்டாளர்கள் சார்பாக ஆணைக் குழுவினால் சேதவீடுகளை அறவிடல் தொடர்பாக இச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பயனுள்ள அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் வினைத்திறனான அமுலாக்கம் மற்றும் வலுவுறுத்தலை உறுதிப்படுத்தல்.

### அத்தியாயம் 1

### நிறுவனம்சார் கட்டுக்கோப்பு தொடர்பான ஏற்பாடுகள்

ஆவணங்களைக் காண்பித்தலும் தகவலை வெளிவிடுதலும்.

**161.** (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், எவரேனும் ஆளை எழுத்திலான அறிவித்தல் மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறும் இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின்

தத்துவங்களை முறையாகப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறும் (ஏதேனும் வரி விதிப்பதற்கும் அறவிடுவதற்கும் ஏற்பாடு செய்கின்ற ஏதேனும் சட்டத்தின் கீழ் வெளிவிடுவதிலிருந்து அல்லது காண்பிக்கப்படுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் தவிர்ந்த) ஏதேனும் தகவலைக் கொடுத்து தவுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டை காண்பிக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) அறிவித்தல் ஒன்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது உட்பிரிவு (1) இன்கீழ் அவ்வறிவித்தலைப் பெறுகின்ற எவரேனும் ஆளின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுக அத்தகைய ஆள் ஏதேனும் சட்டத்தின் கீழ், ஏதேனும் தகவலை வெளிவிடுவதிலிருந்து அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டைக் காண்பிப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டவற்றை செய்கின்றவிடத்து, அத்தகைய வெளிவிடுகை அல்லது காண்பிப்பு அத்தகைய சட்டத்தில் முரணாகவுள்ளது எது எவ்வாறிருப்பினும், அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் மீறுகையொன்றாக கருதப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் இணங்கியொழுக கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணம் ஒன்றின் அல்லது இலத்திரனியல் பதிவேடொன்றின் உள்ளடக்கங்கள் —

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும்;

(ஆ) ஆணைக்குழு திறத்தவர் ஒருவராகவிருக்கின்றவிடத்து நீதிமன்ற வழக்கு நடவடிக்கையொன்றிலும்;

(இ) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் போதும்; அல்லது

(ஈ) அத்தகைய தகவல், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டை கொடுத்துதவும் ஆளின் சம்மதத்துடனும்.

அன்றி வேறு எவரேனும் ஆளுக்கு ஆணைக்குழுவினால் வெளியிடப் படுதலோ அல்லது அறிவிக்கப்படுதலோ ஆகாது.

(4) தகவல்,ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டை கொடுத்துதவும் ஆள், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை, விதிகளை அல்லது பணிப்புரைகளை மீறியமைக்காக ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது உட்பிரிவு (3) இன் பந்தி (ஈ) இன் கீழான சம்மதம் தேவைப்படுத்தப்படுவதில்லை.

விசாரணைகளும் புலனாய்வுகளும்.

**162.** (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் ஆணைக் குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப் பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் அவசிய மானதென அல்லது உசிதமானதென அது கருதக்கூடியவாறாக புலனாய்வுகளை நிறைவேற்றலாம் அல்லது விசாரணைகளை நடாத்தலாம் என்பதுடன் ஆணைக்குழுவிடம் -

(அ) பிணையங்களில் கொடுக்கல்வாங்கல்கள், எவரேனும் ஆளினால் முதலீட்டாளர்கள் அல்லது பிணையங்கள் சந்தைக்கு தீங்குவிளைவிக்கும் முறையொன்றில் கையாளப்படுகின்றது என்றும்; அல்லது

(ஆ) ஏதேனும் சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், முதலீட்டாளர் அல்லது எவரேனும் வேறு ஆள் இச்சட்டத் தின் எவையேனும் ஏற்பாடுகளை, அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது விதிகளை அல்லது ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீறியிருக் கிறார் என்றும்,

நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, அத்தகைய நோக்கத்துக்காக, எவரேனும் ஆளை அதன் முன் அல்லது அவர் முன் தோன்றி சாட்சி அளிக்குமாறு அல்லது அத்தகைய புலனாய்வு

அல்லது விசாரணையின் நோக்கத்திற்காகத் தேவைப்படக்கூடிய வாறான அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு கட்டளைவிட்டழைக்கலாம் அத்துடன் கோரலாம்.

(2) ஆணைக்குழுவின் முன் தோன்றுமாறு கட்டளையிட்டழைக் கப்பட்ட அல்லது கோரப்பட்ட எவரேனும் ஆள் அல்லது உட்பிரிவு (1) இன் கீழ் ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் வாய்மூலமாகப் பரிசோதிக்கப்படலாம் என்பதுடன் அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று எழுத்தில் இடவும் படலாம். எழுத்தில் இடப்பட்ட அத்தகைய ஒவ்வொரு கூற்றும் அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். ஆயின் அதற்குக் கையொப்ப மிடுவதற்கு முன்னர், அத்தகைய கூற்றானது அத்தகைய ஆளுக்கு வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும் அல்லது அது எழுதப்பட்டுள்ள மொழி அவருக்கு விளங்காததாயிருந்தால் அது அவர் விளங்கக் கூடியதான ஒரு மொழியில் அவருக்கு மொழிபெயர்த்துக்கூறப் படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூற்றை விளக்குவதற்கு அல்லது அதற்கு சேர்ப்பதற்கு அவர் சுதந்திரமுடையவராக விருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் அவ்வாறு செய்யுமாறு தேவைப் படுத்தப்படும் போது ஆணைக்குழுவின் அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஆளின்முன் தோன்றத் தவறுகின்ற அல்லது ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிக்க மறுக்கின்ற அல்லது அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தும் போது அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டினை காண்பிக்க அல்லது அவற்றை பிரதிகள் எடுக்க மறுக்கின்ற அல்லது ஆணைக்குழு வினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக் கப்பட்ட ஆளொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு அறிந்துகொண்டே ஏதேனும் பிழையான விடையை அளிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன் கீழ் புலனாய்வு அல்லது விசாரணை ஒன்றை நடாத்தும் நோக்கத்துக்காக, ஆணைக்குழு, அத்தகைய அலுவல் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் அல்லது விதியின் அல்லது பணிப்புரையின் கீழ் வைத்திருக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டை பரிசோதிப்பதற்கும் அதனைப் பிரதி எடுப்பதற்கும், சந்தை நிறுவனம் ஒன்றின் அல்லது சந்தை இடைத்தரகரின் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் எவையேனும் வளவுகளுக்குள், நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் நுழைவதற்கும் அத்துடன் ஆணைக்குழுவிடம் சட்டத்தின் கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அத்தகைய தகவல் தேவைப்படுத்தப்படலாம் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, சான்றைச் சேகரிப்பதற்கு அவர்களின் கணினி முறைமைகளை அணுகுவதற்கும் தேவைப்படுத்தப்பட்டவாறாக 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டத்தின்கீழ் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கும் எவரேனும் நிபுணருக்கும் எழுத்துமூலம் அதிகாரமளிக்கலாம்.

(5) ஒராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்திலும் அதன் நோக்கங்களுக்காகவும் சமாதான அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச்சட்டத்தின் ஏற்பாடுகள், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் தொடர்பாக இச்சட்டத்தில் (4) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது வேறு ஏதேனும் பிரிவின்கீழ் புலனாய்வொன்றை அல்லது விசாரணையை நடாத்துவதில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

முடக்குதல் கட்டளைகளை வழங்குதல்.

**163.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின் மீறுகை பற்றி நியாயமான சந்தேகம் இருப்பதன்மேல், ஆணைக்குழு பிரிவு 162 இன் நியதிகளின்படி ஆளொருவர் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது விசாரணையொன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற எச்சந்தர்ப்பத்திலும் (இதனகத்துப்பின்னர் "முடக்குதல் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்புரை யொன்றை —

(அ) ஆளொருவரின் சொத்துக்களை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை கையுதிர்ப்பதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்தும்;

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது வகுப்பினவான கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதிலிருந்து ஆளொருவரைத் தடைசெய்தும்; அல்லது

(இ) ஆளொருவரை பொதுமக்களிடமிருந்து நிதிகளைப் பரிந்து கேட்பதிலிருந்தும் தடைசெய்தும்,

வழங்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்பட்ட முடக்கல் கட்டளையொன்று, அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு சந்தை நாட்களை விஞ்சிய காலப்பகுதியொன்றிற்கு வலுவிலிருத்தலாகாது.

(3) ஆணைக்குழு உட்பிரிவு (1) இன் கீழ் முடக்கல் கட்டளை யொன்றை வழங்கியதன் பின்னர், முடக்கல் கட்டளை வலுவில் இருக்கும் காலப்பகுதியினுள் அத்தகைய முடக்குதல் கட்டளையை உறுதிப்படுத்துவதை நாடி நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், சூழ்நிலைகள் அவ்வாறு அவசிய மாக்கினால், இன்னலுறும் திறத்தவர் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்று கொடுக்கப்பட்டபின்னர், தேவைப்பட்டவாறு அதற்கு நீடிப்பொன்றை கோருதலும் வேண்டும்.

(4) அத்தகைய முடக்குதல் கட்டளையை வழங்குவதற்கு போதுமான காரணங்கள் உள்ளது என நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் முடக்குதல் கட்டளையை உறுதிப்படுத்தலாம் என்பதுடன் அதனை நீடிப்பதற்கான போதுமான காரணங்கள் உள்ளது என அது திருப்திப்படுகின்றவிடத்து, அது தோதானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்கு நீடிப்புக்களை வழங்கலாம்.

(5) உட்பிரிவு (3) இன் நியதிகளின் படி, நீதிமன்றத்துக்கு ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மேல், நீதிமன்றம், முடக்குதல் கட்டளையொன்றின் கீழ் சொத்தை முகாமை செய்தல் தொடர்பில் தோதான கட்டளையொன்றைச் செய்தல் வேண்டும்.

*முறைப்பாடுகள் முகாமைக் குழுவினாலான விசாரணை.*

**164.** (1) ஆணைக்குழு, உயர் தொழில்சார் துர்நடத்தை அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது சந்தை நிறுவனமொன்றுக்கு, சந்தை இடைத்தரகருக்கு, நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றை மீறுதல் தொடர்பாக எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளை கேட்பதற்கும் தீர்மானிப்பதற்கும் முறைப்பாட்டு முகாமைக் குழுவொன்றைத் தாபிக்கலாம்.

(2) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அல்லது உசிதமானதென அது அல்லது அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம் என்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக எவரேனும் ஆளை குழுவின் முன் தோன்றி சாட்சி அளிக்குமாறு அல்லது அத்தகைய விசாரணையின் நோக்கத்துக்காக தேவைப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களை காண்பிக்குமாறு கட்டளைவிட்டழைக்கலாம் அத்துடன் கோரலாம்.

(3) ஆணைக்குழு, முறைப்பாடுகளைக் கையாளவும் முறைப் பாடுகளையும் விதிகள் என்ற வகையில் அதனுடன் தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் தீர்மானிக்கவும் தோதான நடைமுறை களையும் நடவடிக்கைமுறைகளையும் தாபித்தல் வேண்டும்.

(4) முறைப்பாடுகள் முகாமைக் குழு, ஆளொருவரினால் செய்யப்பட்ட எழுத்திலான ஏதேனும் முறைப்பாட்டைப் பெறுவதன் மேல், காண்பிக்கப்பட்ட சான்றைப் பரிசோதிக்கலாம் என்பதுடன் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகள் அல்லது சந்தை நிறுவனமொன்றின் எவையேனும் விதிகள் மீறப்பட்டுள்ளதா வென்று தீர்மானிக்கலாம்.

(5) முறைப்பாடுகள் முகாமைக்குழு, அத்தகைய சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கு கேட்கப்படுவ தற்கான வாய்ப்பொன்றை அளிக்காமல் ஏதேனும் தீர்மானத்தைச் செய்தல் ஆகாது.

(6) சந்தை நிறுவனமொன்று, சந்தை இடைத்தரகர், நிரற்படுத்தப் பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது பதிவு செய்யப்பட்ட ஆள் இச்சட்டத்தின் கீழ் ஏற்பாடொன்றை, ஒழுங்குவிதியை, விதியை அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையை அல்லது சந்தை நிறுவனம் ஒன்றின் விதிகளை மீறியுள்ளார் என முறைப்பாடுகள் முகாமைக்குழு தீர்மானிக்கின்றவிடத்து, ஆணைக்குழு, ஒன்றில் அத்தகைய விதப்புரைகளுக்கு பயன்கொடுப்பதற்கு தோதான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது தோதான அதிகாரசபைக்கு மேலதிக புலனாய்வுக்காக கருமத்தை ஆற்றுப்படுத்துவதற்கு தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) முறைப்பாடுகள் முகாமைக் குழுவின் முடிபினால் இன்னலுற்ற திறத்தவரொருவர் முடிபின் மீளாய்வுக்காக ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

துணைச் சேவை வழங்குநர்கள்.

**165.** (1) ஆணைக்குழு, சந்தை நிறுவனமொன்று, சந்தை இடைத்தரகர் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனி தொடர்பில் நிறைவேற்றப்பட்ட உயர்தொழில்சார் சேவைகள் தொடர்பாக துணைச் சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல் தெளிவுபடுத்தல் அல்லது விளக்கத்தை நாடுவதற்கு உரித்தளிக்கப்படுதல் வேண்டும்.

(2) சந்தை நிறுவனமொன்றிற்கு, சந்தை இடைத்தரகருக்கு அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு அளிக்கப்பட்ட சேவைகள், முதலீட்டாளர்களின் நலனுக்கு தீங்கு விளைவிக்கிறது அல்லது தீங்கு விளைவிப்பதற்கு சாத்தியம் கொண்டுள்ளது என்ற கருத்தை ஆணைக்குழு கொண்டிருக்கின்றவிடத்து, ஆணைக்குழு, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான திருத்த நடவடிக்கையை எடுப்பதற்கு அத்தகைய துணைச் சேவை வழங்குநருக்கு பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(3) ஆணைக்குழு, அது அவசியமெனக் கருதுகின்றவிடத்து, துணைச் சேவை வழங்குநர்களின் கடமைகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்பாடு செய்வதற்காக வழிகாட்டுநெறிகள் அல்லது விதிகளை ஆக்கலாம்.

உடன் படிக்கைகள் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அமுல் படுத்தல்.

**166.** ஆணைக்குழு பிணையங்கள் சந்தைகளில் பிணையங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தும் பணிகள் பற்றிய தகவலைப் பகிர்தலுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய வேறு ஒழுங்கமைப்புகளுடன் உடன்படிக்கைகளை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம்.

தகவல் மற்றும் ஒத்துழைப்பைப் பகிர்தல்.

**167.** (1) ஆணைக்குழு, அதன் சொந்த முன்னெடுப்பில் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரின் வேண்டுதலில் அல்லது தகுதிவாய்ந்த சட்ட நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் வகையாக பொலிஸ் அலுவலர் மூலம் பின்வருவனவற்றைச் செய்யலாம் –

(அ) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு செய்யும் அலுவலர் ஒருவரினால் முன்னர் காண்பிக்கப்பட்டுள்ள, கைப்பற்றப்பட்டுள்ள, தடுத்துவைக்கப்பட்டுள்ள அல்லது உடைமையில்

எடுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனம், புத்தகம், ஆவணம், பொருள், சாமான்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறுவகையாக ஏதேனும் வடிவத்தில் எத்தகையதுமானதையும் அணுகுவதற்கும் பரிசோதிப்ப தற்கும் பொலிஸ் அலுவலர் ஒருவரை அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரை அனுமதித்தல்; அல்லது

(ஆ) ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சோதனையின் போதும், எவரேனும் ஆள் தொடர்பில் ஆணைக்குழுவின் புலனாய்வு செய்யும் அலுவலர் ஒருவ ரின் அல்லது எவரேனும் அலுவலரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதின் போதும் அல்லது அவரின் கடமைகளை நிறைவேற்றுவதின் போதும் அவரால் கைப்பற்றப்பட்ட, தடுத்துவைக்கப்பட்ட அல்லது உடைமையில் எடுக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறுவகையாக ஏதேனும் வடிவத்தின் எத்தகையதுமானதின் பிரதியொன்றை பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு அல்லது எவரேனும் பகிரங்க அலுவலருக்கு வழங்குதல்.

(2) ஆணைக்குழு அது அவசியமெனக் கருதுகின்றவிடத்து, ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகார சபையுடன் கூட்டிணைப்பதற்கு ஒழுங்குபடுத்தும் ஒழுங்கேற்பாடு களை செய்துகொள்ளலாம்; அவை பின்வருவனவற்றை உள்ளடக்கு தல் வேண்டும்–

(அ) ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையிடமிருந்து ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டைப் பெற்றுக்கொள்ளல்; அத்துடன்

(ஆ) ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையுடன் ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டைப் பகிர்தல்.

(3) ஆணைக்குழு, வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபை யொன்று வலுவுக்கிடுக்கின்ற அல்லது நிருவகிக்கின்ற சட்ட அல்லது ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடொன்றின் சார்த்தப்பட்ட மீறுகையை புலனாய்வு செய்வதற்கான உதவிக்காக வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையிடமிருந்தான எழுத்திலான கோரிக்கையொன்றைப் பெறுவதன் மேல் சார்த்தப்பட்ட மீறுகையின் புலனாய்வை நிறை வேற்றுவதன் மூலம் வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபைக்கு உதவி வழங்கலாம் அல்லது ஆணைக்குழு அந்த நோக்கத்துக்காக தகுதியானதாகக் கருதுகின்றவாறாக வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபைக்கு அத்தகைய உதவியை வழங்கலாம்.

(4) உட்பிரிவு (3) இன் கீழ், உதவியை அளிப்பது பொதுமக்கள் அக்கறைக்காகவிருக்குமா என்பதைத் தீர்மானிப்பதில் ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும் -

(அ) வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபைக்கு உதவி வழங்குவதற்காக உறப்பட்ட ஏதேனும் ஆகுசெலவை அல்லது செலவுகளை வெளிநாட்டு மேற்பார்வை அதிகார சபை ஆணைக்குழுவுக்கு செலுத்துமா என்பதையும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவிலிருந்தான உதவிக்கான ஒப்பீட்டளவி லான கோரிக்கையொன்றுக்கு பதிலளிக்கும் வகையில் பரஸ்பர உதவியை வழங்குவதற்கு வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபைக்கு முடியுமா என்பதையும் விரும்புகின்றதா என்பதையும்

(5) இப்பிரிவில் -

“உள்நாட்டு மேற்பார்வை அதிகாரசபை” என்பது, 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பணச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்தியவங்கி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர், பொலிஸ் மற்றும் வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனப் பொருள்படும்;

"வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபை" என்பது, இச்சட்டத் தின் கீழ் ஆணைக்குழுவின் பணிகளுக்கு நேரொத்ததான பணிகளைப் பிரயோகிக்கின்ற வெளிநாட்டு அதிகாரசபை யொன்று அல்லது இலங்கைக்கு வெளியே ஒழுங்கு படுத்தும் பணிகளைப் பிரயோகிக்கின்ற எவரேனும் ஆள் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பு மற்றும் எந்த வெளிநாட்டு அதிகாரசபையொன்று தொடர்பில், அத்த கைய ஒழுங்கேற்பாட்டை செய்து கொள்வது அல்லது அத்தகைய உதவியை அளிப்பது பொதுமக்கள் அக்கறைக்கு விரும்பத்தக்கதும் அவசியமானதும் என ஆணைக்குழு கருதுகின்றதோ அந்த வெளிநாட்டு அதிகார சபையொன்று எனவும் பொருள்படும்; அத்துடன்

"பகிரங்க அலுவலர்" ஆனது அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையின் மூலம் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக் கப்பட்ட கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இடித் துரைப்பாளர் பாதுகாப்பு.

**168.** (1) தொழில்தருநர் ஒருவர், இச்சட்டம் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகள் அல்லது சந்தை நிறுவனமொன்றின் ஏதேனும் விதியின் மீறுகைகள் அல்லது நிகழக்கூடிய மீறுகைகள் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு தகவலை வழங்கும் ஊழியத்தில் உள்ள ஆளொருவரை பொறுப்பு விடுவித்தல், முடிவுறுத்தல், பதவிகுறைத்தல் அல்லது அவருக்கு தொல்லை ஏற்படுத்துதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1) இன் கீழ், ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவல ருக்கு தகவலை வழங்குகின்ற அல்லது வழங்கியுள்ள அத்தகைய ஆளுக்கு எதிராகப் பழிவாங்கும் எவரேனும் தொழில்தருநர், அத்தகைய ஆளுக்கு கேட்கப்படுவதற்கு வாய்ப்பொன்றை வழங்கியதன் பின்னர் நிருவாகத் தண்டத்திற்கு உட்படுத்தப்பட லாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "ஊழியத்தில் உள்ள ஆள்" ஒருவர், பணிப்பாளர் ஒருவர், பங்காளர், பிரதான நிறைவேற்று அலுவலர், பிரதான நிதிசார் அலுவலர், கம்பெனிச் செயலாளர், உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது வேறு எவரேனும் ஊழியர் என்பதை உள்ளடக்குகிறது.

(4) ஆணைக்குழு, அளிப்பொன்று வழங்குதல் தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் அடிப்படையில் வெற்றிகரமான வலுவுறுத்தல் நடவடிக்கையொன்றுக்கு இட்டுச் செல்லும் தகவலை வழங்குகின்ற இடித்துரைப்பாளர் ஒருவருக்கு அளிப்பொன்றை வழங்கலாம்.

*அமைச்சருக்கு தகவலை கொடுத்துதவுதல்.*

**169.** அமைச்சர், காலத்துக்குக் காலம், ஆணைக்குழுவினால் அந்தரங்கமானது எனக் கருதப்படும் தகவல் தவிர ஆணைக்குழுவின் வேலை தொடர்பான விபரத்திரட்டுக்கள், கணக்குகள் மற்றும் வேறு தகவலை அவர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய படிவத்தில் அவருக்கு கொடுத்துதவுவதற்கு ஆணைக்குழுவிடம் எழுத்தில் கோரலாம் என்பதுடன் ஆணைக்குழு அத்தகைய தகவலை வழங்குதலும் வேண்டும்.

*சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.*

**170.** (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது ஆணைக்குழுவின் அலுவலர்களுள் எவருக்கேனும் எதிராக, இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எவையேனும் செயல்களுக்காகத் துடர்ச்சி எதுவும் அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட்ட அல்லது ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட எவையேனும் ஆகுசெலவுகள் ஆணைக்குழுவின் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மேல், அவரால் செய்யப்படும்

அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால் அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் 2

### வலுவுறுத்தல் அமைப்பு முறை தொடர்பான ஏற்பாடுகள்

**171.** (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் அல்லது விதிகள் அல்லது பணிப்புரைகளின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடு எதனையும் மீறுகின்ற; *தவறுகள்.*

(ஆ) அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதாக அல்லது பிழையானதாக அல்லது பிழைவழியுய்க்கின்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனும் தகவல் அல்லது ஏதேனும் விபரத்திரட்டு, ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேடு அல்லது கூற்றை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது ஏதேனும் விதி அல்லது பணிப்புரையின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்காக கொடுத்துதவுகின்ற அல்லது காண்பிக்கின்ற;

(இ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஆணைக்குழுவின் அலுவலரொருவர் அல்லது ஆணைக்குழு எவ்வாளுடன் உடன்

படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடு களின்கீழான அவரது கடமைகளைப் புரிவதில் வேண்டுமென்றே தடை செய்கின்ற;

(ஈ) ஏதேனும் தகவலை அல்லது இலத்திரனியல் பதிவேட்டை ஏதேனும் முறையில் பொய்யான தாக்குகின்ற அல்லது சந்தை நிறுவனமொன்றின், சந்தை இடைத்தரகரின் அல்லது நிரற்படுத்தப் பட்ட பகிரங்க கம்பெனியொன்றின் அல்லது அத னுடன் தொடர்பான கம்பெனிகளுள் ஏதேனு மொன்றின் தொழில் தொடர்பான எவையேனும் புத்தகங்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடு களில் ஏதேனும் பிழைவழியுய்க்கும் அல்லது பொய்யான தகவலைத் தேக்கிவைக்கின்ற; அல்லது

(உ) எவரேனும் ஆளை மோசடி செய்யும் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தத்துவத்தை நிறைவேற்றுவதைத் தடுக்கும், தாமதப்படுத்தும் அல்லது தடைசெய்யும் நோக்கத்துடன் இச்சட்டத் தின் கீழ், அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைக ளின் கீழ் வைக்கப்படுவதற்கு அல்லது பேணு வதற்கு தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது இலத்திர னியல் பதிவேடு அல்லது கணக்குகளை அழிக்கின்ற, மறைத்து வைக்கின்ற, உருவழிக் கின்ற, மாற்றுகின்ற, அனுப்புகின்ற அல்லது அனுப்புவதற்கு முயற்சி செய்கின்ற அல்லது அதன் வளவுகளிலிருந்து நீக்குவதற்கு அல்லது இலங்கைக்கு வெளியே அனுப்புவதற்கு வேறு எவரேனும் ஆளுடன் சதி செய்கின்ற,

எவரேனும் ஆள், இப்பிரிவின் அடுத்துப் பின்னரான உட்பிரிவு களில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக தவறொன்றிற்கு குற்றவாளி யாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தண்டம் எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாததால் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகக் காணப்படும் ஆள் எவரும், நீதிவான் ஒருவரி னாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன் மேல் பத்து மில்லியன் ரூபாவுக்கு குறையாததும் நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பண மொன்றுக்கு அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி யொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறு எதுவும் கூட்டிணைக்கப் பட்டுள்ள குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர் முகாமையாளர் அல்லது வேறு அதையொத்த அலுவலர் ஆக இருந்த ஆள் எவரும், அத்தகைய தவறானது அவரது அறிவுக் கெட்டாமல் அல்லது மறைமுக ஆதரவு இன்றிப் புரியப்பட்டது எனவும் அல்லது அவரின் பணிகளின் தன்மையையும் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அவர் பிரயோகித் திருக்க வேண்டியவாறான எல்லா விழிப்புக் கவனத்தையும் அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குப் பிரயோகித்தார் எனவும் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் ஊழியர் ஒருவராக விருக்கின்ற அல்லது அதன் சார்பாக செயலாற்றுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளை மீறுகின்றவிடத்து, கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது ஊழியர் எவரின் சார்பில் செயலாற்றுகின்றாரோ அவர் அத்தகைய தவ றானது அவரது அறிவுக்கெட்டாமல் அல்லது மறைமுக ஆதரவின்றிப்

புரியப்பட்டது எனவும் அல்லது அது விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு அது பிரயோகித்திருக்க வேண்டியவாறான எல்லா விழிப்புக் கவனத்தையும் அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குப் பிரயோகித்தது எனவும் எண்பித்தாலன்றி அத்தகைய ஏற்பாட்டை மீறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின், எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின் எவரேனும் ஆளினாலான ஏதேனும் மீறுகை தொடர்பில், இச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் சட்ட அல்லது நிருவாக வழக்கு நடவடிக்கைகளில், அத்தகைய ஆளுக்கு எதிராக அத்தகைய மீறுகை தொடர்பில் தொடுக்கப்பட்ட வேறு எவையேனும் சட்ட அல்லது நிருவாக வழக்கு நடவடிக்கைகளுக்கும் அதன் கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் தடைகளுக்கும் உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*குற்றவியல் நடைமுறைக்கு ஏற்புடையதான சட்டங்கள்*

**172.** (1) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவைச் சட்டம், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எல்லா குற்றவழக்குகள் தொடர்பில் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

(2) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகள், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்களின் சான்றின் ஏல்தகவுடைமை தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும்.

*தவறுகளை ஒத்திணக்குதல்.*

**173.** இச்சட்டத்தின் பாகம் V இல் நிரற்படுத்தப்பட்ட தவறுகள் தவிர, ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழ் தவறானது புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய தவறுக்கு விதிக்கப்படற்பாலதான ஆகக்கூடிய குற்றப்பணத்தின் அரைப் பங்கினை விஞ்சாத பணத்தொகையொன்றுக்கு அத்தகைய தவறை ஒத்திணக்கலாமென்பதுடன் இப்பிரிவின் கீழ் தவறொன்றை ஒத்திணக்குவதில் ஆணைக்குழுவினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

நிருவாகத் தடைகளை விதிப்பதற்கான ஆணைக் குழுவின் தத்துவம்.

**174.** (1) ஆணைக்குழு, அதன் குறிக்கோள்களைப் பின்பற்றுவதில் இச்சட்டத்தின் பாகம் V இல் நிரற்படுத்தப்பட்ட தவறுகளுக்காக தவிர, இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடுகள், ஒழுங்கு விதிகள், விதிகள் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் திறத்தவர்களுக்கிடையிலான ஏதேனும் பொறுப்பேற்பு தொடர்பில் எவரேனும் ஆளுடன் வலுவுறுத்தப்படற்பாலதான தீர்த்துவைத்தல் உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடு செய்யப்பட்ட ஆள், ஆணைக்குழுவின் சம்மதத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் நியதிகளை மீளப்பெறலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(3) ஆணைக்குழு, உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் ஏதேனும் நியதியை மீறியுள்ளார் எனக் கருதினால் அது, உட்பிரிவு (4) இன் கீழ் கட்டளையொன்றிற்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(4) நீதிமன்றம், உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் நியதியொன்றை மீறியுள்ளார் எனத் திருப்திப்பட்டால், அது பின்வரும் கட்டளைகளை வழங்கலாம்:-

(அ) தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் அந்த நியதிக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆளைப் பணிக்கும் கட்டளை ஒன்று;

(ஆ) அவ்வாள் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பெற்றுள்ளதும் நியாயமான முறையில் மீறுகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதானதுமான ஏதேனும் நிதிசார் நன்மை அளவு வரையான தொகையொன்றை எவரேனும் ஆளுக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு செலுத்துவதற்கு அத்தகைய ஆளை பணிக்கும் கட்டளை ஒன்று;

(இ) மீறுகையொன்றின் விளைவாக இழப்பு அல்லது சேதத்தை உற்ற எவரேனும் வேறு ஆளுக்கு நட்டஈடளிப்பதற்கு அத்தகைய ஆளைப் பணிப்பது தோதானது என நீதிமன்றம் கருதும் கட்டளை ஒன்று; அல்லது

(ஈ) நீதிமன்றம் தோதானது எனக் கருதும் ஏதேனும் வேறு கட்டளை.

(5) பாகம் V இல் நிரற்படுத்தப்பட்ட தவறுகள் தொடர்பானவை தவிர, எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடொன்றை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியொன்றை மீறினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அல்லது பதிவின் ஏதேனும் நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை மீறினால் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறினால் அல்லது சந்தை நிறுவனமொன்றின் விதிகளின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு, ஏதேனும் எழுத்திலான அறிவித்தல், வழிகாட்டு நெறிகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரை அல்லது அதனால் விதிக்கப்பட்ட நிபந்தனை அல்லது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் விதிக்கு இணங்கியொழுகத் தவறினால், ஆணைக்குழு நிருவாக தண்டங்களை விதிக்கலாம் அல்லது பின்வரும் நிருவாக நடவடிக்கைகளை எடுக்கலாம்:-

(அ) அத்தகைய ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள், விதிகள், எழுத்திலான அறிவித்தல், நிபந்தனை, பணிப்புரை அல்லது வழிகாட்டு நெறிக்கு இணங்கியொழுக, அவற்றை அவதானிக்க, வலுவுறுத்த அல்லது அவற்றிற்கு பயன் கொடுக்க மீறுகையில் உள்ள ஆளுக்கு பணித்தல்;

(ஆ) மீறுகையில் உள்ள ஆளுக்கு, மீறுகையின் கடுமையான தன்மை அல்லது பாரதூரமான தன்மையின் விகிதாசாரப்படி தண்டம் ஒன்றை விதித்தல்; ஆனால் எந்நிகழ்விலும் ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது.

(இ) மீறுகையில் உள்ள ஆளைக் கண்டித்தல்;

(ஈ) அத்தகைய மீறுகையால் இன்னலுற்ற வேறு எவரேனும் ஆளுக்கு இழப்பீட்டைச் செய்தல் உள்ளடங்கலாக, மீறுகையைப் பரிகரிப்பதற்கு ஆணைக்குழு பணிக்கின்ற வாறான அத்தகைய நடபடிகளை எடுப்பதற்கு மீறுகையில் உள்ள ஆளைத் தேவைப்படுத்துதல் அல்லது அத்தகைய மீறுகையின் விளைவைத் தணித்தல்;

(உ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனி ஒன்றின் மேம்படுத்துனர் ஒருவர் அல்லது பணிப்பாளர் ஒருவர் விடயத்தில், மேலேயுள்ள பந்திகள் (அ) இலிருந்து (ஈ) வரையானவற்றின் கீழ் எடுக்கப்படக்கூடியவாறான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, ஆணைக்குழுவினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் :-

(i) மேம்படுத்துனர் அல்லது பணிப்பாளர் அல்லது மேம்படுத்துனருடன் அல்லது பணிப்பாளருடன் தொடர்பான எவரேனும் ஆளுக்கு சட்ட இசைவுத் தாமதமொன்றை விதித்தல் அல்லது நிரற்படுத் தப்பட்ட பகிரங்க கம்பெனியின் பிணையங்கள் அல்லது ஆணைக்குழு தகுதியானதாகக் கருதுகின்ற வேறு எவையேனும் பிணையங்களில் மேம்படுத்துனர் அல்லது பணிப்பாளர் அல்லது மேம்படுத்துனருடன் அல்லது பணிப்பாளருடன் தொடர்பான எவரேனும் ஆளினாலான ஏதேனும் வியாபாரத்தை அல்லது ஏதேனும் கையாளுகை யைத் தடை செய்தல்; அல்லது

(ii) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் பணிப்பா ளர் பதவியிலிருத்தல் பொதுமக்கள் அக்கறைக்கு பங்கம் விளைவிக்கின்றது என்ற பொருள்பட்ட பகிரங்கக் கூற்றொன்றை வழங்குதல்.

(6) ஆணைக்குழு, மீறுகையில் உள்ள ஆளுக்கு கேட்கப்படுவதற் கான வாய்ப்பொன்றை வழங்காமல் உட்பிரிவு (5) இன் கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(7) உட்பிரிவு (5) இன் பந்தி (ஈ) இன் நோக்கங்களுக்காக, மீறுகையில் உள்ள ஆளொருவரினால் இழப்பீடு செய்யப்பட வேண்டுமா அல்லவா என்பதை தீர்மானிப்பதில் ஆணைக்குழு பின்வருவனவற்றை கருத்திற் கொள்ளுதல் வேண்டும் :-

(அ) மீறுகையில் உள்ள அத்தகைய ஆளுக்கு திரண்டுள்ள இலாபங்கள்; அல்லது

(ஆ) மீறுகையொன்றின் விளைவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களினால் இழப்பு உறப்பட்டுள்ளதா அல்லது வேறு வகையில் பங்கமான முறையில் பாதிக்கப்படுள்ளார் களா என்றும்.

(8) ஆணைக்குழு, சந்தை நிறுவனமொன்றின் விதிகளின் கீழ் எவரேனும் ஆளுக்கு எதிராக உட்பிரிவு (5) இன் கீழ் ஏதேனும் நடவடிக்கை ஒன்றை எடுக்கின்றவிடத்து, அது தன்னால் எடுக்கப் படும் நடவடிக்கையை சந்தை நிறுவனத்துக்கு அறிவித்தல் வேண் டும்.

(9) இப்பிரிவில் எதுவும், பின்வருவனவற்றைச் செய்வதிலிருந்து ஆணைக்குழுவைத் தடைசெய்தலாகாது —

(அ) குற்றப்பணம் ஒன்றை விதித்தல் உட்பட, சந்தை நிறுவன மொன்றின் விதிகளை மீறியமைக்காக சந்தை நிறுவனமொன்றின் வியாபார பங்குபற்றுநர்கள்,தீர்வக உறுப்பினர்கள் அல்லது வைப்பகப் பங்குபற்றுநர்கள், நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனி ஒன்று மற்றும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனியொன்றின் பணிப் பாளருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு அச்சந்தை நிறுவனத்தைப் பணித்தல்; அல்லது

(ஆ) மீறுகையில் உள்ள ஆளுக்கு எதிராக இச்சட்டத்தின் கீழ் எடுப்பதற்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல்.

(10) உட்பிரிவு (5) இன் கீழ் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட தண்டமொன்றை செலுத்துவதற்கு ஆளொருவர் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் விதிக்கக்கூடிய குற்றப்பணத் தொகையை அத்தகைய பணத்தொகை விஞ்சலாம் என்பது எவ்வாறிருப்பினும், தண்டமாக வருமதியாகவுள்ள பணத்தொகை ஆணைக்குழுவினால் நீதிவான் நீதிமன்றத்துக்கு செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தின் மேல், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணமொன்று என்றாற்போன்றும் அதே முறையில் அறவிடப்படலாம்.

(11) வேறேதேனும் பரிகாரத்துக்குப் பங்கமின்றி உட்பிரிவு (5) இன்கீழ் பணிப்புரையொன்று பணவகையான கொடுப்பனவு வடிவத்தில் இழப்பீடைச் செய்வதற்கு மீறுகையில் உள்ள ஆளைத் தேவைப்படுத்தியுள்ளவிடத்தும் அவ்வாள் இழப்பீடு செய்வதற்கு தவறுகின்றவிடத்தும், ஆணைக்குழு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் மீறுகையினால் இன்னலுற்ற ஆட்களுக்கு வருமதியாகவுள்ள குடியியல் தனிசொன்றாக இழப்பீட்டை அறவிடலாம்.

(12) உட்பிரிவு (5) அல்லது உட்பிரிவு (11) இன் கீழ் பெறப்பட்ட தொகைகளினுள் எவையேனும் இன்னலுற்ற ஆட்களை நிச்சயித்தல் அல்லது அவர்களுக்கு அறிவித்தல் சிரமமானதன் காரணமாக பகிர்ந்தளிக்கப்படாதிருக்கின்ற அளவுக்கு அத்தகைய தொகை—

(அ) பாகம் VI இன் கீழ் பேணப்படும் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடிய பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கான ஆகுசெலவுகளுக்கு கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆணைக்குழுவினால் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும்.

முதலீட்டாளர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான ஆணைக்குழுவின் தத்துவம்.

**175.** (1) வாடிக்கையாளர்களின் பணங்களை அல்லது சொத்துக்களை கையாளும் அல்லது அப்பணங்களுக்கும் சொத்துக்களுக்கும் பொறுப்பிக்கப்பட்டுள்ள சந்தை இடைத்தரகரொருவர் அவரது தொழிலின் போது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதி, விதிகள் அல்லது பணிப்புரையை மீறுகின்றவிடத்து அல்லது தொடர்ந்து தகுதியானவரும் தகுந்தவரும் அல்லவர் எனவும் இருக்கின்றவிடத்தும், முதலீட்டாளர்கள், சந்தை இடைத்தரகரொருவரின் வாடிக்கையாளர்கள் அல்லது கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் கூறு வைத்திருப்பவர்களின் அக்கறைகள் தீங்கு விளைவிக்கப்படுவதற்கு சாத்தியமுள்ளது அல்லது தீங்கு விளைவிக்கப்படுகின்றது என ஆணைக்குழு கருதுகின்றவிடத்தும், ஆணைக்குழு, இதன்கீழ் எடுத்துக்கூறப்பட்ட பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம் -

(i) ஆணைக்குழு தோதானதாகக் கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் எவரேனும் முதலீட்டாளரின் அல்லது அதன் வாடிக்கையாளர்களின் பணங்களையும் ஆதனங்களையும் கையாளாமல் இருக்க அல்லது அத்தகைய முதலீட்டாளர்கள் அல்லது அதன் வாடிக்கையாளர்களின் பணங்கள் மற்றும் ஆதனங்கள் அல்லது அத்தகைய பணங்கள் அல்லது ஆதனங்களுடன் தொடர்பான எவையேனும் ஆவணங்கள் அல்லது இலத்திரனியல் பதிவேட்டை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றுவதற்கு சந்தை இடைத்தரகரைப் பணித்தல்;

(ii) பணங்கள் அல்லது ஆதனங்களுடன் தொடர்பான எவையேனும் ஆவணங்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரைப் பணித்தல்;

(iii) சந்தை இடைத்தரகரை கொடுக்கல்வாங்கல்களை செய்து கொள்வதிலிருந்தும், ஆட்களிலிருந்து தொழிலைப் பரிந்து கேட்பதிலிருந்தும் தடை செய்தல் அல்லது சந்தை இடைத்தரகரை அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளரை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் தொழிலை கொண்டு நடாத்துவதற்கு தேவைப் படுத்தல்; அல்லது

(iv) சந்தை இடைத்தரகர் ஒருவரை அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரை, ஆணைக்குழுவினால் தீர் மானிக்கப்படக்கூடியவாறாக இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள இடமொன்றில் உள்ள ஆதனத்தைப் பேணுவதற்கு தேவைப்படுத்துதல்.

(2) ஆணைக்குழு, உட்பிரிவு (1) இன் கீழ் ஏதேனும் நட வடிக்கையை எடுப்பதற்கு முன்னர் கேட்கப்படுவதற்கு வாய்ப் பொன்றை அத்தகைய சந்தை இடைத்தரகருக்கு வழங்காமல் இப்பிரிவின் கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(3) ஆணைக்குழு, இப்பிரிவின் கீழ் நடவடிக்கையொன்றை எடுப்பதில் ஏதேனும் தாமதமானது முதலீட்டாளர்களின் அக்கறைக்கு சந்தை இடைத்தரகரின் வாடிக்கையாளர்களின் அக்கறைக்கு அல்லது பொதுமக்கள் அக்கறைக்கு பங்கமானதாக விருக்கும் எனக் கருதினால் உட்பிரிவு (2) ஏற்புடையதாகாது.

குறித்தசில கட்டளைகளுக் காக நீதிமன்றத் துக்கு விண்ணப்பிப் பதற்கான ஆணைக் குழுவின் தத்துவம்.

**176.** (1) ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மேல், எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடொன்றை அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது ஏதேனும் விதியை மீறுவார் அல்லது மீறியுள்ளார் என்று நியாயமான சாத்தியமொன்று உள்ளது என நீதிமன்றத்துக்குத் தோன்றினால் அல்லது ஆளொருவர், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும்பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் அல்லது தவறுகிறார் எனத் தோன்றினால் நீதிமன்றம் பின்வரும் கட்டளை களை ஆக்கலாம் -

(அ) மீறுகையின் இல்லாதொழிப்பைத் தடைசெய்யும் அல்லது தேவைப்படுத்தும் கட்டளையொன்று;

(ஆ) கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களின் ஏதேனும் வகுப்பு தொடர்பில், பிணையங்களைக் கையாளுதல் அல்லது அவற்றை வியாபாரம் செய்வதிலிருந்து ஆளொருவரை தடைசெய்யும் கட்டளையொன்று;

(இ) பிணையங்கள் கொடுக்கல்வாங்கல் ஒன்று வறிதாக விருப்பதாக வெளிப்படுத்தும் கட்டளை;

(ஈ) அத்தகைய ஆள்,கொள்ளுதலுக்கு,கையுதிர்ப்பதற்கு அல்லது வேறுவகையில் கையாளுவதற்கு நியாயமான முறையில் சாத்தியமுள்ளது என நீதிமன்றம் திருப்திப் படுகின்ற சொத்துக்களை கொள்வதிலிருந்தும் கையுதிர்ப் பதிலிருந்தும் அல்லது வேறுவகையில் கையாளுவதிலிருந்தும் அவ்வாளைத் தடைசெய்யும் கட்டளை;

(உ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணையங்களை கையுதிர்ப்பதற்கு ஆளொருவரை பணிக்கும் கட்டளை;

(ஊ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணையங்களுடன் இணைக்கப்பட்ட ஏதேனும் வாக்குரிமை அல்லது வேறு உரிமைகளைப் பிரயோகித்தலைத் தடைசெய்யும் கட்டளை;

(எ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணையங்களை கிடைக்கக்கூடியதாகச் செய்வதிலிருந்தும், அவற்றிற்கு ஒப்பப்பணத்திற்காக அல்லது கொள்வனவுக்காக கொடைமுனைவதிலிருந்தும் அல்லது ஒப்பப்பணம் செலுத்துவதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு கோரிக்கையொன்றை வழங்குவதிலிருந்தும் அல்லது அவற்றை குறித்தொதுக்குவதிலிருந்தும் ஆளொருவரைத் தடை செய்யும் கட்டளை;

(ஏ) சந்தை இடைத்தரகர் ஒருவரின் ஆதனத்தின் மேல் அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் மீது ஆயினும் சரி அல்லது வேறுவகையிலாயினும்சரி இன்னொரு ஆளுக்கு அல்லது இன்னொரு ஆள் சார்பாக அத்தகைய ஆளினால் வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் மேல் பெறுநர் ஒருவர் அல்லது ஒழிப்போன் ஒருவரை நியமிக்கும் கட்டளை;

(ஐ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் அல்லது அத்தகைய வேறு ஆதனத்தை நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரிடத்தில் உரித்தாக்கும் கட்டளை;

(ஒ) ஆள் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆள் செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆள் ஒருவர் மறுத்துள்ளார் அல்லது தவறியுள்ளார் அல்லது மறுக்கிறார் அல்லது தவறுகிறார் அல்லது மறுப்பதற்கு அல்லது தவறுவதற்கு உத்தேசிக்கின்றார் என்கின்றவிடத்து, அத்தகைய செயலைச் செய்வதற்கு அல்லது அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தும் கட்டளை;

(ஓ) அத்தகைய மீறுகையினால் இன்னலுற்ற வேறு எவரேனும் ஆளுக்கு இழப்பீடு செய்தல் உட்பட அதனைப் பரிகரிப்பதற்கு அல்லது அதன் விளைவை தணிப்பதற்கு நீதிமன்றம் பணிக்கின்றவாறான அத்தகைய நடபடிகளை எடுப்பதற்கு அவ்வாளை அல்லது அறிந்துகொண்டு மீறுகையில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தோன்றும் எவரேனும் வேறு ஆளை தேவைப்படுத்தும் கட்டளை;

(ஔ) இப்பிரிவின் கீழான வேறு ஏதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக குறித்துரைக்கப்பட்ட செயல் ஒன்றை செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு ஆளொருவரை பணிக்கும் கட்டளை;

(க) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கு, ஆளொருவரை பணிக்கும் கட்டளை;

(ங) சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ள எவரேனும் ஆளின் மேல் பயணத்தடையொன்றை விதிக்கும் கட்டளை; அல்லது

(ச) இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடு எவற்றின் கீழும் கட்டளையொன்றை ஆக்குவதன் விளைவாக விரும்பத்தக்கதாகக் கருதப்படும் ஏதேனும் துணைநிலைக் கட்டளை.

(2) விண்ணப்பமொன்று, உட்பிரிவு (1) இன்கீழ் கட்டளையொன்றுக்காக நீதிமன்றமொன்றுக்கு செய்யப்பட்டால், நீதிமன்றம் விண்ணப்பத்தைத் தீர்மானிக்கும் வரை மறுதிறத்தவர் இல்லா இடைக்கால கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) நீதிமன்றம் உட்பிரிவு (1) இன்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னர், அது தகுதியானவர்களென கருதுகின்றவாறான அத்தகைய ஆட்களுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் என பணிக்கலாம் அல்லது அது தகுதியானதென கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அல்லது இருவகையிலும் விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும் எனவும் பணிக்கலாம்.

(4) ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் உட்பிரிவு (1) இன் கீழ் கட்டளையொன்றிற்கான விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, நீதிமன்றம், ஆணைக்குழுவினால் அல்லது அதன் சார்பாக கொடுக்கப்படவேண்டிய சேதவீடுகளுக்கு ஏதேனும் பொறுப்பேற்பை கட்டளையை வழங்குவதற்கான நிபந்தனையொன்றாகத் தேவைப்படுத்தலாகாது.

(5) சந்தை இடைத்தரகர் ஒருவரின் ஆதனத்தின் பெறுநர் ஒருவராக, உட்பிரிவு (1) இன் கீழ் நீதிமன்றத்தின் கட்டளையினால் நியமிக்கப்பட்ட ஆளொருவர் -

(அ) எந்த ஆதனத்துக்கு அவர் பெறுநராக நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தை பெறுநருக்கு ஒப்படைப்பதற்கு அல்லது நியாயமான முறையில் தேவைப்படுத்தக்கூடியவாரான அந்த ஆதனம் சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் பெறுநருக்கு கொடுப்பதற்கு சந்தை இடைத்தரகரைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) எந்த ஆதனத்துக்கு அவர் பெறுநராக நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளலாம் என்பதுடன் உடைமையும் கொள்ளலாம்;

(இ) அவரினால் கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனத்தை அல்லது எந்த ஆதனத்தை அவர் உடைமை கொண்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தை வைத்திருப்பவர் எந்த முறையில் ஆதனத்தை சட்டமுறையாக கையாளலாமோ அந்த ஏதேனும் முறையில் ஏதேனும் ஆதனத்தை கையாளலாம்; அத்துடன்

(ஈ) நீதிமன்றம் கட்டளையில் குறித்துரைக்கின்றவாறு ஆதனம் தொடர்பில் அத்தகைய வேறு தத்துவங்களையும் கொண்டிருக்கிறார்.

(6) இப்பிரிவில், சந்தை இடைத்தரகர் ஒருவர் தொடர்பில் "ஆதனம்" என்பது, பணங்கள், பிணையங்கள் அல்லது வேறு ஆதனம் மற்றும் பிணையங்களுக்கான உரித்தாவணங்கள் அல்லது சந்தை இடைத்தரகரின் தொழிலின் போது அல்லது அத்தொழில் சம்பந்தமாக சந்தை இடைத்தரகரால் அல்லது இன்னொரு ஆளால் எவரேனும் வேறு ஆளுக்கு பொறுப்பிக்கப்பட்ட அல்லது அவர் சார்பாக பெறப்பட்ட வேறு ஆதனம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(7) இப்பிரிவின்கீழ் நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் -

(அ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணையங்களை அல்லது அத்தகைய வேறு ஆதனத்தை நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு ஒப்படைப்பதற்கு அல்லது நியாயமான முறையில் தேவைப்படுத்தக்கூடியவாறான பிணையங்கள் சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு கொடுப்பதற்கு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) பிணையங்களை அல்லது அத்தகைய வேறு ஆதனத்தை கொள்ளலாம் என்பதுடன் உடைமையும் கொள்ளலாம்;

(இ) அது தகுதியானதென கருதக்கூடியவாறான ஏதேனும் முறையில் பிணையங்களை அல்லது அத்தகைய வேறு ஆதனத்தை கையாளலாம்; அத்துடன்

(ஈ) கட்டளையில் நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறாக பிணையங்கள் அல்லது அத்தகைய வேறு ஆதனம் தொடர்பில் அத்தகைய வேறு தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) உட்பிரிவு (1) இன் கீழ் பிணையங்களின் கையாளுகையின் அல்லது கையுதிர்ப்பின் வரும்படிகள், நீதிமன்றத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரும்படிகளின் முழுமைக்கு அல்லது ஏதேனும் பாகத்துக்கு நன்மை பெறும் முறையில் உரித்துள்ளவரென உரிமை கோரும் எவரேனும் ஆள், நீதிமன்றத்துக்கான அத்தகைய கொடுப்பனவிலிருந்து முப்பது நாட்களினுள் அவருக்கு வருமதியாகவுள்ள வரும்படிகளிலிருந்து கொடுப்பனவுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(9) நீதிமன்றம், இப்பிரிவின் கீழ் அதனால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை ஒழிக்கலாம், வேறுபடுத்தலாம் அல்லது நிறைவேற்றலாம் அல்லது அத்தகைய கட்டளையொன்றினால் இன்னலுற்ற திறத்தவர்

ஒருவரின் விண்ணப்பமொன்று பற்றி ஆணைக்குழுவுக்கான முன்னறிவித்தலுடன் இன்னலுற்ற திறத்தவரின் அத்தகைய விண்ணப்பத்தின் மேல் அத்தகைய கட்டளையின் தொழிற்பாட்டை இடைநிறுத்தலாம்.

*முதலீட்டாளர்கள் சார்பாக சேதவீடுகளை அறவிடுவதற்கான ஆணைக் குழுவின் தத்துவம்.*

**177.** (1) ஆணைக்குழு, அவ்வாறு செய்வது பொதுமக்களின் அக்கறைக்காகவிருக்கும் என கருதினால், பிணையங்களை வழங்குதல் தொடர்பான ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ள இன்னொரு ஆளின் நடத்தை காரணமாக அல்லது அந்நடத்தையில் நம்பியிருப்பதன் மூலம் நட்டம் அல்லது சேதத்தை உறுகின்ற ஆளொருவர் சார்பாக, வேறு ஆள் மீறுகை தொடர்பில் தவறொன்றுக்கு குற்றம் சாட்டப்பட்டுள்ளாராயினும் சரி அல்லது குற்றம் சாட்டப்பட்டிராதவராயினும் சரி அல்லது குற்ற வழக்கொன்றில் மீறுகையொன்று எண்பிக்கப்பட்டுள்ளதாயினும் சரி அல்லது எண்பிக்கப்படாதிருப்பினும் சரி அவருக்கு எதிராக குடியியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதன் மூலம் நட்டம் அல்லது சேதத்தின் தொகையை அறவிடலாம்.

(2) காலவரையறை தொடர்பான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (1) இன் கீழ் வழக்கு ஒன்று மீறுகையானது ஆணைக்குழுவுக்கு தெரியவந்த தேதியிலிருந்து ஆறு வருடங்களினுள் தொடுக்கப்படலாம்.

(3) ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட ஏதேனும் நட்டம் அல்லது சேதவீடு ஆணைக்குழுவின் நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் -

(அ) மீறுகை தொடர்பில் புலனாய்வு மற்றும் வழக்கு நடவடிக்கைகளின் எல்லா ஆகு செலவுகளுக்காக ஆணைக்குழுவுக்கு மீளச் செலுத்தவும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பிணையங்கள் வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளை மீறியுள்ள இன்னொரு ஆளின் நடத்தை காரணமாக அல்லது அந்நடத்தையில் நம்பியிருப்பதன் மூலம் நட்டம் அல்லது சேதத்தை உற்ற ஆட்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கும்,

பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன் கீழான குடியியல் வழக்கொன்றில் அறவிடப்பட்ட அல்லது பெறப்பட்ட ஏதேனும் தொகை உட்பிரிவு (3) இனைப் பின்பற்றி பகிர்ந்தளிக்கப்பட்டிராத அளவுக்கு அது ஆணைக்குழு தீர்மானிக்கின்றவாறாக சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கான ஆகுசெலவுக்கு கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆணைக்குழுவினால் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும்.

(5) உட்பிரிவு (1) இற்கு அமைய, பிணையங்களை வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளை மீறியுள்ள இன்னொரு ஆளின் நடத்தை காரணமாக அல்லது அந்நடத்தையில் நம்பியிருப்பதன் மூலம் நட்டம் அல்லது சேதத்தை உறுகின்ற எவரேனும் ஆள், வேறு ஆள் மீறுகை தொடர்பில் தவறொன்றுக்கு குற்றம்சாட்டப்பட்டுள்ளவராயினும்சரி அல்லது குற்றம் சாட்டப்பட்டிராதவராயினும் சரி அல்லது குற்ற வழக்கொன்றில் மீறுகையொன்று எண்பிக்கப்பட்டுள்ளதாயினும்சரி அல்லது எண்பிக்கப்படாதிருப்பினும் சரி அவருக்கு எதிராக குடியியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதன் மூலம் நட்டம் அல்லது சேதத்தின் தொகையை அறவிடலாம்.

(6) இப்பிரிவின் கீழ் அளிக்கப்படுகின்ற வழக்கின் ஏதேனும் உரிமை வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளுக்கு உள்ள ஏதேனும் உரிமைக்கு மேலதிகமாகும்.

தகவலை வெளியிடுவதற்கான ஆணைக் குழுவின் தத்துவம்.

**178.** ஆணைக்குழு, பொதுமக்கள் அக்கறைக்காக அல்லது முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்காக அது அவசியமானது அல்லது உசிதமானது எனக் கருதுகின்றவிடத்தும் அது தகுதியானதென கருதுகின்றவாறான அத்தகைய வடிவத்தில் அல்லது முறையிலும் இச்சட்டம், ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின் கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபு அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான ஏதேனும் தகவலை வெளியிடலாம்.

அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள்.

**179.** (1) அமைச்சர், இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாக அமைச்சர், பின்வருவன தொடர்பாக ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் -

(அ) சந்தை நிறுவனம் ஒன்றுக்கு உரிமம் வழங்கும் நோக்கத் துக்காக திருப்திப்படுத்தப்படவேண்டிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்;

(ஆ) சந்தை இடைத்தரகர் ஒருவருக்கு உரிமம் ஒன்று வழங்கும் நோக்கத்துக்காக இணங்கியொழுகப்பட வேண்டிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்;

(இ) எந்த நோக்கத்துக்கு ஆயவரி நிதியம் இலங்கையில் பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட முடியுமோ அந்த நோக்கம்;

(ஈ) இலங்கையில் வெளிநாட்டு உருவகமொன்றை நிரற்படுத்து தல் அல்லது தகவலைப் பகிர்தல் தொடர்பில் ஆணைக் குழுவுக்கும் அதன் வெளிநாட்டு சரி நேர் அலுவலருக் கிடையிலான அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புக் கிடையிலான ஏதேனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு பயன்கொடுத்தல்; அத்துடன்

(உ) இச்சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும்

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத

ஏதேனும் ஒழுங்குவிதி அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவினால் ஆக்கப்படும் விதிகள்.

**180.** (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முழுமையான பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது பின்வருவன உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் இச்சட்டத்தின்கீழ் தத்துவங்கள், குறிக்கோள்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதில் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறாக விதிகளை ஆக்கலாம்:-

(அ) பரிவர்த்தனை ஒன்றில் பிணையங்களை நிரற்படுத்துதலும் வியாபாரம் செய்தலும் மற்றும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளால் உரிமைகள் அல்லது உபகாரம் அல்லது வேறுவகை என்ற வகையில் எவையேனும் மேலதிக பிணையங்களின் அடுத்துப்பின்னரான வழங்குகை;

(ஆ) பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தல் மற்றும் வியாபாரம் செய்தல் தொடர்பில் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்களை மற்றும் அதிலிருந்து எழும் வேறு தொடர்பான கருமங்களையும் ஒழுங்குபடுத்தல்;

(இ) பிணையங்களை கொள்ளுதல் செய்த அல்லது கையுதிர்த்த ஆட்களினாலும் பிணையக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பரிவர்த்தனை ஒன்றினாலும் செய்யப்பட்ட பிணையக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி சந்தை இடைத்தரகர்களினாலான வெளிக்காட்டுகைகள்;

(ஈ) சந்தை நிறுவனமொன்றினால் சந்தை இடைத்தரகரினால் புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள் மற்றும் கணக்காய்வுகளை முறையாகப் பேணுதல் மற்றும் அத்தகைய சந்தை

நிறுவனம் மற்றும் சந்தை இடைத்தரகர் அவர்களது அலுவல்கள் பற்றி ஆணைக்குழுவுக்கு கிரமமாக அறிக்கையிடுதல்;

(உ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை அல்லது வழங்கப்பட்ட பதிவொன்றை இல்லாதாக்குவதில் அல்லது இடைநிறுத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை;

(ஊ) புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகளின் வருடாந்தக் கணக்காய்வு மற்றும் சந்தை நிறுவனமொன்றினாலும் சந்தை இடைத்தரகரினாலும் நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல்;

(எ) கையேற்பு அல்லது ஒன்றிணைவின் இலக்கு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாகவிருக்கின்ற விடத்து அத்தகைய கையேற்பு அல்லது ஒன்றிணைவுகளை ஒழுங்குபடுத்தல்;

(ஏ) நம்பிக்கைப் பொறுப்பாளரினாலும் பிணையங்களை வழங்கும் ஒருவரினாலும் கூட்டு முதலீட்டு திட்டம் ஒன்றின் முகாமைக் கம்பெனி ஒன்றினாலும் அனுசரிக்கப்படவேண்டிய நடத்தைக் கோவை ஒன்று மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டம் ஒன்றின் தொழிற்பாடு மற்றும் அங்கீகாரம் பற்றிய கோவை ஒன்று;

(ஐ) எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமங்கள்;

(ஒ) சந்தை நிறுவனம் ஒன்றினாலும் சந்தை இடைத்தரகரினாலும் பின்பற்றப்படவேண்டிய சாதுரியமான முறையிலான தேவைப்பாடுகள், தகுதியானவையும் தகுந்தவையுமான கட்டளைக்கற்கள், பதிவேடு வைத்திருத்தல் மற்றும் வேறு ஆவணப்படுத்துகை முறைமைகள்;

(ஓ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனி ஒன்றினால் அல்லது நிரற்படுத்தல் ஒன்றிற்கு விண்ணப்பித்துள்ள பகிரங்க கம்பெனி ஒன்றினால் அல்லது நிரற்படுத்தப் பட்ட வெளிநாட்டு உருவகமொன்றினால் அல்லது பிணையங்களை வழங்கும் எவரேனும் ஒருவரினால் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முன்விவர ணத்தின் வடிவம் மற்றும் உள்ளடக்கங்கள்;

(ஔ) பங்குத்தொகுதி தரகர் ஒருவரினால் அல்லது எல்லைக் கடன் வசதியளிப்பவர் ஒருவரினால் எல்லைக்கடன் கணக்கொன்றில் பிணையங்களின் தொழிற்பாடு;

(க) நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை யில் வியாபாரம் செய்யப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் தொடர்பாக சந்தை நிறுவனம் ஒன்றினதும் சந்தை இடைத்தரகர்களினதும் தொழில் அலுவல்கள் மற்றும் செயற்பாடுகள்;

(ங) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிகள், நிரற்படுத்தப் பட்ட வெளிநாட்டு உருவகங்கள் மற்றும் வேறு நிரற் படுத்தப்படாத கம்பெனிகளினால் தகவலை வெளிக் காட்டுதல் மற்றும் அறிக்கையிடல் மற்றும் வழங்குதல்;

(ச) பரிவர்த்தனை ஒன்றுக்கு ஆக்கப்பட்ட நிரற்படுத்த லுக்கான விண்ணப்பங்களை நிராகரித்தல் மற்றும் பரிவர்த்தனை ஒன்றினால் நிரற்படுத்தலை இடை நிறுத்தல் மற்றும் இல்லாதாக்குதல்;

(ஞ) உரிமமளிக்கப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் பரிவர்த் தனை ஒன்றின் வசதிகளைப் பயன்படுத்தி நிறைவேற் றப்பட்ட மூலாதாரப் பிணைய ஒப்பந்தங்களை வியாபாரம் செய்தல் தொடர்பானவை;

(ட) பங்குத்தொகுதி கடன் வழங்குநர்கள் மற்றும் பங்குத் தொகுதி கடன் பெறுநர்களின் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்தல் மற்றும் குறை விற்பனையை ஒழுங்குபடுத்தல்;

(ண) மூலாதாரப் பிணையங்கள் பரிவர்த்தனை ஒன்றிற்காக நம்பிக்கை நிதியமொன்றை அல்லது நட்டஈட்டு நிதியத்தை தாபித்தலும் தொழிற்படுத்துதலும்; அத்துடன்

(த) வாடிக்கையாளருக்கும் சந்தை இடைத்தரகருக்கும் இடையிலும் முறையான பங்குபற்றுநர்கள் அல்லது உறுப்பினர்களுக்கும் சந்தை நிறுவனங்களுக்கிடையிலும் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடு.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

பந்தயம் பிடித்தல் அல்லது பணயம் வைத்தல் ஒப்பந்தங்கள் அல்லாத மூலாதாரப் பிணையங்கள்.

**181.** வேறு ஏதேனும் சட்டம் எவ்வாறிருப்பினும் பரிவர்த்தனை ஒன்றினூடாக வியாபாரம் செய்யப்பட்ட மூலாதாரப் பிணையத்தின் ஒப்பந்தம் ஒன்று பந்தயம் பிடித்தல் ஒன்றாக அல்லது பணயம் வைத்தல் ஒப்பந்தம் ஒன்றாகவிருப்பதற்கு எடுக்கப்படுதலாகாது.

நீக்கங்கள், பேணல்கள் மற்றும் நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**182.** (1) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் (இதனகத்துப் பின்னர் "நீக்கப்பட்ட சட்டம்" எனவழைக்கப்படும்) இத்தால் நீக்கப் படுகிறது.

(2) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப் பினும்–

(அ) (i) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இச்சட்டத் தின் பாகம் I நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று அத்தகையதாகப் பணி யாற்றும் ஆணைக்குழு இச்சட்டத்தின் பாகம் I இன்

கீழ் புதிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும் வரை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணைக் குழுவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க தொடர்ந்து இருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ii) பாகம் I நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர் முன்னர் பதவிவகிக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், இச்சட்டத்தின் கீழ் அத்தகையதாக நியமிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களது பதவிக்காலம் முடியும் வரை அல்லது இச்சட்டத்தின் கீழ் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் படும் வரை தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஏதேனும் பரிவர்த்தனைக்கு, பங்குத் தரகருக்கு அல்லது பங்குத் தொகுதி வியாபாரிக்கு அல்லது கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றை தொழிற் படுத்தும் நோக்கத்திற்கென முகாமைத்துவ கம்பெனி யொன்றிற்கு வழங்கப்பட்டதும் இச்சட்டத்தின் பாகம் II மற்றும் பாகம் III நடைமுறைக்கு வரும் தேதிகளுக்கு நேர் முன்னர் வலுவிலுள்ளதுமான ஒவ்வொரு உரிமமும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் தீர்வக இல்லத்துக்கு அல்லது எவரேனும் சந்தை இடைத்தரகருக்கு வழங்கப் பட்டதும் இச்சட்டத்தின் பாகம் II மற்றும் பாகம் III நடைமுறைக்கு வரும் தேதிகளுக்குநேர் முன்னர் வலு விலுள்ளதுமான ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டவையும், இச்சட்டத்தின் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று வலுவிலுள்ளவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதவையுமான

எல்லா ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் பணிப்புரைகள் மற்றும் அளிக்கப்பட்ட அங்கீகாரங்கள் மற்றும் எடுக்கப் பட்ட வேறு செயற்பாடுகள் வழங்கப்பட்ட அறிவித்தல்கள் இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் பணிப்புரைகளாகவும் அளிக்கப்பட்ட அங்கீகாரங்கள் மற்றும் எடுக்கப்பட்ட வேறு செயற்பாடுகளை வழங்கப்பட்ட அறிவித்தல் களாகக் கருதப்படுதல் வேண்டும் அத்துடன் வலிதான தாக தொடர்ந்திருத்தல் வேண்டும்;

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழான மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று உளதாயுள்ள எல்லா ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் வேறு சாதனங்கள் இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் தொடுக்கப்பட்டவையும் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகள், வழக்குகள் மற்றும் வேறு சட்ட வழக்கு நடவடிக்கைகள், ஆணைக்குழுவினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட துடர்ச்சிகள், வழக்குகள் மற்றும் வேறு சட்ட வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று வலுவிலுள்ளவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதவையுமான சந்தை நிறுவனங் களின் எல்லா விதிகளும் இச்சட்டத்தின் கீழ் அத்தகைய சந்தை நிறுவனத்தினால் புதிய விதிகள் ஆக்கப்படும் வரை இச்சட்டத்தின் கீழ் அத்தகைய சந்தை நிறுவனங் களினால் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண் டும்;

(ஏ) உரிமம் ஒன்றிற்காக, நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க கையாளப்படுதலும் வேண்டும்;

(ஐ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று ஏலவேயுள்ளதுமான எல்லா அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(ஒ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதியங்களுக்கு வரவுக்குள்ளதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று ஏலவேயுள்ளதுமான எல்லாப் பணத்தொகைகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் பாகம் VI இன் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முறையான நிதியங்களுக்கு கைமாற்றப்பட்டதாதல் வேண்டும்;

(ஓ) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் பணிப்புரைகளின் கீழ் தொடங்கப்பட்ட எல்லா மீறுகைகள் அல்லது வழக்கு நடவடிக்கைகள், நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் புரியப்பட்ட தவறுகளாக அல்லது தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளாதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க விளங்கப்படுதலும் வேண்டும்;

(ஔ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் எல்லா அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், தனிசுகள் மற்றும் பொறுப்புக்கள் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆணைக்குழுவின் அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், தனிசுகள் மற்றும் பொறுப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(க) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பதவிவகிக்கும் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களும் சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அவர்கள் உரித்துடைய வர்களாகவிருந்த தொழில் நியதி நிபந்தனைகளை விட குறைந்த அநுகூலம் உடையனவாக இராத நியதிகளின் மீது ஆணைக்குழுவின் அலுவலர்களாகவும் சேவை யாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப் பினும் -

(அ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டத்திற்கான குறிப்பீடு ஒன்றாக பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்து டன்

(ஆ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான ஒவ்வொரு

குறிப்பீடும் இச்சட்டத்தில் அடங்கியுள்ள நேரொத்த ஏற்பாடுகளுக்கு குறிப்பீடு செய்வதாக பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***183***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.